
கனவு
கண்டேன்
தோழி
பாலகுமாரன்
★ விசா ★ கனவு கண்டேன் தோழி ★ பாலகுமாரன்

# கனவு கண்டேன் தோழி

பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்
55, வெங்கட்நாராயணா சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017

முதற்பதிப்பு : செப்டம்பர் 1999
உரிமை : ஆசிரியருக்கு

**விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு**

KANAVU KANDAEN THOZHI
By : BALAKUMARAN
First Edition : September 1999
Pages : 236 + 4
Paper Used : 10.5 Cream wove

**விலை : ரூ. 50-00**

THIRUMAGAL NILAYAM
55, Venkatnarayana Salai
Chennai-17
Phone : 4342899, 4327696

4656351

கிடைக்குமிடம் :
**திருமகள் நிலையம்**
55, வெங்கட்நாராயணா சாலை
தி.நகர், சென்னை-17
போன் : 4342899, 4327696
Fax : 91-44-4341559

அச்சிட்டோர்
ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்
12, கஜபதி தெரு, சென்னை—5.

நேசமும் பாசமும் மிக்க பிரிய பாலகுமாரன் அவர்கட்கு,

அநேக நமஸ்காரங்கள். உங்களிடம் பேசுவதும், எழுதுவதும் இதுவே முதன்முறை. எனது குடும்பம் பற்றிய அறிமுகம். அதற்கு முன்பு பாலாவின் குடும்பத்திற்கு அன்பும், பாசமும் கலந்த வணக்கம். பாலாவுக்கு நீண்ட ஆயுளை தர இறைவனை கைகூப்பி வணங்குகிறேன். நிற்க.

ஞானப்பிரகாசம்-மங்கையர்கரசி எனது பெற்றோர்கள். விவசாயம்தான் தொழில். விவசாயமே வாழ்க்கை எனலாம். மூத்த சகோதரி பாலாம்பிகை. திருமணமாகி விட்டது. ஒன்றரை வருடம் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லை. இரண்டாவது பெண் உமாமகேஸ்வரியாகிய நான். நலமிருந்து பெற்ற சகோதரன் ராஜீ என்கிற ராஜேஷ் பிளஸ் டூ முடித்துவிட்டு என்ஜினியரிங் சேர காத்திருக்கிறான்.

பாலா! உங்களுடன் எனக்கு எழுத்துக்கள் மூலம் ஸ்நேகம் ஏற்பட்டு சரியாய் சொல்ல வேண்டுமென்றால் நான்கு ஆண்டுகள் ஆறு மாதங்கள் ஒன்பது நாட்கள். என்னுள் இருக்கும் கோபம், அழுகை, சிரிப்பு, வேதனை, பிரிவு, காதல் என்று பல உணர்வுகளை உயிர்ப்பித்தது. உங்கள் எழுத்துக்களைப் பற்றி படித்து முடித்ததும் விமர்சனம் எழுதலாமா என்று நினைக்கும்பொழுதே, எனக்குள்ளேயிருக்கும் யாரோ ஒரு குரல், "பாலாவின் எழுத்துக்களை உணர்ந்து கொள். அதை ரசித்து உள்வாங்கு அமைதியாய் அசைபோடு" என்று ஒலிக்கும். விமர்சனம் எழுத எழுத்துக்களோடு ஸ்நேகம் வேண்டும். உங்கள் எழுத்துக்கள் மிக நுணுக்கமாய் பல சிலைகளை கொண்டு செதுக்கி எழுதப்பட்ட மிக உயர்ந்த கோபுரம்.

கோபுரத்தை உயர்த்து 'ஹா'வென்று வியப்பாய் வாய் பிளக்கும் சராசரி மனுஷி. கோபுரம் பற்றி நான் பேச, எழுத, ரசனையை வெளிப்படுத்த நானின்னும் வியப்பிலிருந்து என்னை நகர்த்திக் கொள்ள வேண்டும். மனசுக்குள் வியப்பு அடங்கி, அடியிலிருந்து உச்சிவரை மனதில் பதிய வேண்டும். இருப்பினும் 'கள்ளி' நாவல் படித்ததும் எழுத தோன்றிற்று. படித்து, ரசித்து உள்வாங்கிய பிறகே எழுதுகிறேன். செம்மையாய் வெளிப்படுத்தியிருக்கேனா என்று தாங்கள்தான் சொல்லணும். எழுத்தில் பிழையிருந்தாலோ, வாக்கியங்கள் 'தவறாயிருந்தாலோ மன்னியுங்கள்.

'எனைப் பொறுத்தவரை, உலகிலுள்ள உயிர்கள் மனதை ஒருமுகப்படுத்தவோ, அமைதிப்படுத்திக் கொள்ளவோ இறைவனின் நாமகரணத்தை உச்சரித்து தியானம் செய்வதைவிட, பாலாவின் எழுத்துக்களை ஸ்நேகம் கொண்டால் உலகில் பிரச்சனைகள் இல்லை. ஒருவரை ஏமாற்றி பிறர் பிழைத்தல் என்ற நிலைமையில்லை. உலகில் இப்படிப்பட்ட நிலைமை வர ஒவ்வொருவரும் பாலாவின் எழுத்துக்களை வாசிப்பது அவசியமாயிருக்கிறது. அந்நிலை வர, காலம் வெகு தொலைவிலில்லை.'

தாங்கள் எழுதிய பல நாவல்கள் என்னை பாதித்ததின் காரணமாக முதன் முறையாய் எழுதுகிறேன். என் மனம் உங்கள் ஆன்மீகக் கதைகளை படிப்பதில் கவனம் செலுத்துகிறது. இறைவழிபாட்டை தினமும் தவறாமல் கடைபிடிக்கிறேன். தியானமும் செய்கிறேன். கண்மூடிக் கொண்டோ, இல்லை அமைதியான இடத்தில் அமர்ந்தோ தியானம் செய்யவில்லை. தங்களின் எழுத்துக்களை வாசிக்கும் பொழுதெல்லாம் நான் தியானத்தில் அமர்கிறேன். உணர முடிந்தது உண்மை பாலா! இதுவரை வாழ்ந்து வந்த பாதைகளில் பல அனுபவங்களை தந்து இருக்கிறீர்கள். மென்மேலும் ஆன்மீக துறையிலும்



எங்களை இனிதே நல்வழிப்படுத்துங்கள். இதோ '**கள்ளி**' நாவலின் விமர்சனம்.

கற்பனை செய்வதனால்தான் நிஜ வாழ்க்கை இயங்குகிறது. அதுவே வாழ்க்கையாகி விடாது. அன்றாட வாழ்க்கையில் ஜெயித்திட கற்பனை அவசியமாகத்தான் இருக்கிறது. தன் எதிர்காலம் இப்படி இப்படியெல்லாம் அமையப் போகிறது, நிகழப் போகிறது என்பதற்கான அடையாளம் கற்பனை செய்தல். கற்பனை செய்ய மனப்பயிற்சி வேண்டும். பின் நாட்களில் நிஜமாய் வரப்போவதை, இந்நாட்களில் கண்ணுக்குள் நிழலாய் கனவு காண வேண்டியிருக்கிறது. நிகழ்கால வாழ்க்கை நிதானமாய் நடைபோட, எரிச்சலில்லாது, கோபமில்லாது, சண்டைபோடாது, அமைதியாய் இயங்க, வாழும் வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட ஒவ்வொருவரும் கற்பனை செய்தல் அவசியமாயிருக்கிறது.

கல்யாண வயதில் இருக்கும் பெண்களின் மன உணர்வுகளை அன்னபூரணி மூலமாக வெளிப்படுத்தி இருப்பது அருமை. தன் வருங்கால புருஷனோடு கற்பனையில் குடித்தனம் நடத்துவதும் அந்த கற்பனையை பெண்கள் பெண்களிடமே சொல்லிக் கொள்ள தயக்கம் காட்டுவதும், அப்படி சொன்னால், சீ அசிங்கம் என்று முகம் சுளிக்கிறார்கள், பொய்யாய் வேஷம் போடுகிறார்கள் என்பதை இயல்பாய் எழுதி உள்ளீர்கள் பாலா!

வாழ்க்கைத்தரம் மனம் சம்பந்தப்பட்ட விஷயம் அன்னபூரணியின் வீடும் தன்னை மாற்றிக் கொண்டது. தன் இனத்தைச் சேர்ந்தவர்கள் படிப்பில், வேலையில், வியாபாரத்தில் முன்னேற்றமடைந்து இருக்கிறார்கள். இனி...நல்லவிதமாக மாற்றிக் கொள்ள புத்தகக் கடைக்காரர் செய்த சத்தியத்தில் வீடு ஆச்சர்யமும், அமைதியையும் அடைந்தது. ஆனால், அவரின் மனமாற்றம் அன்னபூரணியின் கல்யாணத்தை தடை செய்தது.

பெண்ணை பெற்று, வளர்த்து ஏதோ ஒரு இடத்துல கட்டிக் கொடுத்தோமா, நிம்மதியாக இருந்தோமா என்று சராசரி பெற்றோர்களைப் போல் இல்லாமல், தன் பெண் வாழப்போகும் வீடு மனுஷாள் நல்லவிதமாக இருக்கணும் என்று நினைக்க வெகுசில பெற்றோர்களால் மட்டுமே முடியும். அந்த விதத்தில் புத்தகக் கடைக் காரரை கைகூப்பி தொழுகிறேன்,

சகலமும் அறிந்து கொண்டு, தன் குடும்பத்துடன் அன்னபூரணியின் வீட்டைப்பற்றி 'பேசி வியப்பில் ஆழ்த்தும் அருணாச்சலம். தன் வீடு சரியில்லாது இருப்பினும், தனக்கு வரப்போகும் மனைவி படித்தவளாயும் முக்கியமாக ரசனையுள்ளவளாக இருக்க வேண்டும் என்று தனது எண்ணத்தை ஒட்டு மொத்தமாய் 'வெளியிட அன்னபூரணியின் வீடு அதிசயிக்கிறது. அவ்வீட்டில் அன்னபூரணி கற்பனையையும் தொடர்கிறாள். ஆனால், அருணாச்சலத்தை பிடித்திருந்தாலும் அவர்களின் வீடு பற்றி பயம் கொள்கிறார்கள். தன் பெண் வாழப்போகுமிடம் நல்லதாய் அமைய யோசிக்கிறார்கள்.

கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பதை அறுபது வயது கிழவருடன் புத்தகக் கடைக்காரர் நிகழ்த்திய உரையாடல் எளிய நடையில் உணர்த்தியது அருமை. கல்யாணம் என்பது தலைமுறைகளைப் பற்றி அக்கறைப்பட வேண்டியதை அழகாய் சொல்லியிருந்தீர்கள். அடடா...கல்யாணம் என்கிற விஷ்டத்தை சொல்லி எங்களை எங்கள் தலைமுறைகளைப் பற்றி அக்கறைப்பட வைத்து விட்டீர்கள் பாலா!

கல்யாணம் என்றால் பேரம் பேசும் வியாபாரமாகி விட்ட காலமிது. அதாவது டாக்டருக்கோ, என்ஜினியருக்கோ அல்லது அரசுவேலையிலோ உள்ள மாப்பிள்ளை பார்த்தால், ஐம்பது பவுன் நகை, கார் வாங்கித் தரணும், கட்டிக். பிரோ, டி.வி., என்று சகலமும் வேண்டுமென்று மூச்சுவிடாது ஒப்பிப்பார்கள். பெண் வீட்டாருக்கோ



மூச்சே விடமுடியாது இருப்பார்கள். பெண் என்ற பொருளை வியாபாரியாகிய பெற்றோர்கள் சந்தையில் விலைபோக ஒரு விலை வைத்திருப்பார்கள். பொருள் வாங்க வரும் மாப்பிள்ளை வீட்டார்கள் பேரம் பேசவார்கள். வியாபாரிக்கு நஷ்டம் ஏற்படும் வண்ணம் விலை பேசுவார்கள். பொருள் விற்றால் போதும் என்ற நிலையில் நஷ்டத்துக்கே கொடுக்க சிலசமயம் முன் வந்து விடுவார்கள். வியாபாரி பொருள் விலை போகாது தங்கி விடுமோ என்கிற பயத்தால் வந்த விளைவு. ஆனால், புத்தகக் கடைக்காரர் தன் இயலாமையை, புத்தகம் விற்று பணம் சேர்த்ததை, தான் நஷ்டம் அடைய விரும்பவில்லை என்பதை கைகூப்பலில் தெரிவித்தது அற்புதம்.

அருணாச்சலத்தின் அம்மா, பெரியம்மா, பெரியம்மாவின் மகன் மூவரின் மனசும் ஆடம்பர வாழ்க்கைக்கு அலைபாய்கிறது. அவர்களால் கல்யாணம் தடைப்பட்டதும், ''**சரி இது ஏதோ நல்லதுக்குதான் அப்படித்தான் நாம எடுத்துக்கணும்**'' என்ற வார்த்தைகள் வாழ்க்கையில் நல்ல காரியங்கள் நழுவிப்போகும் போது மனசு சொல்லும் மிக அற்புதமான ஆறுதல் வரிகள்.

அருணாச்சலத்தின் திருமணம் நிச்சயமானதை கேட்டதும், அன்னபூரணியின் கற்பனைகள் சிதைந்து போயின. அவனின் கல்யாண நாளன்று அவளின் கோபதாபங்களை, மனவேதனையை வெளிப்படுத்தியதில் சராசரி பெண்ணானாள். அவள் ஜாதகத்தில் தோஷம் நீங்க, கல்யாணம் நடக்க முண்டகக்கன்னியம்மன் கோயிலை சுத்தம் செய்து வணங்கச் சொல்லி, மனதில் தோன்றும் கற்பனைகள் சிதைந்து, நபஸ்வியாய் இருக்க உதவினாள் மாமி.

திடீரென தினத்தந்தியில் வெளியான செய்தியில் அன்னபூரணியின் குடும்பம் திகைத்தது. அன்னபூரணி முண்டகக்கன்னியம்மனுக்கு கைகூப்பிநன்றி சொன்னாள்.

வழக்கறிஞர் சுமதியை மறக்க முடியுமா? எழுத்துக்களின் மூலம் அவரை நேர் நிறுத்தியிருந்தீர்கள். ஓர் நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது என்கிற எண்ணத்தில் வழக்கறிஞர் சுமதி தொழிலின் நேர்மையை நிலை நிறுத்தியிருக்கிறார்.

அன்னபூரணியும், சுமதியும் சிநேகிதமானார்கள். அன்னபூரணி வழக்கறிஞருக்கு படித்து இருந்தால் சுமதியைபோல் கட்டுரை எழுதுவதுமாய், பட்டி மன்டப பேச்சாளருமாய் உலா வந்து இருக்கலாம் என்ற எண்ணத்தை எழ வைக்கிறது. உருப்படியான காரியம் எதுவும் செய்ய முடியல என்கிற எண்ணம் எழ, புத்தகக் கடைக்கு அழைத்த அப்பாவின் எண்ணம் அவளுக்கு பிடித்திருந்தது மிகச் சரியாய், புத்தகம் படிப்பது மனுஷாளை புரிந்து கொள்ள என்ற உங்கள் எழுத்துக்கள் மனுஷாளை தெரிஞ்சுக்க, ஜெயிக்க கற்றுக் கொடுக்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. சுமதியின் பேச்சால் அருணாச்சலமும், அன்னபூரணியும் வாழ்க்கையில் இணைந்தது பாராட்டுதற்குரியது.

பெண்களின் பிரச்சனையை புரிந்து கொண்டு அந்த விதமாய் எழுத பாலகுமாரனால மட்டுமே முடியும். பெண்ணாய் பிறந்தோமே என்று வேதனையுற்ற பொழுது, பாலாவின் எழுத்துக்கள் பெருமிதம் கொள்ள வைத்தது. பாலா. அடுத்த ஜென்மத்திலாவது நான் பெண்ணை நேசிக்கிற ஆண் வர்க்கமாய் பிறந்திட அவா.

கதையை படித்ததும் வெளியே கெட்டியாகவும், உள்ளே சில்லுன்னு கள்ளி சோறா இருக்க வைத்தது பாலாவின் ''கள்ளி.''

கரும்பு செழிப்பாய் வளர்ந்திருக்கிறது. தாங்கள் சொன்ன மாதிரி விவசாயத்திற்கு வெயில் அவசியமாயிருக்கிறது. நீருக்கு பஞ்சமில்லை. வெயில் கொடுமையில் நிலம் பிளவுபடுகிறது. இந்த பதத்தில் நீர் பாய்ச்ச வெகு சுலபமாய் உள்வாங்கி வேர்வரை உறிஞ்சிக் கொள்கிறது. வெளியே அமைதியாகவும், உள்ளே குழைந்தும் காணப்படுகிறது. இதை இரண்டு விதமாய் இந்நாளில் என்னால் உணர முடிந்தது. ஒன்று, விவசாயம் செய்து வரும் கரும்பு நிலத்தினில், மற்றொன்று இனிய பாலாவின் நாவலாகிய ''கள்ளி''யை வாசித்த பொழுதினில்...

நன்றி பாலா.

—ஞான. உமாமகேசுவரி, B.Sc.,P,G.D.C.A.
6, கிழக்கு தெரு, கருவேப்பிலங்குறிச்சி
அஞ்சல், விருத்தாசலம் வட்டம்,
கடலூர் மாவட்டம். பின்கோடு-606 110.

30180
465551

# கனவு கண்டேன் தோழி

ஐம்பத்தியோரு மாணவிகள் நிறைந்த அந்த வகுப்பு சிறிதும் சப்தமின்றி, சிறிதும் அசைவின்றி மௌனமாய் காத்திருந்தது. எதிர் வகுப்பும் அடுத்த வகுப்பும் கூட தகவல் சொல்லப்பட்டு, அங்கேயும் மௌனம் குடிகொண்டது. மாணவிகள் எல்லோரும் கண்களை மூடிக்கொண்டு, காதுகளை கூர்மையாக்கிக் கொண்டு, ஒரு இனிய குரலுக்காக காத்திருந்தார்கள்.

செல்வராணி லேசாய் தொண்டையை கனைத்துக் கொண்டாள். அடிக் குரலிலிருந்து சிறிய ஆலாபனையை ஆரம்பித்தாள். மெல்ல குரலை உயர்த்தினாள். ஏதோ தேடுவது போல ஒரு பாவத்தை, இறைஞ்சுவது போல ஒரு ஏக்கத்தை, வணங்குவது போல ஒரு தாழ்மையை கெஞ்சுவது போல ஒரு த்வனியை அந்த சிறிய ஆலாபனையில் உருவாக்கினாள். இரண்டு மூன்று மாணவிகளுக்கு கண்களில் நீர் துளிர்க்க ஆரம்பித்துவிட்டது. கைகூப்பி, 'எல்லோரையும் தேவி நீ காக்க வேண்டும். நீயில்லாமல் இந்த உலகத்தில் எது அசையும், எனவே, பரம்பொருளே, கருணைமிக்கவளே, அழகானவளே... கர்ண குண்டலங்கள் அசைய புன்சிரிப்போடு என்னை

பார்த்துக் கொண்டிருப்பவனே, இடைவிடாது நீ என் மனதில் இருக்கிறாய். அதனால் நீ என்னை, இந்த உலகத்தை காக்க வேண்டும்' என்று வடமொழியில் கேட்டாள்.

வடமொழி எல்லோருக்கும் சரியாகப் புரிகின்ற மொழி அல்ல. வடமொழியை அந்தப் பள்ளிக்கூடத்தில் தெரிந்தவர்கள் இரண்டு பேரே இருந்தார்கள். ஆனாலும், அந்தப் பாட்டு என்ன சொல்கிறது என்பது எல்லோருக்கும் புரிந்திருந்தது. அந்தப்பாட்டு ஒரு மயக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

செல்வராணி இன்னும் குரல் உயர்த்தி 'அம்மா' என்று கதறினாள். இன்னும் குரல் உயர்த்தி 'அம்மா' என்று தேடினாள். இன்னும் குரல் உயர்த்தி 'அம்மா' என்று விம்மலோடு பாடினாள்.

ஒரு பெண் தடேரென்று மயங்கி சரிந்து தரையில் விழுந்தது. மற்ற மாணவிகள் ஓடிப்போய் அவளை வாரிக் கொண்டார்கள். மற்ற வகுப்பிலிருந்தும் ஓடிவந்தார்கள்.

செல்வராணி பாடுவதை நிறுத்தினாள்.

''என்னடி...என்ன ஆச்சு,'' டீச்சர் மாணவிகளை விலக்கி விட்டு எட்டிப் பார்த்தாள். விழுந்தவள் எழுந்து சுதாரித்துக் கொண்டு, முகத்தை தாவணியால் அழுந்த துடைத்துக் கொண்டிருந்தாள்.

''என்னடி...என்ன ஆச்சு'' டீச்சர் அந்த மாணவியின் தலையைத் தடவி விட்டாள்.

''தெரியல டீச்சர், இவ பாட, பாட, யாரோ ஒருத்தர் காலை, நான் கெட்டியா பிடிச்சுக்கறா மாதிரி இருந்தது. அந்தக் கால் என்னை அப்படியே தூக்கிட்டு போறா மாதிரி இருந்தது. நான் எங்கியோ காணாப் போயிட்டேன் டீச்சர். வேற ஏதோ ஒரு சத்தம் கேட்டுது. அது



என்னன்னு திரும்பிப் பார்த்தேன். அந்தக் காலை விட்டுட்டேன். அப்படியே கீழே வந்து விழுந்துட்டேன், கண்ணு முழிச்சுப் பார்த்தா தரைல இருக்கேன். பெஞ்சுலேருந்து விழுந்திருந்தாலும், நான் ஆகாயத்துல, ரொம்ப உயரத்திலேருந்து கீழே விழுந்தா மாதிரி, ஒரு ஃபீலிங் இப்பவும் இருக்கு.

அது என்னமோ தெரியல டீச்சர், இவ பாடினா எனக்கு மயக்கம் வந்துருது.''

டீச்சர் வினோதமாய் அவளைப் பார்த்தாள். மற்ற பெண்களும் அவளையே உற்றுப் பார்த்தார்கள். சிறிது நேரம் கழிந்து திரும்பி,தொலைவில் அமர்ந்துள்ள செல்வராணியை பார்த்தார்கள்.

செல்வராணி தலை குனிந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

அவளுக்கு ஒரு பெண் விழுந்தது இடைஞ்சலாகத் தெரியவில்லை. அவள் பாடுவதை நிறுத்தி விட்டாளே தவிர, உள்ளுக்குள் அந்தப்பாட்டு தெளிவாகப் போய் கொண்டிருந்தது. அந்தப் பாட்டு இடைவிடாது ஒலித்துக் கொண்டிருந்தது. அவள் அந்தப் பாட்டோடேயே இருந்தாள். பாட்டு தாண்டி வர, அவளால் சிறிதளவும் முடியவில்லை.

டீச்சர் மறுபடியும் அவளுக்கு அருகே போய் நின்றாள்

''சரி, இன்னொரு பாட்டு பாடு. அம்மா கொஞ்சம் நல்லபடியா உக்காருங்கம்மா.''

''டீச்சர், சாமி பாட்டு வேண்டாம் டீச்சர். வேற ஏதாவது பாடச் சொல்லுங்க டீச்சர்.''

''என்னா பாட்டு வேணும்டி.''

எதுனா சினிமாப் பாட்டு டீச்சர்.'

''உதைபடப் போறீங்க.'' டீச்சர் உரக்கக் கத்தினாள்.

ஆனால், பெண்கள் மறுபடி கத்தினார்கள். சினிமாப் பாட்டு சினிமாப்பாட்டு என்றார்கள்.

பதினோராம் வகுப்பு படிக்கும் அந்தப் பெண்கள் முகத்தில் குறும்பு கொப்பளிக்க, கண்களில் ஆசை மிளிர கை கால்களை உதைத்துக் கொண்டு டீச்சரை கெஞ்சுவது பார்க்க, வேடிக்கையாக இருந்தது.

ஆனால், டீச்சர் அந்த மாதிரி கெஞ்சல்களுக்கு பழக்கப்பட்டிருந்தாள். அந்தக் கெஞ்சலை ஆனந்தமாக ரசித்துப் பார்த்தாள். பெண்கள், டீச்சர் ரசிப்பதை புரிந்து கொண்டு, இன்னும் அதிகமாக கெஞ்சினார்கள். கைகால்களை உதறினார்கள். டீச்சரின் முகத்தை கிட்டத்தட்ட கையிலேந்திக் கொண்டு முத்தமிடுவது போல் அருகே வந்து, சூழ்ந்து கொண்டார்கள்.

''சத்தம் போடாதீங்கடி.'' டீச்சர் அதட்டினாள். மௌனமானார்கள்.

''சினிமாப் பாட்டு பாடச் சொல்றேன். ஆனா, இவ்ளோ கத்தி பாட வேணாம் பக்கத்து கிளாஸுக்குத் தெரியாதபடி, மெல்லிசா பாடணும்.''

''அப்படியே பாடலாம் டீச்சர்.'' அவர்கள் செல்வராணியைப் பார்த்தார்கள்.

செல்வராணி நிமிர்ந்து அவர்களைப் பார்த்தாள். அவள் பார்வையில் எந்தவித செய்தியுமில்லை.

''மத்த கிளாஸுக்குத் தெரியாத, கொஞ்சம் லோ டோன்ல, மிச்சப் பாட்டையும் பாடு'' டீச்சர் சொன்னாள். செல்வராணி உடனே தலையசைத்தாள்.



அவள் சரியென்று சொன்னது, நான் பாடுவதற்குத் தானே பிறந்திருக்கிறேன் என்று சொல்வதைப் போல் இருந்தது.

மாணவிகள் சரசரவென்று சப்தம் கேட்ட பாம்புகள் போல், நழுவி, அவரவர் இடத்திற்குப் போய் அமர்ந்து கொண்டார்கள்.

செல்வராணி மறுபடியும் தொண்டையை கனைத்துக் கொண்டாள். என்ன சினிமாப்பாட்டு பாடுவது என்று யோசித்தாள். பாரதியார் பாட்டு எந்த சினிமாவில் வந்திருக்கிறது என்று அலசினாள். 'நீ எனதின்னுயிர் கண்ணம்மா, எந்த நேரமும் நின்றனைப் போற்றுவேன்' என்று அவள் குரல் அந்த வகுப்பு முழுவதும், அடுத்த வகுப்பு முழுவதும், அதற்கடுத்த வகுப்பு முழுவதும் பரவ ஆரம்பித்தது.

அந்த பள்ளிக்கூடத்தின், அந்த தனித்த பில்டிங்கில் அவள் பாட்டு அற்புதமாய் ஒலித்தது. இதற்குப் பிறகு அவள் மூன்று நான்கு சினிமா பாடல்கள் பாடினாள். அவை சினிமாப் பாடல்கள் தான் ஆனால், அந்தப் பாடல்கள் உயிரோட்ட முள்ளவையாய் இருந்தன மாணவிகளைக் கிறங்கடித்தன.

மாணவிகளின் தரம் பல்வேறு விதமாக இருந்தது.

**'பத்து மாற்று பொன்னொத்த நின் மேனியும்**
**இந்த வையத்தில் நான் உள்ள மட்டிலும்**
**உன்னை வேற்று நினைவின்றி தேற்றியே**
**என்னை விண்ணவராகப் புரிகுவே.'**

என்ற பாரதியார் வரிக்கு சில பெண்கள் அடடா என்று தலையசைத்து, கண்களை மூடிக் கொண்டார்கள்.

அடுத்த பாட்டு, பழைய தமிழ் சினிமாப்படத்தின் பாட்டாக இருந்தது.

**'எனத்தான் என்னைப் பார்த்தான்**
**கேளத்தான் என்று சொல்லித்தான்'**

என்று அவன் கொஞ்சிப் பாட, பல மாணவிகள் பெஞ்சில் குப்புறப்படுத்துக் கொண்டார்கள். நெஞ்சை அழுத்தி, முகவாயை மார்க்கட்டையில் வைத்து, ஒரு கனவில் மூழ்கினார்கள். யாரோ தன்னை, அருகே வந்து, கன்னத்தோடு கன்னம் வைத்து, இடுப்பெல்லாம் தடவுவதாய் உணர்ந்தார்கள். வயிற்றின் மீது கை வைப்பதாய் துடித்தார்கள்.

'எப்படிச் சொல்வேனடி' என்று அவன் பாட்டில் நினைத்த போது, அவர்களும் அந்தப் பாட்டு தனக்காய் தன் மனதினைச் சொல்லுகிற பாட்டாய் இருப்பதாய் உணர்ந்து எப்படி என்னுடைய வேட்கையை, காம அவஸ்தையை வெளியே சொல்ல முடியும் என்பது போல் முகபாவம் மாற்றினார்கள்.

அடுத்த பாட்டு இன்னும் குதூகலமாய் இருந்தது.

**'பறக்கும் பந்து பறக்கும் - இது**
**பறந்தோடி வரும் தூது'**

என்று பாட ஆரம்பித்த போது, பல பேருடைய முகங்கள் சிவந்தன, வெட்கத்தில் நிறைந்தன, காதலில் கனிந்தன.

**'தேடும் உனைநாடும் - என்**
**தெய்வ மென்று உன்னைக் கூறும்.**
**திரும்பும் என்னை நெருங்கும் - என்று**
**திசைமாறி வரும் பந்து.'**

என்று பாடப்பட்ட போது, பல பேர் கையில் பேட்மிட்டனுடன், காதலனுடன், பந்துடன் போராடினார்கள். அந்த பாட்டிற்கு உண்டான தாளத்தை அவர்கள் விரல்கள் போட்டன.

பாடல்கள் சொக்க வைத்தன. அவன் குரல் எல்லோரையும் நெகிழ்த்தியது.



செல்வராணி பதினோராம் வகுப்பு 'ஏ' பிரிவு. படிப்பதற்காகவோ, உடுப்பதற்காகவோ வேறு எதற்காகவோ இந்த பூமியில் பிறக்கவில்லை. அவள் பாடுவதற்காகப் பிறந்திருக்கிறாள் என்று எல்லோரும் ஏகோபித்தபடி தீர்மானமானார்கள்.

மூன்றாவது பாடலில் மனம் கனிந்து சந்தோஷமாகி, எவ்வளவு பெரிய அற்புதமான குரல் உனக்கு. எப்படி மனிதர்களை சந்தோஷப்படுத்துகிறாய் என்பதை சொல்லாமல் சொல்லும் வண்ணம், மெல்லியதாய் கைதட்டி, அவளை பாராட்டினார்கள்.

போதுமா, என்பது போல் செல்வராணி டீச்சரைப் பார்த்தாள். டீச்சர் போதும் என்று சொன்னாள்.

அடுத்த அறையிலிருந்து வேறு டீச்சர் வந்தாள். வாசலில் நின்றாள்.

''அவங்களுக்குப் பாடிட்டா போறுமா. எங்களுக்குப் பாட வேண்டாமா. நாங்களும் பேசாமதானே உக்காந்துட்டிருந்தோம். இன்னிக்கு பாடம் நடத்தறது இல்லை, நீ வந்து எங்க கிளாஸ்ல பாடு. செல்வராணியை நான் இட்டுகிட்டுப் போறேன். செல்வராணியின் டீச்சரை இன்னொரு டீச்சர் கேட்டாள்.

செல்வராணியின் டீச்சரால், இந்த டீச்சரை மறுக்க முடியவில்லை. சரியென்று சொன்னாள். அதே நேரம், ''செல்வராணி, எங்களுக்கும் கேக்கறா மாதிரி பாடு.'' என்று உத்தரவிட்டாள்.

செல்வராணி எதிர்வகுப்பிற்குப் போனாள். அங்கு அமர்ந்து கொண்டாள். உள்ளே நுழைந்ததும், மாணவிகள் எழுந்து நின்று மெல்லியதாய் கைதட்டினார்கள். ''போறும் போறும்டி போறும்டி'' என்று டீச்சர் கத்த, நிறுத்திக் கொண்டார்கள். அவள் வருகையை ஆவலாய் எதிர்பார்த்தது போல் உட்கார்ந்து கொண்டார்கள்.

''என்ன பாட்டு பாடட்டும்.'' செல்வராணி கேட்டாள்.

''எதுனா சோகப் பாட்டா பாடும்மா'' டீச்சர் அவளை வேண்டிக் கொண்டாள்.

''சோகப் பட்டுன்னா எது''

''மாலைப் பொழுதின் மயக்கத்திலே'' டீச்சர் எடுத்துக் கொடுத்தாள்.

மறுபடியும் அங்கு மௌனம் பச்சென்று ஒட்டிக் கொண்டது. அந்த மௌனத்தை கிழித்துக் கொண்டு, செல்வராணியின் குரல் மேலெழுந்தது.

**''மாலைப் பொழுதின் மயக்கத்திலே-நான்**
**கனவு கண்டேன் தோழி.**
**மனதில் இருந்தும் வார்த்தையில் இல்லை**
**காரணம் என்ன தோழி''**

என்று அவள் கேட்க, பல பேர் கன்னத்தில் கை வைத்துக் கொண்டார்கள், முகம் கவிழ்த்துக் கொண்டார்கள். முகத்தை பொத்திக் கொண்டார்கள். மெல்ல சுவரில் சாய்ந்து கொண்டார்கள். கணவனை இழந்த பெண்கள் போலவே, பல பேர் மனநிலையும் மாறிற்று. தன்னைப் பிரிந்தவர்கள் யார் தன்னை ஒதுக்கியவர்கள் யார் என்று எல்லா பெண் மனமும், ஒரு கடந்து போன ஆணைத் தேடியது.

**''கனவில் வந்தவன் யாரெனக் கேட்டேன்**
**கணவரென்றார் தோழி.**
**கணவரென்றால் அவர் கனவு முடிந்ததும்**
**பிரிந்தது என் தோழி.''**

என்று அவள் தொடர்ந்து பாட, பின்பக்கத்திலிருந்து லேசாய் விசும்பல் எழுந்தது. டீச்சர் கண்களில் நீர் திரண்டது. மெல்ல கன்னம் வழிந்தது.



செல்வராணி தொடர்ந்து பாடிக்கொண்டிருந்தாள்.

**'இன்பம் சிலநாள் துன்பம் சிலநாள்**
**என்றவர் யார் தோழி**
**இன்பம் கனவில் துன்பம் எதிரில்**
**என்பது என் தோழி'**

என்று பாட்டு தொடர, பல பேர் பேரவஸ்தைப்பட்டார்கள். உள்ளுக்குள் மருகினார்கள் வெளியே சொல்லிக் கொள்ள முடியாத துக்கத்தை விழுங்கியவர்கள் போல் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டார்கள்.

அந்தப் பாட்டு மூன்று வகுப்புப் பெண்களையும் பாடாய்ப்படுத்தியது.

செல்வராணி சுமாராகத்தான் படிப்பாள், நிறைய பாடுவாள். அவள் ஒவ்வொரு வகுப்பும் தாண்டி வந்தது. பாட்டினாலேயே தவிர, படிப்பினால் அல்ல. அவள் வகுப்பில் கடைசிக்கு மூன்று பெண்களுக்கு முன்னால் இருந்தாள். ஆனால், மற்ற மூன்று பெண்களையும் வகுப்பு அவமானப்படுத்தியது செல்வராணியை மரியாதையாய் நடத்தியது.

அவள் பாட்டரசி பாடல்களின் ராணி மெல்லிசைத் தேனீ அந்தப் பள்ளிக்கூடத்தின் பூங்குயில், அவளைப் பாடச் சொல்லாத ஆசிரியைகளே அந்தப்பள்ளிக்கூடத்தில் இல்லை. அவள் அடுத்த பாட்டையும் ஆரம்பித்தாள்.

**பகலிலே சந்திரனை பார்க்கப்போனேன்-அவன்**
**இரவிலே வருவதாக ஒருத்தி சொன்னாள்.**
**இரவிலே இரவிலே நானும் நடப்பேன்-அவன்**
**எல்லோரும் பார்க்கும்படி உயரத்தில் இருப்பான்.**

பாட்டு சந்திரனை மட்டும் சொல்லவில்லை. சந்திரன் என்ற பெயர் கொண்ட கதாநாயகனையும் சொல்லியது. சந்திரன் என்பது கதாநாயகன் பெயர்கூட அல்ல. எல்லா

"என்ன பாட்டு பாடட்டும்." செல்வராணி கேட்டாள்.

"எதுனா சோகப் பாட்டா பாடும்மா" டீச்சர் அவளை வேண்டிக் கொண்டாள்.

"சோகப் பட்டுன்னா எது"

"மாலைப் பொழுதின் மயக்கத்திலே" டீச்சர் எடுத்துக் கொடுத்தாள்.

மறுபடியும் அங்கு மௌனம் பச்சென்று ஒட்டிக் கொண்டது. அந்த மௌனத்தை கிழித்துக் கொண்டு, செல்வராணியின் குரல் மேலெழுந்தது.

**"மாலைப் பொழுதின் மயக்கத்திலே-நான்**
**கனவு கண்டேன் தோழி.**
**மனதில் இருந்தும் வார்த்தையில் இல்லை**
**காரணம் என்ன தோழி"**

என்று அவள் கேட்க, பல பேர் கன்னத்தில் கை வைத்துக் கொண்டார்கள், முகம் கவிழ்த்துக் கொண்டார்கள். முகத்தை பொத்திக் கொண்டார்கள். மெல்ல சுவரில் சாய்ந்து கொண்டார்கள். கணவனை இழந்த பெண்கள் போலவே, பல பேர் மனநிலையும் மாறிற்று. தன்னைப் பிரித்தவர்கள் யார் தன்னை ஒதுக்கியவர்கள் யார் என்று எல்லா பெண் மனமும், ஒரு கடந்து போன ஆணைத் தேடியது.

**"கனவில் வந்தவன் யாரெனக் கேட்டேன்**
**கணவரென்றார் தோழி.**
**கணவரென்றால் அவர் கனவு முடிந்ததும்**
**பிரிந்தது ஏன் தோழி."**

என்று அவள் தொடர்ந்து பாட, பின்பக்கத்திலிருந்து லேசாய் விசும்பல் எழுந்தது. டீச்சர் கண்களில் நீர் திரண்டது. மெல்ல கன்னம் வழிந்தது.



செல்வராணி தொடர்ந்து பாடிக்கொண்டிருந்தாள்.

**'இன்பம் சிலநாள் துன்பம் சிலநாள்**
**என்றவர் யார் தோழி**
**இன்பம் கனவில் துன்பம் எதிரில்**
**என்பது ஏன் தோழி'**

என்று பாட்டு தொடர, பல பேர் பேரவஸ்தைப்பட்டார்கள். உள்ளுக்குள் மருகினார்கள் வெளியே சொல்லிக் கொள்ள முடியாத துக்கத்தை விழுங்கியவர்கள் போல் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டார்கள்.

அந்தப் பாட்டு மூன்று வகுப்புப் பெண்களையும் பாடாய்ப்படுத்தியது.

செல்வராணி சுமாராகத்தான் படிப்பாள், நிறைய பாடுவாள். அவள் ஒவ்வொரு வகுப்பும் தாண்டி வந்தது பாட்டினாலேயே தவிர, படிப்பினால் அல்ல. அவள் வகுப்பில் கடைசிக்கு மூன்று பெண்களுக்கு முன்னால் இருந்தாள். ஆனால், மற்ற மூன்று பெண்களையும் வகுப்பு அவமானப்படுத்தியது செல்வராணியை மரியாதையாய் நடத்தியது.

அவள் பாட்டரசி பாடல்களின் ராணி மெல்லிசைத் தேனீ அந்தப் பள்ளிக்கூடத்தின் பூங்குயில். அவளைப் பாடச் சொல்லாத ஆசிரியைகளே அந்தப்பள்ளிக்கூடத்தில் இல்லை. அவள் அடுத்த பாட்டையும் ஆரம்பித்தாள்.

**பகலிலே சந்திரனை பார்க்கப்போனேன்-அவன்**
**இரவிலே வருவதாக ஒருத்தி சொன்னாள்.**
**இரவிலே இரவிலே நானும் நடப்பேன்-அவன்**
**எல்லோரும் பார்க்கும்படி உயரத்தில் இருப்பான்.**

பாட்டு சந்திரனை மட்டும் சொல்லவில்லை. சந்திரன் என்ற பெயர் கொண்ட கதாநாயகனையும் சொல்லியது. சந்திரன் என்பது கதாநாயகன் பெயர்கூட அல்ல. எல்லா

காதலர்களும், எல்லா காதலனும் சந்திரன்தான், காதலனை சந்திரனாக உருவகப்படுத்தி, அவன், சாதாரணப் பெண்ணுக்கு எட்டாது வெகு உயரத்திற்கு போய்விடுகிறான் என்பதை அந்தப் பாட்டு சொல்ல, பல பெண்களுக்கு துக்கம் பீறிட்டு அடித்தது.

''இன்னும் ஒரே ஒரு சோகப்பாட்டு பாடிட்டு உன் கிளாஸுக்குப் போயிடு'' அழைத்து வந்த டீச்சர், அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டு கெஞ்சலாய் அவளிடம் கேட்டாள். செல்வராணி சரியென்று தலையசைத்தாள்.

அவள் பாடுவதற்கு பிகு செய்வதோ, நாளைக்குப் பாடுகிறேன் என்று ஏமாற்றுவதோ இல்லை. யார் பாடச் சொன்னாலும் அவள் பளிச்சென்று பாடத் துவங்கி விடுவாள். அப்படிப் பாடுவதே தனது வேலை என்று தீர்மானமாக இருந்தாள்.

அடுத்து, என்ன சோகப்பாட்டு என்று மனசுக்குள் தேடினாள். சட்டென்று அவளுக்கு நடிகை சரோஜா தேவியின் முகம் ஞாபகத்திற்கு வந்தது. ஜெமினிகணேசன் முகமும் ஞாபகத்திற்கு வந்தது. காதலித்துப் பிரிகின்ற ஒரு பெண்ணின் சோகமான முகம் ஞாபகத்திற்கு வந்தது.

மெல்ல குரலெடுத்து அவள் பாடத் துவங்கினாள்!

**காதலிலே தோல்வியுற்றாள்**
**கன்னியொருத்தி;**
**கடந்த பின்னே அமைதி**
**எங்கு பெறுவாள்-காலம்**
**கடந்தபின்னே அமைதி**
**எங்கு பெறுவாள்'**

என்று பாடத் துவங்கினாள்.



வகுப்பில் எல்லா மூலைகளிலிருந்து விசும்பல் எழத் துவங்கியது.

அந்தப் பதினோராம் வகுப்பின் பாதிப் பெண்கள் காதலித்திருப்பது போலவும் காதலித்து தோல்வியடைந்தது போலவும் ஒரு கனவுக்குள் கவிழ்ந்து அழத் துவங்கினார்கள்.

இதுதான் இசையின் வலிமை. இசை மிகக் கூர்மையானது எவ்வளவு தடிமனான மனம்கொண்டிருந்தாலும், அதைத் துளைத்து, செய்தியை நுழைக்கும் திடம் பெற்றது. இசையின் வழியே இந்த உலகம் பக்தியை பரப்பியிருக்கிறது. மிக மிக முரடான, போக்கிரியான மனிதர்களை கூட, இசை கவிழ்த்து விட்டுவிடும். காலை வாரி அவர்களை பக்திமான்களாகச் செய்துவிடும். பக்தியாய் இருப்பதற்கு இசை பெருதவியாக இருக்கிறது.

பக்தியாய் இருப்பதென்பது பணிவாக இருத்தல். அந்தப் பணிவாக இருக்கிற மனிதர்கள் எல்லோரும் உலகத்திற்கு அதிகம் இடைஞ்சல் செய்யாமல் இருந்தார்கள். எனவே, மனிதர்களை அதிகம் இடைஞ்சல் செய்யாமல் இருப்பதற்கு, பக்தி என்கிற ஒரு மருந்தை, இசை என்கிற ஊசியின் மூலம் உடம்பிற்குள் இறக்கினார்கள்.

இசை இல்லையெனில், வெறும் செய்யுள் வடிவமாக, உரைநடை வடிவமாக கடவுள் விஷயங்கள் இருப்பின் ஒருக்காலும் கடவுள் விஷயம் இவ்வளவு உயரமாக ஜெயித்திருக்காது. இத்தனை பலமாக பேசப்பட்டிருக்காது.

நாத்திகம் உரைநடை, நாத்திகம் பேச்சு. நாத்திகத்தைப் பாடலாய் யாரும் இதுவரை சொல்ல முயன்றதில்லை. எனவேதான், நாத்திகம் அதிகம் பரவாமல், பாடலாய் சொல்லப்பட்ட ஆத்திகம் அதிகம் பரவியிருக்கிறது. நாத்திக குணமுள்ளோர் எப்போதாவது இசையை

கையில் ஆயுதமாக எடுத்திருப்பின் எங்கேயாவது இசை மூலமாக நாத்திகத்தை பரப்ப முயற்சித்திருப்பின் நிச்சயம் வென்று உலகத்தை இந்நேரம் வளைத்திருப்பார்கள்.

நாத்திகர்கள் வறட்சியானவர்கள். வறட்சியானவர்களுக்கு இசை முக்கியமான விஷயமல்ல. எனவே, நாத்திகர்கள் இசையை கைக்கொள்ளாமல் போகவே அவர்களுடைய இயக்கம் மிகப் பின்னடைந்தது. ஆத்திகம் மிக எளிதில் ஜெயித்தது. இன்று உலகம் முழுவதும் கடவுளை நம்பிக் கொண்டிருப்பதன் காரணம், கடவுள் தத்துவமல்ல. கடவுள் தத்துவத்தைச் சொன்ன இசை என்ற கருவி.

கதை கேட்பதற்கும் கவிதையைப் புரிந்து கொள்வதற்கும். சிற்பத்தை அனுபவிப்பதற்கும், சித்திரத்தைப் பார்ப்பதற்கும் அறிவு தேவை. ஆனால், இசையை அனுபவிக்க எந்த அறிவும் தேவையில்லை. வெறுமே கேட்டுக் கொண்டிருந்தால் போதுமானது. இப்படிக் கேட்பதற்கும் மனம் ஒன்றி இசையோடு லயிக்க வேண்டிய அவசியமில்லை. வேறு ஏதேனும் யோசித்துக் கொண்டே, இசையை அனுபவிக்கமுடியும், வேறு ஏதேனும் சிந்தித்துக் கொண்டே இசையைப் பருகமுடியும். சிலசமயம் உறங்கிக் கொண்டே கூட இசையை ரசிக்கலாம். இசையைக் கேட்கிறபோது உறக்கம் வருவது இயல்பு. ஏனெனில், இசை உறங்க வைப்பது. மூளையை அமைதிப்படுத்துவது. நாடி நரம்புகளை குளுமையாக்குவது.

இசைக்குக் கூர்மையான வடிவமில்லை. அதுவொரு உருண்டை வடிவம். வெறுமே உருட்டிவிட்டால், எந்தப் பக்கம் பள்ளமாக இருக்கிறதோ, அந்தப்பக்கம் போகின்ற ஒரு கலைவடிவம். இசையின் வருத்தன்மை இசையை மிக உயர்வாக நிற்க வைத்தது.



இசையில் சிக்கலான கணக்குகள் உண்டு. தந்திரங்கள் உண்டு. மக்களைத் திட்டமிட்டு மயக்குவதற்கு ஏற்ற இறக்கங்கள் உண்டு. அந்தக்கணக்குகள் ஏற்ற இறக்கங்கள் புரிந்துதான் இசையை ரசிக்க வேண்டும் என்று அவசியமில்லை. மெல்லிய வார்த்தைகள் அதை ஒரு இதமான, குழைவான இசையில் சேர்த்து, நல்ல கதியில் அமைத்துவிட்டால், மனம் அந்த விஷயத்தோடு நெருங்கிய சம்பந்தம் உண்டாகிவிடுகிறது.

நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று வார்த்தையாய் உரைநடையாய் பேசும்போது முரட்டுத்தனமாக இருக்கின்ற அந்தச் செய்தி அதே விஷயத்தை இசையாக மாற்றித் தருகிறபோது, மிக ரம்மியமாக விழுகிறது.நான் இறந்துபோகப் போகிறேன் என்று ஒருவர் சொல்லும் போது ஏற்படக்கூடிய அதிர்ச்சி நாம் அதே விஷயத்தை இசையாக சொல்லுகிறபோது அது மிகப்பெரிய விடுதலையாக கேட்பவருக்கு காட்சியளிக்கிறது. இசை எந்த விஷயத்தையும் குழைவாக்கித்தருவது.

இந்த நூற்றாண்டின் சினிமாக்காரர்கள் அந்த இசையை முழுவதுமாய் பயன்படுத்திக் கொண்டார்கள். குறிப்பால் தமிழ் சினிமா இசையை பைநாகப்பாய்போல சுருட்டி, தன் கக்கத்தில் அடுக்கி வைத்துக்கொண்டது. எங்கெல்லாம் மக்களைக் கவரவேண்டும் என்று ஆசைப்படுகிறதோ, அதை நிறுத்தி, அமர்ந்து, உரத்த குரலில் எல்லோரையும் கவரும்வண்ணம் அது பாடத்துவங்கியது.

இசை என்ற அந்த பைநாகப்பாயில் கெட்டிக்காரக் கலைஞர்கள் சுகமாக வீற்றிருந்தார்கள். புத்திசாலியான புலவர்கள் நன்கு சம்பாதித்தார்கள். இவர்களை உபயோகப்படுத்திக் கொண்ட தயாரிப்பாளர்கள் உயர்ந்து நின்றார்கள். நல்ல பாட்டோடு கூடிய திரைப்படம் உச்சநிலையில் விற்பனையாயிற்று. மக்களிடையே நல்ல

பெயர் பரவியது. அதிக லாபம் சம்பாதித்துக் கொடுத்தது.

மக்களுக்கு நெருக்கமாக இருக்கின்ற எந்தக் கலையும் உரார்வாகவும், பரவலாகவும் பேசப்படும். கவிதையைக் காட்டிலும் கதைகளைக் காட்டிலும் கூத்து மக்களுக்கு நெருக்கமான விஷயம். கூத்தின் செய்தி மிக நேரிடையாக தெளிவாய், எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி உணர்ச்சிப் பிழம்பாய் மக்களிடையே பரிமாறப்படுகிறது.

ஒரு கவிதை படிக்கும் போது பாத்திரங்களை நாம் கற்பனை செய்து கொள்ள வேண்டும். மொழியறிவை விருத்தி செய்து கொள்ள வேண்டும். சிக்கலான வாக்கியங்களைப் பிரித்து புரிந்து கொள்ள வேண்டும். ஒரு கதை பெரிய சிக்கலில்லை எனினும் அதிகம் பாத்திரங்களை கற்பனை செய்து கொள்ளும் வேதனை இருக்கிறது.

சிற்பம் அசைவில்லாதது. சித்திரம் வண்ண மயிலாக மானாக இருந்தாலும் கூட ஒரு காட்சிக்குமேல் விளக்க முடியாது. ஆனால் கூத்து விதம் விதமான காட்சிகளை வெகுவிரைவாகவே நேரடியாய் மக்களுக்குச் சொல்கிறது.

ஒருவன் வெட்டி வீழ்த்தப்பட்டான் என்பதையும் அரியணை ஏறினான் என்பதையும் காதலித்து மயக்கத்தில் கட்டுண்டு கிடந்தான் என்பதையும், தாய் தந்தையரை பிரிந்து அனாதையாக அலைந்தான் என்பதையும், மிகத் தெளிவாய், உணர்ச்சிபூர்வமாய் மக்களுக்குச் சொல்ல முடியும். கூத்து இதைச் சொன்னபோது மக்கள் மற்ற எல்லா கலைகளையும் பின்னுக்குத் தள்ளி கூத்தை நெருக்கமாக எடுத்துக்கொண்டார்கள். கூத்தாடிகளைக் கொண்டாடினார்கள். ஒரு ஊருக்கு கூத்து வருகிறதென்றால், அந்த ஊர் பரபரத்தது மிகுந்த சந்தோஷமடைந்தது. தினம்தினம் எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு கூத்து பார்க்க ஓடிப் போனது. அந்தக் கூத்தின் விஞ்ஞான



பரிமாணம் திரைப்படம், கூத்தில் இல்லாத அற்புதமான விஷயங்கள் திரைப்படத்தில் இருந்தன. பல்வேறு ஊர்களைக்காட்டின. மிக நெருக்கமாய் உணர்ச்சிகளை வெளிப்படுத்தின. பத்தடிக்கு ஆறடி ஒரு முகம் எதிரே நின்று அழுதது. இருட்டிலுள்ள எல்லா ஜனங்களும் அழுதார்கள். பத்தடிக்கு ஆறடி ஒரு முகம் கண்கலங்கப் பாடியது. எல்லா ஜனங்களும் பல்தெரிய சிரித்து கிறங்கினார்கள்.

சினிமா, இருட்டில் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியதால் தங்களுடைய முகமாறுதல்கள் பிறருக்குத் தெரியாது என்கிற சுதந்திரத்தால் மக்கள் அதில் ஆவலாக ஈடுபட்டு பார்த்தார்கள்.

ஒரு கவிதை படிக்கிறபோது முகத்தில் உள்ள மாறுதல்கள் மற்றவர்கள் கவனிக்க வாய்ப்பு உண்டு. கூத்தில் கூட எதிர் வெளிச்சத்தில் முகம் மாறுவது தெரியகூடும். ஆனால் கும்மிருட்டில் காட்டப்படும் திரைப்படத்தில் அடுத்தவருடைய முகமாறுதல் பற்றி எவருக்கும் அக்கறையில்லாமல், முற்றிலும் திரைப்படத்திலேயே கலந்து போனார்கள். திரைப்படம் அழுதால் அழுதார்கள். சிரித்தால் சிரித்தார்கள். கொஞ்சினால் கொஞ்சினார்கள். விம்மினால் விம்மினார்கள். இது உள்ளுக்குள் இருக்கிற ஆயிரம் பேரும் இவ்விதமே செய்தால் திரைப்படம் மகத்தான வெற்றியைப் பெற்றது.

அந்த திரைப்படத்தின் வெற்றிக்கு மிக முக்கியமான காரணம் இசை. இசை என்கிற கோட்டைக்குள் சினிமா தன்னை மிக போஷாக்காக வளர்த்துக் கொண்டது.

திரைப்படம் எல்லா விஷயங்களையும் கலையாக்கி மகிழ்ந்தாலும், காதலைத்தான் முக்கியமான விஷயமாய் எடுத்துக் கொண்டது. மனித வாழ்க்கையின் உயிர்நாடியான காதலை எல்லாக்கலைகளும் விதம்விதமாக சொல்ல திரைப்படம் அதை ரத்தமும் சதையுமாய் காட்டியது.

பெருமூச்சுகளும் சிறு மூச்சுகளும் கண்ணீரும் குறுஞ்சிரிப்பும் வாய்விட்டு கலகலவென்ற நகைப்புமாய் காதலை அது ஜீவனோடு விளக்கியது. அதற்குத் துணையாய் இசை மிகப் பெரிய மண்டபம் அமைத்தது. காதல்பாட்டுகள் திரைப்படத்தின் மூலம் தமிழ் தேசம் முழுவதும் வளைத்தன. இறுக்க கட்டிப் போட்டன.

தமிழர்கள் காதலிக்கப் பயந்தவர்கள் அதனாலேயே' காதல் பாட்டுக்களுக்கு மிகப் பெரிய வரவேற்பு இருந்தது. நேரடியாக காதலிக்க வெட்கப்பட்ட தமிழர்கள்' கனவுக்குள் கற்பனைக்குள் வேகமாய் காதலித்தார்கள். ஒரே நேரத்தில் பல பேரை காதலித்தார்கள். தங்கள் காதல் புனிதமானது என்று கற்பனைக்குள்ளே நம்பினார்கள். அந்தக் காதலுக்கு உரம் போட்டு வளர்க்க அவர்கள் சினிமாப் பாட்டை நாடினார்கள்.

'எந்தப் பெண்ணும், இன்னொரு பெண்ணிடம், யாரையாவது நீ காதலிக்கிறாயா என்று கேட்டால், ஆமாம் என்று ஒத்துக் கொள்ளவே மாட்டாள். அப்படி உடனே ஒத்துக் கொள்கிற பெண்களை இவர்கள் மதிப்பதுமில்லை. ஆனால், அதே நேரம் இந்தப் பெண்கள் மனதிற்குள் இடைவிடாது, திருமணமான பிறகும் கூட காதல் என்கிற மயக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். அதை விடாப்பிடியாகவாழ்வின் கடைசி வரையிலும் எடுத்துக்கொண்டு போனார்கள். நோயுற்று உடல் தளரும் நேரம் வரை காதல் அவர்கள் வாழ்க்கையில் மிக முக்கியமான அங்கமாக இருந்தது.

காதலில் சந்தோஷத்தைச் சொல்லும் பாட்டுக்களை விட, காதலில் துக்கத்தைச் சொல்லும் பாட்டுக்களுக்கு மிகப் பெரியவரவேற்பு தமிழகத்தில் இருந்தது. காதலித்து ஜெயிப்பதை விட, காதலித்து தோற்பது சுகமானது என்கிற அபிப்ராயம் பெண்களிடையேயும் ஆண்களிடையேயும் பரவி இருந்தது.



துக்கம் அமைதியானது. அமைதி சந்தோஷமானது. அது மனிதனுடைய இயல்பு. எனவே, தன் இயல்பான சந்தோஷத்தை அவன் துக்கத்தின் மூலம்அனுபவித்தான். அந்த துக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ள அல்லது போஷாக்காய் வளர்க்க, திரைப்பட இசை தமிழ் மக்களுக்கு அதிகம் பயன்பட்டது. எனவே, திரைப்பட இசையும் அதில் குறிப்பாய் சோகப்பாட்டுகளும் தமிழர்களின் நெஞ்சுக்குள்ளே கோட்டை கட்டி வாழ்ந்தது.

செல்வராணி என்கிற பதினெட்டுவயது இளம் பெண் தன்னுடைய வசீகரமான குரலால் அந்தக் கோட்டையில் தன் கொடியை ஏற்றினாள். அவள் வசீகரமான குரல், கடவுள் அருள். அவள் அதற்காக எந்த முயற்சியும் செய்யவில்லை. நன்றாகப் பாட வேண்டும் என்று அவள் யாரிடமும் பயிற்சி எடுத்துக் கொள்ளவில்லை. ஆனாலும் அவள் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பிய சில ஆட்களும் இருந்தார்கள்.

பள்ளிக்கூடம் மணியடித்தது.

செல்வராணி நிமிர்ந்து எல்லோரையும் பார்த்தாள். அவளுக்கு வீட்டிற்குப் போக வேண்டும் என்று தோன்றியது. வீட்டிற்குப்போய் அம்மாவிடம் இன்று ஒரு பீரியடு முழுவதும், தான் ஏழு பாட்டுக்கள் பாடியதையும், வகுப்பில் எல்லோரும் அழுததையும் சொல்ல வேண்டும் என்ற ஆவல் உள்ளே உண்டாயிற்று. தன்னுடைய வெற்றியை அவள் அம்மாவிடம்தான் பரிமாறிக்கொள்வது வழக்கம். ஏனெனில், அவள் அம்மாவிற்கும் பாடவேண்டும் என்ற ஆசை இருந்தது. எப்போதாவது பாடவேண்டும் என்று தோன்றினால், அவள் செல்வராணியின் மடியில் தலை வைத்து, 'ஏதாவது பாடுடி' என்று கேட்பாள். செல்வராணியும் பாடுவாள்.

அவர்கள், அம்மாவும் மகளுமாய் இல்லாமல் தோழிகளாய் இருந்தார்கள். அப்படி தோழிகளாய் இருக்க நிரம்பட இசை உதவியது.

போகலாம் என்று ஆசிரியைகள் தலையசைத்ததும் மாணவிகள் பெருங்கூச்சலோடு பைகளையும், டிபன் பாக்ஸுகளையும் எடுத்துக் கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டார்கள்.

ஒரு டீச்சர் செல்வராணியை விரல் சொடுக்கிக் கூப்பிட்டாள். 'இங்கே வா' என்று அருகே அழைத்தாள். தோளில் கை வைத்தாள். கன்னங்களை இரண்டு கைகளிலும் தேக்கிக் கொண்டாள். நெற்றியிலும் கன்னத்திலும் மாறி மாறி முத்தமிட்டாள். ''உனக்கு எதாவது கொடுக்கணும்.நல்ல பிரசென்ட் பண்ணணும்னு நினைக்கிறேன். என்ன கொடுக்கறதுன்னு தெரியலை. இப்போதைக்கு இந்த முத்தம் வைச்சுக்கோ. காலைலேருந்து மனசு ஒருமாதிரி குழப்பமா இருந்துச்சு. என்னடான்னு ஒரு வேதனை இருந்தது. நீ பாடினபிறகு அந்த வேதனை போயே போயிடுச்சு. நீ நல்லா இருப்பே செல்வராணி. உனக்கு நல்ல புருஷன் கிடைப்பான் கவலையே படாதே'' என்று அவள் உச்சியில் கைவைத்து ஆசீர்வதித்தாள்.

செல்வராணி வெட்கப்பட, மற்ற பெண்கள் கிளுகிளுப்பாய் சிரித்தார்கள். கணவன், கல்யாணம் என்றால் உடனே அவர்களுக்கு சிரிப்புதான் வந்துவிடுகிறது.

''செல்வராணி இங்க வா'' இன்னொரு டீச்சர் கூப்பிட்டாள். அவள் கையில் சில கூப்பன்கள் இருந்தன.

''இது சூர்யா ஸ்வீட்ஸ்னு, நம்ம பள்ளிக்கூடம் தாண்டி, வலப்பக்கம் திரும்பின பிறகு பெரிய கடை, அவங்களோட கிஃப்ட்கூப்பன். ஒவ்வொரு தடவை ஸ்வீட் வாங்கற போதும், இந்த மாதிரி கூப்பன் தருவாங்க. இதை என் பர்ஸ்லயே வைச்சிருந்தேன். இது நாப்பத்தஞ்சு ரூபாய்க்கு உண்டான கூப்பன். போறபோது



எதாவது ஸ்வீட் வாங்கிட்டுப்போ. நீ பாடினதுக்கு என் அன்புப்பரிசு.''

ரொம்ப நல்லா பாடறே. ரொம்ப ரொம்ப நல்லா பாடறே. உன் குரல் இன்னும் அப்படியே என் காதுலயே இருக்கு.'' என்று அவள் கன்னத்தை கிள்ளி, சுள்ளென்று முதுகில் அடித்தாள்.

அந்த அடி சந்தோஷமாக இருந்தது. அந்த கிள்ளல் வலித்தாலும் இதமாக இருந்தது.

செல்வராணி கூப்பன்களை கண்ணில் ஒற்றிக் கொண்டு, 'தேங்க்யூ' என்று சொன்னாள். மிகவும் வெட்கப்பட்டவள்போல், டீச்சரிடம் கூப்பன்கள் வாங்கியதற்கு சங்கடப்பட்டவள் போல், எழுந்து நடந்து ஸ்நேகிதிகளோடு சேர்ந்து கொண்டாள்.

அவளுக்கு நான்கு ஸ்நேகிதிகள் இருந்தார்கள். அந்த நான்கு பேரும் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

நாலு பெண்களில் மூன்று பேரும் செல்வராணியை ஒட்டி நடந்துவர பிரியப்பட்டார்கள் எப்பொழுதெல்லாம் இடைவெளி கிடைத்ததோ, விலகியிருந்தவள் அந்த இடைவெளிக்குள் புகுந்து, செல்வராணிக்கு அருகே உரசி நடந்து வருவாள். இதைப்பற்றி அவர்கள் பேசிக்கொள்ளவில்லை. ஏன் இப்படி அருகே வர ஆசைப்படுகிறீர்கள் என்று செல்வராணி கேட்கவில்லை. ஆனால், அவர்களுடைய ஆசையை, அவர்கள் காட்டுகிற அன்பை செல்வராணி அனுபவித்தாள். மிக கம்பீரமாகவும் அலட்சியமாகவும் நடந்து கொண்டாள்.

''சு...லதா, ஒரே சோகப்பாட்டா பாடச்சொல்லி, இவளை சாகடிச்சட்டாங்கடி, நல்லாதான் பாடறா இருந்தாலும் எனக்கு சோகப்பாட்டு பிடிக்கவே இல்லை. கிக் வர்றா மாதிரி, லவ் சாங்ஸ் பாடச்சொல்றதை விட்டுட்டு ஒரே அழுகையா இருக்கு.''

"யாருடி கேட்டா. டீச்சர்தானே கேட்டா. டீச்சர் கேட்டா பாடாத இருக்க முடியுமா."

"ஏன் அந்த டீச்சர் அப்படி கேக்கறாங்க" வேறொருத்தி வினவினாள்.

"அந்த டீச்சருக்கு லவ் ஃபெயிலியர். அவங்க புருஷன் கொடுமைக்கார ஆள். அதனாலதான் அவங்க சோகப் பாட்டு அடிக்கடி கேப்பாங்க. அதிலேயும், அடிக்கிற கைதான் அணைக்கும் பாட்டு அவங்க திருப்பி திருப்பி கேட்டுகிட்டு இருப்பாங்க."

"ஐயோ பாவம் அவங்களப் பத்தி எதுக்கு பேச்சு. விட்டுரு. எனக்கு என்ன தோணுது. எல்லாரும் எங்க வீட்டுக்குப் போய் ஒரு அரைமணி நேரம் உக்காந்து, காது குளிர நல்ல லவ் சாங்கா கேட்டு அனுப்பணும் அவளை." மற்றவள் சொல்ல, உடனே மற்ற எல்லா பெண்களும் ஓவென்று கூச்சலிட்டார்கள்.

தெரு அவளை திரும்பிப்பார்த்தது. செல்வராணி புன்னகை செய்தாள். சற்று யோசனை செய்தாள். "அரைமணி நேரம் வேணாம் ரெண்டு பாட்டுபாடறேன். பதினைஞ்சு நிமிஷத்துல கிளம்பிடறேன்" என்று சொன்னாள்.

அவர்கள் சரியென்று ஒத்துக் கொண்டார்கள்.

தெருவின் கடைசியில் இரண்டு தெருக்கள் திரும்பி கடந்து, தோழியின் வீட்டிற்குள் எல்லோரும் படியேறினார்கள். அவள் வீட்டில் பாட்டி மட்டுமே இருந்தாள். தாயும் தந்தையும் கடையைக் கவனிக்கப் போயிருந்தார்கள். அண்ணன் கல்லூரிக்குப்போக, தம்பி பள்ளியிலிருந்து இன்னும் திரும்பி வராமல் இருந்தான்.

அவர்கள் தோழியின் அறைக்குள் போய் கதவை தாழிட்டுக் கொண்டார்கள்.



அவள் சாப்பிட இனிப்பு கொடுத்தாள். எல்லோரும் விரும்பிச் சாப்பிட்டார்கள். காரமும் எடுத்துக் கொண்டார்கள்.

செல்வராணி மணியைப் பார்த்தாள். தொண்டையை செருமிக் கொண்டாள். "என்ன பாட்டுடி சொல்லுங்கடி" என்று கேட்டாள்.

தோழிகள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"புதுப் பாட்டைவிட, பழைய பாட்டுதாண்டி எங்களுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. அத்தான் என் அத்தான் பாடுடி" என்று சொல்ல அவள் பாட ஆரம்பித்தாள்.

"ஏனத்தான் என்னைப் பாரத்தான்" என்று அவள் கொஞ்ச, பல பெண்கள் உட்கார்ந்த நிலையிலேயே சரிந்து படுத்துக் கொண்டார்கள். அவளைக் காதலோடு பார்த்தார்கள். பிறகு கண்களை மூடிக் கொண்டார்கள். மனதிற்குள் ஒரு ஆணை கற்பனை செய்து கொண்டார்கள். அந்தப் பாட்டு முடிந்தது.

"அடுத்த பாட்டு என்ன" செல்வராணி உலுக்கிக் கேட்டாள்.

"ஏய்...பழைய பாட்டுலயே இன்னொண்ணு நல்லாருக்கும்டி. அம்மம்மா கேளடி தோழி. அது பாடுடி."

அவள் வாய்விட்டுச் சிரித்தாள். "ஏய் செமகிக்குடி உனக்கு. கல்யாபின்னான்னு பாடணும்னு ஆசைப் படறயில்ல நீ" என்று செல்வராணி கேட்க, மற்றவள் ஆமாம் என்று தலையசைத்தாள்.

செல்வராணி பாட ஆரம்பித்தாள்.

**"பிஞ்சாக நான் இருந்தேனே**
**பெண்ணாக வளர்த்து விட்டானே**
**அஞ்சாமல் அணைத்து விட்டானே**
**அச்சாரம் கொடுத்துவிட்டானே"**

என்று அவள் பாட, வசனம் போல இரண்டு வரிகள் அதைத் தொடர்ந்து வந்தன. அந்த வசன வரிகளை அங்குள்ள மூன்று பெண்களுமே உரத்த குரலில் சொன்னார்கள்.

**''அவனோ இளைஞன்**
**இவளோ சிறுமி**
**ஒருநாள் கனவில்**
**உலகே மறந்தாள்.''**

என்று உரத்த குரலில் பாடி, வாய்விட்டுச் சிரித்தார்கள். அவள் தொடர்ந்து பாடினாள்.

**''முத்தாரம் சரிய வைத்தானே**
**முன்மேலே தூங்க வைத்தானே**
**நூலாக இளைக்க வைத்தானே**
**பாலாக வெளுக்க வைத்தானே.''**

கிட்டதட்ட எல்லா பெண்களும் கட்டிலில் புரண்டார்கள். ஒருவரையொருவர் மெல்ல அணைத்துக் கொண்டார்கள்.

சட்டென்று செல்வராணி உதறி எழுந்தாள். ''ஏய்... லேட்டாயிடுச்சுடி நான் கிளம்பறேன்'' என்றாள். மற்ற மூன்று பெண்களும் அங்கேயே தங்கிவிட, செல்வராணி மட்டும் தரையில் இறங்கினாள்.

அவளுக்கு எப்போது யாரை புறக்கணிக்க வேண்டும் என்பது தெரியும். அந்த இடம் சற்று அத்துமீறுகிறது என்று தெரிந்ததும், தன் பாட்டால் நிலை தடுமாறுகிறது என்று புரிந்ததும் செல்வராணி எழுந்துவிட்டாள். இந்த புத்திசாலித்தனம் அவளுக்கு அவள் அப்பா கொடுத்த வரம்.

செல்வராணி தனியே நடந்து கொண்டிருந்தாலும், அவள் மனது உரக்க பாடிக் கொண்டிருந்தது. யாருக்கு



மில்லாமல் அவள் பாட்டு அவளுக்காக என்று மௌனமாய் பாடப்பட்டது.

**''கண்ணிரண்டும் மின்ன மின்ன**
**காலிரண்டும் பின்னபின்ன**
**பெண்ணழகு போவதெங்கே**
**சொல்லம்மா-என்**
**பித்தம் தீர மருந்தொன்று**
**சொல்லம்மா''**

என்று ஆண்குரல் பாட்டை தன் குரலில் பாடினாள். தன் அழகை, தன் நடையை, தன் உருவத்தை தானே மெச்சிக் கொண்டு, தன்னைத்தானே செல்வராணி காதலித்தாள். அவள் வேறு யாரையும் எதன் பொருட்டும் காதலிக்க இப்போதைக்குத் தயாராக இல்லை. வாழ்க்கையில் ஏதேனும் ஒரு நல்ல நிலையை அடையும் வரை, காதல் என்கிற விஷயத்தில் ஈடுபடக்கூடாது. அதே நேரத்தில் காதல் என்கிற விஷயத்தை நல்ல விலைக்கு விற்று, எல்லோரிடமும் பரப்பி, அதன் மூலம் ஜெயிக்க வேண்டும் என்ற கெட்டிக்காரத்தனம் அவளிடம் வேகமாக வளர்ந்து வந்தது. அவள் அப்பா இதையும் அவளுக்கு சொல்லிக் கொடுத்திருந்தார்.

செல்வராணி நான்கு தெருக்கள் தாண்டி, ஒரு குறுகிய சந்தில் நுழைந்து படியேறி, தன் வீட்டிற்குள் நுழைந்தாள்.

செல்வராணியின் வீட்டுக் கதவு தாழிடப்பட்டிருந்தது. மெல்லக்கதவு தட்டினாள். உள்ளே பேச்சுக் குரல் கேட்டது. அம்மாவின் குரலும் அப்பாவின் அசைவுகளும், தட்டுகளின் ஓசையும் ஒரு தம்ளர் உருளும் சப்தமும், தெளிவாய் கேட்டன.

அம்மா நடப்பது தெரிந்தது. திறப்பதை சப்தத்தில் உணர முடிந்தது. இருபது முறை எண்ணிக்கை என்

ணும் படியான நேரம் தாண்டி அம்மா கதவு திறந்தாள். அவள் கேசங்கள் கலைந்து கிடந்தன. அவள் அப்பாவிற்கு சோறு போட்டுக் கொண்டிருப்பது கதவு திறந்ததும் தெரிந்தது.

வெற்று மார்பும், இடுப்பு வேட்டியும் எதிரே பெரிய வெள்ளித்தட்டும், கறிக் குழம்பு சட்டியும், சாதம் வைத்த குக்கருமாய் உட்கார்ந்திருந்தாள்.

அப்பாவிற்கு கறிக்குழம்பு மிகவும் பிடிக்கும். தொட்டுக் கொள்ள வறுத்த மீனும் கறிக்குழம்பும் இருந்தால், அப்பா அரைமணி நேரம் நிதானமாக சாப்பிடுவார் அப்படி சாப்பிடுகிறபோது, அம்மாவை தொட்டுக் கொண்டு கொஞ்சுவார் அம்மாவும் அந்த நேரம் வருடி, முத்தமிட்டு, பலவகையாக சந்தோஷப்படுத்துவாள். இதை மூன்று வருடங்களுக்கு முன்பே கதவிடுக்கு வழியே, பார்த்திருக்கிறாள். ஆனால் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. அம்மாவின் முகத்தில் மட்டும் கொஞ்சம் சங்கடம் தெரிந்தது.

அப்பா அவளைப் பார்த்ததும் சந்தோஷமானார். ''கண்ணுக்குட்டி, ஓடியா ஓடியா ஓடியா...இங்க ஓடியா. வந்து உட்கார். இன்னிக்கு உங்கம்மா ஏ கிளாஸ் குழம்பு செய்திருக்கு. அப்படியே ஒரு வாசனை கிறு கிறுகிறுன்னு வருது. சோத்தைப் போட்டு ஜம்முன்னு சாப்பிடு. உக்கார் ஓடியா...''என்று இன்னொரு தட்டை எடுத்து, தன் இடப்பக்கம் வைத்துக்கொள்ள, அவள் பையை ஹாலில் வைத்துவிட்டு, குழாயடிக்கு ஓடினாள். கை கழுவிக்கொண்டாள். முகம் அலம்பிக் கொண்டாள். பொட்டு திருத்திக் கொண்டாள். மறுபடியும் ஓடி, அப்பாவிற்கு அருகே போய் உட்கார்ந்து கொண்டாள்.

அப்பா துண்டெடுத்துக் கொடுக்க, முகம் துடைத்துக் கொண்டாள். கைகளைத் துடைத்துக் கொண்டு அப்பாவை ஆசையோடு பார்த்தாள்.



வயதானாலும் அப்பாவின் கண்களில் குறும்பு இருந்தது. வழுக்கைத் தலையராய் இருந்தாலும், அவர் உடம்பில் ஒரு கட்டு இருந்தது. ஐம்பது வயது தாண்டியவராக இருந்தாலும், அவர் பேச்சில் விஷமங்கள் இருந்தன.

அவர் ஒரே பெண்ணான செல்வராணியை மிகவும் நேசித்தார். ஒரு மகனைப்போல நடத்தினார்.

''ஆத்தா. நான் சாதாரண எக்ஸ்-ரே கடைக்காரன் தான். ஆனா, உனக்கு என்ன வேணும். நான் கொண்டாந்து இறக்கறேன். வைர நெக்லஸ் வேணுமா, வைர வளையல் வேணுமா. தங்கத்துல நாப்பது பவுன் நகை வேணுமா, நான் செய்து போடறேன் தாயே. நீ எனக்கு ஒரே பொண்ணு. நீ என் பொக்கிஷம். நீ நல்லா இருக்கணுங்கறதுதான் என் வாழ்க்கை லட்சியம்'' என்று பல முறை சொல்வார்.

அப்பாவை செல்வராணிக்கு மிகவும் பிடிக்கும். அப்பாவின் குறும்புகளும் திமிரும் பிடிக்கும். அப்பாவின் கோபம் கூட அவளுக்கு விருப்பமானதே. அந்தக்கோபம் அவள்மீது ஒருநாளும் பாய்ந்ததில்லை.

''எதுல பதினெட்டு மார்க். விஞ்ஞானத்துலயா என்ன ஆச்சு. விஞ்ஞானம் சொல்பேச்சு கேக்கமாட்டேங்குதா. கொஞ்சம் பார்த்து படிக்கணும். புரியல. நம்ம படிப்பு என்ன உண்டோ, அந்தப் படிப்பை படிச்சுடணும். அதுக்கு அப்பறம் பாட்டு பாடணும். ரொம்பவும் பாடிட்டிருந்தோம்னாக்க, படிப்பு தொந்தரவாப் போயிடும். படிக்கிற நேரத்துல படிச்சுட்டு, அப்பறம் பாடணும். நான் ஒண்ணும் அறுபது மார்க், எழுபது மார்க், தொண்ணூறு மார்க்குன்னா கேட்டேன். நாப்பத்தஞ்சு மார்க்கை, எடுத்துட்டு, பாஸுன்னு வந்துரு. அது போதும். ஃபெயிலுன்னு வந்தா, நாலுபேருக்கு நடுவுல நாம மூஞ்சிய தொங்கப் போட்டுக்கிட்டு நிக்கணும். நீ

பர்ஸ்ட் கிளாஸா செகண்ட் கிளாஸான்னு யாரும் கேக்கப் போறதில்ல. பாஸா ஃபெயிலான்னுதான் கேக்கப் போறாங்க. பாஸ் பண்ணிட்டேன். இதுல எதுனா கஷ்டமா. முடியலேன்னு வைச்சுக்கோயேன். பள்ளிக் கூடத்துக்குப் போய் நான் பேசறவங்ககிட்ட பேசி. பாக் கறவங்களைப் பாத்து, உன்னை பாஸ் பண்ண வைக் கிறேன். ஆனா, தயவு செய்து முன்னாடி சொல்லு.''

ஒருநாள் அப்பா தெள்ளத் தெளிவாக அவளுக்கு சொல்லிக் கொடுக்க, அதற்குப்பிறகு, செல்வராணி எல்லாப்பாடங்களிலும், நாற்பத்தைந்து ஐம்பது மதிப் பெண்கள் வாங்கினாள். அவர் கொடுத்த அறிவுரைகள் அவளுக்குத் தெளிவாகப் புரிந்தன.

செல்வராணி அப்பாவிற்குப் பக்கத்தில் உட்கார்ந்து, தட்டில் சிறிதுஜலம் ஊற்றி, அதை சுழற்றிக் கழுவி, சரக் கென்று உட்கார்ந்த இடத்திலிருந்து அறையின் மூலைக்கு எறிந்தாள். தாவணியால் தட்டை ஈரமில்லாமல் செய் தாள். தட்டை கீழே வைத்தாள். தானே சாதத்தை இழுத்துக்கொண்டு, அன்னக்குத்தியால் ஒரு பகுதியை வெட்டி எடுத்து, தன் தட்டில் போட்டுக் கொண்டாள்.

''ஆனா ஒண்ணு சொல்லிட்டேண்டி'' அம்மா அவளைப் பார்த்துக் கொண்டே இருந்து, திடுக்கென்று பேசத் துவங்கினாள்.

''என்னம்மா''

''இப்படி உக்காந்த இடத்துல நாலாபக்கமும் வீசி எறியற பார். இந்தப் பழக்கத்தை தயவுசெய்து விட்டு. கல்யாணமாகி புருஷன் வீட்டுக்குப் போனா. இந்த மாதிரி ளாம் செய்யறது ரசப்படாது. அப்படி செஞ்சேன்னு வைச்சுக்க,என்னைத்தான் அசிங்கமா பேசுவாங்க.எழுந்து இத்த தண்ணிய ஓரமா கொட்டறதுக்கு உனக்கு முடிய



லேன்னா, நீ பொம்பளையா இருக்கறதுக்கே லாயக் கில்லை.''

''ந்தே...ஆரம்பிச்சிட்டியா. சோறு திங்க உக்கார்ற போது குழந்தையப் போல், ஏன் இப்படிப் பேசறே.''

''சோறு தின்ன உக்காந்த உடனே முதல்ல இலைல வெஞ்சனத்தை வைக்கணும். கூட்டோ கறியோ காயோ வைக்கணும். அதுக்குப் பிறகுதான் சோறு போடணும். வெறும் இலைல சோறு போட்டா ஆகாது. இது யாரும் சொல்லிக் கொடுக்கலையா உனக்கு. அப்படின்னு மாமி யார்காரி கேட்டாக்க, எங்க போய் மூஞ்சிய வைச்சுக்குவே.''

''ஏன் ஆவாது.''

''அப்படி சொல்லுவாங்கடி.''

''ஏன் சொல்லுவாங்க.''

''கடவுளே...உங்கிட்ட வந்து சொல்றேன் பாரு, வெறும் இலைல சோறு வைக்காதே, ஒரு இலைல ஒரு பதார்த்தம், ஒரு காய், குறைஞ்ச பட்சம் ஒரு சுட்ட அப்பளமாவது வைச்சுட்டு, அப்பறம் சோறு போடணும். உனக்கு சோறு போட்டாலும் சரி மத்தவங்களுக்கு சோறு போட்டாலும் சரி, இலைல எதுனா வைச்சுட்டு சோறு போட்டாதான் அது விருந்து' உபசரணை. வெறும் சோறு போட்டா அது பிச்சைமாதிரி ஆவுது இல்லியா.''

''நல்லாருக்கே நீ சொல்றது. சரி கொண்டா. காயைக் கொண்டா...போட்டுக்கறேன்,'' கத்தரிக்காய் கூட்டை தட்டின் ஓரத்தில் கவிழ்த்து, சாம்பார் கிண் ணத்தை எடுத்து, வெட்டி போடப்பட்ட சாதத்தின்மீது ஊற்றினாள்.

''இப்படியும் பண்ணக்கூடாதுடி. முதல்ல, சாதத்தை பிசை. அப்பறமா குழம்பு ஊத்து கொஞ்சம் நல்லெண்

ணைப் வாசனைக்கு விடுறேன். கலந்துக்க. மோந்து ஒரு தடவை பாத்துட்டு நிம்மதியா நிறைவா சாப்பிடு. சாப்பிடக் கூடவா நான் உனக்கு சொல்லித் தரணும். பதினோராம் கிளாஸ் படிக்கிறே. என்ன புண்ணியம்.''

''உனக்கு என்னைப்பத்தி என்ன தெரியும்மா. நான் வெறும் லெவன்த்துதான்னு நினைச்சுகிட்டிருக்கே. பள்ளிக்கூடத்துல உள்ள அத்தனைப் பசங்களும், பிளஸ் டூ சேர்ந்த பொண்ணுங்க உட்பட, என்னைப் பார்த்தா ஓடியாந்துடுவாங்க. கிட்ட வந்து, செல்வராணி எப்படி இருக்கே. எதுனா ஒரு பாட்டு பாடலாமா. எங்கனா போய் உக்காந்துக்கலாமான்னு கேக்கறாங்க.''

''அடியே...நல்லா பாடறே. இல்லேன்னு சொல்லலை. பாட்டு மட்டும் குடித்தனத்துக்கு ஆகுமா. சமைக்கத் தெரிய வேணாமா. சாப்பாடு பரிமாற தெரியவேணா மா. சாப்பிட தெரிய வேணாமா. உனக்கு சாப்பிடக் கூடத்தெரியலயேடி.''

''அம்மா தாயி, சும்மா இரு. குழந்தைய நொய் நொய்யின்னுகிட்டு. அவ எல்லாம் கத்துக்குவா.

நீ, முதல்ல பிளஸ் டூ முடி, முடிச்சிட்டு ரெண்டு வருஷம் வீட்டோட இரு. வந்து. எல்லா வேலையும் கத்துக்க. தின்பண்டங்கள்லாம் பண்ணக் கத்துக்க. நாலு பணியாரம் பண்ண கத்துக்க. தடக்குன்னு நான் உன்னை நல்ல இடமாப் பாத்து கல்யாணம் பண்ணி வைக்கிறேன்.

''அப்பா, உடனே கல்யாணம்னு ஆரம்பிக்காதிங்கப்பா''

''வேற என்னம்மா காலேஜ்ல படிக்கப் போறியா.''

''காலேஜ்லயும் படிக்கிறேம்பா. அதேநேரத்துல...''

''என்ன சொல்லு.''



''எங்கனா நான் பாட்டு கத்துக்கணும்பா.''

''கத்துக்கயேன்.''

''இதைப் பாருங்க. இதெல்லாம் வேணாம். உங்க தங்கச்சி பாட்டு கத்துகினா. என்னாச்சு.''

''என்னப்பா, என்னாச்சு,'' அம்மாவின் பேச்சுக்கு செல்வராணி வியந்து, அப்பாவைப் பார்த்தாள்.

''உங்க அத்தை நல்லா பாடுவா. நாங்கள்லாம் உக்காரவைச்சு, பாடச் சொல்லி, பாடச் சொல்லிக் கேப்போம். கல்யாணமாகி புருஷன் வீட்டுக்குப் போன பிறகு, நான் மெல்ல அவ புருஷன்கிட்ட சொன்னேன். என் தங்கச்சி நல்லா பாடும். உங்களுக்கும் பாட்டுன்னா பிடிக்குமான்னு.

''ஐயா, எனக்கு பாட்டுன்னா ரொம்பப் பிடிக்கும். ஆனா, எங்க வீட்ல இருக்கறவங்களுக்குப் பிடிக்காது. எங்க வீட்ல இருக்கற வரைக்கும் பாடாம இருந்துட்டா நல்லாருக்கும் அப்படின்னாரு.''

அதே மாதிரி, போன மறுநாள் தங்கச்சியக் கூப்பிட்டு மாமியார்காரி, நடுக்கூடத்துல நிக்க வைச்சு, 'இந்த பாடறது ஆடறது இதெல்லாம் இங்க வேணாம். அதெல்லாம் உங்க வீட்டோட வைச்சுக்க. உங்க வீட்டுக்குப் போனாலும் பாடறதை குறைச்சுக்கோ. நம்ம வீட்டுப் பொண்ணான பிறகு, இந்த ஆட்டம் பாட்டம்லாம் நல்லாருக்காது. குடும்பப் பொண்ணா அடக்கமா இருக்கணும்' அப்படின்னு சொல்லிட்டாங்க.

''என்னப்பா இது, பாட்டு பாடறவங்க குடும்பப் பொண்ணு இல்லியா என்ன சொல்றாங்க அந்தக் கிழவி.''

''அப்படி இல்லம்மா. அந்தக் கிழவி ஒரு பாயிண்ட் சொல்லுச்சு.''

''என்ன பாயிண்டுப்பா.''

''ஒண்ணும் இல்ல. நீ நல்லா பாடுவே. ஊர்ல நாலு பேர் வந்து, ஆஹா, நல்லா பாடுற பொம்பளை அப்படின்னுவான். நம்ம உறவுக்காரனே பத்துப் பேர் வருவான். என்ன...பாடுமாமே உங்க வீட்டு மருமக. உக்கார வைச்சு ரெண்டு பாட்டு பாடச் சொல்லுங்களேன். காது குளிர கேட்டுட்டுப் போறேன் அப்படின்னுவான். வயசானியா இருப்பான். நம்மளும் சரின்னு சொல்லுவோம். எதிர்ல உக்கார வைச்சுப் பாடுவோம். அவன் பாட்டா கவனிப்பான். அங்கம் அங்கமா பார்ப்பான். அங்க போய், அடேங்கப்பா, அவங்க வீட்டு மருமக நல்ல நாட்டுக்கட்டைன்னுவான். என்னத்துக்கு, நீ பாடுவானேன். அவங்க பார்ப்பானேன். பிறகு, நாட்டுக்கட்டைன்னு சொல்வானேன்.

நம்ம ஊரு ஆம்பளைங்கள நம்பி சபை ஏறமுடியாது நம்ம ஊரு ஆம்பளைங்கள நம்பி, நடுக்கூடத்துல போர்த்திகினு கூட பாட முடியாது. நான் உன்னை குத்தம் சொல்லலடி. நம்ம ஆம்பளைங்க லட்சணம் அப்படி. அதனால ஒதுக்கமா இருந்துடறது நல்லது. முள்ளு, வாழை இலைல பட்டாலும், வாழை முள்ளுல பட்டாலும் சேதம் வாழை இலைக்குத்தானே. நம்ம சேதத்தை நாமே உண்டாக்கிக்கணுமா. போ. ரூமைப் பூட்டிக்க. ஆம்படையானும் பொண்டாட்டியும் மணிக் கணக்கா பாடிகினு இருங்க. நான் ஒண்ணும் கேக்கவே இல்ல. உன்னைப் பாடாதேன்னு நான் சொல்லவே இல்ல. நீ பாடறத பெருசா நினைச்சுகினு இங்க ஆடாதே.

அங்கேருந்து என் தங்கச்சி வந்தா அத்தை சொல்றது சரியாத்தான் இருக்கு. பாடச்சொல்ல, பத்து பேர் தப்பா தான் பாக்கறாங்க அதனால நான் பாடலை வேணும்னா எங்க வீட்டுக்காரருக்காக பாடறேன். மொள்ள மொள்ள அதுவும் குறைஞ்சு போச்சு. இப்ப பாடறதே இல்லன்னு சொன்னா அவ பாடாதது எங்க எல்லோருக்கும் வருத்தம்தான்.''



''என்னப்பா இது காட்டுமிராண்டி விடா இருக்கு.''

''இல்லடி பட்டுன்னு பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதே நீ கல்யாணமாகிப் போற பொம்பளை தூக்கி எறிஞ்சா மாதிரி யாரையும் பேசிடக்கூடாது.

பாடாதேன்னுதான்டி சொன்னாங்க மத்தபடி, இவரு தங்கச்சிய ரொம்ப நிறைவா அங்க வைச்சிருந்தாங்க. முதபிரசவத்துக்கு அனுப்பிச்சாங்க ரெண்டாம் பிரசவத்துக்கு அனுப்பலை. ஏன்னு கேட்டோம். எவ்வளவு செலவு பண்ணுவீங்க. ரெண்டாம் பிரசவம் நான் பாத்துக்கறேன். அப்படின்னு சொல்லி ஒரு பைசா கூட செலவழிக்காம அந்தக் கிழவியே மாமியார்காரியே பிள்ளைப் பேறு பார்த்தா. ஆஸ்பத்திரில சேர்த்து நர்ஸுங்களைக் கொண்டாந்து மாசாமாசம் டாக்டர் செக்கப் பண்ணி ரொம்ப நல்லா வைச்சிருந்தா. இவ அம்மான்னுதான் கூப்பிடறா மாமியாரை அவ்வளோ ஒட்டுதல்.

இதை என்ன சொல்லுவே இதுல பாட்டு என்ன முக்கியம் மனுஷான்தானே முக்கியம்.

குடும்பத்துக்காக பொண்டாட்டி பாடறதையே விட்டுட்டான்னு ஆம்படையானுக்கு தெரிஞ்சிருக்கு. தன்னுடைய அம்மாவை அனுசரணையா நடத்திகிட்டிருக்காங்கறது புரிஞ்சிருக்கு. அம்மா வந்து தன் பொண்டாட்டி கூட பிரியமா இருக்காங்கறதை கண்கூடா பாக்கறான். நிறைய சம்பாதிக்கிறான். பொண்டாட்டிக்கு தங்கமா இழைச்சுப் போடறான். வைரக்கம்மல் நம்ம வீட்ல எந்த பொம்பளையும் வைச்சு இல்ல அவ வைச்சிருக்கா சொந்தமா வீடு வாங்கிருக்காங்கபழைய கார் வாங்கிருக்காங்க. நல்லா இருக்காங்க.

மறுபடி கேக்கறேன் இப்ப பாட்டு என்ன முக்கியம். அம்மா குழம்பு ஊற்றிக்கொண்டே, மகளிடம் கேள்வி கேட்டாள்.

அப்பா ஆர்வமாக செல்வராணியையே பார்த்துக் கொண்டிருந்தார்.

நான் இதுக்கு உடன்பட மாட்டேன். எல்லோருக்குமா பாட முடியும். லட்சத்துல ஒருத்தர்தான் நல்லா பாடுவாங்க. கோடில ஒருத்தர்தான் ரொம்ப அற்புதமா பாடுவாங்க. அந்த கோடில ஒருத்தரா அத்தை இருந்தபோது, அதை ஒரு சாதாரண புருஷனுக்காக பலி போடுவானேன் ஒரு கேவலமான கிழவிக்காக நாசம் பண்ணுவானேன். நான் பாடத்தான் பாடுவேன்னு அந்தம்மா சொல்லியிருந்தா, ஒரே வருஷத்துல அவங்கள்லாம் அவங்கபின்னாடி வந்திருப்பாங்க.''

''இல்ல கண்ணு நீ நினைக்கறா மாதிரி வாழ்க்கை அவ்வளவு சுலபமில்ல.'' செல்வராணியின் உரத்த குரலுக்கு அப்பா நிதானமாக பதிலளித்தார்.

''வராத போயிட்டாங்கன்னா அந்தப் பொண்ணு நிலைமை என்ன அம்மா...இனி உலக்கும் எனக்கும் சரிவரலை. டைவேர்ஸ் வாங்கிக்குவோம்னு அந்தப்புள்ள பிரிஞ்சி போயிட்டான்னாக்க. இந்தப் பொண்ணுக்கு ஊர்ல என்ன மதிப்பு இருக்கும். என்னதான் பாடினாலும், எவ்வளவு அழகா பாடினாலும், எத்தனை சிறப்பா வாழ்ந்தாலும், என்ன சம்பாதிச்சாலும், டைவேர்ஸ் பண்ணின பொண்ணுன்னுதான் சொல்லுவாங்க.''

''அதெல்லாம் அந்தக் காலம்பா.''

''எல்லா காலமும் ஒரே காலம்தான்டா. ஒரு மாத்து கம்மிதான். முன்ன மாதிரி பண்ணவே முடியாதுன்ற சூழ்நிலை இப்ப இல்லை. பண்றாங்க பண்ணின பிறகு அடுத்த வாழ்க்கை அமையற வரைக்கும் அவங்க மனசு,



சூழ்நிலை நல்லா இருக்கறதில்ல. நிறைய பேருக்கு நல்ல வாழ்க்கை அடுத்தது அமையறதில்ல. காரணம், இந்த ஒன்னு ஜெயிச்ச கர்வத்துலயே அவங்க மிதக்க ஆரம்பிச்சிடுறாங்க. அடுத்த புருஷன் வந்தா அவன் காலுக்கு கீழ இருக்கணும். தரைக்கு கீழ இருக்கணும்னு ஆசைப்படுறாங்க. எந்தப் புருஷனும் இருக்க மாட்டான். புரிஞ்சு, அடடா...இந்தப்பாட்டு தெய்வீகமானது. இந்தக் குரல் வாழணும். இந்தக் குரல் வளரணும் அப்படின்னு தன்னை மொத்தமா அழிச்சுகிட்டு ஒரு பொண்ணைத் தூக்கி உயர நிறுத்தறத்துக்கு பூர்வ ஜென்மம் புண்ணியம் பண்ணிருக்கணும் அப்படி ஆளுங்க கிடைக்கறது கஷ்டம்.''

''அதனால...என்னப்பா சொல்றீங்க. தனக்கு வந்த ஒரு பாட்டை, ஒரு அற்புதமான கலையை, அவங்களுக்காக அழிச்சி தியாகம் பண்றதா இது எந்த விதத்துல நியாயம்.''

''ஆனா, ஒன்னு பண்ணலாம் செல்வராணி. நான் என் தங்கைகிட்ட சொன்னேன். அவளுக்கு அது புரியல. நீ பாடு. கல்யாணம் பண்ணிக்காதே. கடைசிவரை கல்யாணம் பண்ணிக்காதயே இருந்துரு அப்படின்னு சொன்னேன். ஒரு அண்ணன் இப்படி சொல்லலாமான்னு எங்கம்மா கண்டிச்சாங்க. எங்கப்பா கூச்சல் போட்டாரு. எங்களுரு உறவு எல்லாருமே, நீ நாக்குலபல்லைப்போட்டு இப்படியொரு வார்த்தை சொல்லலாமா அப்படின்னு திட்டினாங்க. அந்தப் பேச்சுல மயங்கி, ஏண்ணே இப்படிச் சொல்றே. எனக்குன்னு ஒரு நல்ல புருஷன் கிடைக்கமாட்டானா அப்படின்னு அழ ஆரம்பிச்சுட்டா. நான் விட்டுட்டேன். நான் சொன்னது என் தங்கச்சிக்குப் புரியல.

''உனக்குப் புரியுதா செல்வராணி'' அப்பா அவளை கூர்ந்து பார்த்தார்.

''பாட்டு என்பது புருஷன்போல. கலைத்தொழில் என்பது கணவன்போல. கலைத்தொழிலில் ஈடுபட்ட போது, கணவன் என்ற விஷயம் பெண்ணுக்கு சரியாக வருவதில்லை. நீ பாடினாலும் சரி ஆடினாலும் சரி நடிச்சாலும் சரி, பெயிண்டிங் பண்ணினாலும் சரி, சிற்பம் பண்ணினாலும் சரி, சிலருக்கு அமையும், பலருக்கு நல்லா அமையறதில்ல. அதனால, ஒண்ணு பாடா, இல்ல குடித் தனமா. முடிவு பண்ணிடணும்.''

செல்வராணி எல்லாவற்றையும் விட்டுவிட்டு, தன்னைப்பற்றி, தன் மனோநிலை பற்றி யோசிக்கத் துவங்கினாள்.

வழித்து சாப்பிட்டுவிட்டு அமைதியாய் எழுந்தாள். தட்டை குழாயடியில் போட்டு, கை அலம்பி முகம் துடைத்துக்கொண்டாள். அப்பா இருந்த பக்கத்திற்கு எதிர்பக்கம்போய், அறைக்குள் நுழைந்து, நைட்டிக்கு மாறினாள். கட்டிலில் உட்கார்ந்து யோசிக்கத் துவங்கி னாள். அவள் யோசிக்கத் துவங்கிவிட்டாள் என்பது அப்பாவிற்கும் அம்மாவிற்கும் தெரிந்தது. ஒருவரை யொருவர் அர்த்தத்தோடு பார்த்துக் கொண்டார்கள்.

அம்மா முணுமுணுக்கத் துவங்கினாள்.

''வேணாங்க. நீங்களா அவளை தப்பான வழிக்கு தள்ளாதீங்க. அவ கல்யாணம் கட்டட்டும். குழந்தை பெறட்டும். எல்லாத்துக்கு பாட்டு.''

''இல்லடி, உனக்குத் தெரியாது. என்ன குரல் தெரியுமா அவளுக்கு ஊரே கிறங்கப் போகுதுடி..'

''அவ பாடட்டும். வேணாம்னு சொல்லல. அவ மனசு கோணாத ஒரு புருஷனைத் தேடறத்துக்கு



என்னால உண்டான அத்தனை முயற்சியும் நான் பண்ணப் போறேன்.''

''ஆனா, அவ ஜாதகம் காண்பிச்சபோது ஜோஸியர் சொன்னாரு. அவ பாடமாட்டான்னு.''

''விடுங்க, நம்ம குழந்தை பாடறா. சபையேறி பாடட்டும். நீங்க சொன்னா மாதிரி அவளுக்குப் பிடிச்ச புருஷனா, அவளுடைய பாட்டு பிடிச்ச புருஷனா நாம தேடுவோம். நம்மகிட்டதானே இருக்கு.''

செல்வராணியால் ஒரு அளவிற்கு மேல் யோசிக்க முடியவில்லை. பாட்டை புரிந்து கொள்கிற புருஷன் யார், அவனை எப்படி கண்டு பிடிப்பது, அவனைக் கண்டு பிடித்து கல்யாணம் செய்த பிறகு, பாட்டு பிடிக்கவில்லை யென்று சொன்னால் என்ன செய்வது.

திருமணம் செய்து கொள்ளாமல் இருந்துவிட முடியுமா. திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது என்றால் என்ன கேட்க மாட்டார்களா. விசாரிக்க மாட் டார்களா. பள்ளிப்படிப்பை முடித்து மூன்று வருடம் வரை ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிற போது, முதலில் கேட்கிற கேள்வி, எப்ப கல்யாணம் என்பது தானே. சீனியரெல்லாம் சந்தித்துக் கொள்கிற போது, இப்படிப் பேசுவதை அவள் கேட்டிருக்கிறாளே திருமணம் என்று முகம் முழுவதும் பூரிப்பாய் வருகிற பெண்களை உற்று கவனித்திருக்கிறாளே.

என்னடி...தலைய ஆட்டிகிட்டே இருக்கா.

கல்யாணமில்ல. அப்படித்தான் இருக்கும். நிக்கறது நடக்கறது எல்லாமே ஸ்டைலாப் போயிடும் என்று மற்ற மாணவிகள் சொல்லியிருக்கிறார்களே. திருமணத்திற்குப் பிறகு இன்னும் பூரிப்பாய் இருக்கிற பெண்களை பார்த் திருக்கிறார்களே. திருமணம் சந்தோஷமான விஷயம் என்பதாகத்தானே அவளுக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

வீட்டை விட்டு ஓடாமல், காதல் என்று எவரையேயும் கண்டு ஊர் சுற்றாமல் தாய் தந்தையர் பார்த்து திருமணம் செய்ய, மதிப்பாக அந்தப் புருஷனோடு வெளியே வருகிறபொழுது, அந்தமுகம் எத்தனை பிரகாசமாக இருக்கிறது. காதலித்தவர்கள் முகத்தில் எவ்வளவு நடுக்கம் இருக்கிறது. எத்தனை இருட்டியிருக்கிறது. எனவே, நல்ல தாய் தந்தையர் இருக்கிற பொழுது, நாம் திருமணம் வேண்டாம் என்று சொல்வானேன்.

திருமணம் செய்து கொள்வது என்பது நன்றாகத் தான் இருக்கும். ஆனால், பாடக் கூடாது என்று சொன்னால் என்ன செய்வது.

கண்மூடி செல்வராணி யோசித்தாள். பாடக்கூடாது என்று சொன்னால், சொன்ன நிமிடமே உனக்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று வெளியே வந்துவிட வேண்டும். இதைத்தான், முதல் கண்டிஷனாக புருஷனாக வரப் போகிறவனிடம் சொல்லி விட வேண்டும்.

ஆனால், செல்வராணியால் ஓரளவிற்கு மேல் யோசிக்க முடியவில்லை. பிரமிப்பாகவும் வியப்பாகவும் யோசிக்க யோசிக்க இருட்டாகவும் தான் அவளுக்கு இருந்தது. யோசிப்பதற்கு பதில் பாட்டு பாடலாம் என்று அவளுக்குத் தோன்றியது.

பாடுவதற்கு யோசிக்க வேண்டிய அவசியமேஇல்லை, சிறிய முயற்சிகள் போதும். இந்த விஷயத்தினுடைய விளைவு என்ன அந்தப் பேச்சினுடைய பாதிப்பு என்ன என்று யோசிப்பதற்கு மிகுந்த கெட்டிக்காரத்தனம் வேண்டும். அப்படி கெட்டிக்காரத்தனமாய் இருப்பது, பாடுவதை குறைத்து விடுகிறது. பாடுபவர்கள் மென்மையாய் வெகுளியாய் எதைப்பற்றியும் அதிகம் அக்கறைப்படாதவர்களாய் இருக்க வேண்டும். அப்படி இருப்பதற்குத்தான் செல்வராணி பயிற்சி பெற்றிருந்தாள்.



யோசிப்பை உடனடியாக நிறுத்தினாள். 'நாம யோசிச்சு என்னத்த கண்டு பிடிச்சிடப் போறோம். பேசாம முருகா...உன்னை நினைச்சு நான் பாட்டு பாடணும் நீ, பாடறத்துக்கு உதவி செய்யணும் வாழ்க்கையில கடைசி வரைக்கும் நான் பாடிகிட்டிருக்கணும். என் புருஷனோடயும் இருக்கணும் எனக்கு குழந்தைகள் பிறக்கணும். எங்க அப்பா அம்மா நல்லா இருக்கணும். எங்க மாமனார் மாமியார் நல்லா இருக்கணும். எனக்கு பெரிய புகழ் செல்வம் எல்லாம் வரணும். இவங்க எல்லாருக்கும் நான் வாரிவாரித் தரணும். இப்படித்தானே பிரார்த்தனை பண்ணிக்க முடியும்'

அதனால், யோசிக்கறதை விட்டுட்டு பேசாம, முருகன் மேல நாலஞ்சு பாட்டு பாடலாம். என்ன படலாம்.

**''திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் - முருகா,**
**திருத்தணி மலை மீது எதிரொலிக்கும்.''**

அவள் கட்டிலில் உட்கார்ந்து தலையணையை மடியில் வைத்துக் கொண்டு பாடத் துவங்கினாள்.

அந்தப் பாட்டு அப்பாவிற்கும் அம்மாவிற்கும், கேட்டது. அவர்கள் பேசுவதை நிறுத்திவிட்டு அவள் பாடுவதைக் கேட்டார்கள்.

அவளுக்கு அற்புதமான குரல். அந்தப்பாட்டு ஓர் இனிமையான பாட்டு' அவர்கள் மெய்மறந்து பாட்டை ஆவலாகக் கேட்டார்கள். சந்தோஷமானார்கள்.

''அடியே...இவளுக்கு நல்ல புருஷன் கிடைப்பாண்டி. கவலையே படாதே. இத்தினி நல்ல குரலைக் கொடுத்த ஆண்டவன், ஒரு நல்ல புருஷனைக் கொடுக்க மாட்டானா, கொடுப்பான். எனக்கு நம்பிக்கை இருக்கு.

ஏழுமலையானே...எங்க குழந்தைக்கு நல்ல புருஷனா கிடைச்சு, நல்லபடியா கல்யாணமாச்சுன்னா நான் மூணு தடவை உன் கோயிலுக்கு மலையேறி வர்றேன்.'' அப்பா கை கூப்பி வேண்டிக் கொண்டார்.

அம்மா செல்வராணியின் அப்பாவை காதலோடு பார்த்தாள்.

நல்ல குடும்பத்தில் ஒருவருக்காக ஒருவர் பிரார்த்தனை செய்து கொள்வது என்பது அடிக்கடி நடக்கும். அது அன்பை வளர்க்கும்.

# 2

பள்ளிக்கூடம் பரிட்சைகளால் களைகட்டத் துவங்கியது. டீச்சர்கள் உரத்த குரலில் பாடங்கள் நடத்தத் துவங்கினார்கள். பாட்டும் பேச்சும் குறைந்து போயிற்று.

''லெவன்த்துன்னு ஆடாதீங்கம்மா. டுவெல்த் பெண்டு வாங்கிடும். இப்பவே படிக்க ஆரம்பிச்சிங்கன்னா தான் முடியும். லெவன்த்தை வந்து அலட்சியமா தயவு செய்து நினைக்காதீங்க. புரியுதுங்களா'' என்று டீச்சர்கள் சொல்ல, எல்லாப் பெண்களும் மாடு மாதிரி தலையசைத்தார்கள்.

ஆனால், செல்வராணிக்கு படிப்பின் மீது எந்தவித காதலும் வரவில்லை. எப்போது பிளஸ் டூ முடிப்போம் என்று அவள் ஆவலோடு காத்திருந்தாள்.

பரீட்சை எழுதும் போது என்ன எழுதப் போகிறோம் என்று ஒரு பயமே அவளுக்கு இருந்தது. தோல்வியே பேசப்படும். கேலி செய்யப்படும். அவ பாடியே ஃபெயிலா



யிட்டா என்று அவள் பாட்டும் அலட்சியம் செய்யப்படும் எனவே, தோல்வியடையக் கூடாது.

முதல் வகுப்பில் முதலாவதாக என்கிற எண்ணமெல்லாம் அவளுக்கு இல்லை. கடைசி பட்சமாக அவள் பெயர் இருந்தால் கூட, அவளுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், நிச்சயம் பிளஸ் ஒன்னும், பிளஸ் டூவும் எந்தவித காயமுமில்லாமல் தேர்ச்சியடைய வேண்டும்.

செல்வராணி யோசித்தாள் அப்பாவிடம் போய் உட்கார்ந்து பேசத் துவங்கினாள்.

''எனக்கு பாடம் மனசுல ஏறுறத்துக்கு டயமாகுதுப்பா. ஏறுது ஒரு நாள் முழுதும் பாடாத இருந்தேன்னாக்க, பாட்டுல நாட்டமில்லாம இருந்தாக்க, படிப்பு ஏறுது. ஆனா, நடுநடுவ பாட்டு வந்து படிப்பைகலைச்சிப் போட்ருதுப்பா நான் தொடர்ந்து படிக்கணும்னு நினைக்கறியா.''

''இல்ல செல்வராணி பிளஸ் டூ பாஸ் பண்ணணும், காலேஜுக்குப் போகணும். செல்வராணி கொஞ்சம் இங்கிலீஷ் பேசக் கத்துக்கணும். அதனால் கடைசி பட்சமா பாஸ் பண்றத்துக்கு முயற்சி செய்.''

''அதுகூட முடியாதோன்னு தோணுதுப்பா.,'

''அப்படிப் பண்ணாதே செல்வராணி. உன்னால முடிஞ்ச அளவுக்கு படி. வேற சில ஏற்பாடு பண்றேன்.'' என்று அப்பா அவளுக்கு காதோரம் உறுதியளித்தார்.

அப்பாவும் பெண்ணும் மோட்டார் சைக்கிள் ஏறி, சட்டென்று ஒரு நாள் உதவி தலைமை ஆசிரியை வீட்டிற்குப் போனார்கள். கும்பிட்டார்கள். ஒரு கிலோ நெய் பட்சணத்தை பரிசாக அளித்தார்கள்.

செல்வராணியை குனிந்து நிலம்பட வணங்கச் சொன்னார். செல்வராணி வணங்கினாள். உதவி தலைமை

ஆசிரியை எதுக்கு எதுக்கு என்று தவித்தாள். எதுனா விசேஷங்களா என்று ஆவலாகக் கேட்டாள்.

''ஒன்னும் இல்லீங்க. செல்வராணிக்கு ஒரு பிரச்சனை.''

''என்ன பிரச்சனை.''

''ஃபெயிலாயிடுவோமோன்னு பயப்படுதுங்க.''

''ஏன் ஃபெயிலாகறா. சுமாரா படிக்கிறாளே.''

''இல்லீங்க. பரிட்சை நெருங்க நெருங்க படிப்பு மனசுல பதிய மாட்டேங்குது. பயமா இருக்கு. அடிக்கடி பாட்டு வந்து ரொம்ப தொந்தரவு பண்ணுது. பாட்டை நிறுத்திடுறேம்பான்னு சொல்லுது. நான்தான் வேணாம்மா, தினம் பாடுன்னு சொல்லியிருக்கேன். பாட்டு, படிப்பு ரெண்டும் வைச்சுக்க முடியல. செல்வராணி தவிக்குதுங்க. நான் பள்ளிக்கூடத்தை விட்டு நிறுத்திடலாம்னு நினைக்கிறேங்க.''

''நல்லாருக்கு போங்க. பாட்டு பாடறத்துக்காக பள்ளிக்கூடத்தை விட்டு நிறுத்தறதா. உலகத்துல எத்தனை பேர் பாட்டு பாடலை... அவங்கள்லாம் படிக்காதயா இருந்துட்டாங்க.''

''இல்லீங்க செல்வராணி ஒரு மாதிரி மேடைல பாடணும். சினிமால பாடணும்னு திட்டமிட்டிருக்கு. கர்நாடக சங்கீதம் கத்துக்கலாம்னும் ஒரு எண்ணம் இருக்கு. கர்நாடக சங்கீதம் கத்துகிட்டோம்னா, கார்த்தால, மத்தியானம், ராத்திரி எல்லா நேரமும் பிராக்டீஸ் பண்ணணும். அதுக்கு பள்ளிக்கூடத்து படிப்பு இடைஞ்சலா இருக்கு.''

''பிளஸ் டூ வரைக்கும் படிக்கட்டுமே...''

''நானும் முதல்ல அதான் நினைச்சேன். ஆனா, பாஸ் பண்ணாத ஒரு படிப்பு எதுக்குங்க படிக்கணும்.''



செல்வராணி, அப்பா எதை நோக்கி நகர்கிறார் என்று தெரியாமல் தவித்தாள்.

''சரி நான் என்ன உதவி செய்யணும், டியூஷன் ஏதாவது வைக்கணுமா.''

''இல்லீங்க. அதுக்கும் ஒரு தகுதி இருக்கு. இவ்வளவு தான் பளு தூக்க முடியும்னு ஒவ்வொருத்தருக்கும் ஒரு தலையெழுத்து இருக்கு. செல்வராணி எவ்வளவு முடியுமோ அவ்வளவு படிக்கிறா. இதுக்கு மேல டியூஷன்லாம் அவளுக்கு ஒன்னும் முக்கியமில்லை. ஆனா செல்வராணி படிக்கணுமா வேணாமான்னு கேக்கத்தான் உங்ககிட்ட வந்திருக்கேன்.''

''ஒரு டீச்சர். என்னண்ட போய் படிக்கணுமா வேண்டாமான்னு கேட்டா, நான் வேண்டாம்னு ஒரு பதிலை எப்படி சொல்லுவேன்னு எதிர்பார்க்கறீங்க.''

''நீங்க டீச்சர்னு மட்டும் நினைக்காதீங்க. செல்வராணி பாட்டை ரொம்ப ஆசையா கேக்கறவங்களாம். அந்த விதமாவும் கேக்கறேன் அந்தப் பொண்ணு நல்லாப் பாடுது இல்லீங்களா.''

''ஐயோ. ரொம்ப நல்லா பாடுறா.''

''அந்தப் பாட்டு அமுங்கிப் போகணுங்களா.''

''இல்லை. அவ நல்லா பாடணும். அவ பிரபலமாகணும். அவ எங்கிட்ட படிச்சவனு நாங்கள்லாம் பேசணும்.''

''நீங்கதான் எதுனா உதவி பண்ணி அவளை கரையேத்தணும்.''

''என்ன பண்ணணும்னு சொல்றீங்க.''

''தெரியலீங்கம்மா. அவ பாஸாகணும்.''

''இதுக்கு நான் என்ன பண்ணணும்னு சொல்லுங்க.''

''அப்படி சொல்றீங்களா. பதினொன்னு பாஸாகறது ஒன்னும் கஷ்டமில்லீங்க. நான் அதைப் பாத்துக்கறேன். ஆனா, டுவெல்த் என்ன பண்ணப் போறா.''

''எப்படியாவது கடைசி நேரத்துல படிக்க வைச்சு பாஸ் பண்ண வைச்சிடலாங்க.''

அந்த டீச்சர் வெகு நேரம் யோசித்தாள்.

''லெவன்த்துக்கு எக்ஸாம் உண்டுடி. ஆனா மார்க் வராது. பாஸ்ஃபெயில்னுஒன்னும் கிடையாது.ஆனாலும் ஒரு கெட்டிக்காரப் பொண்ணு பக்கத்துல உக்காந்து, ஒரு நாப்பது அம்பது மார்க்குக்கு காப்பியடிச்சி எழுதிடு.'' அந்த உதவி தலைமை ஆசிரியை அவளுக்கு போதித்தாள்.

அவள் பரிட்சை அவ்விதமே நடந்தது.

பள்ளிக்கூடம் திறந்து, பிளஸ் டூ வகுப்பில் எல்லோரும் போய் சேர்ந்து அமர்ந்த பிறகு, தலைமை ஆசிரியை மிகப்பெரிய சொற்பொழிவாற்றினாள்.

வாழ்க்கையில் எப்படி படிக்க வேண்டும் எப்படி முன்னேற வேண்டும். எவ்வளவு கடுமையாக உழைக்க வேண்டும். எத்தனை ஆர்வமாக செயலாற்ற வேண்டும் என்பதெல்லாம் விளக்கிப் பேசினாள்.

பிளஸ் டூ மாணவிகள் தலைமை ஆசிரியை பேசுவதை உன்னிப்பாக கவனித்தார்கள். செல்வராணியும் கவனித்தாள்.

படிப்பு என்கிற விஷயத்தை அவள் பாட்டு என்கிற விஷயமாக எடுத்துக் கொண்டாள். கடும் உழைப்பு பாட்டுக்குத் தேவை என்பது யோசிக்க யோசிக்க அவளுக்குப் புரிந்தது.



பிளஸ் டூ வகுப்பு துவங்கிய மூன்றாம் நாள், அவள் கர்நாடக சங்கீதம் கற்றுக் கொள்ள ஒரு டீச்சரிடம் சேர்ந்தாள். சரளி வரிசை ஜண்டை வரிசையில் ஆரம்பித்தாள்.

''பிளஸ் டூ படிச்சின்டு, இப்ப வந்து சேர்ந்திருக்கியேடிம்மா.'' டீச்சர் கேட்டாள்.

''எனக்கு படிப்பு ஒன்னும் முக்கியம் இல்ல டீச்சர். பாட்டுதான்.''

''அப்படின்னா போகவே வேண்டாமே. இங்கியே இருந்துடேன். கார்த்தாலேருந்து சாயந்திரம் வரைக்கும் விதம்விதமா சொல்லித்தரேன், பாட்டா கேட்டுண்டு இருப்போம்.''

''இந்த ஒரு வருஷம் முடிச்சிடறேன் டீச்சர். அப்புறம் நீங்க சொல்றபடி காலைலேருந்து சாயந்திரம் வரைக்கும் உங்க வீட்லயே இருக்கேன். பாட்டா கேட்டுகிட்டு இருப்போம்'' என்று சொன்னாள்.

பிளஸ் டூ பரிட்சை, கர்நாடக இசை, சினிமாப்பாட்டு என்று மூன்று விஷயங்களிலும் அவள் மனம் முழுவதுமாய் ஈடுபட்டது.

இந்த முறை எந்த ஆசிரியையும் உதவி செய்வாள் என்று தோன்றவில்லை. ஆனாலும்; அவள் கடைசி நேரத்தில் பாட்டு பாடுவதை குறைத்துக் கொண்டு, கடைசி ஒரு மாதம் மிகக் கூர்மையாகப் படித்தாள். இது இது படி போதும் என்று ஸ்நேகிதிகள் சொல்லிக் கொடுத்தார்கள். அது மட்டுமே படித்தாள்.

அதிர்ஷ்டவசமாய் அவள் எது படித்தாளோ அந்த விஷயமே பரிட்சையில் கேள்வியாகவும் வந்தது.

அவள் மனசு நிறைவுடன் கடைசி பரீட்சை எழுதி விட்டு, வீட்டுக்கு ஓடி வந்தாள். அம்மாவை கட்டிக் கொண்டாள். அப்பாவை நமஸ்கரித்தாள்.

"நல்லா எழுதினேம்பா. நிச்சயம் பாஸாயிடுவேன். எனக்கு கொஞ்சம் கூட பயமே இல்ல.

எம்பா... இதுக்கப்புறம் காலேஜுக்குப் போகவா இல்ல பாட்டு கிளாஸ் போகவா."

"இல்ல கண்ணு. இசைக்கல்லூரின்னு போய், முழு நேரம் பாட்டுபத்தி உக்காந்து கேட்டுனு இருக்கறதை விட, நீ ஒரு நல்ல காலேஜுக்குப் போ. ஈவினிங் காலேஜ் போ. மத்த நேரங்களை ஒரு பாட்டு டீச்சர் வீட்ல செலவு பண்ணு. முடிஞ்சபோது காலேஜுக்குப் போ; முடிஞ்சபோது பரீட்சை எழுது. இது ஒண்ணும் முக்கியம் இல்ல" என்று அப்பா சொல்ல, அவள் அந்த பாட்டு டீச்சரை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். கீதம். வர்ணம் எல்லாம் வெகு சுலபமாகத் தாண்டினாள். கனமான ராகங்களை அடையாளம் தெரிந்து கொள்ள கற்றுக் கொண்டாள். நுணுக்கமான ராகங்களை விஸ்தாரமாகப்பாட அவளுக்கு கற்றுத்தரப் பட்டது.

உடம்பு வேறுவிதமாக மாறியது. நல்ல பாட்டு நல்ல உணவு, நல்ல சுற்றுப்புறம், நல்ல தோழிகள், எதிர் காலக் கனவு பற்றிய நிச்சயங்கள். எல்லோரும் பாராட்டி பாராட்டி காது முழுவதும் வழிந்து ஓடுகின்ற புகழ் இவை எல்லாம் அவளை உற்சாகமடையச் செய்தன. அந்த உற்சாகம் உடம்பில் ஊறியது. அவள் வளப்பமான ஒரு பெண்ணாக வளர்ந்தாள்.



குழந்தை என்கிற பருவத்திலிருந்து நகர்ந்து குமரியானாள்.

அவள் வீடு அவள் திருமணத்தைப் பற்றி இன்னும் அதிகமாய் கவலைப்பட்டது.

அந்தக் கல்லூரி மிகப் பெரியது. ஏகப்பட்ட பிரிவுகள் கொண்டது. ஒவ்வொரு பிரிவிற்கும் உள்பிரிவுகளாக பல வகுப்புகள் இருந்தன.

பள்ளிக்கூட தலைமையாசிரியை, செல்வராணியைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல, உடனே அந்தக் கல்லூரியில் இடம் கிடைத்தது. கணக்குப் பாடமோ, கம்ப்யூட்டர் பாடமோ பௌதீகமோ, ரசாயனமோ கொடுக்கப்பட மாட்டாது என்று கல்லூரி முதல்வர் சொல்ல, பள்ளி தலைமையாசிரியை தலையிலடித்துக் கொண்டார்.

"நீங்க குடுத்தாலும் அவ படிக்க மாட்டா. அவ படிக்கறது ஒரு மரியாதைக்கு. அவளை நீங்க சேத்துக்கறதும் ஒரு மரியாதைக்கு. எது சுலபமான பாடமோ அதைக் கொடுங்க. அவளை பாஸ் பண்ணவையுங்க'.' என்று தெளிவாகச் சொல்ல, கல்லூரி முதல்வர் சந்தோஷமானார்.

அவளுடைய அட்மிஷன் விஷயத்திற்கே பாட்டுதான் அடிப்படைக்காரணமாக இருந்தது. "செல்வராணியா காலைல பத்து மணிக்கெல்லாம் ஒண்ணும் வரவேண்டாம். எனக்கு அட்மிஷன் வேலை நிறைய இருக்கு. சாயந்திரமா அஞ்சு மணிக்கு நான் வேலையெல்லாம் முடிக்கிறபோது வா. வந்து, சில பாட்டு பாடு" என்று கல்லூரி முதல்வர் சொல்ல, அவள் கல்லூரி திறப்பதற்கு முன் மாலை நேரம் குளித்துவிட்டு, ஒரு பூ போல கல்லூரிக்கு வந்தாள். கல்லூரி முதல்வர் முன்பு கைகட்டி நின்று கொண்டாள்.

''காலைலேருந்து மண்டையைப் பிளக்கற தலைவலி. ஏதாவது பாட்டுப் பாடு செல்வராணி'' என்று கல்லூரி முதல்வர் சொல்ல அவள் 'ஜனனி ஜனனி' என்று பாடினாள்.

''கிறிஸ்தவ கீர்த்தனைகள் தெரியுமா செல்வராணி'' என்று கேட்க, தெரியும் என்று செல்வராணி பதில் சொன்னாள்.

**''ஆத்துமமே என் முழு உள்ளமே**
**உன் ஆண்டவரை**
**உன் ஆண்டவரை-இந்நாள் வரை**
**அன்பு வைத் தாதரித்த-உன்**
**ஆண்டவரை தொழுதேற்று.''**

என்று அவள் பாட, வெளியிலுள்ள பேராசிரியைகளெல்லாம் கல்லூரி முதல்வரின் அறைக்குள் நுழைந்தார்கள்.

**''ஓ ராபின் ஜோதி நட்சத்திரம்**
**ஆர்பரிக்கும் நட்சத்திரம்**
**நித்தம் வழி காட்டிச் செல்லும்**
**உன்னதமாய் வெளிச்சம்''**

என்று பாட, அங்குள்ள பேராசிரியைகளெல்லாம் சேர்ந்து கொண்டார்கள்.

**''ஓஸன்னா பாடுவோம்**
**இயேசுவின் தாஸரே**
**தாவீதின் குமாரருக்கு**
**உன்னதத்தில் ஓஸன்னா''**

என்று அவள் இன்னொரு பாட்டு எடுக்க அறையிலுள்ள அத்தனை பேரும் கை தட்டினார்கள்.

அந்தக் கல்லூரி முதல்வர் நெகிழ்ந்து போனாள். தன்னாடி எழுந்தாள். வேகமாய் எழுந்து செல்வராணியை



5080
465635

கட்டிக் கொண்டாள். அவள் கன்னங்களைத் தடவி நெற்றியில் முத்தமிட்டாள்.

''என்ன இனிமையான குரல். கடவுள் உன் குரலில் இருக்கிறார். கடவுள் உன் இதயத்தில் இருக்கிறார். ஒருநாளும் பாடுவதை விடாதே. நீ பாடினால் புல் பூண்டுகள் முளைக்கும். நீ பாடினால் குருவிகளெல்லாம் பேச்சை நிறுத்திவிடும். நீ பாடினால் தென்றல் சுகமாக வீசும். நீ பாடினால் உலகம் நல்லபடி இயங்கும். எனவே செல்வராணி, ஒருக்காலும் பாடுவதை நிறுத்திவிடாதே. எப்பொழுது முடியுமோ அப்பொழுது கல்லூரிக்கு வா. எந்த வகுப்பு வேண்டுமோ அங்கு போய் உட்கார்ந்து கொள்.''

இப்படி அந்த காலேஜ் பிரின்ஸிபால் யாருக்குமே அனுமதி கொடுத்ததில்லை.

பி. ஏ. பொருளாதாரம் தமிழ் என்று அவள் சொன்னபோது இரண்டு பேராசிரியைகள் முன் வந்து, ''செல்வராணி, வந்துரு. தினம் பாட்டு கிளாஸ். பொருளாதாரம் நடக்குதோ இல்லியோ தினம் பாட்டு நடக்கும்.'' என்று அவளை உற்சாகப்படுத்தி, கையைக் கோர்த்துக் கொண்டார்கள்.

பேராசிரியைகள் பேராசிரியைகளாகவே இல்லை. தோழிகளாக இருந்தார்கள். பாட்டு அவர்களை கட்டிப் போட்டது.

கல்லூரியில் தனியே ஒருவளாகம் திறக்க, ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அமைச்சர் ஒருவர் வருவதாக ஒப்புக் கொண்டிருந்தார்.

வழக்கம் போல அமைச்சர் வருவதற்கு தாமதமாயிற்று. மாணவிகள் சலசலப்பு அதிகமாகவே, சட்டென்று கல்லூரி முதல்வர் செல்வராணி எங்கே என்று கேட்டு,

அவளை நேரே வரவழைத்து, மேடைக்குப் போய் ஏதேனும் பாடு என்று கட்டளையிட்டார்.

கல்லூரி முதல்வர் செல்வராணியை ஞாபகம் வைத்துக் கொண்டதும், அவளிடமே மேடைக்குப் போய் பாடு என்று கட்டளையிட்டதும் கல்லூரியில் சற்று வியப்பாகப் பேசப்பட்டது.

செல்வராணி மேடை ஏறினாள். அமைச்சர் தொலைவிலே வருவதாக போலீஸ் வயர்லெஸ் கூறியது. செல்வராணி பாடுவதா இறங்கி விடுவதா என்று தவித்தாள்.

அந்த சப் இன்ஸ்பெக்டர் அவளை உற்றுப் பார்த்தார். ''எதுனா பாடுங்க. அமைச்சர் வரும்போது வெறுமனே உட்காரம ஏதோ பாடிகிட்டிருக்கிறது நல்லா இருக்கும். எதுனா கழகப் பாட்டு பாடுங்க.''

அவள் புரியாமல் தவித்தாள். ''கழகப் பாட்டுன்னா...' என்று சப் இன்ஸ்பெக்டரையே கேட்டாள்.

''திராவிடப் பொன்னாடே தெரியுங்களா, அதைப் பாடுங்க.'' சப் இன்ஸ்பெக்டர் அவளுக்கு ஞாபகமூட்டினார்

சட்டென்று அந்தப் பாட்டு அவளுக்கு ஞாபகம் வந்தது. உடனே கணீரென்ற குரலில்,

**''எங்கள் திராவிடப் பொன்னாடே**
**கலை வாழும் தென்னாடே''**

என்று பாட ஆரம்பித்தாள்.

கல்லூரி முதல்வர் வியப்போடு அவளைப் பார்த்தாள். மற்றப் பேராசிரியர்கள் ஒருவரையொருவர் பார்த்து வியந்து தங்களுக்குள்ளாக, ''என்னா, இந்தப் பாட்டு பாடுது. இவ அந்தக்கட்சியா'' என்று பேசினார்கள்.



அமைச்சர் படியேறினார். இளம்வயதில் அவர் கேட்டதோடு, அவர் பாடிய பாட்டு, தெருக்களில் கையில் தாளத்தோடு, கட்சி மேடைகளில் அடிவயிற்றிலிருந்து குரல் கொடுத்த பாட்டு, இங்கு இனிமையாகப் பாடுவதைக் கேட்டு மனம் மயங்கினார். செல்வராணி பாட்டை நிறுத்தும் போது, வேண்டாம் தொடரவும் என்று கையசைத்தார். பாட்டு முடியும் வரை மேடைக்கு கீழே நின்றிருந்தார். பாட்டு முடிந்ததும் கை தட்டினார். மேடையேறினார். செல்வராணியை நமஸ்கரித்தார்.

''உம் பேர் என்னம்மா.'' ஆவலோடு விசாரித்தார்.

மேடையில் அமர்த்தார். விழா துவங்கியது. மறக்காமல் செல்வராணியைப் பாராட்டினார்.

செல்வராணி கல்லூரியில் புகழ்மிக்கவளானாள்.

அந்தக்கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம் தமிழ் பிரிவிற்கு தாவணிப் படை என்று பெயர். பௌதிகமும் ரசாயனமும் கணக்கும் ஆங்கில இலக்கியமும் படிக்கிற பல பெண்கள் இறுக்கமான பேண்டுடன் பனியனோடு, மிடியோடு, பிராக்கோடு அலைய இவர்கள் மட்டும் தாவணி போட்டுக் கொண்டு வருவதால், தாவணிப்படை என்று அவர்களுக்கு தனியாக செல்லப் பெயரிட்டிருந்தார்கள்.

அதே போல, பி.ஏ.பொருளாதார மாணவிகள் அடக்கமானவர்கள் வம்புக்குப் போகாதவர்கள். செல்வராணியைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு எப்போதும் பாட்டுக் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

ஒரு நாளைக்கு இறுக்கமான பேண்ட் போட்ட, லிப்ஸ்டிக் பூசிக் கொண்ட பௌதிகப் படை, தாவணிப் படையை நேருக்கு நேர் சந்தித்தது.

''செல்வராணி உன்னோடு பதினைந்து நிமிடம் பேச வேண்டும் வா என்று விரல் சொடுக்கி அழைத்தது.

செல்வராணி திருதிருவென்று விழித்தாள்.

தாவணிப்படை அவளை முன்னே தள்ளியது.

செல்வராணியை அவர்கள் கூட்டிக் கொண்டு போனார்கள். தங்கள் இடத்திற்குப் போய் உட்கார்த்தார் சாக்லேட் பிரித்து வாயில் ஊட்டினார்கள். கன்னத்தில் முத்தமிட்டார்கள்.

''நன்றாகப் பாடுகிறாய் செல்வராணி. இப்பொழுது நாங்கள் ஒரு மியூசிக் டீம் அமைத்திருக்கிறோம். அதில் ஆங்கிலப் பாடல்களைப் பாட எங்களுக்கு ஆள் இருக்கிறார்கள். ஆனால் விழா என்று வந்தால் ஹிந்திப் பாடல்களும் தமிழ்ப்பாடல்களும் பாட வேண்டியிருக்கும். ஒரு தமிழ்பாட்டு ஒரு ஹிந்திப்பாட்டு பாட, நமது கல்லூரி சார்பில் உன்னை கூட்டிக்கொண்டு போகப் போகிறோம்.

நீ தாவணிப் படையைச் சேர்ந்தவளாக இருந்தாலும், இந்த மியூஸிக் ட்ரூப்பில் உன்னுடைய குரல் வளத்திற்காக ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.'' என்று சொல்லி, 'எப்போதும் பச்சை' என்கிற அவர்களது இசைக்குழுவில் சேர்த்துக் கொண்டார்கள்.

தினமும் மாலையில் அவளுடைய ஸ்ருதியைத்தெரிந்து நல்ல பாட்டுகளைத் தேர்தெடுக்க சிரமப்பட்டு போலேரே பப்பி, என்ற ஹிந்திப்பாட்டும் 'ஒரு தாலி வரம்' கேட்கிறேன் தாயம்மா' என்ற மாரியம்மா பாட்டும் பாடச் சொன்னார்கள் இந்த இரண்டு பாட்டுமே கடினமான பாட்டுகள். மிகுந்த பயிற்சிக்குப் பிறகே இவை சரியாக வரும் இவற்றை திரும்பத்திரும்ப அவள் பாடிப் பார்த்தாள்.

அவள் கடுமையாக பயிற்சி செய்வதைப் பார்த்து பௌதிகக் குழு வியந்தது அவளுக்கு உதவி செய்ய முன்



வந்தது. அவள் செய்த சிறு தவறுகளை அழகாக திருத்திக் கொடுத்தது. சுதிக்கு தனியே ஒரு டிராக் போட்டு ஏற்பாடு செய்தது.

அவர்களிடம் நல்ல கீ போர்டு ப்ளேயர் ஒருத்தி இருந்தாள். டிரம் வாசிக்க வெளியிலிருந்து ஒரு ஆளை வாடகைக்கு அமர்த்திக் கொண்டார்கள் மற்றபடி வயலினும் கிடாரும் கீபோர்டுமாய் அவர்கள் பலமான குழுவாக இருந்தார்கள்.

கிண்டியிலுள்ள ஐ.ஐ.டி.யில் பெரிய கலாச்சாரவிழா ஏற்பாடாகி இருந்தது. அதற்காக இந்தக் கல்லூரி தன்னுடைய பெயரைக் கொடுத்திருந்தது. பதினாறு பேர்களாக அங்கே போய் இறங்கினார்கள். மற்ற பெண்கள் காலரியை அடைத்துக் கொண்டார்கள்.

இவர்களுக்கு ஆறாவது இடம் கிடைத்தது. ஏழாவதாக ஒரு டீம் இருந்தது.

'எப்போதும் பச்சை'யின் நிர்வாகத்தை கவனித்துக் கொள்கிற பெண் உள்ளே போய் பேசி ஏழாவதாக தன்னுடைய இடத்தை அதாவது கடைசியாக தன் இடத்தை மாற்றிக் கொண்டாள்.

எல்லா கல்லூரி மாணவர்களும் அந்த கலாச்சார விழாவிற்கு வந்திருந்தார்கள் இளமை பொங்கித் ததித்தது.

எல்லோரும் எல்லோரையும் கேலி செய்து கொண்டிருந்தார்கள். அந்த கேலிக்கு எல்லோரும் வாய்விட்டு சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

முதற் கல்லூரி ஸ்ருதி பிசகி பாடவே, எழுந்து நின்று கைதட்டி வெளியே துரத்தினார்கள். இரண்டாவது கல்லூரி, வார்த்தைகள் மறந்து விட்டு நிற்கவே அதையும் விசிலடித்து துரத்தினார்கள்.

மூன்றாவது கல்லூரி நன்றாகவே பாடியது, கை தட்டி பாராட்டினார்கள்.

நான்காவது கல்லூரி மறுபடியும் சொதப்ப பாதி யிலேயே திருப்பி அனுப்பினார்கள்.

ஐந்தாவது கல்லூரி நன்றாகப் பாடியது. அவர்களை கைதட்டி ஆதரித்தார்கள்.

ஆறாவது கல்லூரி மாணவர்களில், அந்த மாணவன் மிக அழகாகப் பாடினான். தாடி வளர்த்திருந்தான். யேசுதாஸ் போல வேட்டியும் ஜிப்பாவும் அணிந் திருந்தான்.

யேசுதாஸைப் போல குரல் இருந்தது. யேசுதாஸைப் போல மேக்கப்பும் இருந்தது. அதே விதமாக நடந்து வந்து, கைகூப்பி நின்று, யேசுதாஸின் பாடல்களைப் பாட, அவன் குரல் வளத்தில் கட்டுப்பட்டு கூட்டம் கை தட்டியது.

ஏழாவதாக இவர்கள் கல்லூரி மேடை ஏறியது.

''ப்ரைஸ் வாங்கணும்டி. ப்ரைஸ் வாங்கணும்டி காட்...காட்...ப்ளீஸ் ஹெல்ப் மீ' என்று எல்லோரும் பிரார்த்தனை செய்து கொண்டார்கள்.

ஆங்கிலப் பாடல் முதலில் பாடினார்கள். அவ்வளவு வரவேற்பு இல்லை.

இரண்டாவது பாடலிலேயே போலேரே பப்பி என்கிற பாட்டை அவளை பாடச்சொல்லி, அதற்கான ஏற்பாடுகளை குழுவின் தலைவி உடனடியாக செய்தாள்

ஸ்ருதி மாற்றி, மைக் அட்ஜஸ்ட் செய்து, 'போலேரே பப்பி' ஆரம்பித்தபோது. ஒரு பாராட்டாய் சில கைத் தட்டல் இருந்தது. பிறகு அதுவும் அடங்கிப் போயிற்று.



அவன் குரல் அந்த வாகனத்தின் எல்லா மரங்களின் மீதும் மோதித்திரும்ப, கூட்டம் இந்தக் குரலில் கட்டுப் பட்டு அமைதியாகக் காத்திருந்தது. பாட்டு முடிந்தவுடன் எழுந்து நின்று ஒரு குழு கைதட்டியது.

அவன் கல்லூரி மாணவிகள் உரத்த குரலில் கத்தி னார்கள். டான்ஸ் ஆடினார்கள். அற்புதம் அற்புதம் என்று பாராட்டினார்கள். மற்றவர்களும் பொதுவாக கைதட்டினார்கள்.

அடுத்தபடி 'ஒருதாலி வரம் கேட்கின்றேன் தாயம்மா. என்று அவன் பாட ஆரம்பித்தான். நிறைய மாரியம்மாக் களின் பெயரைச் சொன்னான். மூச்சு விடாமல் பாடி னான். ஒரு இடம் கூட மூச்சு விடாமல், அவன் உரத்த குரலில், ஒரு உத்வேகத்தோடு அவன் பாடப்பாட, அவன் பாட்டினுடைய உச்சஸ்தாயியில் கூட்டம் எழுந்து நின்று கைதட்டியது.

சாதாரணமான, ஒரு பக்திப் பரவசமான அந்தப் பாட்டு இளைஞர்களான அவர்கள் எல்லோர் உள்ளத் தையும் கவ்விக்கொண்டு பெரிய கரகோஷம் வாங்கிக் கொடுத்தது.

அந்தப்பாட்டு முடிந்து அவன் கைகூப்பினான்.

யாரோ ஒருவன் ஓடிவந்தான். கை நிறைய மலர்கள் வைத்திருந்தான். அவன் தலையில் அப்படியே மலர்களை சொரிந்தான். கூட்டம் மறுபடியும் கைதட்டியது.

அவன் அதைப் பாராட்டாக எடுத்துக் கொண்டான். அவனுக்கு நன்றி என்று சொன்னான்.

அவர்கள் கீழே இறங்கினார்கள்.

எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. அவர்கள் குழுவிற் குத்தான் பரிசு. அவனால்தான் பரிசு.

ஒருமணி நேரம் கழித்து அவர்கள் கல்லூரிக்கு பரிசு அறிவித்ததும், எல்லா மாணவிகளும் எழுந்து நின்று கை தட்டினார்கள். 'ஒன்ஸ்மோர் ஒன்ஸ்மோர்' என்று கூவினார்கள். மறுபடியும் அந்தக் குழுவை மேடைக்கு வரவழைத்தார்கள். அவளை நிற்க வைத்தார்கள்.

'ஒரு தாலிவரம் கேட்கின்றேன் தாயம்மா' என்று அவள் பாட ஆரம்பித்தாள். உச்சஸ்தாயியில் பிசிறின்றி, அதே வேகத்தில் அதைவிடவும் அழகாக, அவள் பாட, மறுபடியும் மிகப்பெரிய கைதட்டல் கிடைத்தது.

மாணவிகள், பாட்டு முடிந்ததும் அவளை தழுவிக் கொண்டார்கள். முத்தமிட்டார்கள். ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் வடித்தார்கள்.

மிகப்பெரிய பரிசு அந்தக் கல்லூரிக்கு முதல் முறையாக கிடைத்தது. அதற்குக்காரணம் செல்வராணி.

மறுநாளும் கலாச்சாரவிழா இருந்தது. அவள் உள்ளே நுழைய எல்லா மாணவர்களும், அவளை அடையாளம் கண்டுகொண்டார்கள். ஆத்தா என்று கூப்பிட்டார்கள். மாரியம்மா என்று கும்பிட்டார்கள். தாயே தாயே என்று வணங்குவதுபோல் கேலி செய்தார்கள்.

அவள் எல்லாவற்றையும் மென்மையாக எடுத்துக் கொண்டாள், வணங்கியவர்களுக்கு ஆசீர்வாதம் செய்தாள். கும்பிட்டவர்களை பதிலுக்கு கும்பிட்டாள். ஆத்தா என்று கூப்பிட்டவரை மகனே என்று அழைத்தாள். கல்லூரி வளாகம் அவளுடைய கேலியை ரசித்தது..

அவளிடம் சிலபேர் கையெழுத்து வாங்கினார்கள் ஒரு பையன் அருகே வந்தான். "ரொம்ப நல்ல ஃபியூச்சர் இருக்குங்க. இந்த மேடைல பாடிட்டீங்கல்ல. இனி, தமிழ்நாட்டுல இருக்கற எல்லா மேடையும் நீங்க பாடப் போறீங்க. எல்லார் வீட்லயும் உங்க குரல் ஒலிக்கப்



போகுது. சத்தியம். "என்று சன்னதம் வந்ததுபோல் சொல்லிவிட்டுப் போனான்.

அதையும் செல்வராணி லேசாக எடுத்துக் கொண்டாள்.

தாலவணிப்படை என்று பி.ஏ. பொருளாதாரத்தமிழை சற்றும் மதிக்காத பௌதிகப்படையும், ரசாயனப் படையும், கணித மாணவிகளும், ஆங்கில இலக்கியம் பயில்பவர்களும் இப்போது மிகவும் மதித்தார்கள். பி.ஏ. பொருளாதாரம் என்று எந்த மாணவர்களாவது சொன்னால், செல்வராணியின் வகுப்பா என்று மிக ஆவலோடு அவர்களை விசாரித்தார்கள்.

பல மாணவர்கள் அவளிடம் விலாசம் கேட்க, இசைக் குழுவின் தலைவி, விலாசம் கேட்ட மாணவர்களை விரட்டியனுப்பினாள். காலேஜுக்கு வரச்சொன்னாள்.

நான்கு நாள் பொறுத்து அவள் கல்லூரிக்கு இன்ஜினியரிங் கல்லூரி மாணவர்கள் வந்தார்கள். அந்தக் குழு பாடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

பௌதிகம் படிக்கும் இசைக்குழுவின் தலைவி, பிரின்ஸ்பாலிடம் கேட்டு, பொறியல் கல்லூரிக்கும் குழுவாகப் போய் வந்தாள்.

ஆறு பாட்டுகள் பாடப்பட்டன. ஒரேயொரு ஆங்கிலப் பாட்டு பாடி முடித்ததும் கூட்டம் செல்வராணி எங்கே என்று கூக்குரல் எழுப்பிவிட்டது. மீதி ஐந்து பாட்டுகளும் செல்வராணி பாடவேண்டியதாயிற்று.

பொறியியல் கல்லூரி அமைதியாய் கேட்டது. நிகழ்ச்சி முடிந்தது என்று இசைக்குழு தலைவி அறிவித்ததும் எழுந்து நின்று கைதட்டியது. இசைக் குழுவிற்கு ஒரு கேடயமும், செல்வராணிக்கு தனியாக ஒரு விரல் நீள உயரமுள்ள வெள்ளி குத்துவிளக்கும்

பரிசாகக் கொடுத்தது அந்த வெள்ளி குத்துவிளக்கு. அந்த பொறியியல் கல்லூரியில் படிக்கிற ஒரு பணக்காரப் பையன் தன் செலவில் வாங்கி வந்தானாம் செல்வ ராணிக்கு என்று சொல்லி கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டானாம். செல்வராணியின் குரல் அவ்வளவு வசீகரமாக அவனுக்கு இருந்து விட்டதாம்.

அவனை கூட்டிவந்து அறிமுகப்படுத்தினார்கள்.

அவன் வணங்கினான். ''எந்த விதத்திலும் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். உங்களைப் போன்ற பெண் களிடம் மிக மரியாதையாகப் பழகவேண்டும் என்று எனக்குத் தெரியும். உங்கள் இசைக்குழுவில் இருப்பவர்கள் வேறு, நீங்கள் வேறு என்பதைப் பார்த்த உடனேயே புரிந்து கொண்டேன். உங்கள் குரலுக்கான என் அபிமான மான இந்தப் பரிசு உங்களுக்கு மேலும் பல பரிசுகளைக் கொண்டு வந்து தரும் என்று கைகூப்பி வணங்கிவிட்டுப் போனான்.

அவன் அதிகம் கேலி செய்பவன் சண்டைகளில் எளி தாக இறங்குபவன் என்று பெயர் வாங்கி இருந்தான். ஆனால் செல்வராணியிடம் அவன் மரியாதையாகப் பேசி யது எல்லோருக்கும் வியப்பாக இருந்தது. இது செல்வ ராணிக்கு சொல்லப்பட்டது.

செல்வராணி அப்படியா என்று விசாரித்து விட்டு அமைதியாக இருந்தாள் இதைஅப்பாவிடம் சொன்னாள்.

அப்பா சிரித்துக் கொண்டார். உனக்கு ஒரு கெடு தலும் நடக்காது குழந்தை. உன் பாட்டு, உன் குரல் உன்னைக் காப்பாற்றும். நீ தெய்வத்தின் அருள் பெற் றவள்'' என்று தலையை வருடிக் கொடுத்தார்.

மூன்றாம் வருடம் படிக்கும் போது மூன்றாவது முறையாக மாநிலக் கல்லூரிக்கு மெல்லிசை பாட்டுப்



போட்டிக்கு கலந்து கொள்ளப் போகும்போது செல்வ ராணியின் புகழ் எல்லா கல்லூரிகளிலும் பரவியிருந்தது.

பதினோருபேர் பெயர் கொடுத்திருந்தார்கள். ஆனால் செல்வராணியை உத்தேசித்து மூன்றுபேர் மட்டுமே போட்டிக்கு வந்திருந்தார்கள்.

யேசுதாஸ் போல பாடுகின்ற அந்தப் பையன் வந்திருந் தான். வரும் போதே நிறைய பந்தா பண்ணினான். அப்படி பந்தா பண்ணுவதை கவனித்து விட்ட மாநிலக் கல்லூரி மாணவர்கள் அவனை கேலி செய்ய ஆரம்பித் தார்கள் அவன் மீது அம்பெறிய ஆரம்பித்தார்கள். அவன் திரும்பினாலே குரல் கொடுத்து கத்தஆரம்பித்தார்கள். அவன் பாடத் துவங்கிய போது வெறுப்பேற்றினார்கள்.

அவன் என்ன குறை கண்டீர்கள் என்று பேசும்போது போடா வெளியே என்று எதிர்க்குரல் கொடுத்தார்கள்.

மாணவர்களுக்கு ஒருவரை பிடிக்கவில்லை என்றால், தூக்கிப் போட்டு மிதிப்பார்கள் என்பது அந்தப் பாடக னுக்குத் தெரியவில்லை எங்கே அடக்கமாக இருக்க வேண் டுமோ அங்கு அவமரியாதையாக நடந்து கொண்டான். மிகமோசமாக நடத்தப்பட்டான். வெளியேறினான்.

செல்வராணி மேடை யேறினாள் எல்லோரும் கை தட்டினார்கள்.

**''அமுதே தமிழே அழகிய மொழியே**
**எனதுயிரே''**

என்று பாட ஆரம்பித்தாள்.

அந்தப்பாட்டு ஆரம்பித்தவுடன் கைதட்டினார்கள். பாட்டு முடியும் வரை மௌனமாக இருந்தார்கள். பாட்டு முடிந்தவுடன் மீண்டும் பலக்க கைதட்டினார்கள்.

திராவிடப் பொன்னாடு பாடு என்று கட்டளை விட்டார்கள்.

அவன் திராவிடப் பொன்னாடு பாடினான். அவர்கள் விரும்பிய எல்லாப் பாடலும் தொடர்ந்து பாடினான்.

அது போட்டியாக இல்லாமல், பாட்டுக் கச்சேரியாக அந்த நிகழ்ச்சி மாறிப் போயிற்று.

இரண்டாவது கல்லூரி நிகழ்ச்சிக்குப் பிறகு, அந்தப் பேட்டையில் செல்வராணியைத் தெரியாதவர்களே இல்லை என்று ஆயிற்று. எல்லாக் கல்லூரிகளிலும் செல்வராணியின் பெயர் பிரபலமாய் விளங்கிற்று. மூன்று நான்கு காதல் கடிதங்கள் கூட வந்தன. அதில் மூன்று கடிதங்களில் கையெழுத்தில்லை, ஒன்றில் பெயர் விலாசம் இருந்தது. செல்வராணி நான்கையும் கிழித்துப் போட்டு விட்டாள்.

அவள் அம்மா, அந்தக் காதல் கடிதங்கள் பற்றி லேசாக கவலைப்பட்டாள். அப்பா, அப்படித்தான் வரும். வந்தாதான் நமக்கு மரியாதை'' என்று கண் சிமிட்டினார்.

செல்வராணியின் அப்பாவிற்கு எக்ஸ்ரே கடை. வயிறு கை, கால், மார்பு, தலை, பற்கள் என தனித்தனியாக எக்ஸ்ரே கருவிகள் வைத்து, அதன் மூலம் நன்கு சம்பாதித்து வந்தார். அந்தப் பக்கத்திலுள்ள டாக்டர்களெல்லாம் அவருக்கு நெருக்கமான பரிச்சயம்.

செல்வராணியின் அப்பா கோவிந்தராஜ் இனிமையாகப் பேசும் சுபாவம் உள்ளவர். மக்களை எடை போட்டு, அதற்கேற்றபடி அவர்களை உபயோகப்படுத்திக் கொள்ளும் வியாபாரி. கோபப்பட்டால் செலவழிந்து போவது நாமே, மற்றொருவருமில்லை. எனவே, எவரிடமும் கோபப்படாமல் இருப்பது மனிதர்களுக்கு



நல்லது. குறிப்பாய் வியாபாரிகளுக்கு நல்லது" என்று தெளிவான கொள்கைகள் உடையவர். வெளியே காட்ட முடியாத கோபத்தை வீட்டில் காட்டுகின்ற பேடித்தனமும் அவரிடம் இல்லை.

கோபத்தை எல்லா இடங்களிலிருந்தும் அழகாக விரட்டிவிட்டு, என்ன செய்தால் காரியமாகும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு செயலாற்றுகிறவர்.

அவருடைய அரவணைப்பும் உபதேசமும் செல்வராணியை மிக பலமுள்ளவளாய் ஆக்கின. வீடு பற்றி எந்த பயமும் இல்லாதபடி செய்தன. அப்பாவைப்பற்றி அச்சமில்லாத மகளாக, அவருக்கு ஸ்நேகிதியாக அவள் வளர்ந்தாள்.

எந்தக் குழந்தைக்கும் இல்லாத அற்புதமான குரல் வளம் தன் குழந்தைக்கு இருப்பதைக் கண்டு அவர் பெருமையுற்றார். இவள் படித்தாக வேண்டிய அவசியமில்லை, பாட்டுபாட வேண்டிய அவசியமில்லை. பெரிய விளம்பரங்கள் பெற்று நிறைய சம்பாதிக்க வேண்டிய கட்டாயமுமில்லை. அவளை ஒரு நல்ல புருஷனிடம் கை பிடித்து கொடுத்து விட்டால், தன்னுடைய அந்திம காலம் சந்தோஷமாக இருக்கும் என்ற சாதாரண எண்ணமே அவருக்கு இருந்தது.

இதற்கு நடுவே நீ பாடினாலும் சரி ஆடினாலும் சரி, உனக்குத் துணையாக இருப்பேன் என்பதும் வழக்கமாக இருந்தது.

பாடறது ஆடறது எல்லாமே நல்லதுதாம்மா. கடைசில எங்க வந்து முடியனும். குடித்தனம் பண்றதுல வந்து முடியணும். குடித்தனம் பண்றதுக்கு கத்துக் கணும். அது இல்லாத பெண் வாழ்ந்து என்ன பிரயோஜனம்னு எனக்குத் தெரியலை. ஏதாவது பிரயோஜனம் சொல்வாங்களா இருக்கும். ஆனா, என் புத்திக்கு எட்டின

வரையில் கல்யாணமாகி குழந்தை பெத்துக்கறதுதான் மிகப்பெரிய சமுதாய சேவைன்னு நான் நினைக்கிறேன்.''

செல்வராணிக்கு தன்னைச் சுற்றி அப்பா தளர விட்டிருக்கும் கயிறு எப்போது வேண்டுமானாலும் இறுகும் என்பது தெரிந்தே இருந்தது. சட்டென்று யாரை யாவது பார்த்து நிச்சயம் செய்து, இவனே உனக்குப் புருஷன் இவனோடு குடித்தனம் செய் என்று வீடு கட்டளையிடும். அப்படி கட்டளையிட்டால் எல்லா வற்றையும் உதறி பாட்டுப்பாட வேண்டும். மேடை யேறுகின்ற கனவுகளை மெல்ல மெல்ல மறக்க வேண்டும். என்று செல்வராணி தயாராக இருந்தாள்.

மேடைக் கனவுகளை அவள் ஸ்நேகிதிகள் யார் தூண்டி விட்டாலும், அதற்குப் பெரிதும் மனம் கொடுக் காமல், செவியை மட்டும் கொடுத்து, செய்திடலாம் பார்த்திடலாம், செய்யணும் பார்க்கணும்' என்று மேலோட்டமாக பதில் சொன்னாள், மேடை தொடர்ந்து ஏறுவதில் ஆர்வம் காட்டாமல் இருந்தாள்.

வீடு ஒரு பெண்ணை இவ்வளவு தொலைவு அனுமதித் ததே மிகப்பெரிய விஷயம். இப்படி அனுமதித்து விட்டு, கடுகடுவென்று மூஞ்சியை வைத்துக் கொள்ளாமல், லவ் லெட்டர் அப்படித்தான் வரும் என்று கண்ணடிப்பது இன்னும் பெரிய விஷயம். இதற்கு மேலும் எதிர்பார்த்து அவஸ்தைப்படக் கூடாது என்று தனக்குத் தானே யோசித்து வைத்திருந்தாள்.

கல்லூரி இறுதியாண்டில் அவளுக்கு பல கல்லூரி களிலிருந்து அழைப்புகள் வந்தன. நகரத்தின் கடைக் கோடியில் இருக்கின்ற கல்லூரிகள் கூட, கார் வைத்து அழைத்துப் போவதாய் கூறின.

''நான் ஒரு தனிப் பெண்ணல்ல, ஒரு கல்லூரியின் பிரதிநிதி என் கல்லூரியின் இசைக் குழு தலைவி சொன்



னால் ஒழிய, கலாச்சாரக் கமிட்டி பரிந்துரை செய்தால் ஒழிய, கல்லூரியின் பிரின்ஸி அனுமதித்தால் ஒழிய உங்கள் கல்லூரிக்கு வரவே முடியாது. வருவதில் விருப்பமு மில்லை.''

நீங்கள் மட்டும் வாருங்கள் என்று நீங்கள் கேட்பதே தவறு. நான் பாடகி அல்ல. முதலில் மாணவி.'' என்று அழுத்தம் திருத்தமாக, மிருதுவாக அவள் சொன்ன போது கல்லூரியில் அந்த மறுப்பு பெரிதும் ஸ்லாகிக்கப்பட்டு பேசப்பட்டது.

ஐ.ஐ.டி.யில் பாடிய அந்தப் பாட்டு தொலைக் காட்சியில் தொடராக நான்கு வாரம் ஒளிபரப்பாகும் என்று திடீரென்று அறிவிக்கப்பட்டது.

''சும்மா ஒண்ணும் குத்துவிளக்கு கொடுத்திடலைடி. அவன் பார்த்தான். இந்தப் புரோகிராமை, பாய்ஸும் கேர்ள்ஸுமாய் மேடையேறிப் பாடற புரோகிராமை அப்படியே மூணுபக்கமும் டி.வி. வைச்சு சுருட்டிட்டான்' ஒரு ரூபா, ஒண்ணேகால் ரூபா செலவழிச்சான். ஒரு வாரம் எண்பதாயிரம் ரூபா மாதிரி, அதை நாலு வாரத்துக்கு பிரிச்சுப் போட்டு வித்துட்டான். ரெண்டே மாசத்துல நல்ல லாபம். அதிலேருந்துதான் உனக்கு வெள்ளி குத்து விளக்கு கொடுத்திருக்கான்.''

''சரி, நமக்கென்ன, டி.வி.ல வரப்போறோம் அதான் முக்கியம்.''

கல்லூரிச்சாலை என்கிற புரோகிராமின் டைட்டில் ஓடும் போதே, அவள் முகத்தையும் 'போலேரே பப்பி, பாடலையும் காட்டினார்கள். ஒரு கல்லூரி வளாகத்தில் விழாக்கள் எவ்வளவு சந்தோஷமாக நடைபெறுகின்றன என்பதை மிகத் தெளிவாக படம் பிடித்துக் காட்டினார்கள்.

முதல் வாரத்தின் கடைசி மூன்று நிமிடங்கள் அவளுடைய கல்லூரிப் பெயரை அறிவித்து, அந்தக் கல்லூரியிலிருந்து, மிகப் பெரிய இசைப் புயலென்று ஐ.ஐ.டி. அரங்கத்தையே அசைத்ததாக வர்ணித்து, அவள் பாட்டை ஆரம்பித்தார்கள். ஒன்னரை நிமிடத்திலேயே கட் செய்தார்கள்.

அந்த ஒன்னரை நிமிடம் அவள் குரல் தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவியது.

நேரில் பார்ப்பதைவிட, டி.வி.யில் செல்வராணி மிக அழகாக இருந்தாள். மெல்லிய கருப்பு என்றாலும் பெரிய கண்கள். அந்த மஞ்சள் கூடிதார் அவளைப் பெரிதும் அழகு படுத்திக் காட்டியது.

பின்னலை இரண்டு பக்கமும் தனிக்கால்கள் எடுத்து, நடுவே அழுத்தி இறுக்கி, ஒரு சிறு பின்னலாகக் கொண்டு வந்து, பெரிய பின்னலில் முடித்து வைத்திருக்கிற அந்த அழகு பதிவாகி இருந்தது. அவள் காது ஜிமிக்கி ஆட்டம் தனியே காட்டப்பட்டது. அவள் கண்மூடி அடிவயிற்றிலிருந்து குரலெடுத்துப்பாடுகிற போது அரங்கம் உறைந்து கொண்டிருப்பதும் காட்டப்பட்டது.

அந்த நிகழ்ச்சி முடிந்து, அடுத்த அரைமணி நேரம், இடைவிடாது நண்பர்களிடமிருந்தும் உறவினர்களிடமிருந்தும் தொலைபேசி விசாரிப்புகள் நடந்தன.

மாலை கடைக்கு கிளம்புகிற போது, பல பேர் கை கூப்பி வணக்கம் சொன்னார்கள். 'நீங்கதானா அது நீங்கதானா அது' என்று கிட்ட வந்து கேட்டார்கள். 'ரொம்ப நல்லாப் பாடினீங்க.' என்று கையைப் பிடித்துக் கொண்டார்கள். வயதானவர்கள் 'நல்லா இருக்கணும்மா' என்று ஆசீர்வாதம் செய்தார்கள்.

அவள் அந்தப் பேட்டையில் மிகப் பிரபல்யமானாள். அவளை எல்லோருக்கும் தெரிந்தது. அவள் எல்லா



அசைவுகளும் அந்தப் பேட்டையில் முக்கியமான விஷயமாய் பேசப்பட்டன.

அவள் காலேஜ் போகும் போது குழந்தைகளுக்கு அவளைக் காட்டினார்கள். 'அந்த அக்கா மாதிரி நல்லாப் பாடணும். இப்பமே பாட்டு கத்துக்கறியா, என்று குழந்தைகளுக்கு ஆவல் தூண்டினார்கள். அவள் அருகே வர, குழந்தையை அவள் கையில் கொடுத்து 'நீ ஒரு தடவை வைச்சுக்க. அதுக்கும் பாட்டு வரட்டும், உன் வாசனைபட்டு' என்று சொன்னார்கள். குழந்தையை அவள் இரண்டு முறை முத்தமிட்டாள். அவர்கள் மிகுந்த சந்தோஷமானார்கள்.

செல்வராணிக்கு தான் உயரே உயரே பறப்பதாகத் தோன்றியது. இது நிலைத்திருக்க வேண்டுமே என்கிற கவலை அவ்வப்போது வந்தது.

டி.வி.யில் இரண்டாம் வாரம் ஒளிப்பரப்பானபோது. அந்த 'போலேரே பப்பி'யை ஆரம்பத்திலேயே காட்டி முழுவதுமாய் ஒளிபரப்பினார்கள். இவர் பாடும் இன்னொரு பாடல் அடுத்தவாரம் ஒளிபரப்பாகும். இந்த இசைபுயலை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள் என்று செல்வராணியின் பெயரை அடிக்கடி சொன்னார்கள்.

இந்த முறை பல்வேறுவிதமான குளோஸப்பில் அவள் முகம் காட்டப்பட்டது.

மறுபடி தொலைபேசி விசாரிப்புகள் நடந்தன, தெருவில் நடந்தால் கிட்டதட்ட பூமழை பொழிவது போல, அவளை குசலம் விசாரித்தார்கள். செல்வராணி மிதக்கத் துவங்கினாள்.

அன்று மாலை நான்கு இளைஞர்கள் பெரிய கான்டஸா. காரில் இறங்கினார்கள். அப்பாவின் பெயரைக் கேட்டார்கள். வணக்கம் சொன்னார்கள்.

டி.வி.புரோகிராம் ஒன்று செய்யப் போவதாகவும், பல்வேறு இசைக் கலைஞர்கள் முதலில் தேர்ந்தெடுத்து நாலைந்து வாரங்கள் தொடர்ந்து பாடச்சொல்லி, பிறகு பார்வையாளர்களை பாடச் சொல்லப் போவதாகவும், புரோகிராமை பிரபலப்படுத்துவதற்காக நன்கு பாடு பவர்களை தேடிக்கொண்டிருப்பதாகவும், முதல் புரோகிராமிலேயே இவள் போட்டியாளராக கலந்துகொள்ள வேண்டும் என்றும் நிச்சயம் பரிசு தரப்படும் என்றும் அவனுக்குச் சொன்னார்கள். அப்படிப் பாடினால் ஒரு சிறிய தொகை தருவதாகப் பேசினார்கள்.

அவள் அப்பா கேட்டு கொண்டுவிட்டு, எப்பொழுது, எங்கே என்று விசாரித்தார். நான் கூட்டிட்டு வர்றேன் போங்க என்று சொன்னார்.

அடுத்த மூன்றாவதுநாள் கோடம்பாக்கத்திலுள்ள ஒரு பெரிய ஸ்டுடியோவில் தனியானதொரு அரங்கம் நிர்மா ணிக்கப்பட்டு, அது பிரபலமான இசைக்கலைஞர் தலைமையேற்று, அந்தப் போட்டியினை நடத்துவதாக அறிவிக்கப்பட்டு, ஷூட்டிங் நடந்தது. பார்வை யாளர்களை கைதட்டச் சொல்லி எடுத்துக் கொண் டார்கள். இவள் பாடுவதை மூன்றுநாள் காமிராக்களில் பதிவு செய்து கொண்டார்கள்.

உருக்கமான பாடல் வேண்டுமென்று, ''மாலைப் பொழுதின் மயக்கத்திலே நான் கனவு கண்டேன் தோழி'' என்ற பாட்டை பாடச் சொன்னார்கள்.

'ஒருநாள் இரவு பனிபோல் நிலவு' என்று இன்னொரு பாட்டு பாடச் சொன்னார்கள்.

''ராமன் எத்தனை ராமனடி' என்று வேறுவிதமான பாட்டு கொடுத்தார்கள்.

மூன்று பாட்டுக்களையும் அவள் உச்சஸ்தாயியில் பிசிறு தட்டாமல் மிக அழகாகப் பாடினாள்.



அவள் பாடிமுடித்து கீழே இறங்க, பார்வையாளர் கூட்டம் எழுந்துநின்று கைதட்டியது. அதையும் அவர்கள் படமாக்கிக் கொண்டார்கள். இவர்களை அனுப்பிவிட்டு மற்றவர்களை தனித்தனியாக பாடச்சொல்லி படமெடுத் துக்கொண்டார்கள்.

ஒரு மாதம் கழித்து அதற்கு விளம்பரம் வந்தது. விளம்பரத்திலும் அவள் முகமே மின்னிற்று.

ஒரு ஞாயிறு பிற்பகலில், அவள் பங்கு பெற்ற அந்தப் பாட்டு நிகழ்ச்சி ஒளிபரப்பாகியது. அவளுடைய மூன்று பாடல்களும் முழுமையாக ஒளி பரப்பப்பட்டன.

தமிழகத்தின் மிகச்சிறந்த பாடகிகளுள் செல்வ ராணியும் ஒருத்தி என்பதாய் மாறிப் போயிற்று.

செல்வராணி பரிட்சைக்குப் போகும்போது, அவளை பரிட்சை கண்காணிப்பாளர் கை கூப்பி வரவேற்றார். ''ரொம்ப அற்புதமா பாடினீங்க. நீங்க காலேஜ்ல படிக்கறீங்களா. புரொஃபஷனலாவே தினம் பாடற ஒரு பாடகின்னு நினைச்சேன். படிக்கறீங்கன்னு தெரியாது. உக்காருங்க. உங்களுக்கு என்ன ஹெல்ப் வேணுமோ நான் செய்யறேன்'' என்று சொன்னார்.

செல்வராணி பரிட்சை சுமாராக எழுதினாள். பல இடங்களில் அவளுக்கு உதவி செய்தார்.

''இல்லீங்க, தப்பா எழுதறீங்க'' என்று விடையை அவளுக்கு சரிசெய்து கொடுத்தார்.

ஆங்கில பேப்பரில் பல இடங்களில் ஸ்பெல்லிங், பென்சிலில் கரெக்ட் செய்து கொடுத்தார்.

செல்வராணி நான்கு நாள் பரிட்சைக்கும் நன்றி சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்தாள்.

அந்த டி.வி. இளைஞர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அப்பா அவளுக்காக காத்திருந்தார்.

''எழுநூத்தி அறுபத்தி அஞ்சு லெட்டர் வந்திருக்கும்மா. உன்னைப் பாராட்டி எல்லா லெட்டருமே உன் விலாசம் என்ன, உன்னை எப்படி தொடர்பு கொள்றது, உன் கையெழுத்திட்ட போட்டோ. பதில் கடிதம் இதெல்லாம் கேட்டிருக்காங்க. டி.வி.ல சாதாரணமா பாட்டுபாடி, இவ்னோ பாப்புலரான வேற யாருமே எனக்குத் தெரியலை, காரணம் உனது குரல்.''

நடுநாயகமாய், கருப்பாய், சற்று பூசின உடம்பாய் இருந்த ஒரு இளைஞன் பேசத்துவங்கினான். ''உங்க குரலை நாங்க பலபேர் போட்டுப் பார்த்துட்டோம். சர்வசாதாரணமா ஹைபிட்ச் போறீங்க. இதை நீங்க வேஸ்ட் பண்ணக்கூடாது. நாங்க ஏற்கனவே ட்ரூப் வைச்சு நடத்திட்டு வர்றோம். மறுபடியும் எங்க ட்ரூப்பை புதுசாக்கணும்னு நினைக்கிறோம், இளைஞர்களை சேர்க்கணும்னு நினைக்கிறோம். எங்க ட்ரூப்ல ஃபீமேல் வாய்ஸ்ல நீங்க பாடமுடியுமா?'' என்று அந்த இளைஞன் கேட்டான்.

அவனுடைய பெயர் சுதாகர் என்று சொல்லிக் கொண்டான். சுகுமாரன் என்ற தம்பியை அறிமுகப் படுத்தினான். வடிவேலு என்கிற இன்னொரு பார்ட்னரை கைகாட்டினான். சங்கர் என்கிற இன்னொரு இளைஞனைச் சொல்லி, நம்ம ட்ரூப்ல 'மேல் வாய்ஸ்' என்று அறிமுகப்படுத்தினான்.

எல்லோரையும் விட்டுவிட்டு' சங்கர் என்கிற அந்த இளைஞனை செல்வராணி ஆவலோடு உற்றுப்பார்த்தாள். அவன் சாதாரணமான ஆளாக இருந்தான்.

மற்ற மூன்று பேரோடு பார்க்கிறபோது, அவனுடைய உடைகள் வண்ணம் குறைவாகவும், பழைய



தாகவும் இருந்தன. மற்ற மூவரும் ஷூக்களை கழற்றி விட்டுவர, இவன் சற்று தேய்ந்த செருப்பை வாசலில் விட்டுவிட்டு வந்தான்.

நிதி நிலைமையில் இவர்கள் சொல்படி ஆடுகின்ற பையன் என்பதாய், அவன் உட்காரலும். பார்த்தலும் இருந்தது.

அறிமுகப்படுத்திய போது அவன் எழுந்து நின்று கை கூப்பினான். அந்த கை கூப்பலில் உன் குரலுக்கு என் வணக்கம் என்பதாகத்தான் தென்பட்டது. அவனை பாடச் சொல்லி கேட்க வேண்டும் என்று செல்வராணிக்கு வந்தது.

''ட்ரூப்ல பாடறதைப் பத்தி நான் ஒண்ணும் யோசனை பண்ணலியே. ஏதோ பள்ளிக்கூடம் வரைக்கும் பாடினேன். டி.வி.ல கூப்பிட்டிருக்க பாடினேன். அவ்னோதானே தவிர தினம் தினம் தோள்ல பை மாட்டிகிட்டு, எங்க கச்சேரின்னு போறதுக்கு அவ்னோ ஒண்ணும் பிரியப்படலை.''

செல்வராணியின் அப்பா கோவிந்தராஜ் இழுத்தது போல பேசினார்.

''ஐயோ நீங்க எங்கியும் போக வேணாம். எந்த இடத்துல கச்சேரி நடக்குதோ அந்த இடத்துக்கு செல்வராணிய நாங்க கூட்டிகிட்டுப் போறோம். இங்க கார் வந்து நிக்கும். செல்வராணி வந்ததும்தான் கச்சேரி அப்படீங்கற மாதிரி ஆகும்.

ஏழு ஏழரைக்கு கச்சேரின்னா ஆறு ஆறேகாலுக்கு கார் அனுப்பிச்சு. நாங்க கூட்டிட்டுப் போறோம். அதேபோல, ராத்திரி எந்நேரமா இருந்தாலும் திருப்பி அனுப்பிடறோம்.''

''அங்கதாங்க பிரச்சனையே ராத்திரி எந்நேரமானாலும்னு சொன்னீங்களே, அதுதான் ரொம்ப கவலையா

இருக்கு. ஒரு நாளைப் போல பத்து பத்தே காலுக்கு வந்தா, அவ உடம்பும் கெட்டுப் போகும் குரலும் பாழாகும் மத்த விஷயங்களும் சரியா வராது.''

''என்ன மத்த விஷயங்கள்'' சுதாகரின் தம்பி சுகுமார் கேட்டான்.

''கல்யாணம் டக்குன்னு நாங்க கல்யாணத்தை முடிச்சிடுவோம்.''

''எப்ப கல்யாணம் ஃபிக்ஸ் ஆகுதுன்னு சொல்லுங்க. அன்னிக்கி பாடறதை நிறுத்திடட்டும். அதுவரைக்கும் எங்க ட்ருப்ல பாடட்டும். ஒரு கடவை பாடினா, ரெண்டாயிரம் ரூபா தர்றோம்.'' அவன் பளிச்சென்று காசு பற்றிப் பேசினான்.

''குறைந்த பட்சம் பத்துக் கச்சேரியாவது இருக்கும். ஒரு மாசத்துக்கு இருபதாயிரம் ரூபா சம்பளம். இவங்க கல்யாணத்துக்கு ஆகும். நீங்க தைரியமா ஒப்புக்கங்க. மத்தபடி, எங்கமேல சந்தேகம் இருந்தா, யார் இந்த ஆம்பளைங்கன்னு தெரியாத ஒரு அச்சம் இருந்தா...''

''அடடா...அப்படியெல்லாம் இல்லீங்க.''

''ஒரு அப்பாவுக்கு இருக்கும் அதை நீர விசாரிச்சுகிட்டு, அதுக்குப் பிறகு, நீங்க ஒத்துகிட்டாப் போதும். நான் அடுத்த வாரம் எங்க அப்பா அம்மாவோடயும், எங்க வீட்டுப் பெண்களோடயும் உங்க வீட்டுக்கு வர்றேன். அவங்கள அறிமுகப்படுத்தறேன். என்னுடைய பின்பலம் தெரிஞ்சதுன்னா, உங்களுக்கு என்னை நம்பறத்துக்கு நல்லா இருக்கும் இல்லியா.''

''அது ஒண்ணும் அவசியமில்ல தம்பி. உங்களப் பார்த்தா தப்பா தெரியலை.''

''இல்லீங்க. எனக்கு ஒரு பெண் இருந்து, அவ பாடறான்னா, நான் ஒரு காபந்தோடதான் இருப்பேன்.



நீங்க ஒண்ணு செய்யுங்க. நம்ம வீட்டுப் பக்கம் வாங்கனேன். வந்து என் வீடு எப்படி இருக்குன்னு பாருங்கனேன்.'' அவன் விசிட்டிங் கார்டு கொடுத்தான்.

அப்பா அதை வாங்கி வைத்துக் கொண்டார். அவர் மனம், பத்து நாட்கள், ஒரு நாளைக்கு இரண்டாயிரம், ஆக மொத்தம் இருபதாயிரம் என்ற கணக்கை வேகமாக போட்டுக் கொண்டிருந்தது. ஒரு மாதத்திற்கு அவருடைய எக்ஸ்ரேயில் நிகர லாபம், பதிமூணாயிரம் ரூபாய் அல்லது பதினான்காயிரம் ரூபாய்தான் வந்தது.

எனவே, இந்தக் காசு அவருக்கு பிரகாசமாகவும் நல்ல விஷயமாகவும் தென்பட்டது.

அவர் மறுபடி மறுபடி, சுதாகர் விலாசத்தை படித்து, மனதில் பதிய வைக்க முயற்சி செய்து கொண்டிருந்தார்.

''லேட்டஸ்ட் பாட்டெல்லாம் கேட்பீங்களா'' சங்கரன் செல்வராணியோடு தனியாகப் பேச முயற்சி செய்து கொண்டிருந்தான். அவள் கேட்டேன் என்று சொன்னதும், இரண்டு மூன்று படங்கள் பெயரைச் சொன்னாள்.

''இந்தப் பாட்டு வாக்மேன்ல கேக்கணுங்க.''

''எங்கிட்ட வாக்மேன் இல்லியே''

''அப்படியா...'' வந்திருந்த அனைவருமே திடுக்கிட்டார்கள்.

''அப்புறம் பாட்டு எதுல கேப்பீங்க.''

''வெறும் டேப்ரிகார்டர்ல கேப்பேன்.''

''அப்படியா. வெறும் டேப்ரிக்கார்டர்ல கேட்டா மனசுல பதியாது. வாக்மேன்ல கேட்டுப் பாருங்க. அப்படியே காது வழியா மியூசிக் உடம்புக்குள்ள இறங்கும். வாக்மேன் ரொம்ப முக்கியங்க. நான் இன்னிக்கி சாயந்திரமே உங்களுக்கு ஒரு வாக்மேன் அனுப்பறேன்.''

''சார், என் கையில ஒரு வாக்மேன் இருக்கு அதை வேணா கொடுத்துடலாமா.'' சங்கரன் சொன்னான்.

சங்கரன் சொன்னதை சுதாகரன் அதிகமாக ரசிக்க வில்லை. அதை மறுக்கவும் இல்லை.

ஆனால், சங்கரன் சட்டென்று தன்னுடைய வாக்மேனை கொடுக்க வந்தது, செல்வராணிக்குப் பிடித்திருந்தது. அப்போதே வாக்மேனில் பாட்டு கேட்க வேண்டும் என்ற ஆசை வந்தது.

''எங்க...பையில் வைச்சிருக்கிங்களா'' ஆவலாகக் கேட்டாள்.

''இல்லீங்க. கார்ல வைச்சிருக்கேன்.'' சங்கரன் எழுந்து வெளியே ஓடினான், கார் திறக்கிற சத்தம் கேட்டது.

சுதாகரனும், சுகுமாரும் வேகமாக ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். கூட வந்த பார்ட்னர் வடிவேல் எல்லாவற்றையும் மௌனமாக கவனித்துக் கொண்டிருந்தான்.

சங்கரன் ஓடிவந்து, வாக்மேனில் கேஸட் போட்டு, அவள் கையில் கொடுத்து, எப்படி மாட்டிக் கொள்ள வேண்டும் என்று அருகில் நின்று சொன்னான்.

அதேவிதமாக, செல்வராணி வாக்மேன் மாட்டிக் கொண்டாள்.

டேப் சுழலுகிற சத்தம் கேட்டது. சிவ்ரென்று பாட்டு ஆரம்பித்தது. இசைக்கருவிகளின் சத்தம் மெல்ல மெல்ல ஓங்கி, எஸ். பி. பாலசுப்ரமணியம் குரல் அருவி போல் காதுக்குள் பாய்ந்தது. மூச்சுவிடாமல் பாடுகின்ற அந்தப் பாட்டை பயிற்சி செய்வதற்காக, சங்கர் ஒரே டேப்பில் பலமுறை பதிவு செய்து வைத்திருந்தான்.

அந்தப்பாட்டை உட்கார்ந்து கொண்டு மிகவும் ரசித்து செல்வராணி கேட்டாள்.



சங்கரன் அவள் ரசிப்பதையே பிரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

சுதாகருக்கு லேசாக எரிச்சல் இருந்தது. ''வியாபாரம் பேசிட்டிருக்கும்போது வேற விஷயம் பேசாதீங்கன்னா கேளுங்க'' என்று அடிக்குரலில் மிரட்டினார்.

சங்கர் திடுக்கிட்டவனாய் பார்க்க, ''இப்படி முட்டாள்தனமா அவங்கள உக்கார வைச்சுட்டீங்களே. இப்ப மேற்கொண்டு யார்கிட்ட என்ன பேசறது. உங்களையெல்லாம் கூட்டிட்டு வந்ததே தப்புடா. எருமை மாடுகளா'' என்று மறுபடியும் கோபித்துக் கொண்டார். அவர் கோபித்துக் கொள்வது, அங்குள்ளவர்கள் யாருக்கும் புரியவில்லை.

செல்வராணி அந்த உலகிலேயே இல்லை. அவள் எஸ்.பி.பி.யின் குரலில் கட்டுப்பட்டுக் கிடந்தாள். பாட்டு முடிந்ததும் வாக்மேனை அணைத்துவிட்டு, காதிலிருந்து ஏர்போனை எடுத்து, சங்கரிடம் நீட்டினாள்.

''நீங்க வைச்சுக்கங்க.''

''வேணாம் வேணாம் கொடுத்துருங்க. நாங்க வேற நல்லதா அனுப்பறோம். இது. ஸ்டீரியோ இல்ல. நான் இன்னொன்னு ஸ்டீரியோவோட அனுப்பறேன். அப்ப அதனுடைய எஃபெக்ட் உங்களுக்கு இன்னும் நல்லாத் தெரியும்.''

''நீங்க வாங்கிக்கங்க சங்கர்'' என்று கட்டளையிட, சங்கர் கைநீட்டி அதை வாங்கிக் கொண்டான்.

அவன் முகம் சோர்ந்து காணப்பட்டது. இரண்டு நாட்களில் தகவல் சொல்லி அனுப்புவதாக, செல்வராணியின் அப்பா கோவிந்தராஜ் சொல்ல, அவர்கள் கைகூப்பி விடை பெற்றுக் கொண்டார்கள்.

கார் சீறலுடன் போவது தெரிந்தது.

''என்னம்மா, மேடைல பாடறியா''

''பாடறேம்பா'' செல்வராணி சாதாரணமாகச் சொன்னாள். பாடத்தான் கூப்பிட்டிருக்கிறார்கள் என்று நம்பினாள்.

அவள் அப்பாவிற்கும் அப்படித்தான் எண்ணம் இருந்தது.

ஆனால் வந்தவர்கள் வேறானவர்கள். அவர்களுக்கு செல்வராணியைப் பற்றி வேறு எண்ணங்கள் இருந்தன.

# 3

சுதாகருக்கு அபிராமபுரத்தின் நடுமத்தியில், ஒரு மிகப் பெரிய வீடு இருந்தது அந்த வீட்டின் முன்புறத்தை கடைகளுக்காகவும் பின் புறத்தில் ஏழு குடித்தனங்கள் வைத்தும், மாடியில் இளைஞர்களுக்கு வாடகைக்கு விட்டும் வீட்டின் மத்தியில் அம்மா, அப்பா அண்ணன், தம்பி, சித்தி, சித்தப்பா என்று பெரிய குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள்.

முப்பத்தி ஐந்து வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட அந்த வீடு ஒன்றுதான், அவர்களுடைய சொத்து அவர்கள் வருமானம் அந்த வாடகையை வைத்துக் கொண்டுதான் அந்தக் குடும்பம் கறிசோறு தின்று, சலவை சட்டை போட்டு மினுக்கிக் கொண்டிருந்தது.

சுதாகருக்கு பள்ளிப் பருவம்வரை தங்களுடைய வாழ்வின் லட்சணம் புரியவில்லை. கல்லூரிக்கு வந்த பிறகு புரிந்தது. ஆனால் என்ன செய்வதென்று தெரிய வில்லை. கல்லூரியிலிருந்து வேலைக்குப்போக முயற்சித்த



போது, மிகச்சிறிய தொகைக்கு அதிகமாக செலவு செய்ய வேண்டியிருந்தது. ஒரு மாதம் முழுதும் நாயாய் வேலை செய்தால், வீட்டின் ஒருநாள் செலவுதான் சம்பளமாகக் கிடைத்தது.

சுதாகர் யோசித்தான்.

செலவு செய்ய வீடு கற்றுக் கொண்டு விட்டது அதற்கேற்ற வருமானம் இல்லை. எனவே பல்வேறு முறை களில், வருமானத்தைப் பெருக்கியாக வேண்டும். கடுமை யாக உழைத்தாக வேண்டும் என்று நிர்மானித்தான். தனது திட்டத்தை தம்பியிடம் சொன்னான்.

சுகுமாருக்கு, சுதாகர் எது சொன்னாலும் சரி என்கிற எண்ணம்தான் ஏற்படும். அவனுக்காய் எந்த விஷயத் தையும் முடிவு செய்யத் தெரியாது. அது ஜீன்ஸ் பேண்ட் டாக இருந்தாலும்சரி.வெள்ளைசட்டையாக இருந்தாலும் சரி. ஷூவாக இருந்தாலும் சரி செண்ட்டாக இருந்தாலும் சரி. ஒரு முறை அண்ணன் அதை உபயோகித்துப் பார்த்து சரியென்று சொன்னால், முழுமனதாய் அவனும் ஏற்றுக் கொள்வான்.

அவர்கள் வீடியோ பார்லர் வைப்பதற்கு முயன்றார் கள். ஒரு கடையை அப்படியே குத்தகைக்கு எடுத்து, தங்களுடைய வீட்டின் முன்பக்கத்தில் ஒரு இடத்தை கடையாக்கி, வீடியோ கேசட் லைப்ரரி நடத்தினார்கள். அவர்கள் நடத்த ஆரம்பித்தநேரம் சாட்டிலைட் டி.வி.க் கள் வரத்துவங்கி விட்டன.

மூன்று சாட்டிலைட் டி.வி.களும் முழு மூச்சாய் தங்கள் பலத்தை காண்பிக்க, வீடியோ லைப்ரரி உட் கார்ந்து கொண்டது. ஆயினும், உலக மக்கள் என்ன தொழில் செய்கிறாய் என்று கேட்டால் ஏதேனும் ஒன்று சொல்ல வேண்டுமே...அதற்காக சுதாகர், அந்த லைப்ர ரியை மூடாமல் வைத்திருந்தான். அடுத்தபடி ஏதேனும்

செய்ய வேண்டும் என்கிற நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டான்.

டி.வி. நிகழ்ச்சி தயாரிப்பு ஒரு நல்ல வியாபாரம் என்று வியாபாரிகளுக்கு நடுவே பேச ஆரம்பித்த காலம் அது. இவரிடமிருந்து கேமிரா வாங்கி, அவரிடமிருந்து கதை வாங்கி, இவரிடமிருந்து நடிப்பு வாங்கி, அவரிடமிருந்து டைரக்ஷன் வாங்கி, எல்லாவற்றையும் கொண்டு போய் ஒட்டு மொத்தமாய் விற்றால், ஒரு எபிசோடிற்கு இருபத்தி ஐயாயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும் என்று உரக்க பலர் சொல்ல பலபேர் அதில் குதித்தார்கள்.

வேலையில்லாத, சினிமா ஆசையுள்ள பல இளைஞர்கள், டி.வி.தான் முக்கியம் என்று ஆர்ப்பரித்து இறங்கினார்கள்.

மிகச்சிறிய வாசலுள்ள தனியார் சேனல்களின் கதவைத் தட்டி, உள்ளுக்குள் புகுந்து, எப்படியாவது நிகழ்ச்சியைத் தயாரித்துத் தந்துவிட வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்.

போட்டி பலமாகவே லாபம் வீழ்ச்சியடைந்தது. லாபமே வேண்டாம். நஷ்டமாக இருந்தாலும் நான் தயாரித்துத் தருகிறேன் என்று காசுள்ள சிலர், மாரைத் தட்டிக்கொண்டு கிளம்ப, லாபம் பார்க்க வேண்டும்என்று ஆசைப்பட்ட பலபேர் ஒதுங்கும் படியாயிற்று. ஆனாலும் இதில் சில விஷயங்கள் தந்திரமாகச் செய்தால் போதும். நல்ல உச்சிக்கு வரலாம் என்பது சிலருக்குத் தெரிந்திருந்தது.

எங்கேனும் கலைநிகழ்ச்சிகள் நடத்த, அதற்கு ஏதேனும் ஒருவகையில் நன்கொடை கொடுத்துவிட்டு, போஸ்டர் அன்பளிப்பு செய்துவிட்டு, மேடை அமைப்பு அலங்காரங்கள் தந்துவிட்டு, அல்லது அரங்கத்தின் வாடகையை கட்டிவிட்டு, அவர்கள் அந்த நிகழ்ச்சி முழுதும்



படமெடுத்துக் கொண்டார்கள். அதை தனியார் தொலைகாட்சிகளில் பத்துவாரங்களுக்கும் பனிரெண்டு வாரங்களுக்கும் பிரித்து, சில பேட்டிகளோடு ஒளிபரப்பினார்கள் குறிப்பாக காசே கேட்காத கல்லூரி நிகழ்ச்சிகள், தனியார் நாடகங்களை அவர்கள் அணுகினார்கள். தன்னை வீடியோ எடுக்க முயற்சிக்கிறார்கள் என்கிற விஷயமே மாணவர்களுக்கு சந்தோஷமானதாகப் போக, அதை அள்ளிக் கொண்டு வந்து, எடுத்த நல்ல விஷயங்களை பிரித்துப்போட்டு, பல வாரங்களுக்கு நிகழ்ச்சியாக தயாரித்துக் கொடுத்தார்கள். டேப் செலவு தவிர, வேறு செலவு இல்லாததால், அதில் கிட்டத்தட்ட ஐம்பது சதவிகிதம் லாபம் இருந்தது.

சுதாகருடைய இந்த கல்லூரி நிகழ்ச்சி, நாலு வாரத்தில் இரண்டு லட்சத்தை, டக்கென்று அவனுக்கு லாபமாகக் காட்டியது. இன்னும் நிதானம் இருந்தால், இன்னும் ஒரு லட்ச ரூபாய்கூட சம்பாதித்திருக்கமுடியும் வந்தவரையில் போதும் என்று விட்டதால், இரண்டு லட்சம் லாபம் கிடைத்திருக்கிறது.

அடுத்தபடியாய், இதைவிட பெரிய புராஜக்ட் என்று ஆரம்பித்தால், இன்னும் நன்றாக இருக்கும் என்று தெரிந்தது.

தமிழ் மக்களின் இசைஞானம் சினிமாவைத் தாண்டி நெல்முனையளவும் நகர்ந்து விடவில்லை மிகமிக குறைந்த சதவிகிதத்தினருக்கே, கர்நாடக சங்கீதத்தின் தாக்கம் இருந்தது. அதிலும் குறைந்த சதவிகிதத்தினருக்கே கர்நாடக சங்கீதம் பாடத்தெரிந்தது. அதிலும் குறைந்த சதவிகிதத்தினருக்கே கர்நாடக சங்கீதத்தின் நுணுக்கங்கள் தெரிந்தன. ஒட்டுமொத்தமாய் கிராமிய பாடல்களைவிட கர்நாடக சங்கீதத்தைவிட, ஆங்கிலப் பாடல்களை விட, ஹிந்திப்பாடல்களைவிட, தமிழ்த் திரைப்பாடல்கள்தான்

அற்புதமான ஒரு கலைவடிவமாக மக்களுக்கு நடுவே விளங்கிவந்தது.

தமிழ் சினிமாப்பாடல்களை யார் பாடுகிறார்களோ, அவர்கள் சிறந்த பாடகர்கள் என்றும், தமிழ் சினிமா பாடல்களை யார் எழுதுகிறார்களோ அவர்களே மிகச் சிறந்த கவிஞர்கள் என்றும் ஆணித்தரமாக நம்பினர்.

தமிழ் சினிமாவும் பாடுபவர்களையும், பாடல் எழுதுபவர்களையும் பல்வேறு விதமாக பட்டை தீட்டி அவர்களிடமிருந்து நல்ல சரக்கை வாங்கிக் கொண்டது. நயமான சரக்காக அதை திரைப்படத்தில் தூக்கிக் கொடுத்தது. அமோகமாக அது விற்பனையாயிற்று. மக்கள் அள்ளிச் சென்றார்கள்.

டேப்ரிக்கார்டர் என்பது எல்லார் வீடுகளிலும் ஒன்றுக்கு மேற்பட்டு, புழங்கும் சாதனமாக இருக்க, கேசட் விற்பனை உச்சகட்டத்தை எட்டியது. கேசட்டைத் தாண்டி வட்டவடிமான, லேஸர் தட்டும் வந்துவிட்டது.

டேப்ரிக்கார்டர் கையில் இருக்கின்ற சந்தோஷத்தில் பொதுமக்கள் அவரவருக்கு விருப்பமான பாடல்களை இடைவிடாது கேட்டுக்கொண்டே இருந்தார்கள். வெறும் திரைப்பாடல்கள் தாண்டி, தனிப்பாடல்களும் டேப்ரிக்கார்டர் என்கிற கருவியின் உதவியாலும் கேசட் என்கிற ஒலிநாடாவின் அற்புதத்தாலும், தமிழகம் முழுவதும் பரவத் துவங்கின.

சுமாரான பாடகர்களெல்லாம் மிகச்சிறப்பான இடத்தை விரைவாக அடைந்தார்கள்.

ஒரு கீபோர்டு விலைக்கு வருகிறது என்கிற விளம்பரம் பார்த்துவிட்டு, சுதாகரும் அவன் தம்பி சுகுமாரனும் வாங்கப் போனார்கள். கீபோர்டு வாங்கியவர் மறுபடியும் வெளிநாட்டிற்குப் போவதால், அவருக்கு உதவி செய்வதாய் சொல்லி விட்டு, சுதாகரன் டிக்கெட்டிற்கும்



விசாவிற்கும் அலைந்தான் விசாவும் டிக்கெட்டும் வாங்கிக் கொடுத்தான். வேறு யாரை, எங்கே அனுப்ப வேண்டும் என்று பவ்யமாகக் கேட்டான். அந்த மனிதர் குளிர்ந்து போய், அடி மாட்டு விலைக்கு அவனுக்கு கீ போர்டைக் கொடுத்தார்.

கீ போர்டு வாங்கி ஆறு வருஷமாகி இருந்தது ஆனால் பதினேழு முறைதான் வாசித்திருந்தார்கள். வெறும் தூக படிந்த கீ போர்டை முற்றிலும் கழற்றி, சுத்தம் செய்து மறுபடி மாட்டி, கை வைக்க, விதம் விதமான ஒலிகளை சிங்காரமாய் கீ போர்டு எழுப்பியது. வாசிக்கத் தெரிந்தவனைக் கொண்டு வந்து வாசிக்க, கீபோர்டு கொஞ்சியது. அற்புதமான ஒரு இசைக்கருவி என்பது புரிந்துபோயிற்று.

கீபோர்டு வந்த ஒரே காரணத்திற்காக சுதாகர் மியூஸிக் ட்ரூப் ஆரம்பித்தால் என்ன என்று யோசித்தான். டிரம்மர்களிடம் போய் பேசினான் புல்லாங்குழல் வாசிக்கின்ற பையனை விலை கேட்டான். தாளவாத்தியக் காரனை நண்பனாக்கிக் கொண்டான். மைக், ஆம்ப்ளிஃபயர், வைத்து செட் செய்பவனை அழைத்து, எல்ல விலையாகும் மொத்தமும் என்று விசாரித்தான்.

ஒரு லட்சரூபாய் தடக்கென்று மைக்கிற்கு இறக்க, மியூஸிக் ட்ரூப் மிக எளிதில் சேர்ந்துவிட்டது பாடுவதற்கு ஒரு கம்பீரமான குரலுடைய பையன் இருந்தான். அந்தப் பையன் பரம ஏழை. ஆனால், பாட்டு பிசிறில்லாமல் அவனிடமிருந்து பொங்கியது. அவனுக்கு சட்டைத் துணியும் செருப்பும் வாங்கிக் கொடுத்து, தன்னுடைய குழுவில் சேர்த்துக் கொண்டான்.

பெண் குரல் வேண்டும் என்ற போது அவன் கண்களில், செல்வராணி சிக்கினாள்.

அந்த ஐ.ஐ.டி. மாணவன் விடியோ எடுக்க வேண்டும் என்று வந்த போது, அவனிடம் அதிகம் பேரம் பேசாது

அவன் விருப்பத்திற்கேற்றபடி ஒத்துக் கொண்டான். பல கல்லூரி மாணவர்கள் வருவார்கள் என்று நம்பி, மூன்று காமிராக்களை ஏற்பாடு செய்திருந்தான்.

அவன் நினைத்ததை விட, அதிகமான கல்லூரி மாணவிகள் வந்திருந்தார்கள். சினிமா நடிகைகளை விட மிக அழகாக இருந்தார்கள். அற்புதமாய் உடையணிந்திருந்தார்கள். விதம்விதமாய் சிரித்தார்கள் கூச்சலிட்டார்கள். நடனமாடினார்கள். அதில், பாட்டுப்பாடிய செல்வராணியை அவன் குறி வைத்தான் என்ன அற்புதமான குரல் என்று திகைத்தான்.

சரி. ஆயிரம் பெண்களில் இரண்டு பெண்கள் அற்புதமாக இருப்பதில்லையா அவ்விதம்தான் என்று செல்வராணியை மறக்க முயன்றபோது, அவனுடைய நிகழ்ச்சி ஒளிபரப்பாகி, செல்வராணி யார் என்று பலபேர் கேட்க, அவனுக்கும் அப்போது தான் செல்வராணியின் மேன்மை புரிந்தது.

இரண்டாவது வாரம் காத்திருக்க, இன்னும் அதிகமான கடிதங்கள் அவனுக்கு வந்தன. மூன்றாவது வாரம் செல்வராணியை தேடிக் கொண்டு, நேரே, நாலைந்து இளைஞர்கள வந்துவிட்டார்கள்.

அவன் செல்வராணியை தேடிப் போனான். அந்த வீட்டிற்குள் நுழைந்ததும், இங்கே உள்ளே புகுந்து, செல்வராணியை தன்னுடையவளாக்கிக் கொண்டால், எவ்வளவு நன்றாக இருக்கும் என்று அவனுக்குத் தோன்றியது. தோன்றியதை தன் தம்பியிடம் வெளிப்படுத்தினான். தம்பி உற்சாகமூட்டினான்.

செல்வராணியை எப்படி தன் வீட்டிற்கு அழைத்துப் போவது என்று அவன் தீவிரமாய் சிந்திக்கத் துவங்கினான்.



சுதாகரன் தன்னுடைய எண்ணத்தை தொழில் பார்ட்னரான வடிவேலுவிடம் தெரிவித்தான்.

''செல்வராணிய நான் கல்யாணம் பண்ணிகிட்டா, எப்படி இருக்கும் வடிவேலு.''

வடிவேலுவிற்கு லேசான திகைப்பு ஏற்பட்டது. ''நானும் அதான் நினைச்சேன் சுதாகர்.''

''என்ன வடிவேலு. உனக்குத்தான் கல்யாணமாயிடுச்சே நீ எதுக்கு அதை நினைக்கறே.''

''ஐயோ...நான் என்னைப் பத்தி சொல்லலை. செல்வராணியைப் பாத்தவுடனே, எனக்கு அப்படியொரு எண்ணம் வந்தது. இந்தப் பொண்ணுக்கு நல்லதா ஒரு புருஷன் கிடைக்கக் கூடாதா. கெட்டிக்காரனா ஒரு புருஷன் கிடைச்சா, இதை எங்கியோ கொண்டு போய் உக்கார வைச்சுடுவானே, அப்படின்னு நினைச்சேன். கெட்டிக்காரப் புருஷன்னு மனசு நினைக்கற போதே, உன்னைத்தான் நினைச்சது. நீ அதுக்குப் புருஷனானா, உனக்கு நல்லதா கெட்டதா...எனக்குத் தெரியாது ஆனா, அவளுக்கு ரொம்ப நல்லது. அவளை நல்ல உயரத்துல, ரொம்ப அழகா கொண்டு போய் வைச்சிருவே.'' வடிவேலு உற்சாக மூட்டினான்.

''ஒரு வேளை...அவங்க வீட்ல கல்யாணத்துக்கு ஒத்துக்கலேன்னா...''

''மெல்ல, கவர் பண்ணி, உன் பக்கமா இழுத்து, அப்புறம் தூக்கியாறணும். ஆனா, சுதாகர்...''

''சொல்லு வடிவேலு.''

''அந்தப் பொண்ணு, காதலிக்கிற பொண்ணா எனக்குத் தெரியலை. தடுக்குன்னு காதல் கீதல்னு அந்தப் பொண்ணாண்ட, தயவு செய்து பேசாதே.''

''அப்படியா சொல்ற வடிவேலு.''

''நிச்சயமா...காதல்னு சொன்னா, அது உன்னை கட் பண்ணித் தூக்கிப் போட்டுரும். வேற யாராவது அப்படி பேசவிட்டு வேணாலும் வேடிக்கைபாரு. உதாரணத்துக்கு நம்மபாடறவன் சங்கர். ரொம்ப ஜொள்ளு விட்டுட்டான். அவனைப்போய், உசுப்பேத்தி, அவனை லவ் பண்றேன்னு சொல்லச் சொல்லு. ரெண்டாம் நாள் அவனைத் தூக்கிப் போட்டு அவன் பக்கமே திரும்பமாட்டா. சன்னுன்னு ஏறிடுவா. அதே நேரத்துல, உங்க அப்பா அம்மாகிட்ட, நான் பொண்ணு கேக்க வரட்டுமான்னு கேளு, ரொம்ப வெட்கத்தோட, சரிங்க அப்படின்னு சொல்லுவா. சந்தோஷமா இரு.

சில பொண்ணுங்களை நீங்க, லவ்வுங்கற அம்பை வைச்சு கொல்லவே முடியாது. கல்யாணங்கற கத்தியால தான் வெட்டலாம்.''

''அடேங்கப்பா... எவ்ளோ தெளிவா பேசற வடிவேலு.''

''அனுபவம்தான் சுதாகர் நான் சொன்ன மாதிரி, ஒரு டெஸ்ட் ஒண்ணு வைச்சுப்பாரு.''

''சரி...டெஸ்ட்டுக்கு அனுப்பறோம். அந்தப் பையன் பாஸாயிட்டானாக்க.''

''ம்ஹூம்...அடிப்பட்டுக் கிழியப் போறான்றது நிஜம். அப்படிப் பாஸாயிட்டான்னாக்க, உள்ளுக்குள்ள புகுந்து அவனைப் ஃபெயிலாக்கறதுக்கு உனக்கும் தெரியும். எனக்கும் தெரியும்.''

''சரி...இப்படி கேக்கறேன் வடிவேலு. செல்வராணிய நான் கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன லாபம்,'

''சுதாகர்...இன்னி தேதிக்கு பாட்டுப்பாடற பொம் பளைங்க ரொம்பக் குறைவு. வெளிலேருந்துதான் வர்றாங்க. மலையாளிலூம், தெலுங்கு பொம்பளைங் களும்தான், சினிமா இண்டஸ்ரிக்கு பாட்டுப் பாட றதுக்கு வர்றாங்க. தமிழ்நாட்லேருந்து நல்லபடியா, குரல்வளம் மிக்க, சங்கீதம் தெரிஞ்ச ஒரு பொண்ணு கிடையாது. அதனால, செல்வராணிங்கற தமிழ்பொண்ணு, பாட ஆரம்பிச்சான்னா, ஜனங்களோட சப்போர்ட் அவகிட்ட வந்துரும்.



அவளை சினிமாவுக்குள்ள சேர்த்துட்டா...சினிமால ரெண்டுபாட்டு கிளிச்சாயிடுச்சு...அப்படின்னா, அப்புறம் ஒரு இருபது பாட்டு கியாரண்டி. அந்த இருபது பாட்டுல, ஒரு ஏழு பாட்டு கிளிக்காயிடுச்சுன்னாக்கா, அடுத்தது, ஒரு ஆயிரம் பாட்டு அவ பாடிடுவா

ஒரு பாட்டுக்கு பதினைஞ்சாயிரம் ருபாய்னு வை... எங்க போச்சு ஒரு நாளைக்கு ஒரு பாட்டு பாடறதாகவே வை, பத்துநாள் அல்லது பதினைஞ்சுநாள் பாடறதாகவே வை...எங்க போச்சு. ஒரே ஒரு மொழிப்பாட்டா இருக்கு. தெலுங்கு இருக்கு.கன்னடம் இருக்கு.மலையாளம் இருக்கு. துளு இருக்கு. ஹிந்தி இருக்கு. ஒரிஸ்ஸா இருக்கு. ஏகப் பட்ட மொழி இருக்கே. ஒருமொழிக்கு பதினைஞ்சாயிரம். ஒரு நாளைக்கு பதினைஞ்சாயிரம். காலைல ஒரு பதினைஞ்சாயிரம். சாயந்திரம் ஒரு பதினைஞ்சாயிரம்னா என்ன ஆச்சு. எங்கியோ போயிடும்.

அதனால. கொண்டுபோய், விட்டு, கொண்டு போய் கூட்டிகினு வந்து, வர்றவனுக்கு தேதி கொடுத்து, அப்படி ஒரு தெளிவான ஆளா, நீ அமைதியா உக்கார்ந்துடலாம். வீடியோ பார்லராவது...டி.வி. ரிக்கார்டிங்காவது... ஒண்ணும் வேணாம் செல்வராணி நடிகை இல்ல...பாடகி. பெரிய மரியாதை வந்துடுது. நடிகையா இருந்தா உலக்கு பலசங்கடங்கள் வர்றவன் முறைச்சுப்பார்ப்பான். இங்க பாட்டுப்பாடற இடத்துல, எல்லாருமே ரொம்ப

மரியாதையானவங்க. சிஸ்டர், சிஸ்டர்னு பழகுவாங்க. நம்மளும் போர்த்தினபடியே நடந்துபோய், கூட ஆம்படையான் வர்றான்னா, இன்னும் அமைதியா, மரியாதையா இருப்பானுங்க.

ஆக, பாட்டுப் பாடறது ரொம்ப நல்லது. இதைத் தவிர, பாட்டுப் பாடறவங்களுக்கு இன்னிக்கி இருக்கற மவுசு, சொல்லத்தரமில்லாதது. ஒரு சினிமா நடிகையை விட, மிகப்பெரிய மரியாதை அவங்களுக்கு கிடைக்குது. சினிமா நடிகைய வீட்டுக்குக் கூப்பிடுவாங்களா. பாட்டுப் பாடற பொம்பளைங்கள வீட்டுக்குக் கூப்பிடுவாங்க. சினிமா நடிகைய வீட்டு விழாவுக்கு வந்து விளக்கேத்த சொல்வாங்களா. தெரியல. ஆனா, பாட்டுப் பாடறவங்களை, முதல்ல விளக்கேத்தச் சொல்லி, ஒரு பாட்டு பாடிட்டுப் போகச் சொல்வாங்க.

அதனால பாட்டுப் பாடற பொண்ணு, உனக்குப் பொண்டாட்டியா வந்து, அந்தப் பாட்டும் கிளிக்கா யிடுச்சின்னா, நீ குபேரன்தான். எனக்கு சந்தேகமே யில்லை.

செல்வராணியை பிடிக்கறதா இருந்தா, இந்த எண்ணத்தோட பிடிச்சுக்கோ.''

''சினிமால கிளிக் ஆகறதுக்கு லக் வேணும் வடிவேலு.''

''வாஸ்தவம். இல்லேன்னு சொல்லலை. அப்படி சினிமால கிளிக் ஆகலேன்னு வைச்சுக்கோ. உங்ககிட்ட மியூஸிக் ட்ரூப் இருக்கவே இருக்கு. எல்லாம் போக. ஒரு அஞ்சாயிரம் மிஞ்சும். ஒருநாளைக்கு அஞ்சாயிரம் ரூபா. ஒரு மாசத்துக்கு பத்து சச்சேரி. போறுமே... அம்பதாயிரம் ரூபா ஜம்முன்னு நிக்குதே.

அதனால, பாட்டு பாடற பொண்ணு. கூட இருக்கறது. உனக்கு குறைவேயில்லை. செல்வராணி ஜாக்கிர



தையா பிடிக்க வேண்டிய புறா. கவனமா கையாள வேண்டிய பறவை அவங்க வீடு. அவளைவிட, ரொம்ப மென்மையான வீடு முரட்டுத்தனம் இல்லாத, அதட்டிப் பேசாத, ரொம்ப ரொம்ப ஜெண்டில்மேனா, நீ பழகக் கத்துக்கணும். நடுவுல மயிறு மட்டைன்னு பேசுவியே... அதை சுத்தமா நிறுத்திடணும,'' வடிவேலு சிரித்தபடி சொல்ல, ஆமாம் என்று மிகத்தீவிரமாக, சுதாகர் தலையசைத்தான்.

சுகுமாரன், அவன் தீவிரத்தை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

இருவரும் தனித்துவிட்டபோது, சுகுமாரன் மெல்ல, ''அண்ணா...அந்த சங்கரை லவ் பண்றதுக்கெல்லாம் அனுப்பிடாதீங்க, அப்படி லவ் பண்ணி தோத்துப் போயிட்டான்னு வைச்சுக்கங்க. இந்த சங்கர் ரெண்டாங் கெட்டான். தற்கொலை பண்ணிக்குவான். இன்னொரு மேல் வாய்ஸ் கிடைக்கறது கஷ்டம். அதனால, நீங்களாவே, ரொம்ப ஜாக்கிரதையா, இந்த விஷயத்துல இறங்குங்க.

வடிவேலு, உங்களை குழப்பறதுக்காக சங்கரை அனுப்பச்சொல்றாருன்னு எனக்குத் தோணுது.

''ஆமாண்டா நீ சொல்றதும் கரெக்ட். சங்கரை அனுப்பிச்சு அவங்க ரெண்டுபேருக்கும் கிளிக்காயிப் போச்சுன்னு வைக்சுக்கோ...அதை அறுக்கறது ரொம்பக் கஷ்டம் தேவையில்லாத வேலை. நானே எப்படியாவது உள்ளுக்குள்ள பூர்றத்துக்கு முயற்சிக்கணும்.''

''எனக்கு ஒன்னு தோணுதுண்ணேன்.''

''என்ன.''

''உனக்கு முன்னாடி, சங்கர் இந்த விஷயத்தை ஆரம்பிச்சுட்டானுதான் தோணுது.''

''எப்படிச் சொல்றே''

'நேத்தும் வரலை, இன்னிக்கும் வரலை. எங்கடா, காணோம் அப்படின்னு கேட்டபோது ட்ரூப்ல இருக்கறவங்க சொன்னாங்க. அவன் செல்வராணிய தேடிகினு போறான். ரெண்டு பேரும் அவங்க வீட்ல உட்கார்ந்து பாட்டு பாடிகிட்டிருக்காங்கன்னு.''

''ஐயய்யோ...ஆபத்தாச்சே. ஏதாவது செய்யணுமே'' சுதாகர் வேகமாக சிந்தித்தான்.

என்ன செய்தால் செல்வராணியை தூக்கிக்கொண்டு வரலாம் என்று பல்வேறு விதங்களாக யோசனை செய்தான். திடீரென்று ஒரு எண்ணம் மின்னியது.

மோட்டார் சைக்கிள் எடுத்துக் கொண்டு, அவனுடைய ஸ்நேகிதன் வீட்டிற்குப்போனான். அவன் ஸ்நேகிதன் ஆருடம் சொல்பவன். ஜோஸ்யக்காரன் அவனைப் போலவே இளைஞன்.

''கணபதி எனக்காக நீயொரு ஜோஸ்யம் சொல்லணுமே.''

''என்ன திடீர்னு உள்ள வந்து ஜோஸ்யம் சொல்லணுங்கறே.''

''நான் சொல்றபடி சொல்லணுமே.''

''நீ சொல்றபடி சொன்னா அதுஜோஸ்யம் இல்லயே.

''அது என்னவா இருக்கும்னு எனக்குத் தெரியாது. நான் சொல்றபடி நீ ஜோஸ்யமா சொன்னா உனக்கு ஆயிரம் ரூபா தர்றேன்,

''என்ன தகிடுதத்தம் வேலை.''

''ஒரு வேலையும் இல்ல. ஒரு பொண்ணை நான் உசுருக்கு உசுரா நேசிக்கிறேன். அந்தப் பொண்ணு



என்னை நேசிக்குது. ஆனா வெளிய சொல்ல பயப்படுது. அவங்க அப்பா அம்மா கிட்டபோய் இவ நல்ல படியா பாட்டு பாடுவா. புகழ் உச்சிக்குப் போவா உலகம் முழுக்க பாட்டுக்காக சுத்துவா. பல்வேறு நாடு நகரங்கள் போவா இவனுக்கு 'எஸ்' ஸொங்கற பேர் இருக்கறவன்தான் புருஷனா வருவான்.

இவனுக்கு காதல் கல்யாணமும் இல்ல. பெத்தவங்க பாத்து வைச்சதும் இல்ல, பெத்தவங்க பாத்து வைச்ச ஒரு பையனை, இவ லவ் பண்ணி அப்பறம்தான் கல்யாணம் பண்ணிக்குவா அப்படீன்றா மாதிரி தனுக்காப் பேசணும்.

சுதாகர் ஏற்பாடு பண்ணிய ஜோஸியன் கணபதி, அந்த வீட்டிற்கு எதிரே, மோட்டார் சைக்கிள் நின்று விட்டது என்று நிறுத்தி ரிப்பேர் செய்தான். வீட்டு வாசலில் நிழலுக்காக ஒதுங்கினான். குடிக்க தண்ணீர் கேட்டான்.

ஞாயிற்றுக் கிழமை செல்வராணியின் தகப்பனார் இருந்தார்.

''என்னாங்க ஆச்சு.'' என்று விசாரித்து விட்டு குடிக்க தண்ணீர் கொடுத்தார்.

''கொஞ்சம் வண்டியை பாத்துக்கறீங்களா. போய் மெக்கானிக் கூட்டிட்டு வந்துடுறேன்.'' வண்டியை ஓரம் வைத்துவிட்டுப் போனான். ஒரு பையனைக் கூட்டி வந்தான்.

பையன் வெறுமே உட்கார்ந்து நட்டு போல்ட் கழற்றி கொண்டிருக்க, அவனுக்கு நாற்காலி போட்டார்கள்.

அவன் தன்னுடைய விஸிட்டிங்கார்டு கொடுத்தான்.

''ஜோஸியரா... அப்படியா... தெரியாத போச்சே...''

'ஏங்க, என்ன சமாச்சாரம்.''

''இவ்வளோ நேரம் நின்னுருந்தீங்க. எதுனா கேட்டிருப்போமே.''

இப்பதான் கேளுங்க, சொல்றேன். கூப்பிட்டு உக்கார வைச்சு தண்ணி கொடுத்திருக்கீங்க. உங்களுக்கு சொல்லாத யாருக்கு சொல்லப் போறேன்.

''ஏய்...காபி எடுத்தாடி.'' உள்ளே செல்வராணியின் அப்பா குரல் கொடுத்தார்.

காபி வருவதற்குள், செல்வராணியின் ஜாதகம் தரப்பட்டது.

செல்வராணியின் ஜாதகத்தை அந்த கணபதி விரைவாக படித்துப்பார்த்தான். சுதாகர் சொன்னபடி பேசத் துவங்கினான்.

''பாப்பா, பாட்டு பாடுங்களா'' கணபதி மிகச் சாதாரணமாக கேட்டார்.

''ரொம்ப பாப்புலர் பாடகிங்க.''

''அப்படியா...நான் பாட்டு ஜாஸ்தி கேக்கறதில்ல.''

''டி வி.ல பாத்துருக்கலாமே.''

''டி.வி. ஜாஸ்தி பாக்கறதில்ல.''

பத்திரிகையிலகூட முகம் வந்துருக்குங்க.

''நான் பத்திரிகையும் ஜாஸ்தி படிக்கறதில்லம்மா நான் உண்டு என் தொழில் உண்டுன்னு இருக்கேன். அதுக்கே நேரம் சரியா இருக்கு ஆனா பாப்பாவுக்கு நல்ல எதிர்காலம் இருக்கு உலகம் மொத்தமும் பாப்பா குரல் போகப்போவுது. பெரிய பிரமாதமான ஒரு புகழ் வரப் போகுது.

பாட்டுக்கு எத்தினி விருது உண்டோ, உலகத்துல அத்தினி விருதும் பாப்பா வாங்கப் போகுது. பல



தேசங்கள் போகப் போறீங்கம்மா கடல் கடந்து பல தேசங்கள் விமானம் மூலமா போகப் போறீங்க.

இந்தப்பாப்பாவுக்கு சீக்கிரம் கல்யாணம் ஆயிடும் புருஷனால பிரகாசம் வரும்.'' கணபதி அளக்கத்துவங்கினான். மறக்காமல் புருஷனுடைய பெயர் 'எஸ்' என்று துவங்கும் என்று சொன்னான்.

அவர்கள்யார் யார் என்று அலட்டிக்கொண்டார்கள். வேகமாக கணபதி எதிரிலேயே யோசிக்கத் துவங்கினார்கள், சுதாகர் தவிர மற்ற நிறைய 'எஸ்'ஸில் ஆரம்பிக்கற பெயரைச் சொன்னார்கள்.

சகலத்தையும் செல்வராணி தனியே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள். ஒருஓரம்போய் வாக்மேனில் பாட்டு கேட்கத் துவங்கினாள்.

கணபதிக்கு அவளைப் பார்க்கும் போது, பாவமாக இருந்தது. அந்த ஜாதகத்தை வாங்கி பையில் வைத்துக் கொண்டு, வண்டி சரியாகிவிட்டது என்று சொல்லி, மோட்டார் சைக்கிளில் ஏறி வீட்டிற்கு வந்தான், ஜாதகம் பிரித்துப் பார்த்தான்.

அந்தஜாதகம் என்னவென்பது கணபதிக்குப்புரிந்தது.

ஜோஸியர் கணபதி, வீட்டிற்கு வந்த பத்தாவது நிமிடம், சுதாகர் பின்னால் வந்தான். என்ன நடந்தது என்று விசாரித்தான். அவன் சொன்னதைக் கேட்டு சந்தோஷமடைந்தான். அவனுக்கு ஆயிரம் ரூபாய் சட்டென்று பையிலிருந்து எண்ணிக் கொடுத்தான்.

''மறுபடியும் உதவி தேவைப்படும். அப்போ கூப்பிடறேன்'' என்று சொன்னான். விருட்டென்று வெளியே போனான்.

செல்வராணி மாதிரி அற்புதமான ஜாதகமுடைய ஒரு பெண் வாழ்க்கையில் இவன் ஏன் குறுக்கிடுகிறான்

என்று கணபதிக்கு லேசாக கோபம் வந்தது. செல்வராணியைக் காப்பாற்றி விடலாமா என்கிற எண்ணம் வந்தது.

ஆனால், உடனடியாக செய்யாது சற்று தாமதித்து செய்யவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். மறுபடியும் செல்வராணியின் ஜாதகத்தை பிரித்துப் பார்த்தான்.

செல்வராணியின் ஜாதகத்தில் களத்திரகாரன் சுத்தமாக இருந்தான். மென்மையானவனும். குணமானவனும் தெளிவானவனுமான ஒருவன் அவளுக்கு புருஷனாக வருவான் என்று ஜாதகம் சொல்லியது. இந்த லட்சணங்கள் சுதாகரிடம் இல்லை. எனவே, சுதாகர் புருஷனாக வரமுடியாது என்று கணபதி கணக்குப்போட்டான்.

என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

சுதாகரனின் தொழில் பங்குதாரர் வடிவேலுவும், சுதாகரனின் தம்பி சுகுமாரனும் ஒரு தொலைக்காட்சி நிலையத்தின் வாசலில், காலையிலிருந்து தவமிருந்தார்கள். எதிரும் புதிரும் வெகு நேரமாக உட்கார்ந்திருந்தார்கள். ஒரு முக்கியமான நேரத்தை, அந்த தொலைக்காட்சி நிலையத்திலிருந்து விலைக்கு வாங்குவதற்காக, காத்திருந்தார்கள்.

சனிக்கிழமை மாலை ஏழரை மணிக்கு இடம் காலியாக இருந்தது. அந்த நேரத்தை விலைக்கு வாங்கினால், தனியாக ஒரு பாட்டு நிகழ்ச்சியை போட்டுவிட முடியும். அந்த பாட்டு நிகழ்ச்சி ஆரம்பத்தில் செல்வராணி இருந்தால் மிக நன்றாக இருக்கும். செல்வராணி கிடைத்திடுவாள் என்கிற போது, அந்த தொலைக்காட்சி நேரம், மிகச்சரியாக அமைந்துவிடும்.



தொலைக்காட்சி நிலையத்தில் அவர்கள் பொறுமையை சோதிக்கின்ற வண்ணம், பலமுறை இழுக்கடித்தார்கள். இன்று நிச்சயம் செய்து விடுகிறேன் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். இடதோ வலதோ தீர்மானமாகிவிடும் என்று அறிவித்திருந்தார்கள். எனவே, மிக ஆவலோடு சுகுமாரனும் வடிவேலுவும் காத்திருந்தார்கள்.

ஒன்னரை மணிநேரத்திற்கு மேல் காத்திருந்ததால், வெளியேபோக பயமாகவும் இருந்ததால், உள்ளுக்குள்ளே இருந்த நேரத்தை நகர்த்த வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டது. அதனால், ஒன்னரை மணிநேர மௌனத்தை உடைத்து பேசத்துவங்கினார்கள்.

''என்னா சுகுமாரன். அண்ணன் ஏதோ பினான் பண்றாப்போல இருக்கு.''

''தெரியலியே...என்ன சொல்றீங்க.''

''செல்வராணிய நாம பாடறத்துக்குன்னுதான் புக் பண்ணினோம்.''

''ஆமாம்.''

''அதுக்குதான் கூப்பிடப்போனோம்.''

''ஆமாம்.'.

''செல்வராணிய கல்யாணம் பண்ணிக்கணும்னு, சுதாகர் நினைக்கறான் போல இருக்கு.''

''எனக்குத் தெரியலியே.''

''உங்கிட்ட சொல்லலியா.''

''இல்ல...எங்கிட்ட எல்லாம் சொல்றதில்ல.''

''ஆனா, சொல்லணும். இது முக்கியமான விஷயம் இல்லியா. இதை உங்கிட்ட அவன் சொல்ல வேணாமா.

எங்கிட்ட சொன்னான், ஆனா, தீர்மானம் பண்ணிட்டா மாதிரி சொன்னான். அதனால, வேணும் வேணுங்கறதை என்னால சொல்ல முடியலை. ஒரு பொண்ணை நான் தீர்மானம்பண்ணிட்டேன் கல்யாணம் பண்றதுக்கு. அப்படின்னுட்டாக்க, வேணாம் மாட்டேன்னு மத்தவங்க சொல்றது கஷ்டம்.

அதே நேரம், இது நம்ம மூணுபேர் சம்பந்தப்பட்ட விஷயமா இருக்கறதுனால, ஒரு வார்த்தை சொல்லவும் அவசியமாயிடுது. செல்வராணிய கல்யாணம் பண்ணிக்காத, வெறும் பாடகியா நம்ம ட்ரூப்ல வைச்சிருந்தோம்னாக்க நமக்கு நல்லது இல்லியா.''

''எனக்குப் புரியல. நம்ம ட்ரூப்ல பாடகியா இருக்கறத்துக்கும், செல்வராணி கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்.''

''உனக்குத் தெரியல. இந்த மாதிரி நல்லா பாடற பொண்ணுங்களா இருந்தா, உள்ளுக்குள்ள புகுந்து குழப்பறத்துக்கு, லவ் பண்றத்துக்கு, கல்யாணம் பண்றத்துக்கு நிறைய பேர் அட்டெண்ட் பண்ணுவாங்க. அப்படி வேற எவனா கல்யாணம் பண்ணினா, அவனை வாங்க சார் போங்க சார் நில்லுங்க சார் உக்காருங்கசார் அப்படின்னு நாம கெஞ்ச வேண்டியிருக்கும். அதனால, சுதாகரனோ இந்தப் பொண்ணை கல்யாணம் பண்ணிகிட்டா என்னன்னு தீர்மானம் பண்ணிருப்பான் போல எனக்கு வேற ஒரு ஐடியா வருது.''

''என்ன. நீங்க கல்யாணம் பண்ணிக்கலாம்னு நினைச்சீங்களா.''

''எனக்கு கல்யாணமாயிடுச்சு சுகுமாரா. இல்லேன்னா, செல்வராணிய இந்நேரம் கல்யாணம் முடிச்சிருப்பேன்.

சுதாகரன் கொஞ்சம் முரடு. கொஞ்சம் அதிகப் பிரசங்கி. எதையும் வேகமா செய்துட்டு அவஸ்தைப் படறவன். செல்வராணி மாதிரி பொண்ணை கல்யாணம் பண்ணி, சுதாகரனால நிம்மதியா குடித்தனம் பண்ண முடியாது.''



''ஏன் என்னாகும்னு நினைக்கறீங்க.''

''செல்வராணியெல்லாம் யாருக்கும் அடங்காத பொண்ணுங்க, அவங்க பாட்டு பாடுவாங்க. நல்லா டிரஸ் பண்ணுவாங்க. ஒரு மூலைல உக்காந்து சிரிப்பாங்க. பேசுவாங்க. டி.விக்கு இன்டர்வியூ கொடுப்பாங்க. ஆனா குடித்தனத்துக்கு சரியா வரமாட்டாங்க. அவங்களை குடித்தனம் பண்ணச் சொல்லியும் நாம வற்புறுத்தக் கூடாது.

அவங்க பாடறத்துக்குன்னே பிறந்தவங்க அதனால, சுதாகரன் அவங்களை கல்யாணம் பண்ணிக்கறதை விட, நீ கல்யாணம் பண்ணிக்கறது நல்லதுன்னு தோணுது.''

''என்னங்க, திடீர்னு என்னைப் பிடிச்சிழுக்கறீங்க.''

''சுகுமாரன் நீ அமைதியானவன். தெளிவானவன். நிதானமானவன். யாராவது ஒருத்தர் காரியம் செய்யட்டும், நாமபின்னால துணையா நிப்போம் அப்படின்னுதான், இது வரைக்கும் சுதாகரனுக்கு நின்னுருக்கே. அதே விதமா நீ, அந்தப் பெண் செல்வராணிக்கு நின்னா, செல்வராணி உச்சிக்குப் போயிடுவா. இப்படி துணையா நின்னு பழக்கமான ஒரு ஆண்தான் செல்வராணி மாதிரி பெண்ணுக்குத் தேவை.''

''என்னால அதெல்லாம் முடியாது வடிவேலு எனக்கு லல்யாணம் பண்றதோ கல் பண்றதோ பயம்.''

சுதாகரனைத் தவிர நான் பழகற ஆள் நீ ஒருத்தன் தான். வேற யாரோடயும் நான் பழகறதுமில்ல பேசறதுமில்ல. சுதாகரன் என்னை அனுசரிச்சுப் போறா

மாதிரி, ஓரளவுக்கு நீ அனுசரிச்சுப் போறே யாராவது எதுனா சொல்லிட்டா எனக்குத் தாங்காது. ஒரு மாதிரி கலங்கிடுவேன் ரூமை தனியா தாள் போட்டுட்டு அழுவேன். என்னைப் போய், செல்வராணிய கல்யாணம் பண்ணிக்கணும்னா, நான் என்ன பண்ணுவேன். சுதாகரனே பண்ணிக்கட்டும்.''

''தப்பு ரொம்ப தப்பு. எத்தினி நாள் சுதாகரன் பின்னாடியே இருப்பே நீ தனியா நிக்கணும். உனக்கு தனியா நிக்க முடியும். இந்த மாதிரி பாப்புலரான பெண், நிறைய சம்பாதிக்கிற பெண், பாடி, பலபேருடைய நல்ல மரியாதையை வாங்கியிருக்கற பெண், உனக்கு துணையா கிடைச்சா, எவ்ளோ சந்தோஷம். காசுக்கு காசு, மரியாதைக்கு மரியாதை. அவ பின்னாடி போய் நின்னாப் போறும். நீ சம்பாதிக்க வேணாம். நீமுன்னயும் பின்னயும் அலைய வேணாம். நீ தூக்கி நிறுத்த வேணாம். கொடிய பறக்க விட வேணாம். ஓட வேணாம், ஆட வேணாம்.''

அவ காசுல நிம்மதியா சாப்பிட்டுகினு, நல்லா உடுத்திகினு, அவ பின்னாடி போய் மரியாதைக்கு நின்னோம்னாக்க, எவ்ளோ நல்லா இருக்கும். அவனுக்கும் நல்லது உனக்கும் நல்லது. அதனாலதான் சொல்றேன், நீ சம்பாதிக்க வேண்டிய இடம் செல்வராணி. செல்வ ராணிக்கு அதிகாரம் பண்ணாத ஒரு புருஷன் கிடைச்சா எவ்ளோ நல்லது. நீங்க ரெண்டு பேரும் நல்லா ஜோடியா இருப்பீங்கன்னு எனக்குத் தோணுது. யோசனை பண்ணு'' வடிவேலு சொன்னதும் சுகுமாரனுக்குள் ஒரு சின்ன நெருப்புப் பொறி விழுந்தது பற்றிக் கொண்டது.

நிறைய சம்பாதிக்கிற பெண், பாட்டுப் பாடி சம்பாதிக்கிற பெண் நடிகையில்லை ஆபீஸரில்லை வேறு விதமான முரட்டுத்தனங்கள் இல்லை பாட்டு என்பது ஒரு சுகமான விஷயம். பாடி சம்பாதிக்கிற பெண் மரியாதை



யான பெண். அவனுக்கு வெறுமே துணையாகப் போய் வந்தால் போதும்.

கார் ஓட்டிக் கொண்டு போய் கையில் பிளாக் எடுத்துக் கொண்டு போய் அவளிடம் கொடுத்தால் போதும் காசு வாங்கி கையெழுத்து போட்டுக் கொண்டு, வீட்டிற்கு வந்து பீரோவில் வைத்தால் போதும். மற்ற எல்லா விஷயங்களையும் அந்தவீடு பார்த்துக் கொள்ளும் இது சுகம்.

சுதாகரன் கூட அவ்வப்போது கடித்து கொள்கிறான் ''வெறும் எருமை மாடு மாதிரி நிக்கறியே. என்னான்னே யோசனை பண்ண மாட்டியா.'' என்று கத்துகிறான் வடிவேலு லேசாக கேலி செய்கிறான்.

இப்பொழுது இருக்கிற வாழ்க்கையை விட செல்வ ராணியை காதலித்தால் நன்றாக இருக்கும் என்றுதான் தோன்றுகிறது. செல்வராணி பாடுவதை பாராட்ட வேண்டுமா என்ற கேள்வி வந்தது. செல்வராணி பாடுவதை பாராட்டவும் முடியவில்லை. எதிர்க்கவும் முடியவில்லை. பாட்டு எப்படி இருந்தது என்று கேட்டால் நன்றாக இருந்தது என்று பொதுப்படையாக சொல்ல முடியுமே தவிர, பாட்டில் ஒரு நாளும் முழுமனதாய் ஈடுபடவே முடியவில்லை.

எத்தனையோ பேர் கரைந்து போய் கை தட்டுகிறார்கள். கண்ணில் ஜலம் விடுகிறார்கள். எந்தப் பாட்டும், எந்தச் சொற்களும், எந்தக் கவிதைகளும் எந்த ஒலியமும் அவன் மனதுக்குள் தைக்கவேயில்லை அவன் உடுத்திக் கொண்டு, தன்னை கண்ணாடியில் பார்க்கிற போது மட்டும் தான் சற்று மெய் மறக்கிறான் மற்ற நேரங்களில் வெறுமே ஒரு கதவு போல் நிற்கிறான்.

அவன் வேகமாக யோசித்தான்.

செல்வராணியை காதலித்தால் நல்லது என்று அவனுக்கும் தோன்றியது.

# 4

''வாங்க வாங்க வாங்க... வாங்க வாங்க வாங்க.'' செல்வராணி துள்ளி குதித்து எழுந்தாள்.

''அப்பா... சங்கர் வந்திருக்காரு'' என்று உள்ளே குரல் கொடுத்தாள்.

உள்ளே அப்பா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். அம்மா அவருக்கருகே ஒருக்களித்து படுத்திருந்தாள்.

அவர்கள் இருவரும் படுத்திருப்பதை, இரண்டு மூன்று முறை எட்டிப் பார்த்து விட்டு, செல்வராணி ஹாலுக்கு வந்திருந்தாள். அப்படி வெறுமே படுத்திருப்பதே, அவளுக்குள் கிளர்ச்சியூட்டியது.

அம்மாவின் முதுகும், அப்பாவின் அகலமான உடம்பும் அருகருகே இருப்பதைப் பார்க்கும்போது, இவர்கள் எப்படியெல்லாம் அணைத்து மகிழ்ந்திருப்பார்கள் என்று கற்பனையோடு மேலும் பொங்கிற்று.

அவள் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று கதவை, மெல்ல சாத்திவிட்டு, ஹாலில் உட்கார்ந்து பாட்டு கேட்டுக் கொண்டிருந்தாள். சங்கர் வந்ததும் ஒரு மரியாதைக்காக உள்ளே குரல் கொடுத்தாள். ஆனால். அப்பா எழுந்திருக்காமல் இருந்தது அவளுக்கு சந்தோஷமாக இருந்தது.

''உக்காருங்க சங்கர்'' என்று வெகுநாள் தெரிந்தவள் போல சோபாவைக் காட்டினாள். எதிர்சோபாவில் உட்கார்ந்து கொண்டாள்.



''நான் அப்பவே, உங்ககிட்ட பேசணும்னு நினைச்சேன். வேற என்னமோ பேச்சு போய், உங்ககிட்ட பேச முடியாமப் போயிடுச்சு.''

''அப்படியா ...என்ன பேசணும்னு நினைச்சீங்க...''

''சும்மா என்ன பாட்டு பாடுவீங்க. என்ன ஸ்ருதில பாடுவீங்க,எந்தப்பாட்டு நல்லாப்பாடுவீங்க, யார் பாட்டு உங்களுக்கு பிடிக்கும் அப்படின்னு பாட்டு பத்தி பேசலாம்னு நினைச்சேன். ஏன்னா, அவங்ககிட்ட அதைப் பத்தியெல்லாம் பேசமுடியாது இல்லியா.''

''நானும் நினைச்சேன் செல்வராணி. ஆனா வியாபாரம் பேசற இடத்துல, நாம தனியா போய், இந்த விஷயங்களை ஆரம்பிக்கக் கூடாதுன்னு மௌனமா இருந்துட்டேன் இது பேசறதுக்காகத்தான் வந்தேன்.''

''என்ன பேசறதுக்கு.''

''நீங்க எத்தனை ஸ்ருதில பாடுறீங்க. யார் பாட்டு பிடிக்கும் எந்தப்பாட்டு பிடிக்கும்.''

அவன் அவள் கேள்விக்கு வாய்விட்டுச் சிரித்தாள். அவனும் சிரித்தான்.

''என்ன சாப்பிடுறீங்க.''

''வெந்நீர்.''

''அப்பறம்.''

''பால், சர்க்கரை போடாத.''

''ஏன் அப்படி.''

''இல்ல, சர்க்கரை பாலைக் கெடுத்துடுது. வெறும் பால் மட்டும் உணர்ந்து சாப்பிட்டோம்னா, தொண்டை நல்லா இருக்கு.''

''அப்படியா...'' அவன் துள்ளி எழுந்து, வெந்நீர் போட்டு, பாலும் காய்ச்சி, நன்றாக ஆற்றி, நுரை பொங்க அவனுக்கு கொண்டு வந்து கொடுத்தாள். அதில் ஒரு அக்கறை இருந்தது.

வெந்நீர் பெரிய குவளையில் எடுத்து, பிளாஸ்க்கில் ஊற்றி, அவனுக்கு எதிரே டம்ளரோடு வைத்தாள்.

அவன் வெந்நீர் குடித்துவிட்டு சிறிதுநேரம் கழித்து பாலும் அருந்தினான். தனக்குப் பிடித்த பாடல் என்ன வென்று பேச ஆரம்பித்தான்.

**''கல்யாணத் தேன்நிலா**
**காய்ச்சாத பால்நிலா''**

என்று அவன் கூட பாடத் துவங்கினான்.

அவன் குரல் மிக அற்புதமாக இருந்தது. அவனால் சுமகத்தோடு பாடமுடிந்தது. எந்தத் தவறும் செய்யாமல், ஒரிஜினல் பாட்டு எப்படி இருந்ததோ அதேவிதமாகப் பாடமுடிந்தது. ஆனால், அவன் உரத்த குரலில் பாட வில்லை. ஒரு போலிக் குரலில், அடி வயிற்றிலிருந்து எடுக்காமல், கழுத்திலிருந்து சப்தத்தைக் கிளப்பி, மைக்கை மிக அருகே வைத்துக்கொண்டு, அவன் பாடினான்.

அதிகம் மூச்சு வாங்காமல் இருந்தது.

அவள் உன்னிப்பாய் அவன் பாடுவதைக்கவனித்தான்.

சட்டென்று பாட்டை நிறுத்தினான்.

''நீங்க ஒரு தப்பு பண்றீங்க செல்வராணி''

''என்ன.''

''மைக்ல மூச்சு வாங்கறீங்க.''

''புரியலியே.''



''மைக்கை பக்கத்துலயே [illegible] மாட்டேங்கறீங்க.''

''எடுக்கறதுன்னா.''

''பாடறபோது மைக்கை [illegible] மூச்சு வாங்கறபோது, 'ட[illegible] எடுத்துட்டுப் போயிடணும் [illegible] திடணும். மறுபடியும் எடுத்[illegible] அதாவது மூச்சு வாங்கறபோதெல்லாம், மைக் ஷாட் பீ அவே மைக் உங்களைவிட்டு தள்ளியிருக்கணும். மூச்சு வாங்கறதை, மைக்ல கேக்கக்கூடாது.

அதேசமயத்துல, இதை வலுக்கட்டாயமா நாம பண்றோம் அப்படீங்கறதும் ஆடியன்ஸுக்கு தெரியக் கூடாது. ரொம்ப அழகா, ஸ்டைலிஷா, மைக்கை தள்றதையும், வாயிகிட்ட கொண்டாறதையும் செய்யணும். பலபேர் செய்வாங்க. நீங்க அதைப் பார்த்தது இல்லியா. உங்க மூச்சு அப்பப்போ மைக்ல விழுந்து, பெரிய ப்ளோவா கேக்குது.

ஐ.ஐ.டில இந்த தப்பு பண்ணினீங்க. ஆனா அடுத்தது வேற ஒரு காலேஜ்ல பாடும்போது, இந்தத் தப்பை பண்ணலை.''

''ரெண்டும் கேட்டீங்களா.''

''நான் விடமாட்டேனே...காலேஜ்ல யார் பாடி னாலும் நான் போய் நின்னுடுவேன்.''

''எதுக்கு.''

'''லேடீஸ் வாய்ஸ் வேணும்.'

''வேணும்னா...''

''கச்சேரி பண்றதுக்கு லேடீஸ் வாய்ஸ் வேணும். அது கிடைக்கவேயில்லை. யாராவது நல்லலேடீஸ் பாடறாங்களா அப்படின்னு நாங்க தேடிகிட்டே இருப்போம்.''

என்னையும் விட நல்லா பாடற பொண்ணுங்க இருப்பாங்களே.''

இல்லவே இல்ல செல்வராணி. உங்களவிட நல்லா பாடறவங்க யாருமே இல்ல நீங்க ஒண்ணுன்னா, ஏழாம் நம்பர்தான் இருந்ததே தவிர, மத்த ஆறு இடம் காலியா இருக்கு.''

''போங்க...ரொம்ப ஜாஸ்தி சொல்றீங்க.''

''இல்லவே இல்லை சத்தியத்துக்குசொல்றேன். செல்வ ராணி உங்க குரல், உங்க பாவம், உங்க கமகம யாருக்கும் வராது. எல்லாரும் ஸ்ருதி தப்பிப் பாடிடறாங்க. இல்ல ஸ்ருதியோடு பாடறபோது பாவமில்லாத பாடறாங்க. நீங்க அலட்சியமா, ரொம்ப ஈஸியா, அப்படியே என்ன ஒரிஜினல்ல இருக்கோ, அது பாடறீங்க.

நான் ஆச்சரியப்பட்டுப் போயிட்டேன். எப்படி உங்கள சினிமா விட்டது. இவ்வளோ நல்லா பாடறீங்களேன்னு நான் ஆச்சரியப்பட்டேன்.

செல்வராணி...இந்த ட்ரூப்ல சேர்ந்துடுங்க. என் கூட பாடுங்க. நீங்க அவங்களோட சைன் பண்ணிக்காத, நான் கூட்டிட்டு வந்தா மாதிரி இந்த ட்ரூப்புக்கு வந்துருங்க.''

''எனக்குப் புரியலியே.''

''பாடறவங்களுக்கு நடுவுல ஒத்துமை இருந்தா தான். கச்சேரி நல்லா இருக்கும். நீங்க ஒரு முறைப்புல பாடி, நான் ஒரு முறைப்புல பாடினா நல்லாருக்காது நம்ம ரெண்டு பேருக்குள்ளயும் ஒரு நட்பு ஃபிரெண்ட்ஷிப் இருக்கணும்.



நாம வந்து, நிறைய காதல் பாட்டெல்லாம் பாடப் போறோம். அதே நேரத்துல, நாம வந்து இந்த மாதிரி விஷயங்கள்ல ஈடுபடப் போறதில்லை. நீங்க வேற, நான் வேற. ஆனா, சின்னதா ஒரு பாவம் இருக்கணும் அதுக்கு நீங்க அனுமதி கொடுக்கணும்.

அதாவது...கல்யாணத்தேனிலா பாடறேன்னு வைச்சுக்கங்களேன் நீங்க அடுத்து பிக்கப் பண்ற போது, ஒரு ஆசையோட பாடினீங்கன்னா தான் நல்லா இருக்கும். பிளாட்டா பாடினீங்கன்னா, என் பாட்டும் எடுபடாமல் போயிடும்.

அதனால பொய்யா ஒரு அன்பு, பொய்யா ஒரு நட்பு, நல்லா பாடற சங்கரோட பாடறோம் சங்கர் நமக்கு ஃபிரெண்டு. அப்படின்னு வைச்சிங்கன்னாக்கூட போறும் ஒரு ஃபிரெண்ட் ஷிப் பாட்டுல வந்துரும். நானும் சங்கரும் மேடைல காதல் பாட்டு பாடறதை யாரும் தப்பா நினைச்சுக்கப் போறாங்களோன்னு நீங்க ஒரு க்ஷணம் நினைச்சிங்கன்னாக்கூட, குரல்ல அந்த அந்நியம் தெரிஞ்சுரும். அப்பறம் பாட்டு நல்லா இருக்காது.

நீங்க ஃப்ரெண்ட்லியா வரலேன்னா, என்னால யும் ஃப்ரெண்ட்லியா வரமுடியாது. ரெண்டு பேரும் தனித் தனியா வெவ்வேற ஸ்ருதில, வெவ்வேற விதமா பாடிகிட்டிருப்போம் கச்சேரி உடனே ஃபினாப்பாயிடும்.''

''நான் சொல்றது புரியுதுங்களா.''

''புரியுதுங்க.''

''அதனாலதான், நீங்க அவங்க மூலமா போகாத, என் மூலமா, நான் கூட்டிட்டு வந்த ஒரு ஃபீமேல் வாய்ஸா, இந்த ட்ரூப்புக்குள்ள வரலாமா.''

''நான் அப்பாவக் கேட்டுதான் சொல்லணும்.''

நான் அப்பாகிட்ட பேசலாம்னுதான் வந்தேன். நீங்க இருந்ததுனால, உங்ககிட்ட பேசினேன்.''

''இல்ல, நீங்க சொல்ற விஷயம் எனக்குப் புரியுது. காண்ட்ராக்ட்னு அவங்ககிட்ட மாட்டிக்காத. நீங்க எனக்கு சம்பளம் பேசறீங்க. எனக்காக நீங்க ரெப்ரஸண்ட் பண்றீங்க. அப்படித்தானே.''

''யூ ஆர் ரைட். என்ன சம்பளம் பேசறோம். இதுக்கு முன்னாடி இருந்தவங்க எவ்வளோ வாங்கினாங்க. உங்களுக்கு எவ்வளோ தருவாங்க, அதெல்லாம் எனக்குத் தெரியும். அதனால, நீங்க எதுனா பேசறதா இருந்தா, சங்கர்கிட்ட நான் பேசியிருக்கேன். சங்கர் உங்ககிட்ட பேசுவார்னு ஒரு வார்த்தை சொன்னாப் போறும்.''

''நான், இதை யோசனை பண்ணி சொல்லட்டுங்களா. அப்பாகிட்ட பேசிட்டு சொல்றேன்.''

''நல்லா சொல்லுங்க. ஏங்க, நான் நல்லா பாடறேனா..'' சங்கர் கேட்டான்.

''ரொம்ப நல்லா பாடறீங்க.''

''நம்ம ரெண்டு பேரும் மேடைல பாடினா சரியா வருங்களா.''

''வரும்னு நினைக்கிறேன். ரெண்டு மூணு கச்சேரி செய்து பார்க்கணும்.''

''என்னை விட பெட்டரான மேல்வாய்ஸ் எதுனா தெரியுங்களா.''

''உங்களைவிட நல்ல வாய்ஸ்னா ஜேசுதாஸ்தான்.''

''போங்க...ரொம்ப கேலி பண்றீங்க.'' சங்கர் வெட்கப்பட, அவளுக்கு முதன்முதலாக, ஒரு தனி கர்வம். தான் கெட்டிக்காரப்பெண் என்கிற கர்வம் அவளுக்கு வந்தது.



அப்பா இல்லாமல், அம்மா இல்லாமல் ஒரு ஆணை வரவழைத்து, வெந்நீர் கொடுத்து, பால் கொடுத்து, அவனோடு பாட்டுப்பாடி, அவனுடைய குரலில் ஸ்வாரித்து, அவனோடு ஒரு ஒப்பந்தத்திற்கு தயாரானதுபோல் பேசியது அவளுக்குப் பிடித்திருந்தது.

அவள் சரியென்றும் சொல்லவில்லை. மாட்டேன் என்றும் சொல்லவில்லை. அவனை ஒரு வெற்று நம்பிக்கையோடு அனுப்பினாள். என்ன செய்வது என்று தனியாக உட்கார்ந்து யோசிக்கத் துவங்கினாள்.

அப்படியோசிப்பது அவளுக்கு அதுவே வாழ்க்கையில் முதல் தடவை.

சுதாகர் வீட்டில் இசைக்கருவிகளுடன் இரண்டுதான் பயிற்சி இருந்தது. இசைக்கருவிகள் வாசிப்பவர்களுக்கு அவள் அறிமுகப்படுத்தப்பட்டாள். இவர்கள் இரண்டு பேர் பாடும் பாடல்கள் எது நன்றாக இருக்கும் என்பது எல்லோருக்கும் நடுவே ஆலோசிக்கப்பட்டது. அபிப்ராயங்கள் கேட்கப்பட்டன.

மூன்றாவது முறை ரிகர்சலுக்குப் போனபோது, செல்வராணியின் அப்பா லேசாய் தலைவலிக்கிறது என்று சொன்னார்.

''நீ மட்டும் போயிட்டு வந்துரேம்மா நல்லவங்களாதான் இருக்காங்க'' என்றுசொல்ல கேட்டுக்கொண்டாள்.

செல்வராணியின் அம்மா புறப்பட எத்தனிக்கும் போது, வேண்டாம் அவள் தனியே போய் பழகட்டும் என்று சொன்னாள்.

அன்று காலை கார்வந்தபோது செல்வராணி மட்டும் ஏறிக் கொண்டாள்.

கார் ஓட்டிவந்த சுகுமாரனுக்கு வியப்பாக இருந்தது. கூட வந்த சுதாகரனை கழற்றிவிட்டு விடலாம் என்று தோன்றியது. ஆனால், மிகப் பொறுமையாக செயலாற்றுவோம் என்று நினைத்துக் கொண்டு, சுதாகரனும் சுகுமாரனும் அவளை வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். மாறிமாறி உபசரித்தார்கள். ஏ.ஸி போட்ட அறையில் உட்கார வைத்தார்கள்.

மற்ற இசைக் கலைஞர்களுக்கு, வாத்தியக்காரர்களுக்கு, இது வேடிக்கையாக இருந்தது.

''கவலைப்படாதே. இந்த ட்ரூப் ரொம்பநாள் நிக்காது. தபேலாகாரன் டிரம்மரிடம் பேசினான்.

''ஏன் எதனால சொல்றே.''

''பொம்பளைய இவ்ளோ வேகமா கொஞ்சற ஆளு. நம்மளை எவ்ளோ வேகமா கடிப்பான்னு, நான் அனுபவப் பட்டிருக்கேன் சும்மா. என்னம்மா செல்வராணி, நல்லா இருக்கறியா அப்படின்னு நீ கேளேன் போறும். அவனுக்கு கோபம் வந்துரும். ஒழுங்கா வாசிடா அப்படின்னு சொல்லுவான். சும்மா ஒரு டெஸ்ட்டுக்கு, வணக்கம்மா வாங்கம்மா நல்லா இருக்கிங்களா இந்த சுடிதார் நல்லாருக்குமான்னு ஒரு போடு போடு

அவர்கள் இருவரும் உரக்க பேசிக் கொண்டார்கள். அவர்கள் பேசிக்கொண்டது மற்ற இசைக்கலைஞர்களுக்கும் தெளிவாகக் கேட்டது. என்ன நடக்கும் என்று அறிய அவர்களும் ஆவலாய் இருந்தார்கள்.

செல்வராணி ஏ.ஸி. ரூமிலிருந்து தொண்டையை கனைத்துக் கொண்டு, இசைக்கலைஞர்களுக்கு நடுவே நின்றாள். மைக் பிடித்துக் கொண்டாள்.

டிரம்மர் குச்சிகளை கீழே போட்டுவிட்டு, எழுந்து அவளுக்கருகே வந்தான். வணக்கம் சொன்னான்.



''ரொம்ப அழகாக இருக்கிங்க செல்வராணி. தேவதை மாதிரி இருக்கிங்க. உள்ளுக்குள்ள நுழையறபோது, மகாலெட்சுமி நுழையறமாதிரி இருந்தது. அடடா... ஒரு தடவை கை குடுங்களேன். கண்ல ஒத்திக்கறேன்.'' அவளுடைய வலதுகையை வாங்கி, கண்ணில் ஒற்றிக் கொண்டு, போய் அமர்ந்தான்.

சுதாகருக்கு உடம்பெல்லாம் பற்றி எரிந்தது. எட்டி டிரம்மை உதைத்து, சாய்க்கவேண்டும் என்ற ஆத்திரம் எழுந்தது.

எதற்கு தேவையில்லாமல் இப்படி செய்கிறான். அவன் செய்கிறபோது பின்பக்கத்திலிருந்து சிரிப்பு கேட்டது. எதிர் பக்கத்திலுள்ள இசைக்கலைஞர்கள், மெல்ல கேலியாய் சிரித்தார்கள்,

ஒரு பெண்ணை வரவழைத்து, நடுவே இப்படிப்பேசி, கேலி செய்வது தகாத விஷயம். இப்படிச் செய்கிற எவனும் வெகுவிரைவில் அத்துமீறுவான் என்பது அனுபவம் கற்றுத்தந்த பாடம். எனவே, இந்த டிரம் வாசிக்கிறவனை உடனடியாகத் தட்டி, சமனப்படுத்த வேண்டும் என்று சுதாகரன் ஆத்திரமானான்.

சுதாகரன் அந்த டிரம் வாசிக்கிறவனை இழிவுப் படுத்த உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று முடிவு செய்து, ''டேய் சுகுமாரன் இங்க வா' என்று சுகுமாரனை சொடுக்கி அழைத்தான் ஓரமாக கூட்டிக் கொண்டு போனான்.

''யாரையும் பார்க்காதே. கீழேயே பார்த்கினு இரு. இந்த டிரம் வாசிக்கிறவன் செல்வராணிய தேவையில்லாத தொட்டுப் பேசறான். அவன் மோட்டார் சைக்கிள்ல மண்ணு போட்டு'' என்று செல்வராணியிடம் டிரம்மர் பேசினவுடனேயே, சுகுமாரனிடம் சுதாகர் போய் கம

கடுப்பாய் பேசியது தபேலாக்காரனுக்குப் புரிந்துவிட்டது. ஏதோ சதிச்செயல் என்று எண்ணம் வந்தது.

அவன் வெற்றிலை துப்பப்போவது போல சுகுமாரனைப் பின்தொடர, சுகுமாரன் வீட்டிற்கு வெளியே இருக்கிற மணலிலிருந்து ஒரு பிடி எடுத்து, மோட்டார் சைக்கிளின் மூடியைத் திறந்து, பெட்ரோல் டாங்கில் மண் போட்டான். மறுபடியும் மூடினான். கைதுடைத்துக் கொண்டு வந்தான்.

ஒரு ஜன்னல் வழியே தபேலாக்காரன் பார்ப்பதை, அவன் பார்க்கவில்லை. சுதாகரனிடம், போன் செய்துட்டேன் என்று சொன்னான்.

'சந்தோஷம்' என்று சுதாகரன் பதில் சொன்னான் பாட்டு தொடர்ந்தது.

கிட்டத்தட்ட பத்துபனிரெண்டு பாடல்களை பிசிறில்லாமல் பாடினார்கள். மிக சந்தோஷமாக பயிற்சி செய்தார்கள்.

இடைவேளையில் சுதாகரன் வீட்டிற்கு பின்னால், உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

டிரம்மர் வேகமாக மோட்டார் சைக்கிளிடம் போனான். உதைத்தான். உதைத்த சில வினாடிகளில் மணல் கார்பரேட்டரில் இறங்கி சிக்கிக் கொண்டது. கோபமாய் உள்ளே வந்தான். தபேலாக்காரரை உற்றுப் பார்த்தான் தபேலாக்காரர், ஆம் என்று சொல்ல, நேரே போய் சுகுமாரன் சட்டையைப் பிடித்துக் கொண்டான்.

சுகுமாரனும் அவனும் மூன்று நிமிடங்கள் ஒருவரையொருவர் தள்ளியபடி சண்டை போட்டார்கள்.

''அவ பாடறவ. நான் தாளம்போடறவன். மேடைல கச்சேரி பண்றபோது, என்னை அனுசரிச்சுக்கிட்டு அவளும் அவளை அனுசரிச்சுகிட்டு நானும் போகணும்.



அதனால போய் நின்னு ரெண்டு வார்த்தை பேசினேன் அது பொறுக்கலையாடா உங்களுக்கு. இந்த ட்ரூப் எப்படிடா சரியா வரும். எப்படிடா நீங்க தொடர்ந்து நடத்துவீங்க.''

''இந்த ட்ரூப்பைப் பத்தி, மெட்ராஸ்ல இருக்கற அத்தினி பேர்கிட்டயும் நான் அசிங்கமா பேசலை... எம் பேர் மாத்தி வைச்சுக்க.'' அவன் ஆட்டோ கூட்டி வந்து, வாத்தியங்களை ஏற்றி, அந்த இடத்தை விட்டு நகர்ந்து போனான்.

இசைக் கலைஞர்கள் ஒருவரோடு ஒருவர் பேசாமல், எதிர்ப்பும் தெரிவிக்காமல், உர்ரென்று உட்கார்ந்திருந்தார்கள்.

'என்ன நடந்தது' என்று சுதாகரன் கேட்டபடியே உள்ளே வந்தான். ஆனால், என்ன நடந்தது என்பது ஏ.ஸி. ரூமில் உட்கார்ந்திருக்கின்ற செல்வராணிக்கும், அவளுக்கு எதிரே உட்கார்ந்து பழைய பாட்டுக்கள் பற்றி பேசிக் கொண்டிருந்த சங்கருக்கும் எதுவும் தெரியவில்லை.

சங்கருடைய தகவல்கள் செல்வராணியை அதிசயப் பட வைத்தன.

ஆண்களுக்கு, பாடுவதற்கு நல்ல பாட்டுக்கள் அதிகமிருக்கின்றன. அதே போல், பெண்களுக்கு இல்லை. திரும்ப திரும்ப ஒரு பனிரெண்டு பாட்டுக்கள் தான் பெண்களுக்கு பாடுவதற்கு இருக்கிறது. ஆனால், ஆண்கள் பாடுவதற்கு ஐம்பதுக்கு மேல் இருக்கிறது என்ற புள்ளி விவரங்கள், செல்வராணியை திகைக்க வைத்தன.

அவள் ஆவலுடன் சங்கரிடமே பேசி விஷயங்கள் தெரிந்து கொண்டிருந்தாள்.

சுதாகரன் வெளியே எல்லோரையும் சமாதானப் படுத்த முயன்றான்.

''எம்பா... ஏன்... ஏன் அவன் வண்டில மண்ணு போட்டே...'' சுகுமாரனை கண்சிமிட்டியபடியே, அவன் அதட்டினான்.

சுகுமாரனுக்கு அது நாடகம் என்று தெரிந்தாலும், சுதாகரன் அதட்டியது அவமானமாக இருந்தது. அவன் அந்த இடத்தை விட்டு வெளியே போனான்.

''சுதாகரன் எதுனா சண்டை கிண்டை இருந்தா, பிடிக்காத விஷயம் இருந்தா மூஞ்சிக்கு நேரா சொல்லிடறது நல்லது. இப்படி பின்னாடி ஆளை விட்டு, வண்டில மண்ணைப் போட்டு, டயர்ல பஞ்சர் பண்ணு. வாத்தியத்தல ஸ்ருதி குறைச்சுவை அப்படில்லாம் சொல்லிடாதே.'' தபேலாக்காரன் சொல்ல, சுதாகர் கோபமானான்.

''நானா செய்தேன்...நானா சொன்னேன். என்ன பேசற நீ.''

''யோவ்... உனக்குத் தெரியாது, உன் தம்பி எதுவும் பண்ண மாட்டான்யா. இது எல்லாருக்கும் தெரிஞ்ச விஷயம். என்னமோ புதுசா இன்னிக்கி நேத்திக்கு உங்க தம்பிய தெரிஞ்சா மாதிரி கதையடிக்கறே...சுகுமாரன், உனக்குத் தெரியதயா அந்தக் காரியத்தை பண்ணி யிருப்பான்.''

மற்ற கலைஞர்களும் அதை ஆமோதிப்பது போல், மௌனமாய் சுதாகரனைப் பார்த்திருந்தார்கள்.

''இல்ல...சமீபமா எனக்கும் என் தம்பிக்கும் மனஸ்தாபம். அதனால, இது நடந்திருக்கலாம்னு நினைக்கறேன்'' என்று உரக்க சொன்னான்.

வெளியே இருந்த சுகுமாரனுக்கு இது கேட்டது. அப்படியொரு மனஸ்தாபம் வந்தால் நன்றாக இருக்கும்



என்ற எண்ணம் முதன் முதலாய் அவன் மனதுக்குள் வந்தது.

தன்னை சுதாகரன் அதிகம் உபயோகப்படுத்திக் கொள்கிறான். கொண்டு போய் மணல் கொட்டச் சொல்லி விட்டு, அந்த மணலை ஏன் கொட்டினாய் என்று கேள்வியும் கேட்டு இப்போது தனக்கும் அவனுக்கும் சரியாக வரவில்லை என்று மூன்றாவதாக இன்னொரு விளக்கத்தையும் கொடுத்துக் கொண்டிருக்கிறான் என்பது வேதனையாக இருந்தது. விலகியிருந்தால் என்ன என்று கோபம் வந்தது.

அவன் வடிவேலுவின் வீட்டை நோக்கிப் போனான். அங்கு போய் சகலமும் சொன்னான்.

வடிவேலுவிற்கு, சுகுமாரனை விலை வாங்கினால் என்ன. இவனை முன் வைத்து ட்ரூப் நடத்தினால் என்ன என்று யோசனை வந்தது.

சுதாகரனுக்கு அதிகம் அழ வேண்டி இருக்கிறது. சுதாகரன் பொய்களை நம்ப வேண்டியிருக்கிறது. செலவு அதிகம் காட்டி லாபத்தில் அதிகம் சுருட்டிக் கொள்ளும் சுதாகரனைப் பழிவாங்க ஒரு சந்தர்ப்பம் வந்திருக்கிறது என்று தீர்மானித்தான்.

''அது இருக்கட்டும் மறுபடி சொல்றேன். செல்வ ராணிய, உன்னால கல்யாணம் பண்ணி குடித்தனம் பண்ண முடியாதா நீ ஏன் அதுக்கு முயற்சி செய்யக் கூடாது.''

''எப்படி செய்யணும்னு சொல்லுங்க.''

''செல்வராணிகிட்ட நேர போய், நான் உன்னை லவ் பண்றேன் அப்படின்னு சொன்னா என்ன.''

''நீங்க தானே அண்ணன்கிட்ட சொன்னீங்க. செல்வ ராணி லவ் பண்ற பொண்ணு இல்லேன்னு.''

இல்ல...நேத்திக்கி, முந்தா நேத்து, இன்னிக்கி காலைல, அந்த சங்கரோட அவ பேசறதப் பார்க்கும் போது, நாம போட்ட கணக்கு தப்புன்னு பட்டுது. அவங்க அப்பா இருக்கறதுனால, அவ அமைதியா இருக்கா. அவங்க அப்பா இல்ல... இன்னிக்கி என்னா பேச்சு, என்னா ஆட்டம் அந்தப் பொண்ணு லவ் பண்ணுது.''

''நல்ல வேளை...நான் சுதாகர் சொன்னப்ப உற்சாகப் படுத்தலை.''

''ஏன்.''

''உற்சாகப்படுத்தியிருந்தா உன்னை விட வேகமா அதுல இறங்கியிருப்பான். அவளை, லவ் யூன்னு சொல்ல வைச்சிருப்பான். இப்ப சுதாகர் அவ அப்பாவைத் தேடிகிட்டும் அம்மாவை தேடிகிட்டுப் போறான். அதனால நீ நேரடியா அவளை அப்ரோச் பண்ணு.''

''எப்போ.''

''காலைல பிக்அப் பண்ணிகினு வர்றேயில்ல அப்போ, அவளை கூட்டிகினு போய், எங்கியாவது உட்கார வைச்சு பேசு. திருப்பி, நீ மட்டுமே கூட்டினு போ சுதாகரைச் சேர்க்காதே.''

''அப்படியா சொல்றீங்க.''

''ஆமாம்.''

''இன்னொரு கேள்வி இருக்கு வடிவேலு.''

''என்ன.''

''அவ சங்கரனை லவ் பண்ணுவாளா.''

''சங்கரனோட நிறைய பேசுவா. லவ் பண்ண மாட்டா சங்கரன் மாதிரி கிழிஞ்ச செருப்புப் பசங்களை



எந்தப் பொண்ணும் டக்குன்னு லவ் பண்ணாது. பாட்டுப் பாடறவன் பாட்டுப்பாடறவ அப்படீங்கறதால, மேடைல மட்டுமே சங்கரோட சுமுகமான உறவு வெளிய வந்ததும் அவ நிச்சயம் வேற ஆளைத்தான் தேடுவா. சங்கர் அவளுக்கு சக்குவலே இல்ல.

ஒருவேளை சங்கரனை லவ் பண்ணினாலும் வைச்சுக்கோ மொத்தமா அவ லைஃப் ஸ்பாயிலாயிடும். இதையும் வாய்ப்பு கிடைச்சா அவகிட்ட சொல்லு.''

''பன்னெண்டு வருஷம் கர்நாடக சங்கீதம் கத்து கிட்டீங்களா..' ஏ.ஸி. ரூமில் சங்கரை செல்வராணி விசாரித்தாள். ஸ்வர வரிசைகளை உற்றுக் கேட்டான். கனராகங்களின் சாயல்களை கண்டுபிடிப்பது எப்படி என்பதை அவள் கற்றுக் கொண்டாள்.

''நாளைக்கு பிராக்டீஸ் இல்ல போலருக்கே.''

''ஆமாம்,''

''கச்சேரியுமில்ல.''

''ஆமாம்.''

''அப்ப நாளைக்கிநாம பாக்கவும் முடியாதா சங்கர்''

''நீங்க நினைச்சா பாக்கலாம் செல்வராணி.''

''என்ன சொல்றீங்க.''

''என் வீட்டுக்கு வாங்க அல்லது நான் உங்க வீட்டுக்கு வர்றேன். உங்க சௌகரியம் எப்படியோ அப்படியே பார்க்கலாம்.''

''நீங்க என் வீட்டுக்கு வர்றீங்களா.''

''அதான் இருக்கே... உங்க வீட்டுக்கு மூணு நாலு தடவை வந்துட்டேன்... எங்க வீட்டுக்கு ஒரு தடவை வர்றது.''

''நிச்சயமா வரேன். எங்கே இருக்கு வீடு.''

அவன் விலாசம் எழுதிக் கொடுத்தான்.

''எப்படி வர்றது.'' அவனுக்குபஸ்ரூட் தெரிய வில்லை. ஆட்டோவில் வர பயமாக இருந்தது. எனவே மறுநாள் காலை சங்கரே வந்து அவன் வீட்டிற்கு கூட்டிப் போவதாய் முடிவாகி இருந்தது.

''இதை நமக்குள்ளேயே வைச்சுப்போம் செல்வராணி. சுதாகர்கிட்டயோ சுகுமாரன்கிட்டயோ சொல்ல வேண்டாம்.''

''ஏன்.''

''அவங்களுக்குப் பிடிக்காது. நாம பாடறவங்க. பாடற நேரம் மட்டும்தான் இருக்கணும். மத்த நேரம் பேசவே கூடாதுன்னா முடியுமா.''

''அதெப்படி முடியும். அதுவும் அவங்க யாரு சொல்றத்துக்கு.''

''சொல்லுவாங்க. என்னா ஜாஸ்தி பேசறீங்க அப்ப டிம்பாங்க. அதனால இப்போதைக்கு வேண்டாம்.''

மறுநாள் காலை சுகுமாரன் அவனை தேடிக்கொண்டு வீட்டிற்கு போவதற்குள் சங்கர் அவனை ஆட்டோவில் அழைத்துக் கொண்டு தன்னுடைய வீட்டிற்கு போனான்.

அது ஒரு ஒண்டுக்குடித்தனம் பதினாறு குடித்தனங்கள் மாடியிலும் கீழும், சுற்றிலுமாய் இருந்தது. நடுவே ஒரு திறந்த வெளி இருந்தது. அந்த திறந்தவெளியில் வடாம் உலர்த்தி யிருந்தது. பையன்கள் கிரிக்கெட் ஆடினார்கள். ஒரு பெண் குழந்தை சைக்கிள் விட்டுக் கொண்டிருந்தது, ஒருவர் வெளியே வெய்யிலில், நாற்காலி போட்டு. ஹிண்டு பேப்பர் படித்துக் கொண்டிருந்தார்.

பல்வேறுவிதமான நடவடிக்கைகள் அங்கு நிகழ்ந்தன



இதுவரை ஒண்டுக் குடித்தன பார்த்திராத செல்வ ராணி அவலோடு அந்த இடத்தைப் பார்த்தாள்

செல்வராணி சங்கர் வீட்டிற்கு வந்தவுடன், திபுதிபு வென்று ஒரு இருபது முப்பது பேர் நுழைந்தார்கள். வீட்டை இருட்டாக்கினார்கள். நீங்கதானா...நீங்கதானா ஐயோ உங்களை டி.வி.ல பார்த்திருக்கேன். என்னமா பாடறேள் என்று அருகே வந்து கை பிடித்துக் கொண் டார்கள். ஆண்கள் வந்து நமஸ்கரித்தார்கள்.

செல்வராணி எழுந்து நின்று பலபேருக்கு வணக்கம் சொல்லி உட்கார்ந்தால் நன்றாக இருக்காது என்று நின்று கொண்டே இருந்தாள்.

''சரி... கொஞ்சம் எல்லோரும் காத்தை விட்டேள்னா, உக்கார்ந்து ஒரு கப் காபி சாப்பிட்டு ரெண்டு பாட்டு பாடிட்டுப் போவா சங்கர் கட்டளையிட அவர்கள் நகர்ந்தார்கள்.

அவள் காபி குடித்தாள். சங்கருடைய தாயார் கேட்டுக் கொண்டதற்கிணங்க இரண்டு பக்திப்பாடல்கள் பாடினாள். சங்கரின் தாயார் கற்பூரம் ஏற்றி ஸ்வாமிபடத் திற்கு காட்டி விபூதியும் குங்குமமும் இட்டு கண்ணே படாத எல்லாம் நல்லபடியா நடக்கணும் எல்லா நல்ல விஷயங்களும் வெகு சீக்கிரத்துல நடக்கணும்'' என்று ஆசீர்வாதம் செய்தாள்.

அவளுக்கு பிரிண்டட் சில்க்கும் ரவிக்கையும் மஞ்சளும் வெற்றிலைப்பாக்கும் தேங்காயும் வைத்துக் கொடுத்தாள்

''எனக்கு எதுக்காக புடவைலாம் கொடுக்கறீங்க''

முதமுதல்ல, ஒரு பாடகி எங்க ஆத்துக்கு வந்துருக்கே. உனக்கு நாங்க இந்த மரியாதை கூட பண்ண வேணாமா.

ஆனால், அறுநூறுரூபாய் மதிப்புள்ள அந்த பிரிண்டட்சில்க் கொடுப்பதற்கு அந்த வீடு அதிகம் சிரமப் பட்டிருக்கும் என்று தோன்றியது.

பாடி வருகின்ற வருமானம் தவிர சங்கருக்கு வேறு வருமானமில்லை. அவன்தாயார் எங்கேயோ போய் சமையல் செய்து விட்டு வருகிறாள். அவனுடைய தங்கை படித்துக் கொண்டிருக்கிறாள். அது மிகக் குறைந்த வருமானமுள்ள வீடு ஆனால் சந்தோஷமானவீடு.

சங்கருடைய வீட்டையும் சங்கருடைய அம்மாவையும் சங்கருடைய சகோதரியையும் பார்த்தபிறகு அந்த வீடு சிறியதாக இருந்தாலும், அந்த குடியிருப்பு போர்ஷன் செல்வராணிக்கு மிகவும் பிடித்திருந்தது. அடிக்கடி அங்கு வந்து எல்லோரையும் பரிச்சயம் செய்துகொள்ளவேண்டும் என்ற ஆசை வந்தது.

அவள் மறுபடியும் வீட்டிற்குப் போனாள். சுகுமாரன் வந்து போயிருப்பது தெரிந்தது.

மறுநாள் கச்சேரி இருந்தது. முதன்முதலாய் செல்வராணி மேடையேறினாள். அது சபா கச்சேரி. கல்யாணக் கச்சேரியாக இருந்தால், செல்வராணியை கவனிக்க மாட்டார்கள் என்று சபாகச்சேரியாக சுதாகரன் ஏற்பாடு செய்திருந்தான்.

காசு சற்று கூடுதலாக இருந்தால் பரவாயில்லை என்று கச்சேரி நன்கு அமையவேண்டும் என்று பல்வேறு கோணங்களில் மைக் நிறுவினான்.

வாரப்பத்திரிகைகளில் இந்தக் கச்சேரி நடப்பதை விளம்பரம் செய்திருந்தான். போஸ்டர் ஒட்டியிருந்தான். போஸ்டரில் செல்வராணியின் முகம் இருந்தது.

கச்சேரி ஆரம்பிக்கிறபோது அதிகம் கூட்டமில்லை. முக்கால் அரங்கமே நிரம்பி இருந்தது.

கச்சேரி நடக்க நடக்க, நான்காவது ஐந்தாவது பாட்டு வர, அரங்கம் நிரம்பியது. ஏழாவது பாட்டின் போது அரங்கம் திணறியது.



இடைவேளை என்று சிறிய அறிவிப்பு செய்தபோது, அரங்கத்திற்கு வெளியே, மிகப்பெரிய கூட்டம் இருப்பதை உணர முடிந்தது.

இடைவேளை என்று அறிவித்தபோது, எல்லா வாத்தியக்காரர்களும் எழுந்து போக, சங்கரும் கிளம்பினான். வெளியேறும்போது, கூட்டத்தைப் பார்த்து, கையசைத்துவிட்டுப் போனான். மிகப்பெரிய கரகோஷம் அவன் கையசைப்பிற்கு மக்களிடமிருந்து கிடைத்தது.

சுதாகரன் திடுக்கிட்டான். என்ன இது இவன் கையசைக்க, எதற்காக மக்கள் கைதட்டுகிறார்கள் என்று யோசித்தான். வடிவேலு அருகே வந்து நின்றான்.

''ஆள் செட் பண்ணிருக்காம்மா. அப்பப்போ இவங்க தான், இவன் பாடி முடிச்சவுடனே கைதட்டறாங்க. இந்த நாய்க்கு ஸோலோவே கொடுக்காதே. ஸோலோ அடுத்தது பாடப் போறேன்னு சொல்லிட்டிருக்கான். முழுக்க முழுக்க செல்வராணிய வுடு. இவனை ஓரங்கட்டு'' என்று அறிவுரை செய்தான்.

சுதாகர் தீவிரமாக யோசித்தான். கீ போர்டு வாசிக்கும் டேனியலிடம் வந்தான். மடமடவென்று பதினைந்து பாடல்கள் தேர்ந்தெடுத்தான் அத்தனையும் பெண் குரல் பாட்டுகள். செல்வராணியிடம் போய், இடைவேளைக்குப்பிறகு, ''முழுவதும் உன் கச்சேரியாகவே இருக்க மக்கள் விரும்புகிறார்கள். பலபேர் உன் பாட்டை கேட்கவே வந்திருக்கிறார்கள். எனவே, அடுத்தடுத்து நல்ல பாட்டுகளாக தேர்ந்தெடுத்து வந்திருக்கிறேன். இதைப்பாட, இப்போதே தயாராகிவிடு. இதைப்பற்றி வெளியே யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போனான்.

சுகுமாரனிடம், சங்கர் ஆட்களை செட்டப் செய்து, கைதட்டல் வாங்குகிறான். இது எந்தவிதத்தில் நியாயம் என்று கோபப்பட்டான்.

சுதாகர் கோபம் உடனே சுகுமாரனையும் தொற்றிக் கொண்டது. சுகுமாரனால் நிதானமாக இருக்க முடியவில்லை, சுதாகரன் வேறுபக்கம் போனவுடன். நேரே சங்கரிடம் போய், இத்தனை நாள் கச்சேரி செய்தும். இன்னமும் ஆள் ஏற்பாடு செய்துதான் கைதட்டல் வாங்குகிறாயா. உன் சொந்த உழைப்பில், உன் குரலில், உன் திறமையில் கைதட்டல் வாங்க மாட்டாயா என்று கேட்க, சங்கருக்கும் அவனுக்கும் வாக்குவாதம் மூண்டது.

''உன் வேலையைப் பாத்துட்டுப் போடா'' என்று சங்கர் சொல்ல, ''என் வேலை உன்னைப் பாடாம இருக்க வைக்கறதுதான். இனிமே இன்டர்வெலுக்கு அப்புறம் உன் பாட்டு கிடையாது. மொத்தமும் செல்வராணிதான் போ வெளியே.'' என்று அவனை கழுத்தைப் பிடித்துத் தள்ளினான்.

வடிவேலு, சங்கரை சமாதானப்படுத்தி, ஓரமாக உட்கார வைத்தான். சுகுமாரனை விலக்கினான்.

அங்கே அடிக்குரலில் நடக்கிற சண்டை எதுவும் செல்வராணிக்குத் தெரியவில்லை.

அம்மாவிற்கு அருகே உட்கார்ந்து, அடுத்து பாட வேண்டிய பாட்டுகளை, ஒன்று இரண்டு மூன்று என்று வரிசைப்படுத்தி பேப்பர் மார்க் வைத்துக் கொண்டிருந்தாள்.

''நல்லா பாடு கண்ணு.'' அம்மா செல்வராணியின் கையைப் பிடித்துக் கொண்டாள், ''சும்மா கச்சேரி ஆரம்பிக்கறதுக்கு முன்னாடி, அந்தப்பக்கம் போய் ஒரு கலர் குடிச்சிட்டு வந்தேன். பத்து பதினஞ்சுபேர் மேல



பாய்ஞ்சுட்டாங்க. எல்லாரும் திரும்பிப் பாக்கறாங்க. நீங்க செல்வராணி அம்மாவா. ரொம்ப நல்லா பாடுது உங்க பொண்ணு. உங்க பொண்ணை நிறைய பாட வைங்க. தொடர்ந்து சினிமால்லாம் அவபோய் பாடணும். தனியா கச்சேரி பண்ணணும். அப்படின்னு ஏகப்பட்ட பேர் பேசறாங்க. ஒண்ணுமே புரியல. டி.வி.ல வந்தா, இத்தினி பிரபலமாயிட முடியுமா என்ன இது ஒரு நல்ல வாய்ப்பு உனக்கு கிடைச்சிருக்கு. இதையும் விடாத. இதுவும் டி.வி.ல ஒருமாசம் கழிச்சு ஒளிபரப்பப் போறாங்களாம். நல்லா பாடு கண்ணு. அம்மா அவள் தலையைத் தடவி ஆதூரத்தோடு சொன்னாள்,

''கவலையே படாதேம்மா. பிய்ச்சு உதறிடறேன்.''

''எனக்கும்தான் இது ரொம்ப ஆசைடி.மேடையேறிப் பாடணும் அப்படின்னு என்னைவிட, உங்க அத்தைக்கு ரொம்ப ஆசை.''

இந்த வீட்டுக்கு வந்தவுடனே, அவகுரல் கேட்டுத்தான். எனக்கு ஒரு சந்தோஷமே வந்தது. அவங்க பாடறதுல மட்டும் பிரமாதமான பொம்பளையா இல்ல. பழகறதுல, பேசறதுல, உதவி செய்றதுல எல்லாத்திலேயுமே நல்லவங்களா இருந்தாங்க.

அவங்க பாடலேங்கற ஏக்கம் வைச்சிருக்காங்கறதே எனக்கு ஒருவருஷம் கழிச்சுதான் தெரிஞ்சது. ஆனா. யோசிச்சுப் பார்த்தா, அது ஒருவிதமான வாழ்க்கை. அது ஒருவிதமான சந்தோஷம்.''

''ஏம்மா...பாடவே கூடாதுன்னு சொன்னாங்களா, இல்ல, மேடைல பாடக்கூடாதுன்னு சொன்னாங்களா.''

''அடடே...பொழுதன்னிக்கும் அந்த வீட்ல பாட்டுதான் மேடைல பாடவேணாம்னு அந்த வீட்ல சொல்லிட்டாங்க. அதுவும், அந்த மாமியார்காரி கொஞ்சம் கண்டி

ஷனா இருந்துட்டா. ஏதோ நல்லதுக்குதான்னு நினைச்சிகினு. உங்க அத்தையும் மவுனமா இருந்துட்டாங்க. இந்த மாதிரி, நீ மேடைல ஏறிப் பாடறதை பார்த்தா, ரொம்ப சந்தோஷமாயிடுவா.

நான் கிளம்பற போது அப்பாகிட்ட சொல்லேன். எதுனா ஒரு சாக்கு சொல்லி, டெல்லியிலேருந்து, உங்க தங்கச்சிய வரவழைச்சிருங்க அப்படின்னு அவரும் ஆகட்டும் ஆகட்டும்னு சொல்லிருக்காரு. அவ வந்து பாத்து, உன்னைத் தடவிக் கொடுத்து, பாடறதைப்பத்தி சொல்லிக் கொடுத்தா, நீ இன்னும் பிரகாசமா வந்திருவே.''

''ஏம்மா ...ஜனம் என் பாட்டை எப்படி ரசிக்குது.''

''இதுவரைக்கும் சாதாரணமா கை தட்டறாங்கடி. தனிப்பாட்டா ஒண்ணும் கொடுக்கலையே உனக்கு. இப்பதானே தனிப்பாட்டு கொடுத்திருக்காங்க. தனிப் பாட்டு ஆரம்பிச்சா, பிரமாதமா வந்துரும்.''

மணியடித்தது.

அவள் எழுந்து நின்றாள். மேடைக்குப்போய் மைக் அருகே நின்றுகொண்டாள். திரை விலகப்பட்டது.

முதல் பாட்டு, மாரியம்மா பாட்டு. பெரிய கைதட்டலுடன், கும்பல் ரசித்தது.

அடுத்த பாட்டு, 'மாலைப் பொழுதின் மயக்கத்திலே' கூட்டம் அசையாமல் கேட்டது.

**''ஒரு நாள் இரவு**
**பகல் போல் நிலவு**
**கனவினிலே - என்**
**தாய் வந்தாள்.''**

என்று நடுங்கும் குரலில் பாடினாள்.



கூட்டம் மீண்டும் ஆரவாரமாய் அதை ரசித்தது. ஒவ்வொரு பாட்டிற்கும் பலத்த கைதட்டல் இருந்தது.

கச்சேரியின் கடைசி நிகழ்ச்சியாக, 'ராமன் எத்தனை ராமனடி' என்று பாட, பலபேர் அவளைப் பார்த்து, கை கூப்பினார்கள்.

கச்சேரி முடிந்து, நாட்டுப் பண் ஒலிக்க, எல்லோரும் எழுந்து நின்றார்கள். நாட்டுப் பண் முடிந்ததும், தபதப வென்று மேடையை நோக்கி ஓடிவந்தார்கள்.

பொது ஜனங்களை விலக்கி, அவளை காருக்குள் ஏற்றுவது பெரும்பாடாயிற்று.

சங்கர் ஓர் ஓரத்தில், நண்பர்கள் சூழ, தலை குனிந்து நின்றிருந்தான்.

சங்கரின் நண்பர்கள் பொருமிக்கொண்டிருந்தார்கள். சுதாகரனை மடக்கி கேள்வி கேட்க வேண்டும் என்று ஆத்திரப்பட்டார்கள். சுகுமாரனை அடித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டார்கள்.

சுகுமாரன் செல்வராணியோடு போய்விட, அவர்களுக்கு எதிரே, வடிவேலு கிடைத்தான்.

''என்ன சார் இப்படி பண்ணிட்டீங்க. இத்தினி வருஷமா உங்க ட்ரூப்ல பாடறான். ஒரு பொம்பளை வந்தவுடனே, அவளுக்கே வாய்ப்பு கொடுத்திட்டீங்களே சார். இவன் பாட்டுக்கு என்ன சார் குறைச்சல். இவன் பாடற போதுதான் கைதட்டினாங்க சார்.''

''ப்பா ...யார் கை தட்டினாங்க எதுக்கு கைதட்டினாங்கன்னு எனக்குத் தெரியும். ஆனா, இந்த ஒரு கச்சேரி செல்வராணிய புரமோட் பண்றதுக்காக செய்திருக்கு அந்தப் பொண்ணு பார், தான் கிளப்பிருச்சு.''

''சார் ...ஸோலோவா இவனைப் பாட விடுங்க சார். இவனும் தான் கிளப்புவான்.''

''அடுத்த கச்சேரில செய்திடலாம்.''

''செய்யமாட்டீங்க சார். சும்மா, செல்வராணி பின்னாடியேதான் போவீங்க.''

''தம்பி, எனக்கும் செல்வராணிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. வேற யாருக்காவது இருக்கலாம். அவங்க ஆசைப்பட்டா வேணாம்னு சொல்றதுக்கு நமக்கென்ன. கச்சேரி நிறைய வரணும். நிறைய கச்சேரிக்கு நிறைய கூட்டம் வரணும். நிறைய கூட்டம் வந்தா நிறைய காசு வரும் இவ்வளோதான் எங்களுக்கு.

சக்ஸஸ்ஃபுல்லா இருக்கணுமே தவிர, இவர் பாடினா என்ன, அவங்க பாடினா என்ன நமக்கு எல்லாரும் ஒண்ணுதான்.'' வடிவேலு சொல்ல, கூட்டம் இன்னும் அதிகமாக கோபப்பட்டது.

''இப்போ சுதாகரனைப் பார்த்து, நாலு வார்த்தை கேக்கப் போறோம் சார்'' என்று எவனோ சொல்ல

''போ...அந்தப்பக்கத்துல துட்டு தனித்தனியா கவர்ல போட்டுகினு இருக்கான். போய் கேளு'' என்று சுதாகரன் இருக்கும் இடத்தை வடிவேலு காட்டிக் கொடுத்தான்.

நண்பர்கள் நான்குபேரும் முன்னால் போனார்கள். சுதாகரன் இருப்பதை கண்டுகொண்டு வந்தார்கள். இன்னும் நாலுபேர் அங்கேபோய் நின்றார்கள். சுதாகருக்கு தெரியாமல், ஒரு ஸ்க்ரீன் பக்கம் ஒதுங்கிக் கொண்டார்கள். இரண்டுபேர் துணிந்து இறங்கினார்கள் சுதாகருக்கு அருகே நின்று, வணக்கம் என்று சொன்னார்கள்.

சுதாகரன், பணம் எண்ணிக்கொண்டிருந்தவன், சட்டென்று நிமிர்ந்து என்ன என்று கேட்டான். அவர்கள் இருவரையும் பார்த்து, யாரது எங்கோ பார்த்த முகமாக இருக்கிறதே என்று கூர்ந்து கவனித்தான்.



இவர்கள் சங்கருக்காக கைதட்டுபவர்கள் என்று தெரிந்து கொண்டு, லேசாக கடுப்பானான்.

''என்னவேணும்''

''சங்கரை தனியா விட்டுட்டீங்க. விளையாடறீங்களா. ஒரு பொண்ணு வந்தவுடனே, அவங்கள மட்டுமே பாடவைக்கிறதா, கலந்து தரவேணாமா. சங்கருக்கு ஸோலோவே கொடுக்கலை.''

''யாருக்கு என்ன கொடுக்கறதுன்னு எனக்குத் தெரியும். நீ யார்ரா கேக்கறத்துக்கு.''

''அடாபுடான்னா பல்லை உடைச்சிடுவேன். விளையாடறியா. பொம்பளை வந்தவுடனே, பின்னாடி அலையறீங்களே.'' என்று ஒருவன் முரட்டுத்தனமாய் பேச, சட்டென்று சுதாகர் எழுந்து அவன் சட்டையைப் பிடித்துக் கொண்டான்.

அவன் மேலே கை வைக்க காத்திருந்தது போல், அடுத்த ஆள் முன்னே பாய்ந்து சுதாகரன் தலையில் அடித்தான்.

தபதபவென்று இன்னும் நான்கு பேர் திரைமறைவிலிருந்து இறங்கி வந்தார்கள். சுதாகரனை சூழ்ந்து கொண்டார்கள். கையில் கிடைத்ததை எடுத்து, அவனை அடிக்கத் துவங்கினார்கள்.

சுதாகரன் தடுக்க முயற்சிக்க, கீழே நோட்டுக்கள் பறந்தது. நோட்டுகளை சில பேர் பொறுக்கிக் கொண்டார்கள். அடித்த இளைஞர்கள் எகிறி குதித்து காணாமல் போனார்கள்.

சங்கர் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தான். வடிவேலுவிடம் ''நான் ஒண்ணும் பண்ணல

சார், நான் ஒண்ணும் பண்ணலை, சார்'' என்று சொன்னான்.

வேறு வழியில்லாமல் போலீஸ் வந்தது.

# 5

அம்மாவும் பெண்ணும் உள்ளே நுழைந்ததும் அப்பா ஆரவாரமாக கதவைத் திறந்தார்.

''கன்னுக்குட்டி உங்க அத்தை வர்றாங்க நாளை காலைல'' என்று உரத்த குரலில் கூறினார்.

அம்மாவும் பெண்ணும் திகைத்தார்கள்.

''நிஜமாவா சொல்றீங்க''

''இப்பத்தான் போன் பண்ணி வைச்சது. நான், நீங்க கிளம்பின உடனேயே போன் பண்ணினேன். இந்தமாதிரி பொண்ணு பாடறா, கச்சேரிக்குப் போயிருக்கா, இன்னிக்கி தான் முதல் கச்சேரி நீ கொஞ்சம் வரணும், எப்படிப் பாடறதுன்னு சொல்லித்தரணும் குழந்தைய ஆசிர்வாதம் பண்ணணும்னு சொன்னேன்.

எனக்கே, அவ நினைப்பு ஒரு மாசமா ஜாஸ்தியா இருக்கு. பல்வேறு விஷயங்கள் நான் யோசனை பண்ணி, உன்னைப் பாக்க வரணும்னு நினைச்சுகிட்டிருக்கேன். நீயா கூப்பிட்டது சந்தோஷம். இன்னும் ஒரு மணி நேரத்துல, வர்றதைப் பத்தி சொல்றேன் அப்படின்னு சொன்னா.

இப்பத்தான், அஞ்சு நிமிஷம் முன்னாடி, போன் பண்ணி நாளைக்கி காலைல ஏழரைமணி பிளைட் பிடிச்சு



டில்லிலேருந்து ரெண்டரை மணி நேரத்துல மெட்ராஸ்ல இருக்கேன்னு சொன்னா. நாளைக்கி காலைல பதினோரு மணிக்கு, இங்க உக்காந்துறு இருப்பா.

''ஆமாம், எப்படி இருந்தது கச்சேரி'' அப்பா கேட்க அம்மாவும் பெண்ணும் மாறி மாறி சந்தோஷமாக விளக்கினார்கள். கைதட்டல்களை விவரித்தார்கள் வந்து கை குலுக்கிப் பாராட்டியவர்களைப் பற்றி பேசினார்கள். மிகுந்த சந்தோஷமும் நிறைவுமாய் அவர்கள் தங்கள் அனுபவங்களை, தங்கள் வீட்டுத் தலைவனிடம் பரிமாறிக் கொண்டார்கள்.

''நாம ஒரு விஷயம் தீர்மானம் பண்ணணும் செல்லா ராணி. வேற யாரையும் நம்பாத, நம்ம பாட்டை யார் மதிக்கிறாங்களோ, அவங்க பக்கம் இருக்கறது அப்படின்னு தீர்மானம் பண்ணிக்கணும்.''

''எம்பா திடீர்னு இப்படி பேசறீங்க.''

''இல்ல... இந்த ட்ரூப்பை மட்டும் நம்பி, நாம இருக்கக் கூடாது. இந்த ட்ரூப்ல காண்ட்ராக்ட்டும் போடக் கூடாது. ஒரு கச்சேரிக்கு இவ்வளோ காசு, நான் உங்கிட்ட மட்டும்தான் பாடுவேன்னு ஒரு நிர்பந்தமும் கிடையாது. நான் எங்கேயும் பாடுவேன், யார் கூடவும் பாடுவேன் அப்படின்னு சொல்லிடணும்.''

''ஆனா, இவங்கதானேப்பா, நம்மளை அறிமுகப் படுத்தி வைச்சாங்க.''

''அதுக்காகவே இவங்களோட கட்டுப்பட்டாகணும்னு அவசியமில்லை. ரொம்ப கம்பல் பண்ணினா இந்தக் கச்சேரிக்கு காசு வேண்டாம் அப்படின்னு சொல்லிடணும்.

நீ இதைவிட நல்ல ட்ரூப்ல, சேரணுங்கறது என்னுடைய ஆசை. சினிமால பாடறத்துக்கு, இவங்க தொந்தரவாயிடக் கூடாதேன்னு ஒரு எண்ணம்.''

''சரிப்பா எனக்கு எது சரியோ அதைப் பண்ணுங்க. இல்லேனா பாராட்டுக்கும் காரணம் நீங்கதான். அம்மா தான். எந்த வீட்லயும் இப்படி பாட்டுப் பாடறதுக்காக ஒரு பெண்ணை வளர்க்க மாட்டாங்க'' அவள் மெல்லப் போய், அப்பாவின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

அப்பா அவளைத் தடவிக் கொடுத்தார்.

''ஒண்ணு நல்லாப் புரிஞ்சுக்க. நீ ஒரு பெண்பிள்ளை. கல்யாணமாகி புருஷனோட சந்தோஷமா இருக்கறது தான் உன்னுடைய கடைசி விஷயம். அதுக்காகத்தான் பாட்டு அதுக்காகத்தான் ஆட்டம். இந்தப் பாட்டும் கச்சேரியும் குடித்தனத்துக்கு சரியா வரலேன்னா, விட்டுட்டு வெளியே வரத் தெரிஞ்சிருக்கணும். இல்லியா.. குடித்தனமே வேணாம்னு, பாட்டோட உக்காந்துக் கணும். ரெண்டுங் கெட்டானா அலைஞ்சு, நீயும் கஷ்டப் பட்டு, சுத்தி இருக்கறவங்களையும் கஷ்டப்படுத்திடாதே.

பாட்டு குடித்தனத்துக்கு இடைஞ்சல்னா தூக்கிப் போட கத்துக்கோ. குடித்தனம் பாட்டுக்கு இடைஞ்சல்னா, அதையும் விலக்கி வைக்கத் தெரிஞ்சுக்கோ. ரெண்டும் சேர்ந்தாப் போல ஒட்டறத்துக்கு உனக்கு சாமர்த்தியம் இருந்தா, என்னைவிட சந்தோஷமான ஆள், இந்த உலகத்துல இருக்க முடியாது. நாம நிக்கற முக்கியமான இடம் இதான்.

''என் தங்கச்சி அழகா எடுத்தா, இனிமே பாடறதில்ல, கச்சேரிக்கு போறதில்லன்னு. அதே மாதிரி முடிவெடுக்க உனக்கு தெரியணும்.''

அவர்கள் டைனிங்டேபிளில் உட்கார்ந்து, சாப்பிடத் துவங்கிய நேரம் போன் வந்தது. டெலிபோனில், அவருக்கு அடிரகளை பற்றி சொல்லப்பட்டது.



அந்த வீடு அதிர்ந்து போயிற்று. போலீஸ்காரர்கள் வருவார்கள். கேள்வி கேட்பார்கள். பதில் சொல்ல வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆடிப்போனார்கள்.

இரவு பதினொன்னேகால் மணிக்கு போலீஸ் வந்து இறங்கியது. தெரு விழித்துக் கொண்டது. சுற்றி வாசலில் நின்று கொண்டது. போலீஸ் உள்ளே நுழைந்தது.

''நீங்கதானா...செல்வராணி. அவங்க அப்பா யாரு. அம்மா யாரு, உங்க வயசு என்ன. உங்க தொழில் என்ன.'' என்று பாட்டுக்கும் அவர்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லாதது போல் கேள்வி கேட்டார்கள்.

மூன்றுமணி நேரத்திற்கு முன்னால் அவள் குரலை கொஞ்சி கொஞ்சி பலபேர் பாராட்ட, பாடறதுதான் உன் தொழிலா என்று போலீஸ்காரர் கேட்டபோது, அவளுக்கு பதில் சொல்ல கஷ்டமாக இருந்தது.

''சுதாகரை அவன் உயிர்நிலைல மிதிச்சிருக்காங்க. இல்ல மேஜை புரண்டு அங்கே அடிபட்டிருக்கணும். எதனாலன்னு தெரியல. அவரு மயக்கமா இருக்கறாரு. ஆனா, ஆறேழுபேர் அடிக்க, மூஞ்சி முதுகெல்லாம் ரத்த காயமா இருக்கு. பதினேழாயிரத்து ஐநூறுரூபா காணோம். அவரு போட்டிருந்த மைனர் செயின், மோதிரம், ரிஸ்ட் வாட்ச் எல்லாம் காணோம். யார் அடிச்சாங்கன்னு உங்களுக்கு ஏதுனா தெரியுமா, உங்களால அடையாளம் காட்டமுடியுமா.''

''அவரு அடிவாங்கினதே தெரியாதுங்களே...''

''ரைட்...நான் அப்படியே எழுதிக்கிறேன். அடிக்கிற போது நீங்க அங்க இல்ல. வெளிய போயிட்டீங்க. வழில சுகுமாரன் ஏதுனா சொல்லியிருந்தாரா, உங்களுக்கு சுகுமாரன் பேர்ல சந்தேகம் இருக்கா. அண்ணன் சுதாகரனை கொன்னுடணும் அப்படின்னு ஏதாவது பேசினாரா.''

"இல்லீங்க. அப்படி எதுவும் பேசலேயில்லை. ஒரு டிரைவர் மாதிரி வண்டி எடுத்தாரு. விட்டாண்ட விட்டாரு. போய்ட்டு வரேம்மா அப்படின்னு சொல் லிட்டு போய்ட்டாரு. நாளை காலைல பதினோரு மணிக்கு வர்றதா சொல்லிட்டுப் போனாரு."

"நாளைக்கு காலைல எல்லாம் வரமாட்டாரு. அவருக்கும் அவங்க அண்ணனுக்கும் மனஸ்தாபம்னு, ஒரு புகார் இருக்கறதுனால, அவரை போலீஸ் ஸ்டேஷன்ல உக்கார வைச்சிருக்கோம். சங்கருங்கறவரைப் பத்தி உங்களுக்கு எதுனா தெரியுமா."

"கூடப் பாடறவருங்க"

"நல்லா பாடுவாரா."

"நல்லாப் பாடுவாருங்க."

"அவரு சுமாராதான் பாடுவாருன்னு சொல்றாரு. சுகுமாரன்."

"அப்படியில்லீங்க. நல்லாதான் பாடுவாரு."

"அவருக்கு வாய்ப்பை குறைச்சிட்டு உங்களுக்கு வாய்ப்பை அதிகமாக்கிட்டாங்களாம்."

"தெரியாதுங்க, பாடச் சொல்றாங்க, பாடறேன் யாருக்கு எப்ப பாடக் கொடுக்கறதுன்னு அவங்க தீர்மானம் பண்றது."

"இதனால சங்கர் வந்து, சுதாகரை அடிசிட்ட தாகவும்..."

"தெரியாதுங்க சங்கர் அடிதடி ஆளா எனக்குத் தெரியல. வேற யாருனா செய்திருக்கலாம்."

"யாரு செய்திருப்பானு நீங்க நினைக்கறீங்க."

"தெரியலீங்களே."



"பரவாயில்ல சொல்லுங்க."

"இல்லீங்க எங்களுக்குத் தெரியாது."

"ரைட். உங்களுக்கு ஒன்னுமே தெரியாதுன்னு எழுதிக்கிறேன். போலீஸ்காரர்கள் எழுந்து நின்று, வணக்கம் தெரிவித்துவிட்டு வெளியே போனார்கள்.

வீடு வாசலில் உள்ள-கூட்டம் பார்த்து திகைத்து நின்றது.

போலீஸ்காரர்கள் போனதும் தெரு சூழ்ந்து கொண் டது. என்ன சார் என்ன சார் என்று கேட்டது.

'ஏதோ நாங்க வந்தபிறகு சண்டையாம்' என்று சொல்லபோது. கூட்டத்திலுள்ள ஒரு பையன் அந்தச் சண்டையைப் பற்றி நேரே பார்த்ததுபோல் கூறினான். பலபேர் முன்னிலையில்தான் சண்டை நடந்தது. அடித் தவர்கள் எல்லோரும் சங்கருடைய ஆட்கள்தான்." என்று சொன்னான்.

வீடு சரி சரி என்று கேட்டுக் கொண்டது. உள்ளே வந்தது. கதவை தாழ் போட்டுக் கொண்டது. சாப்பிட முடியாமல் டைனிங் டேபிளில் உறைந்து போய் உட்கார்ந்து கொண்டது.

"என்னங்க ஆரம்பமே இப்படி இருக்கே...நிறைய பாட்டு வாய்ப்பு கொடுத்துட்டாங்கன்னு சங்கருடைய ஆளுங்க அடிச்சிட்டாங்களாமே.

அந்த ப்பையனைப் பார்த்தா அப்படி தெரியல.என்ன வேணா நடக்கும்போல"

"எனக்கு கொஞ்சம் கலவரம் இருக்கே. உள்ள வந்து கேட்டாங்க. பாத்து நல்லபடியா சொன்னாங்க. குழந்தை கல்யாணத்துக்கு ஆகுமேன்னு நாமளும் சரின்னு சொல் லிட்டோம். இப்படி பொழுதன்னிக்கும் அடிதடிராகளையா

இருந்துன்னா நல்லாவா இருக்கும். நாளைக்கு பேப்பர்ல பேரு வந்துருமே. செல்வராணி பாடும் குழுவில் அடிதடி ரகளை அப்படின்னுதானே பேரு வரும்.''

''நல்லபடியா இது நாலு பேருக்கு போகும்னு பார்த்தா, இப்படி செய்றாங்களே...'' அவள் அம்மாவும் மருகினாள்.

வீடு அன்றிரவு தூங்க முடியாமல் புரண்டு புரண்டு படுத்தது.

மறுநாள் காலை அத்தை கிளம்பிவிட்டாள் என்று டெலிபோன் வந்தது. விமானநிலையத்திற்கு வண்டி எடுத்துக் கொண்டு போனார்கள்.

செல்வராணியின் அத்தை ஆசையோடும் வியப் போடும், செல்வராணியை கட்டிக்கொண்டாள். அவள் கையைப் பற்றியபடியே லவுஞ்சிலிருந்து வெளியே வந்தாள்.

அப்பா, முன்னே நகர்ந்து, அத்தையையும் அத்தை புருஷனையும் காருக்கு அழைத்துப்போக, செல்வராணி இரண்டுபேர் கைகளையும் கோர்த்துக் கொண்டு துள்ள லுடன் நடந்து வந்தாள்.

''ரொம்ப அழகா வளர்ந்திட்டேடி. ரொம்ப நல்லா இருக்கே. உன் முகத்துல ஒரு தெளிவே வந்துருக்கு. இது ரொம்ப முக்கியம்டி. நல்லா பாடறேனு யாரும் சொல்ல வேணாம். நான் உக்காந்து கேக்கவும் வேணாம். உன் முகத்தைப் பாத்தாலே தெரியுது?''

''என்ன அத்தை, என்ன சொல்றீங்க. பாடறது எப்படி முகத்துல தெரியும்.''

''ஜெயிக்கறது தெரியும். ஜெயிக்கறது முகத்துல எழுதி ஒட்டியிருக்கு. வாழ்க்கைல நம்பிக்கை வந்துருச் சன்னாலே, மூஞ்சில ஒரு தெளிவும், பேச்சுல ஒரு நிதா



னமும் செல்ல ஒரு அழகும் வந்துரும். நீ அங்கேருந்து ஓடி வந்து சட்டுன்னு திண்ணேபாரு...ரொம்ப அழகா இருந் துச்சு. வாய்நிறைய சிரிச்சே பாரு...ரொம்ப சந்தோஷமா இருந்துச்சு.

ஜெயிச்சவங்களுக்குத்தான் இந்த மாதிரி விஷயங்கள் செய்யத் தோணும். மத்தவங்க என்ன சொல்லுவாங் களோன்னு நினைக்காத,டக்குன்னு நம்ம சந்தோஷத்தை நாம பகிர்ந்துக்கறத்துக்கு வெற்றி பெற்ற நம்பிக்கை வேணும். இப்படி கைகோர்த்துகிட்டு, நடுவுல தோத்த பொண்ணு நடந்து வருமா. எதுனா சொல்லிடுவாங்க ளோன்னு ஒரமா வரும். உன்னை யாரும் எதுவும் சொல்லிட முடியாதுங்கற நம்பிக்கைனால, கையைக் கோர்த்துகிட்டு சந்தோஷமா வர்றே. இப்படித்தான்டி நானும் இருக்கணும்னு நினைச்சேன். எல்லாம் எங்கியோ போயிடுச்சு. சரி...வேற இடத்துல ஜெயிச்சேன்னு வைச்சுக்க.''

''எனக்கும் தெரியல அத்தை. ஜெயிக்கப்போறேனா இல்லையான்னு.''

''என்னடி சொல்றே.''

''நேத்து உங்கிட்ட பேசினோம் இல்ல''

''ஆமாம்''

''ராத்திரி ஒரு கலாட்டா ஆயிடுச்சு''

''என்ன கலாட்டா''

''பாடிட்டுஇறங்கின இடத்துல,ஒருத்தருக்கொருத்தர் சண்டை. ஏதேதோ ரகளை. என்கூடப் பாடறவனை, பாட்டுக்கச்சேரி ட்ரூப் வைச்சிருக்கறவனுக்குப் பிடிக்கலை அதேநேரம், ட்ரூப் ஓனருக்கும், அவன் பார்ட்னருக்கும் லேசா கசமுசா. ட்ரூப் ஓனருக்கும், அவன் தம்பிக்கும்

மனஸ்தாபம். நானும் நாலு கோணத்துல நிக்கிறு. நேத்து போலீஸ் வீட்டுக்கு வந்து என்கொயரி.''

''என்ன...அப்படி என்ன ஆகிப்போச்சு''

''ஒருத்தரை ஒருத்தர் அடிச்சுகிட்டாங்க. கச்சேரி ஓனரை, பாடறவன் ஆளுங்களை கூட்டினு வந்து அடிச்சிட்டான்னு கம்ப்ளெயின்டு. பாட்டு பாடறவன் சாமி சத்தியமா நான் செய்யலை அப்படீங்கறான். அவன்தான் செய்தான்னு கச்சேரி ஆளுங்க வந்து சொன்னாங்க.

அடுத்த கச்சேரி எப்போ, மறுபடி நடக்குமா, ஒண்ணும் புரியலை. நீ என்னமோ நான் ஜெயிச்சு, மூஞ்சில எழுதி ஒட்டிருக்கறதா சொல்றே. நான் ஜெயிக்கவுமில்லை. மூஞ்சில எதுவும் ஒட்டியுமில்லை. உன்னைப் பார்த்த சந்தோஷம் அவ்ளோதான்.

நல்லாப் பாடுவேன்னு அப்பா அடிக்கடி சொல்லுவாரு நீ பாடி நான் கேட்டதேயில்லை. நான் பிறக்கறதுக்கு முன்னாடியே நீ பாடறதை நிறுத்திட்டேனு சொன்னாங்க. வீட்டுக்கு போய், உன்னை உக்காரவைச்சு பாடுன்னு நான் சொல்லணும். நான் பாடறதையும் நீ கேக்கணும்.''

''இனிமே என்னால பாடமுடியாதும்மா. நீ பாடறதை கேக்கறேன். ஆனா, இவன் சண்டை போட்டான். அவன் சண்டைபோட்டாங்கறதுக்காக, நீ தோத்துப் போக வேண்டிய அவசியமில்லை. உன்பாட்டு, சரியா இருந்தா, அதைத்தூக்கி நிறுத்த, யாராவது வருவாங்க.

எங்கிட்ட என்பாட்டு, அவ்ளோ ஒண்ணும் பலமா இல்லை. மத்தவங்களோட பாடறபோது, சுமாராப் பாடறேனே தவிர, ஒரு டாப்கிளாஸ் பாடகின்னு நான் என்னை சொல்ல முடியாது. ஒரு மத்திமமான பாடகி. அதனாலதான், அதை சட்டுன்னு உதறிட்டு, நானே குடித்தனம் பண்ணப்போயிட்டேன். ரொம்ப நல்ல



பாடகியா இருந்தேன்னு வைச்சுக்கோ. நான் இந்த ஆளை உதறிட்டிருப்பேன்'' அவள் தன் புருஷனைப் பார்த்து சிரித்தாள்.

அவரும் சிரித்தார். ''இப்பவும் என்ன உதறினமாதிரிதான். ஒரு ஓரத்துல உக்காந்துகிட்டிருக்கேன்'' என்று கேலி செய்தார்.

வீடு மொத்தமும் சிரித்தது. காரில் ஏறி வீட்டிற்கு வந்து இறங்கியது.

அவர்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள். ஏ.ஸி.ரூமில் கண்ணயர்ந்தார்கள். பிற்பகல் எழுந்து உட்கார்ந்தார்கள் முகம் கழுவிக் கொண்டு, காபி குடித்தார்கள்.

''ஆரம்பிடி.''

அவள் நேற்றுப் பாடிய கச்சேரியின் கேசட்டை, கேட்டு வாங்கி வந்திருந்தாள். அதை வி.ஸி.ஆரில் போட்டு ஓடவிட்டாள்.

பாட்டு ஜில்லென்று ஆரம்பித்தது. இடைவேளைக்கு பிறகு, அவளுக்குக் கிடைத்த ஸோலோவை முழுமையாய் அவள் பயன்படுத்திக் கொண்டிருப்பது நன்கு தெரிந்தது. அத்தை வியந்தாள்.

ஒரே கோணத்தில் படமாக்கப்பட்டு இருந்தாலும், பாட்டினுடைய சுவாரஸ்யத்தில், படமாக்கப்பட்ட விதம் பெரியகுறையாய் தெரியவில்லை. கேமிரா முன்னும் பின்னும், அருகே மிக நெருங்கியும் அவளைக் காட்டி, பாட்டை பக்குவமாய் பதிவு செய்திருந்தது.

ஆறாவது பாட்டின் போது, அத்தை போதும் என்று சொல்லிவிட்டாள்.

''ஏன் அத்தை, எதனால நிறுத்தச் சொல்லிட்டே''

''நீ யார்கிட்டயும் போய்பாடாதேடி''

''ஏன் அத்தை.''

''இவ்ளோ நல்லாப் பாடுவேனு நான் நினைக்கலேயில்லை. கிட்டத்தட்ட ஒரு சினிமாப்பாட்டை எவ்ளோ துல்லியமாப் பாடுவாளோ, அவ்ளோ துல்லியமா குறைச்சலான இன்ஸ்ட்ருமெண்ட் வைச்சுகிட்டு சரியான ரிகர்சலும் இல்லாம அடுத்தடுத்து இத்தினி பாட்டு உன்னால பாட முடியும்னா ஒரு நாளைக்கு ரெண்டு பாட்டுங்கறது ஊதித்தள்ளிடுவே.

உனக்கு பிரமாதமான குரல். ரொம்பநல்லா பாடறே பாவம் ரொம்ப அழகா வருது நீ பாடறபோதெல்லாம் அப்படியே முழுக்க முழுக்க அந்தப் பாட்டோட பின்னிப் பிணைஞ்சு பாடறே நிறைய பேரைநான் பாத்துட்டேன். தொண்டையிலேருந்து பாடறாங்க. மேலோட்டமா பாடறாங்க. லல் லாங்ல லல் வெளிய வந்துடக் கூடாதுங்கற பயத்துல பாடறாங்க நீ அப்படில்லாம் இல்லை. பாட்டுக்குள்ள போனவுடனே உனக்கு உன்னைப்பத்தி ஒன்னும் தெரியலை. அப்படியே மறைஞ்சு போறே,

அடியே...நீவேற யார்கிட்டயும் பாடக்கூடாதுடி.''

''அப்பறம்...வேற என்ன.''

''நாமளே ஏற்பாடு பண்ணுவோம்.''

''புரியல அத்தை.''

''உங்க அப்பா, உங்க அம்மா, அவசியமா இருந்தா நான் எங்க வீட்டுக்காரரு எல்லோருமே வந்திடறோம். உன்னை பெரிய பாடகியா இந்த நாலு பேரும்தான் மாத்தணும்.''

''என்ன அத்தை சொல்றீங்க.''



''நான் பாடலைடி,நான்மேடை ஏறாதவிட்டுட்டேன். மேடை ஏறுற அளவுக்கு வசதியுமில்லை இப்போ, எல்லா கடமையும் முடிஞ்சு போச்சு, மாமியார் என்னை ஏன்னு கேக்கறது இல்ல. இந்த வீட்டுக்கு நான் பெருந்தலையாப் போயிட்டேன். நான் வைச்சதுதான் சட்டம், நான் பாடலே, என் பாட்டை வாயடைச்சிட்டா...அப்படின்னு இவருக்கும் வருத்தம்.

எப்பவாவது ராத்திரி உக்காந்து பாடறபோது, கடைசி வார்த்தையா, நான் தப்பு பண்ணிட்டேன். நான் தப்பு பண்ணிட்டேன் உன்னைப் பாட வைச்சிருக்கணும் அப்படின்னுதான் அவரு சொல்வாரு. காது குளிரக் கேட்டுட்டு நான் தூங்கிருவேன். அதே தப்பு, மறுபடி நம்ம வீட்ல நடந்துடக் கூடாது.

செல்வராணி...அந்த ட்ருப்ல இனிமே பாடாதே. உனக்காக ஒரு ட்ருப் நான் ஆரம்பிக்கிறேன். டெல்லி முடிஞ்சுப் போயிடுச்சுடி. இன்னும் நாலு மாசம், இவரு அந்த வேலையிலேருந்து ரிடையர்டு ஆயிடறாரு நாங்க இங்க வந்திடறோம். இங்க வந்த பிறகு உன்னை எப்படி வெளிய கொண்டாரணுமோ அப்படி வெளிய கொண்டாறோம்.

உனக்காக ஒரு ட்ருப், வேலை தெரிஞ்சவங்க பத்து பேரை சம்பளத்துக்கு வைச்சு, கிபோர்டு வாசிக்கிறவங்க, வயலின் வாசிக்கிறவங்க, புல்லாங்குழல் வாசிக்கிறவங்க, தபேலா வாசிக்கிறவங்க, டிரம் வாசிக்கிறவங்களை வைச்சு, உன்குரல், உனக்குத் துணையா ஒரு மேல் வாய்ஸ் அப்படித்தான் இருக்கணுமே தவிர, உன்னை, தங்க முட்டை போடுற வாத்தா மத்தவன் பயன்படுத்தறதுக்கு விடக்கூடாது.

அவங்களுக்குள்ள ஏன் சண்டை வந்திருக்கு தெரியுமா. உன் பாட்டைவிட, உன்னை முக்கியமா

அவங்க நினைச்சிட்டாங்க. மேல் வாய்ஸ் நீ தாண்டிடு வியோன்னு பயப்படறாம். கச்சேரிக்காரன், உன்னை மேல் வாய்ஸ் எடுத்துட்டுப் போயிடுவானோன்னு பயப் படறான். ட்ருப் பார்ட்னரோட பிரச்சனையும், அவன் பெரியாளாயிடுவானோங்கறதுதான் அதனால, இவங்களை எல்லாரையும் உதறிட்டு. உம்மேல அக்கறை இருக்கிற, உனக்குத் தெரிஞ்ச, ஒரு ட்ருப், கொண்டாரணும்.

காசு கொடுத்தா, நல்ல வாத்தியக்காரங்க கிடைப் பாங்க. காசு கொடுத்தா, நல்ல மேல் வாய்ஸ் கிடைக்கும். ஆனா, அது உன் ட்ருப்பா, உன்னை மேல தூக்கிக் கொண்டாறதா இருக்கணும்.

அண்ணாத்தே...நான் சொல்றது புரியுதா. உன்னால முடியும் இல்லே... என்னாத்துக்கு எக்ஸ்ரேல இன்னும் உக்காந்துகினு இருக்கே. இத்தினி வயசாயிட்டு. விடு... நேர இந்த வேலைக்கு இறங்கிடுவோம். கொஞ்சம் காசைப் போட்டு நல்ல ட்ருப் ஆரம்பிப்போம். பக்குன்னு பத்திக்கும்.'' அவன் சொல்ல வீடு தலையசைத்தது.

''ஏங்க... கல்யாணம் காட்சின்னு... ஒண்ணும் ஆக வேணாமா.'' செல்வராணியின் அம்மா, மெல்ல தன்னு டைய நாத்தனாரிடம் பேசினாள்.

''இதோ பாரேன்... நீ கல்யாணம்கட்டி என்ன பண்ணினே... ஒரு பொண்ணு பெத்தே நான் கல்யாணம் கட்டி, ரெண்டு பிள்ளை பெத்தேன் அவகல்யாணம் கட்டி அதான பண்ணுவா ஆனா உன்னால பாட முடியாது. என்னால பாட முடியல. மத்தவங்களாலயும் இது செய்ய முடியாது.

அவளுக்கு பாட்டு வருது. கல்யாணத்தை ரெண்டு வருஷம் தள்ளி வைச்சுக்கலாம். அவளுக்குன்னு ஒருத்தன் பிறந்திருப்பான். அவளைத் தூக்கி தலைல வைச்சுக் கொண்டாடறவன் கிடைப்பான். அப்போ, அவளுக்கு



கல்யாணம் பண்ணலாம் இப்போ, ரெண்டு வருஷம் மேடைல ஏறி, கனமா பாடட்டும் நல்லாப் பாடட்டும், அற்புதமா பாடட்டும் ஊர் இனிக்க இனிக்க பாடட்டும். அவ மனசுகுளிர பாடட்டும் அவளைக்கொண்டாடறவன் அந்தப்பாட்டு உச்சில இருக்குன்னு தெரிஞ்சு அவளைக் கொண்டாட வரும்போது, அவளுக்கு கல்யாணம் பண்ணி வைச்சிருவோம்.''

''இப்பவே, அதுக்கு ஏற்பாடு பண்ண முடியாதா.''

''என்ன கண்ணு உனக்கு கல்யாணம் முக்கியமா, பாட்டு முக்கியமா.''

''எனக்கு பாட்டுதான் முக்கியம்.'' செல்வராணி சொன்னாள். ''நீங்க சொன்னா மாதிரி எல்லாரும் பாடறது இல்ல அத்தை. எனக்கு பாட்டு கடவுளா கொடுத்திருக்காரு. இது நான் உழைச்ச சம்பாதிச்சது இல்லை. குரல் நல்லபடியா இருக்கறத்துக்கு, கடவுள் தான் காரணம். நான் அதை மேன்மேலும் வளர்த் துக்கணும். எல்லோருக்கும் புரியும்படியா பாட்டு பாடணும்.

எல்லோரும் கைதட்டறபோது சந்தோஷமா அனுப விக்கிறோம். மத்தவங்க சந்தோஷப்படற நிறைய பாட்டு பாடணும். நான் பாட நிறைய பேர் கண்மூடி, கிறங்கி, அமைதியா உக்காந்துட்டிருந்தாங்க அப்படி மனுஷாள் அமைதியா உக்காந்துக்கறத்துக்கு பத்து நிமிஷம் இருபது நிமிஷம் ஒருமணிநேரம் அமைதியா இருக்க வைக்க முடியு துன்னா இதை விட பெரிய சேவை வேற எதுவுமில்லைனு நினைக்கிறேன்.

அத்தை... நான் பாடறேன் அத்தை நீங்க சொன்னா மாதிரி. எனக்குன்னு தனியா ஒரு ட்ரூப் ஏற்பாடு பண்ணுங்க அத்தை.''

''நிச்சயம் பண்ணிடலாம். என்னங்க சொல்றீங்க'' அவள் திரும்பி தன் புருஷனைக் கேட்டாள்.

''நான் வேணா, என் வேலைய முன்னாடியே ரிஸைன் பண்ணிடறேன். இங்க வந்து உக்காந்துகிட்டு, இத்தினி அழகா பாடற பொண்ணுக்கு பின்னாடி துணையா இருக்கலாம். இந்த மாதிரி, நாலு பேரோட சண்டை போட்டு, நம்ம பேர் கெட்டுப் போறதுக்கு பதிலா, நம் குழந்தைக்கு நாம காவலா இருப்போம்.''

அவர்கள் தொடர்ந்து பேசினார்கள். என்ன செலவாகும் என்று கணக்குப் போட்டார்கள். அருகேயுள்ள கோயிலுக்குப் போய் வந்தார்கள். இரவு விருந்து எடுத்துக் கொண்டாள். டி.வி. பார்த்துவிட்டு உறங்கப் போனார்கள்.

நடுநிசியில், செல்வராணிக்கு அருகே அத்தை வந்து உட்கார்த்து கொண்டார்கள். அவள் தலையைத் தடவினாள்.

செல்வராணி திடுக்கிட்டு எழுந்து, என்ன அத்தை என்று கேட்டாள்.

''ஏண்டி மனசுக்குள்ளே எதுனா கல்யாண ஆசை வைச்சிருக்கியா. நான் பாட்டுக்கு திடுக்குன்னு வந்து பாட்டுபாடுறினு சொல்லிட்டேனா...உன்னை ஒண்ணும் கேக்காத, உன் குரலைக் கேட்டுட்டு கச்சேரி பண்றதுக்கு தான் இது பிறந்திருக்குன்னு நானா எப்படி தீர்மானம் பண்ணலாம். நீ யாரையாவது மனசுக்குள்ளே வைச்சுகிட்டிருக்கியா. கல்யாணத்துக்கு ஆசைப்படறியா.''

''இல்ல அத்தை நான் பாடத்தான் ஆசைப்படுகிறேன். நீ இப்படிவந்து பாடறதுக்கு ஒரு ட்ரூப் ஏற்பாடு பண்ணணும்னு சொன்னது எனக்கு ஆச்சரியமா இருக்கு.



நான் எட்டுவயசுல, மைக்பிடிச்சு, பாடற பொண்ணா தான், கனவு கண்டிருக்கேனே தவிர, புருஷனோட குடித்தனம் பண்ற பொண்ணா, கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைக்கவே இல்லை. கல்யாணம் வேணாம்னு சொல்லலை. ரொம்ப ஏக்கவும் இல்லை. ஆனா, இந்தப் பாட்டுக்கு, சபை நடுவுல, ஆயிரம் பேருக்கு மத்தியில் கைதட்டல் வாங்கற பாட்டுக்கு நான் ஏங்கியிருக்கேன் அத்தை அது நேத்து கிடைச்சது.

எங்கடா...ராவோட ராவா, அதை அழிச்சிருவாங்களோ சண்டைபோட்டுன்னு நான் பயந்தேன். நல்ல வேளை...எதுவும் தப்பாப்போகலை, நீங்களும் வந்து தனியா ட்ரூப் ஆரம்பிக்கலாம்னு சொன்னீங்களா... எனக்கு ரொம்ப நம்பிக்கை வந்துருச்சு.

''அத்தை...எனக்கு கனவு, பாட்டுதான், கொஞ்ச நாள் பாடிட்ட பிறகு, குடித்தனம் பண்ணப் போறேன். மனசு நிறைய பாட்டு பாடிட்டு, கல்யாணம் பண்ணிக்கணும், ஏனவாவது நான் இதெல்லாம் சாதிக்கணும் அத்தை. அவள் அத்தையின் கைபிடித்து சொல்ல, அவள் தலையை அத்தை வருடினாள்.

எனக்கு கிடைக்காத ஒரு பாக்கியம், உனக்கு கிடைச்சிருக்கு. நீ நல்லா பாடணும். மேடைல பாடணும். நிச்சயமா உன் பாட்டுக்கு மயங்கி, எவனா வருவான். உன் குடித்தனமும் நல்லா அமையும். கவலைப்படாதே'' என்று அத்தை அணைத்துக் கொண்டாள்.

''ஏண்டி...எதுனா பாடேன்'' திடுமென்று கேட்டாள்.

அவள் தொண்டையை கனைத்துக் கொண்டாள்.

**''மாலைப்பொழுதின் மயக்கத்திலே-நான்**
**கனவு கண்டேன் தோழி**
**மனதிலிருந்தும் வார்த்தையில் இல்லா**
**காரணம் ஏன் தோழி''**

என்று பாடினாள்.

மெல்லியதாய் ஒரு சோகம் அங்கே போர்வை போல் படர்ந்தது.

சோகத்திற்கு காரணம் வேண்டியதில்லை. எல்லோருக்கும் உள்ளே ஒரு ஏக்கம் இருக்கிறது.

இலை கிடைத்தால் பழத்திற்கு ஆசைப்படுகிறது. பழம் கிடைத்தால் இலைக்கு ஆசைப்படுகிறது. இரண்டும் கிடைத்தால் வேறு எதற்கோ ஆசைப்படுகிறது. ஆசை தொடர்ந்து இருக்க இருக்க, ஏக்கமும் இருக்கும் அந்த ஏக்கம் ஆசைபோல, நிரந்தர குணம். மனிதனின் கல்யாணகுணம் அது அவனை விட்டுப் போகவே போகாது.

அப்படிப் போகாது இருப்பதால்தான், அவன் தொடர்ந்து போராடுகிறான். அந்தப் போராட்டத்தில் தான் அவன் வெற்றி பெறுகிறான். அந்த வெற்றிதான் அவனுக்கு மிகப்பெரிய சந்துஷ்டி.

ஏக்கம்தான், சந்தோஷத்தின் முதல்படி.

முற்றும்

# கள்ளி

## 1

விடியும் நேரத்தில் ஏதாவது கற்பனை செய்து கொண்டு உட்கார்ந்திருப்பது அன்னபூரணிக்கு மிகவும் பிடிக்கும். கற்பனை மட்டும் இல்லையென்றால் மனிதர்களுக்கு வாழ்க்கை எரிச்சலாகி அநேகம் பேர் தற்கொலை செய்து கொண்டு சாவார்கள் என்பது அவள் அபிப்பிராயம். இந்த கற்பனைதான் வாழ்க்கையில் ஒரு நல்ல பிடிப்பைக் கொடுக்கிறது. மனதை சந்தோஷமயமாக்குகிறது. எவரோடும் சண்டையில்லாமல் அமைதியாக உட்கார வைக்கிறது. கற்பனைகள் செய்ய செய்யத்தான் நிஜ வாழ்க்கையும் சுவாரஸ்யமாக இருக்கிறது என்பது அன்னபூரணியின் எண்ணம்.

கற்பனை செய்ய, அதாவது கனவில் மூழ்க விடியற்காலைதான் சுகமான நேரம். அன்னபூரணியைப் போல இருபத்து மூன்று வயது பெண் வேறு எதைப் பற்றி கற்பனை செய்வாள். யாரைப் பற்றி திரும்பத் திரும்ப நினைத்துக்கொள்வாள்.

அன்னபூரணி தன் வருங்கால புருஷன் பற்றியும் அவனோடு வாழ்வது பற்றியும் விதம்விதமாய் கற்பனை செய்து கொண்டிருந்தாள். ஒரு கற்பனை, அதாவது ஒரு கனவு மாசக் கணக்கில் தொடரும்.

போன வருடம் இதே நேரமெல்லாம் டாக்டர் புருஷனோடு அன்னபூரணி குடித்தனம் செய்து கொண்டிருந்

தான். அறுபது பவுன் நகை போட்டு அவளுக்குத் திருமணம் செய்து கொடுத்தார்கள். ஆறாயிரம் ரூபாய், பத்தாயிரம் ரூபாய் என்று புடவை எடுத்துக்கொடுத்தார்கள். ரிஸப்ஷனுக்கு சினிமா பாட்டு வைத்தார்கள். அன்னபூரணி பியூட்டி பார்லர் போய் தேவதை மாதிரி மேடை ஏறினாள். அவன் டாக்டர் புருஷன் மயங்கி விட்டது போல் நடித்து கூட்டத்தில் கலகலப்பு ஏறபடுத்தினான்.

'தினமும் இப்படி அழகாய் இருப்பாயா அல்லது இன்று மட்டும்தானா' என்று கேட்டான்.

'உங்கள் இஷ்டம் எப்படியோ அப்படி' என்று பதில் சொன்னாள்.

'இன்று மட்டும் இப்படி இரு போதும். தினமும் இத்தனை அழகு வேண்டாம்' என்று டாக்டர் புருஷன் சொன்னான்.

''ஏன்...'' அன்னபூரணி கறபனை புருஷனிடம் காரணம் கேட்டாள்.

''மனைவி இவ்வளவு அழகாக இருந்தால் தினமும் ஆபீஸ் போகமுடியுமா. வீட்டோடு இருந்தால் சம்பாதிக்க முடியுமா'' கேள்வி கேட்டான். ஆனால் தொடர்ந்து தினம் தினம் செய்யும் கற்பனையில், அன்னபூரணியின் டாக்டர் புருஷன், வீட்டு வாசலிலேயே டிஸ்பென்சரி வைத்து அவ்வப்போது வீட்டுக்குள் வந்து போய்க் கொண்டிருந்தான்.

கிரிக்கெட் ஸ்கோர் பார்க்கிற சாக்கில் வந்து அவளை கட்டித் தழுவி விட்டு போனான். காபி குடிக்கிற சாக்கில் அவளைக் கலைத்துவிட்டு போனான். எந்த நேரமும் அவள் நடமாடுவது தெரிய வேண்டுமென்பதற்காக வலப் பக்கக் கதவு வழியே அவளைப் பார்க்கிற வசதியை ஏற்படுத்திக் கொண்டான்.



அந்த டாக்டர் புருஷனுக்கு நல்ல வருமானம் இருந்தது. ஊரில் பெரிய மரியாதை இருந்தது. அவனைத் தேடி பெரிய மனிதர்களும் நடிகர், நடிகைகளும் வந்தார்கள். ஆலோசனை பெற்றார்கள்.

ஆனால் ஆறேழு மாதத்திற்குப் பிறகு அன்னபூரணியால் டாக்டர் புருஷன் கற்பனையைக் கொண்டு போக முடியவில்லை. அலுப்பாய் இருந்தது.

ஒருநாள் மத்தியானம் இனிமேல் டாக்டர் புருஷன் வேண்டாமென்று முடிவு செய்துவிட்டாள். ரிஸர்வ்பேங்க் புருஷனை அன்றே திருமணம் செய்துகொண்டாள்.

அது ஒரு மாதிரி காதல் திருமணம். ரிஸர்வ் பாங்க் புருஷன் மோட்டார் சைக்கிளில் சறுக்கி விழுந்துவிட, பஸ் ஸ்டாண்டில் நின்றிருந்த அன்னபூரணி ஆட்டோவில் ஏற்றி அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்தாள். தையல் போடும்போது கணுக்கால்களை அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

ரிஸர்வ் பாங்க் புருஷனின் பெற்றோர்கள் அவள் முதலுதவியைப் பாராட்டிக் கையெடுத்துக் கும்பிட்டார்கள். வீட்டுக்கு வந்து பட்டுச் சேலை பரிசளித்தார்கள்.

அவள் வீடு பார்த்து வியந்து விட்டு பெண் கேட்டார்கள்.

'எங்களுக்கு அவ்வளவு செய்ய முடியாதுங்களே' அன்னபூரணியின் அப்பா தயங்க. 'நீங்க எவ்வளவு போட்டாலும் சரி என் புள்ளை உசிரை உங்க பொண்ணு காப்பாத்தியிருக்கா. அதுக்கு எந்த நகை ஈடாகும்' என்று சொல்லிவிட்டார்கள்.

சீர் குறைவாக இருந்ததால் அப்பா திருமணம் விமரிசையாக செய்தார்.

ரிஸர்வ் பாங்க் புருஷன் மிகவும் சந்தோஷமானான்.

'உங்க பொண்ணு பத்தின கவலையை இனிமே என்கிட்ட விட்ருங்க. உங்களை மாதிரி மாமனார் மாமியார் கிடைச்சதுக்கு நான்கொடுத்து வச்சிருக்கணும்' என்றெல்லாம் புகழ்ந்தான்.

அவள் ரிஸர்வ் பாங்க் புருஷன் அப்பாவுக்குக் கால் பிடித்து விட்டான். அம்மாவுக்கு கறி கொத்திக் கொடுத்தான். கேஸ் ஸ்டவ்வை சரி செய்து கொடுத்தான். வீட்டிற்கு காய்கறியும் மளிகை சாமான்களும் வாங்கிப் போட்டான். அவள் வீட்டுக்கணக்கையும் அப்பா வீட்டுக் கணக்கையும் தனித் தனியாக வைத்துக் கொண்டான்.

கடந்த ஒரு வரமாய் இந்த ரிஸர்வ் பாங்க் புருஷனும் இல்லாமல் போய் கம்ப்யூட்டர் பாடம் சொல்லித் தருகிற பெரிய இன்ஸ்டிடியூட் வைத்திருக்கிற புருஷனைக் கற்பனை செய்து வைத்திருந்தாள்.

இந்தப் புருஷனும் வீட்டோடு இருந்தான். வீட்டின் முன்பக்கம் இன்ஸ்டிடியூட்டும், பின்பக்கம் குடித்தனமும் வைத்திருந்தான். இவனும் நினைத்த போது வீட்டிற்குள் வந்து விஷமங்கள் செய்து விட்டு ஒன்றும் தெரியாதவன் போல் வேலைக்குப் போய் விடுவான்.

அவனைச் சுற்றியும் பெரிய கும்பல் இருந்தது. மிகவும் கெட்டிக்காரன் என்கிற பாராட்டுக்கள் இருந்தன. இவனும் சரமாரியாக ஆங்கிலத்தில் பேசினான். அற்புதமாக உடுத்திக் கொண்டான். ரிம்லெஸ் கண்ணாடி போட்டிருந்தான், ஒரே பார்வையில் ஒரே நிமிடப் பேச்சில், தான் பெரிய படிப்பாளி என்பதை உணர்த்தினான்.

அன்னபூரணி கற்பனை செய்கின்ற எல்லோருமே முழுமையான ஆண்களாக, திறமையான ஆண்களாக, பிரியம் நிரம்பியவர்களாக இருந்தார்கள். அவள் வீட்டோடு சகஜமாய்ப் பேசினார்கள். அவர்கள் வீட்டு மனிதர்களோடு அதிகம் ஒட்டாதவர்களாய் இருந்தார்கள். நிறைய சம்பாதித்தார்கள்.



ஆனால் நிஜத்தில் எப்படி இருக்கப் போகிறார்கள். என்று அவளுக்குத் தெரியவில்லை. நிஜத்தை யோசிக்க வேண்டிய அக்கறையும் அன்னபூரணிக்கு வரவில்லை.

இன்று காலை கூட காஃபி டம்ளரோடு அவள் வாசலுக்கு வந்தாள். வந்ததும் கற்பனையில் மூழ்கிப் போனாள். புருஷனோடு மெலிதாய் சண்டையிட்டாள்.

அந்த கம்ப்யூட்டர் ஆசிரியன் அதிகம் காமவேகம் உள்ளவனாக இருந்தான். அடிக்கடி தொந்தரவு செய்தான். மூளைக்கு அதிகம் வேலை கொடுப்பதால் தூங்க முடியவில்லை என்றும், தூங்குவதற்காக மனைவி சுகம் வேண்டுமென்றும் வாதாடினான். பிறகு எழுந்திருக்க முடியாமல் கஷ்டப்பட்டான்.

'அமிர்தமா இருந்தாலும் அளவோடு சாப்பிடணும். இப்படி கன்னாபின்னான்னு தின்னுட்டு கஷ்டப் பட்ருங்கன்னா நல்லாவா இருக்கு' மடியில் சுருண்டு தூங்கும் புருஷனைப் பார்த்து அவள் கோபித்துக் கொண்டாள்.

அவன் தளர்வோடு வாசற்பக்கம் போவதைக் கவலையோடு பார்த்தாள்.

''இன்னும் பத்து நாளைக்கு சோறில்லை. சோறு என்னா... டிபன் காபி கூட கிடையாது'' என்று பொருமினாள்.

இரவு பத்தரை மணிக்கு இன்ஸ்டிடியூட் கதவைப் பூட்டிக் கொண்டு அவன் வந்த போது 'கொஞ்சம் தலை புடிச்சு விடும்மா' என்று கெஞ்சிய போது வேறு வழியில்லாமல் செய்தாள்.

மடியில் தலை வைத்துப் படுத்திருந்தவன் நெஞ்சில் முட்ட ஆரம்பித்து விட்டான். புருஷன் முகம் மார்பில் பட்டதும் அன்னபூரணியாலும் தாங்க முடியவில்லை.

அவள் கற்பனைகள் தறிகெட்டு ஓடின.

'யம்மா' என்று அயரும் வரையில் தொடர்ந்தன.

இதையெல்லாம் யாரோடும் பகிர்ந்து கொள்ள முடியாது. நெருங்கிய தோழிக்குக்கூட சொல்ல முடியாது.

அன்னபூரணியை விட மோசமாக கற்பனை செய்து கொள்பவர்கள் பல ஆயிரம் பேர் ஊரில் இருப்பார்கள். ஆனால் வெளியே சொல்ல மாட்டார்கள்.

லேசாய் ஒரு பெண்ணிடம் சொல்ல முயன்ற போது இதெல்லாம் அசிங்கம் என்று எடுத்த எடுப்பிலேயே தூக்கியெறிந்து விட்டாள்.

ஆனால் நிஜ வாழ்க்கையில் அந்தப் பெண் ஒரே நேரத்தில் இரண்டு பேரைக் காதலித்துக் கொண்டிருந்தாள். அதில் ஒரு ஆள் திருமணமானவன்.

'எதற்கு திருமணமானவனைக் காதலிக்கிறாய்?' என்று கேட்ட போது 'ஒரு அனுபவம்' என்று கண் சிமிட்டினாள்.

இவள் கற்பனையே செய்ய மாட்டாள் என்பது பெரும் பொய்யாகத் தோன்றுகிறது.

அதற்குப் பிறகுதான் இப்படிப்பட்ட கற்பனைகளை எவரிடமும் சொல்லக்கூடாது என்ற முடிவும் ஏற்பட்டது.

அப்பா திருமணத்திற்குப் பார்த்துக் கொண்டிருக்கிறார். காசு சேர்த்து தயாராகிக் கொண்டிருக்கிறார்.

ஆனாலும் எதனாலோ அன்னபூரணியின் திருமணம் இன்னும் கைகூடவில்லை. இதுவரை நான்கு பேர் பெண்



பார்த்துவிட்டு போனார்கள். நான்கு பேரும் பிடிக்கவில்லை என்கிற பதிலை வெவ்வேறு விதமாக சொல்லி விட்டார்கள்.

எல்லா ஆண்களும் மணமகள் இன்னும் அழகாக இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். இன்னும் கலராக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள்.

அன்னபூரணி கொஞ்சம் கறுப்புதான். ஆனால் அகோரமல்ல. ஏன் அவர்கள் கண்களுக்கு அன்னபூரணி அழகாகத் தெரியவில்லை என்பது புரியவில்லை.

'உனக்குன்னு ஒருத்தன் பொறக்காதயா இருப்பான்.'

'அம்மா அடிக்கடி புலம்புவாள். அவளுக்குப் பிறந்தவன் அவளைச் சந்திக்கிற வரையில் இப்படி கற்பனையில் வாழ்வது அன்னபூரணிக்குப் பிடித்திருந்தது.

அன்னபூரணி வாசலில் உட்கார்ந்து கொண்டாள். இருள் இன்னும் பிரியவில்லை. மெல்லிய குளிர்காற்று வாசலைத் திறந்ததும் குப்பென்று சூழ்ந்து கொண்டது. படிகளில் கால்வைத்ததும் தொடைவரை ஊர்ந்தது. ஊ... ஊ...ஊ...என்று வினோதமாகக் குரல் கொடுத்துக் கொண்டே காபி டம்ளருடன் வாசலில் உட்கார்ந்தாள். காபியின் சூடும் சுவையும் வெளியே உள்ள குளிரும், ஈரமும் ஒரு கிறக்கமான சூழ்நிலையைக் கொடுத்தன.

அந்த பல மாடி குடியிருப்பின் பல வீடுகள் விழித்துக் கொண்டன. கணவனும் மனைவியுமாய் இரண்டு பேர் வெள்ளை ஷூக்களோடு வாக்கிங் போனார்கள். ஒரு வீட்டிலிருந்து சமஸ்கிருத ஸ்லோகம் கேட்டது. இன்னொரு வீட்டிலிருந்து ஓம் என்கிற சத்தம் மட்டும்ஒலிப்பரப்பாகிக் கொண்டிருந்தது. வேறொரு வீட்டில் குழந்தைகள் பால்கனியில் அமர்ந்து படிக்கத்துவங்கினார்கள். ஒன்பது ஒன்பதாய்க் குடித்தனங்கள் கொண்ட ஆறு கட்டிடங்கள் இணைந்த காம்பவுண்ட் அது.

பல பேர் வீட்டு சொந்தக்காரர்களாக இருக்க அன்னபூரணியின் அப்பா குடித்தனக்காரராக இருந்தார். இரண்டாயிரத்தைநூறு ரூபாய் வாடகை தர வேண்டிய இடத்திற்கு அன்னபூரணியின் அப்பா ஆயிரம் ரூபாய் தான் வாடகை கொடுத்தார்.

இந்த வீட்டுக்கு சொந்தக்காரர் இந்தியாவில் இல்லை. வெளிநாட்டில் இருக்கிறார். அலாஸ்கா என்கிற பனிப் பிரதேசத்தில் வேலை செய்கிறார். விமானம் ரிப்பேர் செய்யும் என்ஜினியராக வாழ்கிறார். வருடத்துக்கு ஒருமுறை சென்னை வந்து சில நாட்கள் தங்கிவிட்டுப் பிறகு திரும்பி விடுகிறார்.

அவரிடம் பத்தாயிரம் புத்தகங்கள் இருந்தன. அவை களைப் போட அவருக்கு மனம் வரவில்லை. அந்தப் புத்தகங்களை இந்த வீட்டில் வைத்துவிட்டு அவர் வெளிநாடு போய்விட்டார். புத்தகங்களுக்கும் வீட்டுக்கும் காவலாக அப்பாவை நியமித்திருந்தார்.

அப்பாவுக்கு பழைய புத்தக வியாபாரம். இந்த வியாபாரத்தை வெறும் குப்பையாகச் செய்யாமல் விதம் விதமாய் பிரித்துப் பட்டியல் போட்டு விரைவாக புத்த கத்தைத் தேடி எடுத்துத் தரும் வித்தையோடு கம்ப்யூட்டர் புத்தகங்களும் கதைப் புத்தகங்களும் அப்பாவின் கடையில் நன்கு வியாபாரம்.

சிலசமயம் எடை போட்டு எட்டணாவுக்கு வாங்கிய புத்தகத்தை இருபது ரூபாய்க்கும் முப்பது ரூபாய்க்கும் விற்றிருக்கிறார். அவர் பேச்சு சாமர்த்தியம் அவருக்கு அதிகமான கஸ்டமர்களைக் கொண்டு வந்து கொடுத்தது.

முப்பது வருட அனுபவம் நிறைய வாடிக்கையாளர் களை ஏற்படுத்தியிருந்தது, எட்டாவது படித்திருந்தாலும் அவர் ஆங்கில அறிவு பலரை வியக்க வைத்தது. அப்பாவுக்குக் கெட்டபழக்கம் எதுவுமில்லை.



புத்தகங்களுக்குப் பிறகு அவர் அம்மாவை அதிகம் நேசித்தார்.

அப்பா அம்மாவை நேசித்த வேகம்தான் அன்னபூரணி அடிக்கடி கனவில் மூழ்கக் காரணமாக இருந்தது.

இந்தக் குடியிருப்புக்குப் பத்து வருடங்கள் முன்பு பெட்டிப் படுக்கையோடு வந்தபோது அந்த சாமான் களைப் பார்த்து விட்டு அண்டை வீட்டார் முகம் சுளித் தார்கள். இதைவிட கிழிசலாய் ஒரு பாய் இருக்க முடியுமா என்று பேசினார்கள்.

வீடு சுதாரித்து சரியாக ஒரு வருடமாயிற்று. நார்க்கட்டிலைப் போட்டு விட்டு மரக்கட்டில் வாங்கவும், மர நாற்காலியை விட்டு விட்டு சோஃபாசெட் வாங்கவும் அதிகம் முயற்சி எடுக்க வேண்டியிருந்தது

ஆனால் ஒரு வருடத்தில் வீட்டின் முகமும் வாழ்க்கை முறையும் மாறிப்போயின.

வாழ்க்கைத்தரம் என்பது வெறும் நாற்காலி, மேஜை, கட்டில் மட்டுமல்ல. அது மனம் சம்பந்தப்பட்ட விஷயம். அதிகம் கூச்சலும் கோபமுமாய் இருந்த அன்னபூரணியின் வீடு, இந்தக் குடியிருப்பிற்கு வந்த பிறகு, அமைதியாகி விட்டது. எப்படி நாற்காலி, மேஜை கட்டிலுக்கு மற்றவர்கள் காரணமோ அதேபோல இந்த மனமாற் றத்திற்கும் நல்ல ஸத்சங்கம் காரணம்.

அப்பாவுடைய கடைக்கு படித்தவர்கள், பண்பாளர் கள் வருவார்கள். அப்பா அவர்களில் சிலரைத் தேர்ந் தெடுத்து, நாற்காலி கொடுத்து உபசரித்து, மின்விசிறியை சுழலவிட்டு அங்கேயே உட்கார்ந்து படித்துவிட்டுப்போக அனுமதிப்பார். அப்படி படித்துவிட்டுப் போகிறவர்கள் ஒருவருக்கொருவர் சந்தித்தால், இதைப் படியுங்கள்

அதைப் படியுங்கள் என்று பரிமாறிக் கொள்வார்கள். அப்பா அந்தப் பேச்சை உற்றுக் கேட்பார்.

அந்தப் பேச்சால் அவர் மனம் பக்குவமடைந்தது. சில சமயம் அப்படி படித்த பண்பாளர்கள் பேசுவதை அப்பாவிற்கு அருகேயிருந்து அன்னபூரணியும் கேட்டிருக்கிறாள்.

''நூறு வருஷத்துக்கு முன்னால, மகாத்மாகாந்திக்கும் முன்னால, பாஸ்கர சேதுபதின்னு ஒரு ராஜா அரிஜனப் பிரவேசம் செய்திருக்கிறார். நாடார் சமூகத்தை உயர்ந்த ஜாதி இந்துக்கள் மிகமோசமாக நடத்தியகாலம். ஆனால் காவலுக்கும், யுத்தத்திற்கும் நாடார்களைத்தான் இந்த உயர் ஜாதி இந்துக்கள் நம்பியிருந்தார்கள். அந்த காவல் படையை யுத்தமில்லாத காலத்தில் மிக இழிவாக நடத்தினார்கள்.

இது மன்னர் பாஸ்கர சேதுபதிக்குப் பிடிக்கவில்லை.

அந்த நாடார்களை அந்த காலத்தில் சாணார்கள் என்றழைத்தார்கள். அவர்களுடைய விசுவாசத்தை, இறை நம்பிக்கையை, வெகுளித்தன்மையை, வெள்ளை மனப் போக்கை பாஸ்கர சேதுபதி பார்த்து வியந்து வியந்து பேசுவாராம். இவர்களை ஏன் ஒதுக்கி வைத்திருக்கிறோம் என்று துக்கப்படுவாராம்.

தான் சாமி கும்பிட்டதும் கைதட்டி வாசலில் நிற்கின்ற நாடார் சமூக மக்களை திசைதிருப்புவாராம். அவர்களுக்கும் கற்பூரம் காண்பியுங்கள் என்று குருக்களிடம் சொல்வாராம். குருக்கள் அங்கிருந்தபடியே கற்பூரத்தைக் காட்ட, இவர்கள் கோயில் வாசலில் இருந்தே ஒற்றிக் கொள்வது போல பாவனை செய்வார்களாம். இந்த மரியாதைக்கே பாஸ்கர சேதுபதியை மிக உயிருக்கு உயிராய் நேசித்தார்களாம்.

இப்படி கற்பூரத்தை தொலைவிலிருந்து காட்டுவதை கூட வேறு கோயில்களில் அனுமதிப்பதில்லை. பாஸ்கர

30180
465457



சேதுபதி சொல்வதால் இது நடக்கிறது என்று இதைமிகப் பெரிய மரியாதையாக அந்த சமூகத்து மக்கள் இதை எடுத்துக் கொள்ள, பாஸ்கர சேதுபதி இதைக்கண்டு வியந்து, தன்மீது இவர்கள் காட்டும் விசுவாசத்திற்கு நெகிழ்ந்து போய் இவர்களை ஆலயப்பிரவேசம் பண்ண வேண்டும் என்று தீர்மானித்து, கமுதியில் ஆலயப் பிரவேசம் செய்ய, அன்றிரவு மிகப் பெரிய கலவரம் நடந்தது. உயர் ஜாதியினர் கிட்டத்தட்ட ஐநூறு நாடார் இன மக்களை வெட்டிச் சாய்த்தார்கள். குழந்தைகள், பெண்கள், ஆண்கள், கிழவர்கள், வாலிபர்கள் என்று பல பேரையும் குதிரையில் ஏறி வந்து குத்திக் கொன்றார்கள்.

இந்தக் கலவரத்தால் பாஸ்கர சேதுபதி மனம்நொந்து போய் அரச பதவியை விட்டுவிட்டு, சென்னைக்கு வந்து விட்டார், என்று சொல்வார்கள்.

இதைப் பற்றி அப்பாவின் எதிரில் மூன்று நான்
பேர்கள் உட்கார்ந்து பேச அப்பா கண்களில் கண்ண
வழிந்தது. பேசியவர்கள் பதறிப்போய் காரணம்
டார்கள்.

''நானும் அந்த இனத்தைச் சேர்ந்தவன்தான்
மூதாதையர்கள் எப்பேறுபட்ட துன்பத்தை
திருக்கிறார்கள் என்று கேட்டபோது மனசு
கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து
மனசு விம்முகிறது'' என்று முகம் புதைத்த
ராம்.

ஆனால், கடந்த நூறு வருடங்களி
மக்கள் மிக உயர்ந்த இடத்திற்கு வந்
படித்த பண்பாளர்கள் சிலாகித்துப்

அன்றையபேச்சு, அப்பாவின்
விட்டது. நாம் முன்னேறிவிட்
விட்டோம். வெறுமே கையில்
வைத்துக் கொண்டு அரசை

காலோடு ஓடுகின்ற ஆட்களாய் நாம் இல்லை. நம்மில் படித்தவர்களும், நல்ல வேலையில் இருப்பவர்களும், அற்புதமான வியாபாரிகளும், செல்வந்தர்களும் வந்து விட்டார்கள். எனவே, நம்முடைய எண்ண ஓட்டங்களை பேச்சுக்களை செயல்களை நல்லவிதமாகமாற்றிக்கொள்ள வேண்டியது அவசியம்.

இனிமேல், நான் உரத்த குரலில் எதுவும் பேசப் போவதேயில்லை. நான் எது சொன்னாலும் அமைதியாக அழுத்தம் திருத்தமாக சொல்லப்போகிறேனே தவிர, காட்டுக் கத்தலாய் நான் இனி கத்தவே மாட்டேன் என்று சத்தியம் செய்தார்.

வீடு ஆச்சரியப்பட்டது. அது எப்படி இருக்கமுடியும். இது உங்கள் இயல்பாயிற்றே என்று பதிலுக்கு கேள்வி கேட்டது. ஆனால், கடந்த ஏழு வருடங்களாக அப்பா அந்த சத்தியத்தை ஒருநாளும் மீறியதேயில்லை.

நாற்காலி, மேஜை, கட்டில், திரைச்சீலை என்று அலங்காரப் பொருள்களைவிட, இந்த மனமாற்றம் வீட்டின் வளர்ச்சியை அதிகப்படுத்தியது. அப்பாவின் அமைதியான தன்மை வீட்டிலுள்ள பெண்டிரை மலர வைத்தது. அந்த மலர்ச்சி அவர்களுடைய வேலைகளில் தெரிந்தது. வீட்டு நிர்வாகத்தில் வெளியாயிற்று.

ஒரு வீட்டிலுள்ள பெண்கள் பயமின்றி இருந்தால், அந்த வீடு சந்தோஷமாக இருக்கும். ஒரு வீட்டிலுள்ள பெண்கள் ஆண்களைப் பற்றி கவலையற்று இருந்தால், அந்த வீடு வெகுவிரைவில் நன்கு வளரும். ஒரு வீட்டிலுள்ள பெண்கள் அமைதியாக ஆழ்ந்து கவலையின்றி தூங்கினால் அந்த வீட்டில் செல்வம் பெருகும். சுபிட்சம் அதிகமாகும்.

அப்பாவுக்கு ஓரே ஒரு ஓட்டத்தில் இது புரிந்து போயிற்று. அவர் பெண்களை இன்னும் இனிமையோடு



நடத்தத் துவங்கினார். சிறிய விஷயங்களுக்கெல்லாம் வாய்விட்டு நன்குபாராட்டினார். வீடு குதூகலமடைந்தது. அப்பாவை தெய்வம் போல கொண்டாடியது.

ஆனால், இந்த நல்ல விஷயங்கள் வந்துதான் அன்னபூரணியின் கல்யாணம் உடனடியாய் நடப்பதற்கு தடையும் செய்தது. "எட்டுப் பவுன் நகை, பத்தாயிரம் ரூபாய்க்கு துணி, ஒரு வேளை காபி டிபன், ஒரு வேளை சாப்பாடு மேற்கொண்டு ஒரு நாள் ரூபாய் செலவு நான் கல்யாணத்தை தடதடன்னு செய்து முடிச்சு விடுவேன். அது முக்கியமில்லை. அன்னபூரணி சந்தோஷமா வாழணும். நம்ம வீடு இருக்கற மாதிரி, இன்னும் அமைதியான ஒரு வீட்டுக்கு அவ குடித்தனம் போகணும். அவளைப் புரிஞ்சுகிட்ட ஆம்பளையா, அவளைக் கொண்டாடற புருஷனா அவனுக்கு அமையணும். கொஞ்சம் காசு கூட ஆனாலும், நாள் கூட ஆனாலும், நான் நின்னு நிதானமா நல்ல பையனாப் பார்த்துதான் அவளுக்குத் தருவேன்," அப்பா உரக்க அறிவித்தார்.

வீடு அதை ஏற்றுக் கொண்டது. தானாக மேலே வந்து விழுந்த பல வரன்களைத் தட்டிக் கழித்தது.

அப்பாவின் இந்தக் கரிசனம், அப்பாவின் இந்த அன்பு, அப்பா வீட்டில் காட்டிய அக்கறை அன்னபூரணியைக் கனவு காணத் தூண்டியது. வெறுமே யாரோ ஒரு புருஷன் என்பது நகர்ந்து போய், தன் மனதுக்கேற்ற ஒரு கணவனை அவள் கற்பனை செய்ய ஆரம்பித்தாள். வெகுவிரைவாக, அடுக்கடுக்காக, நாள் கணக்காக, அழகாக, ஒரு தொடர்கதையைப் போல் அவள் தினமும் தன் கற்பனையை பலப்படுத்தி வந்தாள்.

பல பண வரவாலும், மனநிலையாலும் வீடு இந்த உயர்நிலைக்கு வரவில்லையெனில், அவள் திருமணம் எப்போதோ முடிந்திருக்கும். பதினெட்டு வயதில்மணைக்

கடை வைத்திருக்கும் ஒரு சொந்தக்காரர் பிள்ளைக்கு அவளைத் திருமணம் செய்து கொடுத்திருப்பார்கள், அவளுக்குக் குழந்தைகள் பிறந்திருக்கும். ஆனால், அவள் சந்தோஷமாக இருப்பாளா என்று தெரியாது.

இப்போது வீட்டின் அமைதி அவளை அழகியாய் வட்டமுள்ளவளாய் செய்திருக்கிறது. அவள் பேசுவதும், நடப்பதும், பார்ப்பதும், பழகுவதும் பார்க்கும் போது அவளுடைய ஜாதி எது என்று யாருக்கும் தெரியவில்லை. 'நீங்க பிராமினா' - சில பேர் கேட்டிருக்கிறார்கள்.

'இல்லீங்க' - அவள் தயங்கி பதிலளித்திருக்கிறாள்.

''உங்க பேச்சுல பிராமின் வாசனை வருது.''

''இல்லீங்க, எனக்கு நண்பர்கள் அதிகம். அதனால கொஞ்சம்... அப்பைக்கப்போ பிராமண பாஷை பேசிருவேன்.''

அவர்கள் வியப்போடு பார்த்தார்கள்.

அவள் வீடு பார்த்த உறவுகள், அன்னபூரணியின் அப்பாவை மிக அதிகமான வருவாய் கொண்டவர் என்று நினைத்தது.

'பழைய புஸ்தக வியாபாரம்தானே பண்றிங்க. அதுல இத்தினி காசு வருமா என்று ஆவலாகக் கேட்டது. அவர் சொல்லிய வருமானத்தை வைத்து, இந்த வீட்டினுடைய வளப்பம் எப்படி என்று யோசித்தது.

சேர்ந்தாப்போல, லட்சணமா ரெண்டு நாற்காலி சாமான் இருந்துட்டா, பணக்காரன்னு நம்ம ஆட்களுக்கு நினைப்பு. தரையிலேயே உட்கார்ந்து பழக்கப்பட்டவங்க இல்லையா.

அதனால, மெத்து மெத்துன்னு சோஃபா போட்டா ரொம்ப விலையோ, ரொம்ப வருமானமோ அப்படின்னு



பார்க்கறாங்க.. 'இது எல்லாம் செகண்ட் ஹாண்ட்ல வாங்கினது. நமக்குத் தெரிஞ்ச ஒருத்தரு எல்லாத்தையும் விட்டுட்டு லண்டன் போனாரு. நான் வித்துத் தரேன்யா அப்படின்னு வாங்கினேன். விக்க முடியலை. நானே வச்சுக்கிட்டேன். இருந்தாலும் ஓரளவு காசு போட்டுக் கொடுத்தரணும்னு, ஐயா, அது விக்க முடியலை. நானே வச்சுக்கிட்டேன். இந்தாங்க காசுன்னு கொடுத்தேன். நீங்களே வச்சுக்கறதா இருந்தா, எனக்கு காசு வேண்டாம், வைச்சுக்கங்க, அப்படின்னு சொல்லிட்டார்.

என்னுடைய பல நல்ல விஷயங்களுக்கு, என்னுடைய கஸ்டமர்கள் காரணம். அவர் புள்ள இஞ்ஜினியரிங் படிக்கிறான். அவனுக்கு ஒரு புத்தகம் தேவைப்பட்டது. மெட்ராஸ் முழுக்க அலைஞ்சு நான் வாங்கிக் கொடுத்துட்டேன். அவனுக்கு ரொம்ப சந்தோஷம். என் பேரைச் சொல்லி இந்த மாதிரி உண்டான்னு வாய் நிறைய கொண்டாடினாங்க.

அந்த சோஃபாக்களை வர்றவங்க. போறவங்க பார்த்துட்டு நான் என்னமோ நிறைய சம்பாதிக்கிறதா நினைச்சுட்டாங்க. நான் சம்பாதிச்சதெல்லாம் நல்ல பேரு நம்பிக்கை, நாணயம் இவ்வளவுதான்.''

வீட்டுக்கு சோஃபா போல், மேஜை நாற்காலியும், நல்ல மரக்கட்டிலும், உயர்ந்த மரபீரோவும் அப்பா நண்பர்கள் மூலமாகத்தான் வாங்கி வந்தார். நல்ல விஷயங்கள் வந்து சேரவேண்டுமென்று விதி இருப்பின், அது ஏதோ ஒருவகையில் வந்து சேருமென்று தெளிவாகப் பேசினார். இப்படி பீரோவும், கட்டிலும், சோஃபாவும் வந்தது போலவே அன்னபூரணிக்கு புருஷனும் வருவான் என்று உவமானம் காட்டினார்.

ஒரு வாரம் கழித்து, அன்னபூரணிக்கு ஒரு வரன் வந்தது, 'ரொம்ப நல்ல பையன், ரொம்ப நல்ல பையன்.

உன் பொண்ணுக்குப் பார்க்கலாம்' என்று ஒரு வாடிக்கையாளர் சொன்னதாலேயே அவனை வரவேற்க வீடு தயாராக இருந்தது.

அவன் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில், வீட்டு வாசலில் தாயாரோடும், தகப்பனாரோடும், பெரியம்மாவோடும், பெரியம்மாவின் மகனோடும் வந்து நின்றான். அவர்கள் வழக்கப்படி இல்லாமல், மேலே போய் அப்பாவின் கால்களைத் தொட்டு நெற்றியில் வைத்துக் கொண்டான்.

அப்பா ஆடிப்போனார். ''இல்லீங்களே. நம்ம இப்படி செய்யறது வழக்கம் இல்லீங்களே'' என்று கை கூப்பினார். ''உங்களை எனக்குத் தெரியும். ஐயா நீங்க பத்திரிகைக் கடை வைச்சிருக்கறதை பல பேர் சொல்லியிருக்காங்க. நானும் ரெண்டு தடவை கடைக்கு வந்திருக்கிறேன். புத்தகங்கள் வாங்கியிருக்கிறேன். இந்த உத்யோகம் கிடைச்சதே உங்க கடையில வாங்கின புத்தகத்தாலே'' என்று கைகூப்பினான்.

அப்பா, அவனை உட்காரச் சொன்னார். ஆழ்ந்து பார்த்தார். கதவிடுக்கு வழியாய் அன்னபூரணியும் அவனை வியப்போடு பார்த்தாள்.

அவன் பேசத் துவங்கினான். ''என் பேர் அருணாசலங்க. நான் தென்னிந்திய இரயில்வேயில் இருக்கேன். கமர்ஷியல் இன்ஸ்பெக்டர். செங்கல்பட்டுங்க, எனக்கு இடம் செங்கல்பட்டுலேர்ந்து மெட்ராஸ் வரைக்கும் பதினேழு ஸ்டேஷனுங்க. பதினேழ்லேயும், நம்ம கண்ட்ரோலதாங்க வருது. வேலைக்கு சேர்ந்து ஒன்பது வருஷம் ஆச்சுங்க' மூணு பிரமோஷன் பார்த்துட்டேன். எஸன்ஷியல் ஸ்டாஃப் அப்படிங்கிறதால,குவார்ட்டர்ஸ் கொடுத்திருக்காங்க. தாம்பரத்துல இருக்குங்க குவார்ட்



டர்ஸ். ரொம்ப நல்லபடியான குவார்ட்டர்ஸுங்க. அம்மாவும், அப்பாவும் என் கூடத்தான் இருக்காங்க.

இவங்க பெரியம்மா. வரப்போக இருப்பாங்க. இவரு பெரியம்மா புள்ளைங்க. ஒடு, செங்கல், சவுக்குக்கட்டை வியாபாரம் செய்யறாங்க. இவங்க வியாபாரமும் நல்லபடியா போகுது.

உங்களைப்பத்தி ஒரு இரயில்லே அதிகாரிதாங்க சொன்னாரு. அவங்களுடைய தங்கச்சியை இந்தப்பக்கம் குவார்ட்டர்ஸுல குடுத்திருக்காங்க. அவங்க உங்களைப் பார்த்திருக்காங்களாம். உங்க கடைக்கு வந்திருக்காங்களாம். உங்களோட பேசியிருக்காங்களாம். அன்னபூரணியை நல்லாத் தெரியுமாம். உனக்கு ஏத்தப் பொண்ணுன்னு பலதடவை சொன்னாருங்க. அதனால தான் நான், தயக்கம் காட்டாத. ஆள்விட்டு அனுப்பாத, நேரயே வந்துட்டேன்.

சீர், செனத்தியைவிட நல்ல குடும்பத்து சம்பந்தம் முக்கியம்னு நானும் நினைக்கறேன். எங்க வீட்டுல அப்பாவும், அம்மாவும் நினைக்கறாங்க. நான் அவங்களுக்கு ஒரே பையன். கூடப் பொறந்தவங்க யாரும் கிடையாது.

ஆனா, பெரியம்மாவுக்கு, இவரைத்தவிர இன்னும் ரெண்டு பொண்ணுங்க. ரெண்டு பொண்ணுங்களையும் நல்லபடியாத்தாங்க கல்யாணம் பண்ணிக் கொடுத்தோம். ஆனாலும் அவங்க அத்தினி சந்தோஷமாக இருக்கறதா சொல்லமுடியாது. ரொம்ப காசு, பணம் வேணும்னு எதிர்பார்த்து, அதைக் கொடுக்காததால, பெண்களைத் தொந்தரவு பண்ணி பல்வேறு பிரச்சனையாயிடுச்சுங்க. அந்தப் பிரச்சினையெல்லாம் நம்ம வீட்டுக்கு வரப்படாது. நாம செய்யப்படாது என்கிற தீர்மானத்துலதான் தெளிவுள்ள பொண்ணா. கொஞ்சம் நல்லா யோசிக்கிற குடும்பமா பார்க்கணும்னு நினைச்சேன். இதுக்காகவே

கல்யாணத்தை ஒருவருஷம் தள்ளிப் போட்டேங்க. இது தெரிஞ்சு கூட வேலை செய்யற அந்த அதிகாரி, உங்க குடும்பத்தைச் சொன்னாரு.

உள்ளுக்குள்ளே நுழைஞ்சபோதே, இது நம்ம மாதிரியான வீடு இல்லை. வித்தியாசமான வீடுன்னு தெரிஞ்சு போச்சுங்க. இந்தமாதிரி இயற்கை பெயின்டிங், ஆறு, குளம்னு யாருங்க நம்ம இதுல மாட்டி வைக்கப் போறாங்க. இந்த பெயின்டிங் ரொம்ப நல்லா இருக்குங்க. அதேமாதிரி, தஞ்சாவூர் படமும் ரொம்ப பிரமிப்பா இருக்குங்க,'' அவன் வீட்டினுடைய ஒவ்வொரு விஷயத்தையும் வியந்து போற்றினான்.

அன்னபூரணி கதவிடுக்கிலிருந்து வெட்கப்பட்டாள். அந்த, அவன் பாராட்டிய பெரும்பான்மையான விஷயங்கள் அவள் கொண்டுவந்து மாட்டியவை. அவளால் அங்கீகரிக்கப்பட்டவை. அவள் ஆசைப்பட்டவை.

எங்க வீட்டுலயும் இப்படியெல்லாம் மாட்டணும்னு ஆசைங்க. ஆனா, நான் காலையில போனா ராத்திரி வர்றவன். இதுக்கெல்லாம் நேரம் இருக்கிறதில்லை.

வேற யாரும் நம்ம வீட்டை இப்படி வைச்சுக்க மாட்டாங்களான்னு ஒரு ஆசை. ஆனா, அம்மாவுக்கும், அப்பாவுக்கும் அவ்வளவு தெரியாது. நிறைய பொம்மைங்களா வாங்கிவந்து, முருகன் பொம்மை, வெங்கடாஜலபதி பொம்மைன்னு ஒரு ஷெல்ஃப் நிறைய, இன்னிக்கு உங்க வீட்டுல கொலுவா அப்படின்னு கேக்கற அளவுக்கு பொம்மை வாங்கி வைச்சிருக்காங்க. என்ன வாங்கறதுன்னு அவங்களுக்குத் தெரியலீங்க சரி. அவங்க சந்தோஷத்தைக் கெடுக்க கூடாதுன்னு நானும் விட்டுட்டேன். இந்த சோஃபா எங்க வாங்கனீங்க ரொம்ப நல்லாருக்குதே.''

அப்பா சோஃபா வந்த விதத்தைச் சொன்னார்.



''அப்படீங்களா, நீங்க வீட்டுக்கு நடுவுல இருக்கீங்க. நாலு பேரு விவரம் கேட்டு செய்யலாம். நான் இருக்கறது கொஞ்சம் ஒதுக்குப்புறம். அதனால எங்கேயிருந்து வாங்கறது, என்னவாங்கறதுங்கிறது கூட எனக்குத்தெரியலீங்க. எனக்கு வரமனைவி இந்த மாதிரி டேஸ்ட் உள்ள லேடியா இருந்தா எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குங்க. இதைச் சொல்லி கேட்டபோதுதான், உங்க பொண்ணு பேரை நம்ம அதிகாரி சொன்னாரு. நான் பார்க்கப் போறேன்னுசொன்னேன். இவங்களும் கூடவந்துட்டாங்க.

இந்த விஷயத்தை இன்னும் முறையா செய்யணும் அப்படின்னு எங்கம்மாவுக்கு ஆசை. நான்அந்த முறையெல்லாம் வேண்டாம். நேரடியா போய், அவங்க குடும்பம் பிடிச்சிருந்தா பொண்ணு கேட்போம் அப்படினு சொல்லிட்டேன். நான் வந்தது தப்புங்களா.'' அப்பா இல்லையென்று தலையாட்டினார். அம்மாவும் வந்தது சந்தோஷம் என்று சொன்னாள்.

''இதெல்லாம் இப்ப வந்த சௌகரியம்தாங்க. நான் ஆரம்ப காலத்துல ரொம்ப கஷ்டப்பட்டவங்க. என்னை விட என் அப்பாவும், அம்மாவும் பேரவஸ்தை பட்டிருக்காங்க. ரெண்டு ரூபா காசுக்கு ரொம்ப வேதனைப் பட்டிருக்காங்க. இதே மாதிரி ஒரு குடியிருப்பு, வெஸ்ட் மாம்பலத்துலங்க. ஊருல இருந்து அங்க வந்து இறங்கி, என்ன செய்யறதுன்னு தெரியாத கையேந்தி சாப்பாட்டுக்குப் பிச்சை கேட்டு, அவங்க ஐயோ, பாவம்னு கொடுத்து, அடடா அப்படின்னு சோறு போட்டு, சோறு போட்டாங்களே, வெறுமே போகக் கூடாதுன்னு சொல்லி அங்கேயே உட்கார்ந்து வீடு பெருக்கி, தென்னந் துடைப்பம் அடுக்கிக் கொடுத்து அந்த மாதிரி வேலைகள் செய்ய, இருந்து வேலை செய்யுங்களேன்னு அந்த வீட்டுல இருக்கறவங்க சொல்ல, மொன்ன மொன்ன நாத்து நாற்பது குடித்தனத்துக்கு அப்பா காவக்காரராய் இருந்து

அம்மா வேலையானாய் இருந்து கொஞ்ச கொஞ்சமாய் என்னைக் கஷ்டப்பட்டு படிக்க வைச்சாங்க. நான் படிச்சதெல்லாம் இந்த மாதிரி குடியிருப்புக்கு நடுவுல இருக்கற கொட்டகையிலதான்.

இழே கார் ஷெட் இருக்குமல்லே, அங்க ஸ்கிரீன் போட்டு,கும்மாதிரி நாங்களா புழங்கிக்கிட்டு இருப்போம். அங்கதான் உட்கார்ந்து படிச்சேன். அங்கதான் உட்கார்ந்து சாப்பிடுவேன். எங்க வீட்ல சமைச்சதுங்கிறது ரொம்ப குறைச்சல்தான். குடியிருப்பில் இருக்கிறவங்க, ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொருத்தங்க சாப்பாடு போடுவாங்க. அவங்கதான் நான் என்ன படிக்கணும்னு சொன்னாங்க. அவங்கதான் எனக்கு டியூஷன் வைச்சாங்க. அவங்கதான் எனக்கு சட்டைத் துணிமணி வாங்கி கொடுத்தாங்க.

ஒரு வீடு சட்டைத்துணி வாங்கி கொடுக்கும். ஒரு வீடு ஷூ வாங்கிக் கொடுக்கும். ஒரு வீடு புஸ்தகம் வாங்கிக் கொடுக்கும். இன்னொரு வீடு பென்சில், பேனா வாங்கிக் கொடுக்கும். எங்க அப்பா காசு போட்டு எனக்கு வாங்கிக் கொடுத்ததுங்கிறது ரொம்பக் குறைச்சலுங்க. பல பேர் பலவிதமான உதவி செய்து நான் படிச்சேன். ஆனா, நல்லா படிப்பேங்க. இந்த நல்லா படிக்கணும்ங்கற புத்திக்கும் அந்தக் குடியிருப்புல இருக்கறவங்கதான் காரணம்.

அந்த குடியிருப்புப் பசங்க ஒருத்தருக்கொருத்தர் போட்டி போட்டு படிப்பாங்களா, அந்தப் போட்டியில நானும் கலந்துகிட்டேன். தள்ளி நின்னு, அதிகமாப் பேசாத, அதே சமயத்துல மனசுக்குள்ள போட்டியை வளர்த்துக்கிட்டேன். மனசுக்குள்ள போட்டியை வளர்த்துகிட்டு அவங்களுக்கு இணையா படிக்க ஆரம்பிச்சேன். அவங்களைத் தாண்ட முடியலைங்க அவங்களுக்கு இணையாய் படிக்க முடிஞ்சது. அறுபது மார்க் எழுபது



மார்க் ரொம்ப சுலபமா வாங்க முடிஞ்சது. ப்ளஸ் டூவில் நான் தொண்ணுத்து நாலு மார்க் வாங்கினேன். எல்லாரும் இஞ்ஜினியருக்கு டாக்டருக்குப் படிக்கணும்னு பேசிக்கிட்டிருந்தப்போ நான் காமர்ஸ் வணிகவியல் பாடம் எடுத்தேன், எனக்கு ஆடிட்டர் ஆகணும்னு ஆசை. நம்ம கம்யூனிட்டில நிறைய வியாபாரிங்க. அவங்களுக்கு கணக்குவழக்கு வைச்சுக்கறதுக்கு நாம உதவி செய்யணும்னு எனக்கு ரொம்ப விருப்பம். அதனால பி.காம். படிச்சு எம்.காம் படிச்சபோது ரயில்வே'ல வேலை கிடைச்சது. எம்.காம் பிரைவேட்டாக் கூட எழுதி பாஸ் பண்ணிக்கலாம்னு சொல்லிட்டு, ரயில்வே வேலையில் சேர்ந்துட்டேன்.

ராஜமுந்திரியில நாலு வருஷம் வேலை செய்தேன். பிறகு, மெட்ராஸுக்கு மாத்திகிட்டேன். பிறகு, செங்கல்பட்டுக்கு வந்துட்டேன். இந்த ரயில்வே வேலை ரொம்ப சந்தோஷமா இருக்கு. நாலாவித மனுஷங்களைச் சந்திக்க முடியுது. ரொம்ப சேலஞ்ஜிங்கா இருக்கு. வீட்டைப் பார்த்துக்கறதுக்கு ஒரு நல்ல மனைவி கிடைச்சுட்டா, நான் இன்னும் கூடுதலா சம்பாதிச்சு இன்னும் சந்தோஷமா இருக்கலாம்னு தோணிச்சு. உங்க பொண்ணைப் பாக்கலாங்களா?'' மிக ஆவலாக அவன் கேட்டான்.

சம்பிரதாயமே காட்டாத அவன் ஆவல், அவர்களுக்கு சந்தோஷமாக இருந்தது.

அவனுடைய பெரியம்மா மெல்லக் கனைத்துக்கொண்டாள். எல்லார் கவனத்தையும் திருப்பினாள். ''அப்படி தடுக்குன்னு கேட்கக் கூடாதுடி கண்ணு. அவங்க இஷ்டப்பட்டாத்தான் பொண்ணை அனுப்புவாங்க. அவங்களுக்கு நம்பளைப் பிடிச்சிருந்தாத்தான் பொண்ணைக் காட்டுவாங்க. நாமளாப் போய்ப் பொண்ணைக் காட்டுங்க, பொண்ணைக் காட்டுங்கன்னு ஆவலா கேட்கக்கூடாது''

அப்பா ஒரு கணம் அந்த பெரியம்மாவை உற்றுப் பார்த்தார். அவள் பேச்சுக்கடியில் ஒரு கரகரப்பு, ஒரு கோபம், ஒரு ஆத்திரம், தடக்கென்று வெட்கமில்லாமல் கேட்கிறாயே, எங்கள் மானம், மரியாதையை அடகு வைக்கிறாயே என்கிற பொசபொசப்பு தெரிந்தது.

''அப்படியொண்ணும் இல்லிங்க, பொண்ணை மறைச்சு வைச்சு வளர்க்கறோமா. தனியா கன்னிமாடம் கட்டி வளர்க்கறோமா. அவ கடைக்கு, வாசலுக்கும் போறவ தானே. அவளை இங்க கொண்டாந்து காட்டறதுக்கு என்ன. பார்க்க முடியாதபடியா இருக்கு. இவர் கேட்டதுல ஒண்ணும் தப்பில்லை.

நான் பேசறதை பேசி முடிச்சுட்டேன். பார்க்க வந்த விஷயத்தைப் பார்த்துட்டு நான் கிளம்பிப் போறேன்னு தெளிவாச் சொல்றார். நல்லா தானே இருக்கு அவர் பேசறது. அம்மாடி...அன்னபூரணி...வா...''

அன்று அன்னபூரணி சாதாரணமாய் உடுத்திக் கொண்டு, தலைநிறைய மல்லிகைப்பூ வைத்துக்கொண்டு, நெயில்பாலிஷ் சுத்தமாகப் போட்டுக் கொண்டு, அடக்கமாய் ஹாலுக்கு வந்தாள். அவனைப் பார்த்துக் கைகூப்பினாள். மெல்லச் சிரித்தாள். அவன் தாய், தகப்பன் காலிலும் பெரியம்மாவின் காலிலும் வணங்கி எழுந்தாள். ஓரமாகப் போய் அப்பாவுக்குஅருகில் நின்று கொண்டாள்.

''அன்னபூரணி, காலேஜ் படிக்கறீங்களா?'' அவன் கேட்ட விதம், பெயர் சொன்ன விதம் அவளுக்குப் பிடித்திருந்தது.

'இல்லை' என்று தலையசைத்தாள். பெரியம்மாவை ஒருமுறை பார்த்துக்கொண்டாள். அவளுக்கு அன்னபூரணி அங்கே நிற்பது பிடிக்கவில்லை என்று முகத்தில் தெரிந்தது.



''ஏன் படிக்கலைங்க.''—அவன் ஆதுரமாய்க் கேட்டான்

''போதும்னு தோணிச்சுங்க. எனக்கு வேலைக்குப் போறதுக்கு விருப்பமில்லை. வீட்டோடு இருக்கணும்னு தான் ஆசை. அதனால சமைக்கிறதுக்கும், வீட்டுவேலை பண்றதுக்கும் அம்மாகிட்ட கத்துக்கிட்டேன். அது தவிர? அம்மாவுக்குக் கொஞ்சம் உடம்பு முடியலை. நான் கூடமாட வேலை செஞ்சாத்தான் வீடு கொஞ்சம் நல்லா இருக்கும்னு பட்டுது?''

''அடடே, என்ன உடம்புக்கு?''

''கொஞ்சம் ஆஸ்த்மா. பனிக்காலத்துல சிரமப்படுவாங்க. மத்த நேரத்துல நல்லா தான் இருப்பாங்க''

''ஆஸ்த்மா பரம்பரை நோயா.'' அந்த பெரியம்மாள் தடக்கென்று கேட்டாள்.

''இல்லை, பரம்பரை நோயில்லை''—அவன் பதில் சொன்னான். ''அலர்ஜி இருந்தா, யாருக்கு வேணா வரலாம். ரெண்டு நாள்லகூட ஆஸ்த்துமா வரலாம்'' அவன் பெரியம்மாவைப் பார்த்து வேகமாகப் பதில் சொன்னான். பெரியம்மாவிற்கு, அவர்களை நோக்கிக் கேட்ட கேள்விக்கு அவன் பதில்சொன்னது பிடிக்கவில்லை.

''பலகாரமெல்லாம் செய்யக் கத்துக்கிட்டியாம்மா.'' பெரியம்மா மறுபடியும் ஆரம்பித்த போது, வீடு அவள் கேள்விக்கு யார் பதில் சொல்வது என்று தெரியாமல் மௌனமாக இருந்தது.

''உன்னையத்தாம்மா கேட்கறேன். பலகாரம் செய்ய கத்துக்கிட்டியா.'' அவன் அன்னபூரணியை நோக்கிக் கேட்டான்.

"நல்லா செய்யும். பலகாரம் செய்யறதுதான் படிப்புன்னு சொல்லி, மேற்கொண்டு படிக்காதவிட்டோட இருந்து ஒவ்வொரு விஷயமாக கத்துகிட்டுது. அற்புதமா பலகாரம் செய்வா" அன்னபூரணியின் அம்மா உரத்த குரலில் தீர்மானமாகச் சொன்னாள்.

"இதை அவளே சொல்ல வேண்டியதுதானே." பெரியம்மா முணுமுணுத்தாள்.

"நீங்க அழுத்தந்திருத்தமா கேட்டவுடனே, அதே ரீதியா பதில் சொல்றதுக்குக் கொஞ்சம் பயந்தது. ஏதோ தெரியும்னு பதில் சொல்லவும் அவளுக்குப் பிடிக்கலை. அதனாலதான் அவளுக்குப் பதிலா நான் சொன்னேன். தானே சொல்லிக்க முடியுமா, நல்லா பண்ணுவேன், நல்லா பண்ணுவேன்னு. அவள் நல்லா பண்ணுவான்னு நான் சொன்னாதான் நல்லா இருக்கும்" அம்மா சிரித்தபடி சொன்னாள்.

இந்த பதிலும் பெரியம்மாவிற்குப் பிடிக்கவில்லை.

பெண் பார்க்க வந்த அருணாச்சலம் பேச்சின் திசையை மாற்ற விரும்பப்பட்டான்.

"என்னைப் பத்தியும் விசாரியுங்கய்யா. ரயில்வேயில் யாரைக் கேட்டாலும், என்னைப் பத்தித் தெள்ளத் தெளிவா சொல்லிடுவாங்க. ரயில்வேயில் மூணு யூனியன் இருக்கு. மூணு யூனியனில் இருக்கறவங்களுக்கும் எம் பேரு நல்லாத் தெரியும். நான் உத்தியோகத்தைத் தவிர, யூனியன்லேயும் தீவிரமா ஈடுபட்டிருக்கேன். அதனாலயும் வீட்டிற்கு வர கொஞ்சம் தாமதம் ஆவுது. இது உழைக்கற காலம். உழைச்சா என்னான்னு பத்து மணி நேரம், பன்னெண்டு மணி நேரம் வெளி வாசல்னு சுத்திட்டு வருவேன். அன்னபூரணி, நீங்க நல்லா, நிறைய படிப்பீங்களா. படிக்கிற டேஸ்ட் உண்டுங்களா."



அன்னபூரணி பதில் சொல்வதற்குள் அப்பா வாய் திறந்தார். "ஆயிரம் புஸ்தகத்துக்கு நடுவுலதான் அன்னபூரணி பொறந்தது. அதைக் கொண்டாந்து போட்ட போது வீடு நிறைய புஸ்தகம்தான் இருந்தது. புஸ்தகம் இருந்த இடத்துல கொஞ்சம் எறும்புங்க நடமாட்டம் இருக்கத்தான் செய்யும். பச்சப்புள்ள வாசனைக்கு எறும்புங்க, தொட்டில் பக்கம் திரும்பிடப் போகுதேன்னு நான் புஸ்தகத்தையெல்லாம் வேற ஒரு இடத்துக்கு மாத்தினேன். அந்த இடம்தான் இப்ப இருக்கற கடை. அது மாத்தின வேளை, ரொம்ப நல்ல வேளை. கபகபன்னு கடை சூடு பிடிச்சிருச்சு. சும்மா பூட்டி வைச்ச கடை, ஒரு நாலு மாசம் உபயோகப்படுத்திக்கிறேன் அப்படின்னுதான் குறைச்சலா அட்வான்ஸ் கொடுத்தேன். அதுதான் கடைன்னு நினைச்சுட்டு, பல கஸ்டமர்ஸ் வரவே மாத்தறதுக்கு இஷ்டமில்லாம, பெருந்தொகையை கடனா வாங்கி, அவருக்கு இன்னும் கூட அட்வான்ஸ் கொடுத்தேன். ஆனா, ஒன்றரை வருஷத்துல எல்லா கடனும் அடைஞ்சு கடைக்கு வாடகை மட்டும் மாசா மாசம் கொடுக்கறதுன்னு முடிவாச்சு. அன்னிக்கு பெரிசாத் தெரிஞ்ச வாடகை, இன்னிக்கு ஒண்ணுமே இல்லாதயா ரொம்ப சல்லிசா இருக்கு. அதைத் தவிரவும் அப்படி ஒரு இடத்துல ஆயிரம் ஜனம் எப்பவும் நடமாடிக்கிட்டு இருக்கிற இடத்துல, ஒரு புஸ்தகக் கடைங்கிறது இன்னிக்கு ரொம்பப் பெரிய விஷயம். என் கடைக்கும் அன்னபூரணி வயசாச்சுன்னா பார்த்துங்களேன்" அப்பா சிரித்தபடி சொன்னார்.

"நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லலையே... அன்னபூரணி படிப்பாங்களா?"

"படிப்பேங்க. எனக்குன்னு சில புஸ்தகங்கள் அப்பா எடுத்துட்டு வருவார். சில கதைப் புஸ்தகங்கள் படிப்பேன்.

சில வரலாறு நூல் படிப்பேன். நான் அதிகமாகப் படிக்கிறது சாப்பாடு சம்பந்தமான நூல்கள். புதுசு, புதுசா சாப்பாடு செய்து பாக்கறது எனக்கு ரொம்பவும்பிடிக்கும். அது அப்பா கொண்டு வந்த புஸ்தகத்திலேர்ந்து எடுத்து, தனியா குறிப்பு வைச்சு, அந்தக் குறிப்பெல்லாம் எடுத்து அப்பா தனியா ஒரு புஸ்தகம் போட்டாரு. மற்ற புத்தகங்களைவிட இந்த புஸ்தகம் ரொம்ப நல்லா விலைக்குப் போவுது.''

''அட, உங்க பேர்ல போட்டீங்களா.''

''இல்லை, எங்க அம்மா பேருல போட்டோம். ஆனா, எழுதினதெல்லாம் நான்.''

''ஏன், உங்க பேருலயே போட்டிருக்கலாமே.'' அவன் ஆவலோடு வினவினான். அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

''அது ஒண்ணுமில்லீங்க'' அன்னபூரணியின் அப்பா ஆரம்பித்தார். ''அம்மாளும், பொண்ணும் அந்த பதார்த்தம் எப்படி பண்றது, இந்தப் பலகாரம் எப்படி பண்றது அப்படின்னு பேசிண்ணிருப்பாங்க. காரசாரமா சண்டை கூட போடுவாங்க. தடுக்குன்னு ஒருநாள் எல்லாத்தையும் எழுதி, அச்சுக்குக் கொடுத்து ப்ரூப்பா கொண்டாந்து நான் கொடுத்தபோது, அம்மா பொண்ணுன்னு ரெண்டு பேருமே ரொம்ப சந்தோஷமாயிட்டாங்க. பொண்ணு வந்து ப்ரூஃப் திருத்த ஆரம்பிச்சது. யார் பேருடி போடப் போறேன்னு அம்மா கேட்டாங்க. அம்மா அப்படி கேட்டவுடனேயே பொண்ணுக்கு என்னமோ போல ஆயிடுச்சு. ஏம்மா, நான்தானே எழுதினேன். எம்பேருதான் வரும்னுச்சு. ஏண்டி, நானும் கூட இருந்தேனே...எல்லாப் பலகாரமும் செய்து பார்த்தேனே...எம்பேர் போடக் கூடாதா அப்படின்னு எம்பொண்டாட்டி கேட்டா. எதுக்கும்



ஆசைப்படாத எம்பொண்டாட்டி இதுக்குப் போய் ஆசைப்படறாளேன்னு எனக்கு ஆச்சரியமா இருந்தது. அப்பத்தான் எம்பொண்ணு, ரொம்பப் பெரிய மனசா, அம்மா, எம்பேரு வேணாம். இது முழுக்க முழுக்க நீ செய்தாகவே இருக்கட்டும். உன் காரியமாகவே இருக்கட்டும். உம்பேரே வரட்டும் அப்படின்னு சொல்லி, தன் பேரை அடிச்சுட்டு அம்மா பேரை அழகா எழுதி, ஒரு போட்டோவும் பிளாக் எடுத்துக் கொடுத்தது. இதுதாங்க புஸ்தகம். இது ரெண்டுபேரு உழைப்பும்தான். ஆனா, பொண்ணு ரொம்ப சந்தோஷமா அம்மாவுக்கு விட்டுக் கொடுத்தது. அது விட்டுக்கொடுத்த நாள்லேர்ந்து என் பொண்ணு பத்தி எனக்கு ரொம்ப மரியாதை.''

அவன் புத்தகத்தை வாங்கிப் பார்த்தான். புரட்டினான். சுறாப்புட்டு, நண்டுக்குழம்பு, கோலா உருண்டை என்று விதவிதமான உணவு வகைகள் இருந்தன. மேலோட்டமாகப் படித்தான். முதல்பக்கம் திருப்பி அன்னபூரணி அம்மாவின் படத்தையும், அவள் பெயரையும் படித்தான். 'இந்தப் புத்தகம் நான் வைச்சுக்கிறேங்க...எனக்கு இது பார்த்தவுடனேயே, எங்க வீட்ல கொடுத்து செய்யச் சொல்லணும்னு ஆசையாயிருக்கு...''

அவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.

''இதுக்கு என்ன விலைன்னு சொன்னீங்கன்னா...?''

''ஐய்யய்யோ, சும்மா இருங்க...விலையெல்லாம் இதுக்குப்போய்...நீங்க வாங்கிக்கறேன்னு சொன்னதே பெருசா இருக்குது'' என்று அப்பா பரபரத்தார்.

அந்த வீட்டுக்குள் மிகமிக சுமுகமான ஒரு உறவு வந்தது.

அன்னபூரணியின் தாயார் மிகவும் சந்தோஷமடைந்தான். தன்னைப் பற்றி அவர்கள் உயர்வாக நினைத்துக்

கொள்கிறார்கள் என்று பெருமிதம் அடைந்தான். அன்ன பூரணி தன் தியாகத்தை அவர்கள் புரிந்துகொண்டார்கள் என்று சந்தோஷமடைந்தாள். தன் வீட்டுப் பெண்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருப்பதை இந்தக் குடும்பம் புரிந்து கொண்டுவிட்டது என்று அன்ன பூரணியின் அப்பா ஆனந்தமானார்.

அவன் அவர்கள் மூவரையும் அங்கீகரித்தான். மேலும் தொடர்ந்து பேசினான். உடைகள் பற்றியும் சினிமா பற்றியும், உறவுகள் பற்றியும் அவர்கள் பொது வாகப் பேசினார்கள். வாழைக்காய் பஜ்ஜியும், டீயும் எடுத்துக் கொண்டுவிட்டு, அந்தக் குடும்பம் கிளம்புகிறேன் என்று கைகூப்பியது.

''அப்போ என்னா சொல்றீங்க.'' அப்பா கேட்டார்.

''என்னங்க...வாயைத் திறந்து சொல்லணுமா. எனக்கு உங்க வீட்டை ரொம்பப் பிடிச்சிருக்கு. அன்ன பூரணியை மட்டும் பிடிச்சிருக்குன்னு சொன்னா அது தவறு. உங்களை உங்க உத்தியோகத்தை, அன்னபூரணி யோட அம்மாவை,அவங்க பேச்சை, இந்த வீட்டினுடைய அமைப்பு நாற்காலி சோஃபா எல்லாம் பிடிச்சிருக்கு. உங்களுக்கு என்னைப் பிடிச்சிருந்தா, என்னைப் பத்தி உங்களுக்கு நல்லசேதிகள் கிடைச்சு விவரங்கள் கிடைச்சா மேற்கொண்டு நீங்கதான் தொடர்பு கொள்ளணும். நீங்க ஒரு தடவை நம்ம வீட்டுக்கு வந்து நம்ம வீட்டினுடைய இருப்பு பார்த்து ஒரு அபிப்ராயத்துக்கு வந்து அதுக்கப் புறம் நாம கல்யாணத்தைப் பத்தி பேசலாம். என் பக்கத்து விஷயமா, அன்னபூரணியை, உங்க வீட்டை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்குன்னு சொல்லி கிளம் பறேன்'' இவ்வளவு தெளிவாகவும், இவ்வளவு நேர்மை யாகவும் அவன் பேசியதைக் கண்டு அவர்கள் வீடு மிகவும் சந்தோஷமடைந்தது.



அன்னபூரணியின் அப்பாவும், அம்மாவும் குடியிருப் பிற்கு வெளியே போய் பஸ் ஸ்டாண்ட் வரை அவர்களை ஏற்றிவிட்டு வந்தார்கள்.

வீடு திரும்பும்போது அன்னபூரணி அவனைப் பற்றிக் கனவு காணத் துவங்கினாள். அவனோடு நெருக்கமாக அமர்ந்துகொண்டு நண்டு குழம்பை எத்தனைவிதமாகச் செய்யலாம் என்று விளக்கிச் சொன்னாள். அவன் வாய் பிளந்து அவள் மனசுக்குள் கேட்டுக் கொண்டிருந்தான்

''எல்லாம் சரிங்க...ஆத்தாளும் கூட வந்த பெரியம் மாளும் வாயே திறக்கலையே...அதைப்பார்த்தீங்களா...''

''ஆமாம்... எனக்கு அதுவும் கவலையாயிருந்தது. நாளைக்கு கல்யாணம்னு பேசச்சொல்ல, ரெண்டு பேரும் அதிகம் பாய்வாங்களோன்னு தோணிச்சு''

''இல்லீங்க... அவங்களுக்குப் பிடிக்கலை. புள்ளை சரசரன்னு பேசறது அவங்களுக்கு இஷ்டமில்லாம இருந் தது. அதே சமயத்துல அந்தப் புள்ளையைக் கண்டிக்க முடியலை. கண்டிச்சா,அதே இடத்துல சரிதான் போம்மா அப்படின்னு தூக்கி எறிஞ்சுடுவானோன்னு பயம். அதுக்கு அச்சப்பட்டுக்கிட்டு வாயே திறக்காத மாதிரி உட்கார்ந் திருந்தாங்க. அவங்க ரெண்டு பேரும் வீட்டுக்குள்ளே போனதும் அது எப்படி நீ எங்களைக் கேட்காம சரின்னு சொல்லலாம் அப்படின்னுபாய்வாங்கன்னு நினைக்கறேன் எதுக்கும் பொறுத்திருந்து பார்க்கலாம்.''

''இந்த இடம் நல்லதுன்றியா வேணாம்ன்றியா''

''நல்லதுதான். இந்த புள்ள மட்டும் நம்ம வீட்டோட மாப்பிள்ளையா இருந்தா ரொம்ப நல்லது. அவனுக்கு பெரிய மனுஷனா வாழ்க்கை நடத்தணும்னு ஆசை. சுத்துபத்தெல்லாம் பிரகாசமா இருக்கணும்னு ஒரு எண்ணம். சின்ன இடத்துல, குடிசையில, சாக்கடை பக்கத்துல படிச்சு வளர்ந்தவன் போல... சுத்துபத்து

இடத்தைப்பத்தி ரொம்ப யோசிக்கிற பையன்லாம், சின்ன வயசுல அதிகம் கஷ்டப்பட்டவங்களாத்தான் இருப்பாங்க. நம்ம குழந்தைக்கும் வீடு நல்லா வைச்சுக்கனும்ன்னு ஆசை உண்டு. நல்லா சமைச்சு நிறைய சாப்பிடணும்ன்னு எண்ணமும் உண்டு. ரெண்டு பேருக்கும் சுலபமா ஒத்துப் போயிடும். நமக்கும் சந்தோஷமா இருக்கும். ஆனா, அவங்க ஆத்தாவும் விடமாட்டா. ஆத்தா விட்டால், அந்த பெரியாத்தாளும் விடமாட்டா. மறுபடி வந்து நின்னா பார்த்துக்குவோம்...''

அந்தப் பேச்சு அத்தோடு நின்றது.

இரண்டு நாட்கள் டி.வி. பார்ப்பதிலும், அடுத்தவீட்டு பிறந்த நாள் விசேஷத்திலும் நகர்ந்தன. பக்கத்து வீட்டில் ஐந்து வயது பெண் குழந்தைக்கு பிறந்த நாள் விழா தடபுடலாகக் கொண்டாட எண்ணி, அதற்கு அன்னபூரணியை உதவிக்குக்கூப்பிட்டு, அன்னபூரணி சமையலில் இருந்து அறையலங்காரத்திலிருந்து, அந்தப் பெண் குழந்தையின் ஜடை விஷயத்திலிருந்து உதவிகள் செய்தாள். அந்த உதவிகளில் தன்னை மறந்தாள்.

நான்கு நாட்கள் கழித்து, அவர்கள் வீட்டிலிருந்து அம்மாவும், பெரியம்மாவும் வந்தார்கள்.

''எல்லாம் நல்லாத்தான் இருக்கு. உங்க வீடு பிடிச்சிருக்குன்னு பையன் சொல்றான். மேற்கொண்டு பேசலாம்னுதான் நாங்க வந்தோம். எவ்வளவு போடு வீங்க.'' என்று அம்மா ஆரம்பித்தாள்.

அவள் பேசுவதைப் பார்த்தால், அவளுக்கு நிறைய சொல்லிக் கொடுத்திருப்பார்கள், நிறைய நேரம் யோசித்திருப்பார்கள் என்று எளிதாகப்புரிந்துகொள்ளமுடிந்தது.

''நீங்க எவ்வளவு எதிர்பார்க்கறீங்க.'' பதிலுக்கு அப்பா கேட்டார்.



''இதுக்கு முன்ன பார்த்த வீட்டுல, பதினைஞ்சுன்னு சொன்னாங்க. இருபதுன்னு கேட்டோம். பதினெட்டு வரைக்கும் வந்தாங்க.''

''எங்களால அவ்வளவெல்லாம் போட முடியாது தாயி. பத்து பவுன் போடறோம். அதிகபட்சமா சிரமப் பட்டு பன்னெண்டு பவுன் போடறோம். கல்யாணமும் எங்க செலவுலேயே செய்யறோம். இதுக்குமேல ஒண்ணும் எதிர்பார்க்கா தீங்க.'' அப்பா கொஞ்சம் கறாராகப் பேசினார்.

''பன்னெண்டு எந்த மூலைக்கு. நாங்க பதினெட்டே வேணாம்னு வந்துட்டோம். நீங்க பன்னெண்டுன்னு சொல்றீங்களே.'' இப்போது பெரியம்மா பேச ஆரம்பித் தாள்.

''அவ்வளவுதாங்க முடியும். நீங்க எதிர்பார்த்தது ஏகமா இருக்கலாம். அதுக்கெல்லாம் நாங்க செய்ய முடியுமா. பன்னெண்டே எங்களுக்கு அதிகபட்சம்.''

''அதைத் தவிர வேற என்ன செய்வீங்க.''

அப்பா பெரியம்மாவின் கேள்விக்குத் திகைத்துப் போனார். ''இதைத் தவிர வேற என்ன செய்யணும்.''

''கட்டில், மேஜை, பீரோ, நாற்காலி, சோஃபாசெட்டு டி.வி., ரேடியோ பெட்டி, டேப் ரிகார்டர் இதெல்லாம் இல்லையா.''

''கடவுளே... விட்டுங்க... இவ்வளவெல்லாம் செய்யறதுக்கு என்னால ஆவாது. நான் நகை, வெள்ளிப்பாத்திரம் படுக்க மெத்தை, உடுக்கத் துணி இவ்வளவு தரேன். நீங்க இதெல்லாம் கேட்டீங்கன்னா, கல்யாணத்தை நீங்கதான் செய்யணும்.'' என்று சொல்ல, எதிர்ப்பக்கம் மௌனமாக இருந்தது.

''அப்ப, கடைசியா என்னதான் சொல்றீங்க?''

"நீங்க எதிர்பார்க்கற அளவுக்கு எங்களால முடியாதுங்க."

"நாங்க அப்படி என்ன எதிர்பார்த்துட்டோம். எல்லா இடத்துலேயும் செய்யறதுதானே."

"திருப்பிச் சொல்றேங்க, பன்னெண்டு பவுனுக்கு மேல, கால் பவுனு கூட நான் பண்றதா இல்லை. நீங்க சொல்றாமாதிரி இங்க இருக்கற பொருளை வேணா அன்னபூரணி எடுத்துக்கிட்டு போலாம். இதுக்குன்னு நாங்க எதுவும் வாங்க முடியாது."

"நீங்க பேசறது கொஞ்சம் கூட நல்லாவே இல்லை. புது கட்டில் கொடுக்காத, புது பீரோ கொடுக்காத பழையதைக் கொடுப்பாங்களா."

"நமக்கு என்ன முடியுமோ, அவ்வளவுதாங்க முடியும். நீங்க எல்லாம் புதுசு கேட்டீங்கன்னா, நான் என்ன செய்வேன்? வேணும்னா, பெயிண்ட் அடிச்சு தரலாம்."

"பெயிண்ட் அடிச்சுக் குடுக்கறதுக்குப் புதுசா வாங்கிடலாம், இல்லையா."

"இல்லீங்க...எங்களால முடியாதுங்க"

"அப்ப கடைசியா என்னதான் சொல்றீங்க?" அந்த பெரியம்மா கேட்டாள்.

"இதுக்கு மேல பேச எனக்குத் தெரியலைம்மா. போதும்...நீங்க ரொம்ப பெரிய இடம் எதிர்பார்க்கறீங்க. நான் ரொம்ப சின்னவன். ஏதோ புத்தக வியாபாரம் பண்றவன். எனக்கு இதெல்லாம் தாங்காது" அப்பா கைகூப்பினார்.

அந்தக் கைகூப்பலில் ஒரு கோபம் இருந்தது. 'போதும், எழுந்து போங்கள்' என்கிற அதட்டல் இருந்தது.



பிள்ளையைப் பெற்றவளின் முகம் வாடிப்போயிற்று. அவன் சட்டென்று எழுந்தான். 'வா, போலாம்' என்று சொல்லி விடுவிடுவென்று வெளியே நடந்தான். பெரியம்மாள் அவனையும் பார்த்துக் கொண்டு, அப்பாவையும் வெறித்துப் பார்த்தாள். அப்படி அவன் நடக்கென்று எழுந்து போனது அந்த பெரியம்மாளிற்குப் பிடிக்கவில்லை. இப்படி கைகூப்பலுக்கெல்லாம் காயப் பட்டு விடக் கூடாது என்று மனதிற்குள் எண்ணினாள்.

"சரி, அவங்க கோச்சுக்கினு போயிட்டாங்க. நான் கோபமில்லாம கேட்கறேன். இதுக்கு மேலேயும் எதுனா பண்றதா இருக்கா."

"எம்மா, திரும்பத் திரும்பக் கேட்கறீங்க."

"ஒண்ணும் இல்லைங்க... பையனுக்கு உங்க பொண்ணைப்பிடிச்சிருக்கு. அவன் ரொம்ப நல்லபையன். உங்க பொண்ணை கண்ணுக்குக் கண்ணா வைச்சுப்பான். இப்பவும் நீங்க வெறும் கட்டிலுக்காகவும், பீரோவுக்காகவும் பார்த்து ஒரு நல்ல இடத்தை விட்றாதீங்க... அந்தப் புள்ள எப்படியாவது இந்த இடத்தை முடிச்சிட்டு வந்திடுங்கறான். நீங்க என்னா சொல்றீங்க."

"இதுக்கு மேல ஒரு வெள்ளிப் பூண் கூட என்னால கொடுக்க முடியாது."

"எம்புள்ள ஆசைப்படறான்னுதானே இவ்வளவு கட் அண்ட் ரைட்டா பேசறீங்க..."

"அப்படியில்லேம்மா...இதெல்லாம் பெரிய பேச்சு. எம் பொண்ணு ரொம்ப நல்லவ. அவளுக்கு நல்ல புருஷன் கிடைப்பான். பொம்பளை மேல ஆம்பளைக்கு ஆசை வரத்தான் செய்யும். பொம்பளை நல்லவளா இருந்தா, ஆசை பலமாவும் இருக்கும். என் பொண்ணு நல்ல பொண்ணுன்னு உங்க புள்ளைக்குத் தெரிஞ்சு போச்சு.

நான் இப்பவும் சொல்றேன். உங்க புள்ளை நல்ல புள்ளை.''

''அப்போ, நாங்க கெட்டவங்களா.''

''நான் அப்படி சொல்லலை, தாயே. நீங்க அதிகமா எதிர்பார்க்கறீங்க...அவ்வளவும் எனக்கு வக்கில்லேன்னு சொல்ல வரேன்''

''பொண்ணைப் பெத்து வைச்சவன் டப்புடப்புன்னு வக்கில்லே, வசதியில்லேன்னு சொல்லக் கூடாது. நாலு இடத்துல கடன, உடன வாங்கி...''

''எவ்வளவு கடன் வாங்கி, எவ்வளவு செய்யறது இதுகெல்லாம் எல்லையில்லையா. குருவி சேர்த்து வச்சிருக்கிறா மாதிரி சேர்த்து வச்சிருக்கேன். நான் என்ன விறகு வியாபாரமா, அரிசி வியாபாரமா, ஒரு லோடுல பெருசா காசு பார்க்கிறதுக்கு. இது புஸ்தக வியாபாரம் ஒவ்வொரு புஸ்தகமா கெஞ்சிக்கூத்தாடி வித்து, எட்டணா ஒருரூபாயா சம்பாதிக்கணுமே தவிர, மொத்த வியாபாரம் இல்லை. நீங்க தயவு செய்து புரிஞ்சுக்கணும். நான், நாடார்தான். நீங்க நினைக்கிற நாடார் இல்லை. அதனால...என்னுடைய வசதியைப் பொறுத்துத்தான் என்னால கல்யாணம் பண்ணிக் கொடுக்க முடியும். வசதிக்கு மீறி கடனை வாங்கி கல்யாணம் பண்ணிட்டு, யாரையும் நொந்துக்க நான் தயாரா இல்லை. எனக்குன்னு, எங்க பொண்ணுக்குன்னு ஒரு நல்ல இடம் அமையாதையா போயிடும்.'' அப்பா மறுபடியும் கை கூப்பினார்.

''சரி...உங்களுக்கும் வேணாம், எனக்கும் வேணாம். பதினேழு பவுன் வைச்சுப்போம்.''

''நீங்க ஏன் இப்படி புரியாமலேயே பேசறீங்க...இது என்ன வியாபாரம். யாராவது என் பொண்ணை



விக்கிறேன்னு சொன்னாங்களா. என்னாங்க இது? இல்லை உங்கபிள்ளையை வாங்கறத்துக்கா, நான் வந்து பதினேழு சவரன் தரணுமா. தேவையில்லைங்க... பன்னெண்டு சவரனுக்கு மேல ஒரு குந்து மணி கூட போட முடியாது... இதுவும் தவிர, நீங்க குறைச்சு பதினாறு பவுனுக்கு வந்திங்கன்னா, அப்பவும் எனக்கு சம்மதம் இல்லை. இந்த மாதிரி பேசற குடும்பத்தோட என்னால சம்பந்தம் வைச்சுக்க முடியாது. இன்னிக்கு காசு முக்கியமில்லை. நகை முக்கியமில்லை. மனிதர்கள் முக்கியம். என் பொண்ணு ரொம்ப நல்ல பொண்ணுன்னு தெரிஞ்சிருந்தா மனசுக்கு நல்லாப் பட்டிருந்தா எதுக்கு பன்னெண்டு பவுன்னு கேட்டு, கல்யாணம் பண்ணிக்கிட்டு போயிட்டிருந்திருக்கலாம்.''

''ஏன் இதுவரைக்கும் போகலை.'' அந்தப்பெண்மணி உரத்த குரலில் கேட்டாள்.

''போவாங்கம்மா...என் பொண்ணை அப்படித்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டு போவாங்கம்மா. பன்னெண்டு பவுன் என்னத்துக்கு. ஒன்னும் வேணாம். நான் ஒன்னுமில்லாத உன் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கறேன். வெறுமனே டீபார்ட்டி மட்டும் கொடு. அந்த கல்யாண ரிசப்ஷன் மட்டுமே போதும் அந்த செலவு மட்டுமே போதும்ன்னு சொல்லி என் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டு போறதுக்கு ஆள் வரும். இதுக்கு மேல பேசினா நல்லா இருக்காது.'' அப்பா மிக கூர்மையாக அறிவித்தார். அம்மா பயத்தோடு அப்பாவை பார்த்தாள். இது மிக வேகமான தாக்குதலோ என்று அன்னபூரணிக்குத் தோன்றியது.

அந்த அம்மாள் சற்று நேரம் நின்றாள். மெல்ல வெளியேறினாள். படியிறங்கினாள். வாசலில் நின்ற பிள்ளையின் தாயாரோடு சேர்ந்து கொண்டாள். இரு

வரும் ஆட்டோவில் ஏறி அமர்ந்து கொண்டு காலனியை விட்டு வெளியேறினார்கள்.

அப்பா தரையில் துண்டு விரித்து, தலைக்கு மணைப் பலகை வைத்து கால் நீட்டிப் படுத்துக் கொண்டார். வீடு கொஞ்சம் கலவரமாய், பயத்தில் உறைந்து கிடந்தது.

ஒரு வீட்டில் பெண்ணின் திருமணம் என்பது, காசால் கலவரப்படுவது அல்ல. பொருட்கள் வாங்க வேண்டு மென்ற கவலையால் மிரளுவதல்ல. புதிய மனிதர்களின் தொடர்பும், அவர்களுக்காக அனுசரித்துப் போவதில் உண்டான குழப்பமும் ஒரு பெண்ணின் திருமணத்தைப் பெரிதும் கலவரமடையச் செய்கின்றன.

பிள்ளையைப் பெற்றவரின் மனமு நோகாமல் அதே சமயம் தனது பெருந்தன்மையையும் விட்டுக் கொடுக் காமல், மிக நாசூக்காய், அதிக தந்திரமாய் நடந்து கொள்ளவேண்டிய நிலைமையின் சோர்வு, மனிதர்களை கவிழ்த்துப் போடுகிறது.

அன்னபூரணியின் அப்பாவிற்கு இந்தக் கலவரம்தான் மிகுந்த வேதனையைக் கொடுத்தது. எவனோ வந்து பதினேழு பவுன், பதினாறு பவுன் அப்படின்னு பேரம் பேசுவான், அவனுக்கு ஆமாம்மா, இல்லைம்மா, உண்டும்மா, இருக்கும்மான்னு தடவித் தடவி பதில் சொல்லிக்கிட்டிருக்கணும். ''தே...எழுந்து போ'' என்று பேச நம்மால் முடியாது.

பெண்ணைப் பெற்றவன் என்ற ஒரே காரணத்தால் மிக முட்டாள்தனமான கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். பையன் கெட்டிக் காரனாக இருந்தாலும், நல்லவனாக இருந்தாலும் அவனைச் சுற்றியுள்ள மற்ற மனிதர்களின் மனங்களையும் பேச்சுக்களையும், செயல்களையும் அனுசரித்துப் போக வேண்டும்.



பட்டணத்து வாழ்க்கையில் அனுசரித்துப் போவது என்பது அறவே இல்லாது போய்விட்டது. இதுவரை அனுசரித்துப் போகாத வாழ்க்கையில், திடுமென்று பெண்ணின் திருமணத்தையொட்டி அனுசரித்துப் போவ தால் உடம்பும், மனதும் வெகுவிரைவில் சோர்வடைந்து போகின்றன. இந்த சோர்வுதான் வயோதிகத்தை விரை வில் கொண்டு வந்து தருகின்றது. அன்னபூரணியின் திருமணம் பற்றி படுத்துக் கொண்டே, மிகத் தீவிரமாய் அன்னபூரணியின் அப்பா கவலைப்பட ஆரம்பித்தார்.

'நீங்க பன்னெண்டுன்னு சொல்றீங்க... அவங்க பதினெமுன்று சொல்றாங்க...அஞ்சு பவுன். ஒரு பவுன் குறைச்சுக்கங்க. பதினாறுக்கு அவங்க சரியா வருவாங்க. நாலு பவுன் கூட போடறதுனால என்ன தப்பாயிடும். இது நல்ல இடம். இரயில்வேயில் வேலை செய்யிற பைய னுக்கு பதினாறு பவுன் கேட்கறது தப்பா. இல்லை, போடறதுதான் தப்பா.

பிள்ளை நல்லா இருக்கான், நல்லா பேசறான். தன்மையா பழகறான்னு சொல்றீங்க...அப்ப விடுவாங் களா இந்த இடத்தை? அன்னபூரணி நல்லா இருக்க ணும்னு எண்ணம் வேணாமா. எப்பப் பார்த்தாலும் காசையே நினைச்சுக்கிட்டு இருந்தா...' அவர் உள்ளுக் குள்ளே அவர் மனதே அவரைக் கடிந்து கொண்டது.

'நாலு பவுன்கறது விளையாட்டா. ஒரு பவுன் நாலாயிரத்து ஐநூறு ரூபாய். நாலு பவுன் பதினெட்டா யிரம் ரூபா. செய்கூலி ரெண்டாயிரம்ரூபா. இருபதாயிரம் ரூபாங்கிறது எவ்வளவு பெரிய விஷயம். நடக்கென்று எப்படி ஒத்துக்கறது. மத்தவங்களுக்கு இருபதாயிரங்கி றது பெரிய காசா இல்லாத இருக்கலாம். ஆனால், ஒரு புஸ்தகவியாபாரிக்கு இருபதாயிரம் ரொம்பப் பெரியதாக.

இப்போ நகையில மட்டும் கூட நாலு பவுன் கேட்கற வங்க, மத்த விஷயத்துலயும் இதைக் கூட கொடு...அதைக்

கூட கொடு...ரெட்டைக் கட்டிலா கொடு... ரெண்டு பீரோவா கொடு...ஒரு பெரிய பீரோ கொடு...ஒரு சின்ன பீரோ கொடு...அப்படின்னு ஒவ்வொண்ணுலயும் ஏத்தி நிக்க மாட்டாங்களா. இது எங்க போய் நிக்கறது. இப்ப டியும், அப்படியுமா அறுபது, எழுபது ரூபாய் ஜாஸ்தி யானா, என்னால நிமிரவே முடியாமப் போயிடும். இத்தோட முடிஞ்சு போச்சா. இதுக்குப் பிறகு தீபாவளி, பொங்கல் அப்படின்னு சடங்கு இருக்கு. அதுக்குப் பிறகு இவ பிள்ளையாண்டு வந்தா, அதுக்கும் செலவு பண்ணணும்.

தடதடன்னு ஒரு வருஷத்துக்குள்ள கூடுதலா ஒரு ஒன்னரை ரூபா, ரெண்டு ரூபா செலவு பண்ணவேண்டி யிருக்கும். ரெண்டு லட்ச ரூபாங்கறது கடவுளே, ஒரு புத்தகக்காரனுக்கு எவ்வளவு பெரிய காசு. பத்து ரூபா புத்தகத்தை பதினைஞ்சு ரூபாய்க்கு விக்கிறதுக்குள்ளே, போதும், போதும்ன்னு ஆயிடுது. அதுல ரெண்டு ரூபாய் கடை வாடகை,ஒரு ரூபாய் லைட்டு அப்படின்னு போனா ஒரு ரூபாய் அல்லது ரெண்டு ரூபாய்தான் மிஞ்சும். அந்த ஒரு ரூபாய், ஒரு ரூபாயா நான் ரெண்டு லட்ச ரூபாய் சேர்க்கணும். என்னைக்கு சேர்த்து, என்னைக்கு கல் யாணம்.

"நான் என்னா சொல்றேன்னா..." அன்னபூரணியின் அம்மா அப்பாவிற்கு அருகே வந்து உட்கார்ந்தாள். "இந்த பொம்பளைங்களோட பேசறதைவிட செங்கல்பட்டுக்குப் போய், அந்த புள்ளை எங்க வேலை செய்யுதோ, அங்கே பேசலாம். அப்பா... பதினேழு, பதினெட்டெல்லாம் முடியாது. பன்னெண்டுதான் முடியும். நான் புஸ்தகம் வித்துசம்பாதிக்கறவன். ரொம்ப அதிகமா எதிர்பாக்காதே ஆனா, எங்க பொண்ணு நல்ல பொண்ணுன்னு அவன் கிட்ட பேசிப் பார்க்கலாம்."



"தப்பும்மா...வீட்டுப் பெரியவங்களை விட்டுட்டு நாம, பிள்ளைகிட்ட போய் பேசுனோம்ன்னா, அது நம்ம மரியாதையை நாமே குறைச்சுக்கற மாதிரி. நம்ம பொண்ணுக்கு அது அவமானம். நாளைக்குக் குடித்தனம் பண்ணப் போற இடத்துல, என்னாடி, எங்களுக்குத் தெரியாம உங்க அப்பன் வந்து எம்புள்ளையை ஏதேதோ பேசி,மயக்கிட்டுப் போயிட்டான் அப்படின்னு சொன்னா நம்ம குழந்தைக்குப் பதில் சொல்ல முடியாம போயிடும். நல்லது பண்றோமோ இல்லியோ, கெடுதல் பண்ணாத இருக்கணும்." அப்பா அவன் யோசனையை வேகமாக நிராகரித்தார்.

"அப்போ, நாம போகாத வேற யாரையாவது நாம போய் பேசச் சொல்லிக் கேட்போமா யாரைப் போகச் சொல்றது." அன்னபூரணியின் அம்மா கவலையோடு பேசினாள்.

அன்னபூரணியின் அப்பா கண்மூடி மல்லாக்கக் கிடந்தார். அன்னபூரணிக்கு இந்தக் காட்சி வேதனையாக இருந்தது. எதற்குப் பெண்ணாய்ப்பிறந்தோம் என்று துக்கம் எழுந்தது. இதே ஒரு பையனாக இருந்தால், இவர்கள் அல்லவா, அதட்டிப் பேசுகிற நிலையில் இருப்பார்கள். தான் பெண்ணாகப் பிறந்ததால் அல்லவா, இவர்கள் கண்மூடி உட்கார்ந்து, அடுத்தபடி என்ன செய்வது என்று அலைமோதிக் கொண்டிருக்கிறார்கள். யார் நமக்காக தூது போவார்கள்?

அந்த இளைஞனைப்பார்க்க சந்தோஷமாக இருந்தது அவன் பேசியது ஆதரவாக இருந்தது.

ஆனால் அந்த வீடு அந்தப் பெரியம்மாவின் பேச்சில் கருகி பிசுபிசுத்தது. எந்த விதமான வம்புக்கும் அந்தப் பெரியம்மாள் வெகு விரைவில் தயாராவாள் என்பது தெளிவாகத் தெரிந்தது. அந்தப் பெரியம்மாவை அந்த

இளைஞனால் அதிகம் எதிர்க்கவும் முடியவில்லை அதற்காக காரணமும் தெரியவில்லை.

# 2

''ரயில்வேல வேலை செய்யற பிள்ளை. கைக்கு ஏழாயிரம்ரூபாய் வருது. அவனுக்குப்போய் பன்னெண்டு பவுன் நகை போடறேன்னா, வழிச்சுண்டு சிரிப்பாங்க. வெறுமனே, கேஸ் மேனுக்கும், எலக்ட்ரீஷியனுக்குமே கூடப் போடற நேரத்துல, ஒரு ஆபீசருக்கு பன்னெண்டு பவுன் போடறேன்னு கூசாத சொல்றான், நீயும் கேட்டுக்கிட்டு இருக்கிறியே. டப்புன்னு எழுந்து அப்ப நல்லாருங்க அப்படின்னுசொல்லிட்டுவெளியவர வேண்டியதுதாவே.'

''நான் வெளிய வரணும்னுதான் இருந்தேன், இவன் பேசிக்கிட்டு இருந்தானே, புஸ்தகம் பத்தி.''

''ஆமாம்... இவனைக் கூட்டிக்கிட்டுப் பொண்ணு பார்க்கப் போகாதே... அப்படியே கூட்டிக்கிட்டுப் போறதா இருந்தாலும், நீ பேசாதேன்னு கண்டிஷனா சொல்லிடு. அதை விட்டுட்டு நீ வாயைப் பார்த்துகிட்டு இருக்காதே. அந்த ஆள் பன்னெண்டு பவுனுக்கு மேல, ஒரு குந்துமணி கிடையாதுன்னு கறாரா பேசறான். எந்தப் பொண்ணைப் பெத்தவனாவது இப்படிப்பேசுவானா. பேச விடலாமா. நாம சொல்றதைக் கேட்குத்தானே பொண்ணைப் பெத்தவன் இருக்கானேகண்டி. பொண்ணு பெத்தவன் கறாரா பேசுனா நாம கேட்டுக்கிட்டு வர்றதா. எனக்கு அவமானமாப் போயிடுச்சு. சோறே இறங்கலை. போ.'' பெரியம்மாள் ஆத்திரத்தோடும், ரோஷத்தோடும் அவன் வீட்டுக்குள் உரத்துப் பேசினாள்.



அருணாச்சலம் மெல்லக் கண்விழித்து இடுப்பு துங்கியை சரி செய்து கொண்டு, பல் தேய்க்க பின்பக்கம் போனான். பெரியம்மா பேசுவது தொடர்ந்து கேட்டது.

''இவன் கல்யாணத்தை எங்கிட்ட விடு. நீங்க பட்ட கஷ்டமெல்லாம் போதும். அஞ்சு ரூபாய்க்கும் பத்து ரூபாய்க்கும் நீங்க அல்லல்பட்டதெல்லாம் போதும். இப்போ, நிலைமை வேற. அந்த நிலைமைக்குத் தகுந்தாற் போல, நாம தெளிவா இருக்கணுமேகண்டி மறுபடி இந்த அஞ்சு பத்துக்கு அல்லாட்டமான புத்தியிலேயே நாம இருக்கக் கூடாது. அந்தக் காலம் மலையேறிப் போச்சு. நான் சொல்றது புரியுதா. நீ இன்னும் கூட நல்லா உடுத்தணும். இந்தமாதிரி இடத்துக்குப் போற போது கூட நகைங்க போட்டுக்கிட்டு வரணும். அது உன்நகையா இருந்தாலும் சரி, வேற இன்னொருத்தர் நகையா இருந்தாலும் சரி.

எம் பிள்ளைக்குப் பொண்ணு பார்க்கப் போறேன். உன்னுடைய நாலுபவுன் நகையைக் கொடுன்னு கேட்டா, மாட்டேன்னு யார் சொல்லப் போறங்க. குவார்ட்டர்ஸில் யார்கிட்டேயாவது பதக்கமோ, அட்டிகையோ அவுல் செயினோ வாங்கிக்கிட்டு வர்றது. அதை விட்டுட்டு, ஒத்தச் செயினா வந்தின்னா, உன்னை யார் மதிப்பா. என்னை யார் மதிப்பா. நேத்து நீ வந்தது எனக்குப் பிடிக்கலேயில்லை.''பெரியம்மா தொடர்ந்து அம்மாவைக் குற்றம் சொன்னாள்.

பெரியம்மாவை எப்படி விலக்குவது என்று யோசித்துக் கொண்டே, அருணாச்சலம் பல் துலக்க ஆரம்பித்தான்.

''அருணாச்சலம், உன்னண்ட கொஞ்சம் பேசணும்ப்பா'' - பெரியம்மா அருகே வந்த போது, அருணாச்

சலம் 'என்ன' என்று மிதப்பாக, வாய் திறக்காமல், அவனை விழிகளால் வினவினான்.

"இந்த இடம் வேணாம். இதை விட நல்ல இடம் நான் பாக்கறேன். ஒரே ஒரு கேள்வி. உனக்கு பொண்ணு ரொம்பப் படிச்சிருக்கணுமா, இல்லை, படிக்காத பொண்ணா இருந்தாலும் பரவாயில்லையா."

"என்ன கேள்வி இது. படிச்ச பொண்ணுதானே வீட்டுக்கு நல்லது."

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை. படிச்ச பொண்ணோ, படிக்காத பொண்ணோ, பொண்ணு நல்லவளா இருக்கணும். படிச்ச பொண்ணு மோச மானவளா இருக்க முடியாதா. படிச்ச எத்தனை பேர் தாயா அலையறாளுங்க. எனக்குத் தெரியாதா. படிக்காத பொண்ணுதான் என்னைக் கேட்டா, நல்லதுன்னு சொல்வேன். அதுங்களுக்கு சூது, வாது தெரியாது. பேசுனா எதிர்த்துப் பேசாது. அடக்கம், ஒடுக்கமா இருக்கும்."

"அடக்க, ஒடுக்கமா இருக்கணும்னு அவசியம் இல்லைம்மா. கெட்டிக்காரியா இருக்கணும். நாம இல்லாத போது நம்ம வீட்டை மேற்பார்வை பண்ணணும்."

"நாங்க பண்ணலையா. ஒருத்தருக்கு மூணு பேர் இருக்கோம். உன் வீட்டை நாங்க மேற்பார்வை பண்ண மாட்டோமா. எங்களுக்குத் துணையா, அந்தப்பொண்ணு இருந்துட்டா போதும்.மத்ததை நாங்கபார்த்துப்போம்."

"உங்களுக்கு ஒண்ணும் தெரியாது. ஒரு வீடு எப்படி வைக்கணும்னு கூட உங்களுக்குத் தெரியாது. மூலை, மூலைக்கு துணியை மடிச்சு வைச்சிக்கிட்டிருக்கீங்களே தவிர, வீடு வைச்சிக்கற லட்சணமா இது. கொஞ்சம் நீங்க



சும்மா இருங்க. எனக்குக் கொஞ்சம் படிச்ச பொண்ணு தான் வேணும். படிச்ச பொண்ணு மட்டுமில்லை, வீட்டு அலங்காரம், சமையல் வேலை இதெல்லாம் கொஞ்சம் தெளிவாத் தெரிஞ்ச பொண்ணா இருக்கணும். கூடத்துல உட்கார்ந்து மீன் நறுக்கி, மூணு பக்கமும் முள்ளு பரப்பிக்கினு உட்கார்ந்திருக்கக் கூடாது." அவன் சரசரவென்று பேச, பெரியம்மாள் 'சரி, சரி' என்று தலையாட்டினாள். அம்மா அவனிடம் பேசவே பயந்தாள்.

ஆழ்ந்து பார்த்தால், அம்மாவும் கெட்டியில்லை, பெரியம்மாவும் கெட்டியில்லை. கெட்டிக்காரத்தனமான வாழ்க்கை அவர்களுக்கு எப்போதும் கிடைக்கவேயில்லை. வாழ்க்கையின் கீழ் மட்டத்தில் இருந்து, மெல்ல மெல்ல மேலேறி வந்தவர்கள் அவர்கள். காலையில் கம்பங் கஞ்சியும், மதியத்தில் சோளக் கஞ்சியும், இரவு சிறிதளவு நெல்லுச் சோறும் சாப்பிட்டவர்கள். வயல்வேலை செய்த வர்கள். தோட்ட வேலை செய்தவர்கள். சுமை தூக்கிப் பழக்கப்பட்டவர்கள்.

காய்கறி வியாபாரம் செய்தவர்கள். அவர்களுக்கு வாழ்க்கையின் வசதிகளெல்லாம் அறிமுகமாகவேயில்லை. 'எப்படிரா, இந்தப் பொட்டியிலேயிருந்து சிலுசிலு வென்று காத்து வருது' ஒரு ஏசியைப் பார்த்து விட்டு, பெரியம்மா வாய் திறந்து வியந்தாள். அம்மா போர்த்திக் கொண்டு, 'என்னத்துக்கு இந்த எழவு, புடுங்கித் தின்கிற மாதிரி அதை அணைச்சுத் தொலை' என்று கத்தினாள்.

ஒரு ஏசியின் குளிர் அவள் உடம்பிற்குப் பழக்கப் படுவதற்கு பல காலம் ஆகும் என்று தோன்றியது. அம்மாவிற்கு கிரைண்டரோடும், மிக்ஸியோடும் உறவு ஏற்படவே பல மாதங்களாயிற்று. ஆனால், பெரியம்மா கெட்டிக்காரி. ஆசை அதிகமுள்ளவள். அவள் வெகு விரைவில் எந்திரங்களோடு பழகிக் கொண்டாள்.

ஆனாலும் ஒரு நறுவிசும், விவரணையும் இல்லாமல் வீட்டைக் குப்பையாக்கினாள். 'பாய், தலைகாணி கூட கூடத்தின் ஓரத்தில் இருப்பதுதான் நல்லது என்று நினைத்தாள். 'என்னைக் கேட்டா, சோஃபாவே வேணாம். இவ்வளவு பெரிய ஹால்ல எங்க வேணா படுத்துக்கலாம். எத்தனை பேர் வேணும்னா படுத்துக்கலாம் சோஃபா போட்டா இடம் அடையுது' என்று குறை சொன்னாள்.

சோஃபா வாங்கியதும், அதில் கால் பரப்பித் தூங்கினாள். பெரியம்மா மதுராந்தகத்தைத் தாண்டி, வாழ்க்கைப்பட்டு, முப்பத்தியேழு வருடங்கள் குடித்தனம் செய்து, குழந்தைகள் பெற்று, நிமிர்ந்து, புருஷன் இறந்து போனது, மிகப் பெரிய விடுதலையென்று நினைத்து, அந்த விடுதலையைக் கொண்டாட இவன் வீட்டுக்கு வந்து விட்டான். அவளுடைய இரண்டு மகன்களும், அவள் மீது மரியாதை வைத்திருந்தார்கள். அவளுக்காக காசு அனுப்பினார்கள். ஆனாலும், அவள் அருகே இருந்தால், தங்கள் மனைவியருக்குப் பிரச்சினை என்பதால் அந்தப் பெண்மணியை அருணாச்சலம் வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

அவர்கள் வசித்துவரும் கிராமத்தைவிட, செங்கல்பட்டு பலவிதங்களில் அவளுக்கு வசதியாக இருந்தது. எப்போதும் டி.வி. பார்க்க முடிந்தது. விதம் விதமாக சமைத்துச் சாப்பிட முடிந்தது. காலை ஏழு மணிவரை தூங்க முடிந்தது. வாழ்க்கையை அதிகம் புருஷனாலும், உறவுகளாலும் சிரமப்பட்ட பெரியம்மா அருணாசலத்திடம் விட்டேத்தியாக இருந்தாள். அதற்குப் பிரதிபலனாய், நன்றியாய் அவனுடைய திருமணத்தை நின்று நடத்தவேண்டும் என்று ஆசைப்பட்டாள். ஆனால் அருணாச்சலம் நினைத்துக் கொண்டிருக்கிற திருமணமும்,



அவள் எண்ணிக் கொண்டிருந்த திருமணமும் வெவ்வேறாக இருந்தன.

# 3

“கல்யாணம்னு சொல்றேன்.நான் உதவி பண்ணாத இருப்பேனா.” அன்னபூரணியின் அப்பா எதிரே உட்கார்ந்தவர் குதூகலமாகப் பேசினார்.

“செங்கல்பட்டுல ரயில்வே உத்யோகமா. ரொம்ப நல்லது. எனக்கு தாம்பரத்துல ஒரு ஸ்நேகிதன் இருக்கான். அவன் புள்ள ரயில்வேல வேலை செய்றான். தாம்பரத்துல குவார்ட்டர்ஸ் இருக்கு. அவன் மூலமா விசாரிச்சு, நீ சொல்ற பையன் எப்படி இருப்பான்னு, ரெண்டுநாள்ல உனக்கு வந்து சொல்றேன். ரிடையர்டு ஆயாச்சு. வேற வேலை எதாவது பண்ண வேண்டாமா. இதைவிட வேற வேலை ஒண்ணு உண்டா. அன்னபூரணி நல்லபடியா வாழ்க்கைபட்டு, சந்தோஷமா வாழ்ந்து, ரெண்டு குழந்தைகளோட ரோட்ல போறபோது,எனக்கு மனசு துள்ளாதா.ஆஹா,நாம,பாத்து வைச்ச கல்யாணம் எவ்வளோ நிறைவா இருக்குன்னு எனக்குள்ள நிம்மதி பரவாதா. இதுக்காக எத்தனை வேணா கஷ்டப்படலாம்.” அவர் வாய் நிறைய மகிழ்வோடு பேசினார்.

அன்னபூரணியின் அப்பாவிற்குக் கண்கள் கலங்கின.

மனிதர்களைக் கெட்டவர்கள் என்று ஏன் சொல்கிறார்கள். எல்லா மனிதர்களுமா கெட்டவர்கள். மனிதர்களில் நல்லவர்கள் அநேகம் பேர் இருக்கிறார்கள். நல்லவர்களையும் நல்லவர்களின் நல்ல மனங்களையும் தெரிந்து கொள்ள நமக்கு அவகாசம் இருப்பதில்லை. ஏதேனும்

ஒரு கணத்தில் மரியாதையாய் உதவி கேட்க, அந்த நல்லவரின் நல்ல மனம் இறந்துகொண்டு ஆவலாய் உதவி செய்ய ஓடி வருகிறது.

''இப்படி அற்புதமான ஒரு வார்த்தை சொன்னதுக்கு. நான் காலாகாலத்துக்கும் உங்களுக்கு கடமைப்பட்டிருக்கேன்.''

''அடடா...தவறு புஸ்தகக் கடைக்காரரே... இது ஒண்ணும் உனக்குன்னு பண்றதில்லை. எனக்குன்னு பண்றது. நான் சொல்றது புரியறதா உனக்கு கல்யாணங்கற விஷயத்தை நாம கைவிட்டுடப்படாது. எம் பொண்ணுக்கு கல்யாணம் நடந்தது.

அதப்பார்த்துட்டு உம் பொண்ணுக்கு நீ கல்யாணம் பண்ணினே. எம் பொண்ணுக்கும் கல்யாணம் நடக்கலை. அதப்பார்த்து நீயும் எம் பொண்ணுக்கு கல்யாணம் நடக்கணுமா அப்படின்னு கேள்வி வந்துடப்படாது. கல்யாணங்கறது எத்தனை சிரமப்பட்டாலும் அது நடந்தே தீரணும். அப்போ ஏற்படற ஒழுக்கம், அப்போ ஏற்படற மகிழ்வு, அப்போ ஏற்படற குழந்தை வளர்ப்பு, அதனால ஏற்படற குடும்ப சௌக்கியங்கள் மாறுபடாது.

கல்யாணம் வேண்டாம் அப்படின்னு ஒரு எண்ணம் வந்துட்டா, ஒரு திமிர் வந்துடும். அதை நம்மால தாங்க முடியாது. அது கொடுக்கற வேதனை ரொம்ப அதிகம். உடனடியா அது குழந்தைகளைத்தான் தாக்கும். அதனாலதான் யார் வீட்ல கல்யாணம்னு சொன்னாலும் எந்த இடத்துல கல்யாணம்னு சொன்னாலும், ஜாதி பாக்காத மதம் பாக்காத நான் ஓடிப்போய் உதவி செய்யறது வழக்கம்.

நீயும் அப்படித்தான் செய்யணும். நான் உனக்கு ஓடி வந்து உதவி செய்யறேன் இல்லையா...உன் மாப்பிள்ளை யாரு அப்படின்னு விசாரிச்சு உம் பொண்ணுக்காக



வேகாத வெய்யில்ல ஓடப்போறேன் இல்லியா. அதே போல உனக்கும் ஒரு வாய்ப்பு கிடைக்கறபோது. உன்னையும் யாராவது கேக்கறபோது. நீ உதவி பண்ணு. எதுக்காக அந்த குறிப்பிட்ட பொண்ணுக்கும் குறிப்பிட்ட மாப்பிள்ளைக்காகவும் அல்ல, கல்யாணங்கற விஷ்டத்தை உயிரோடு வைப்பதற்காக நீ அலையத்தான் வேணும். நீயும் நானும் அந்த விஷ்டத்தினாலதான் நல்லபடியா இருக்கோம். நம்ம குழந்தைகள் நல்லபடியா இருப்பா. நம்ம பேரன் பேத்திகள் நல்லபடியா இருப்பா. இருக்கணுங்கற எண்ணத்தில், அந்த கல்யாணங்கற விஷ்டத்தை நாம விடப்படாது. என்ன முயற்சி பண்ணியாவது. அந்த விஷ்டத்தை நாம காப்பாத்தியாகணும். அந்த வழக்கத்தை நாம கைவிடாத கொண்டு வரணும். நான் சொல்றது புரியறதா.''

''அடடா...எவ்வளோ பெரிய தத்துவம், எவ்வளோ எளிமையா சொல்றீங்க. அந்தக் கல்யாணங்கற வழக்கம் இல்லாட்டி தான்தோன்றித்தனமாயில்ல போயிடும். யார் வேணா யார்கூட வேணா இருக்கலாம்னு ஒரு எண்ணம் வந்துருச்சுன்னா, குழந்தைங்க மேல ஆசை வராது. குழந்தைங்க மேல ஆசை வராட்டி வாழ்க்கை ருசிக்காது.

அடுத்த தலைமுறையப் பத்தி அக்கறைப் படற தலைமுறைதான் சந்தோஷமா இருக்க முடியும். இல்லேன்னா, இவனே தன்னை நொந்துகிட்டு ஏண்டா பொறந்தோம்னு சொல்லி, அடுத்த தலைமுறைய அலட்சியம் பண்ணுவான்.

குடித்தனம், குடும்பம், இதுதான் வாழ்க்கைய சந்தோஷமா வைக்கிற ஒரேயொரு வழி. இல்லேன்னா, நம்ம முன்னோர்கள் ரொம்ப நாள் முன்னாடியே குடித்தனம் வேணாம். குடும்பம் வேணாம் அது அது ஆடு மாடு மாதிரி இருக்கலாம்னு தெள்ளத்தெளிவா செய்து வைச்சிருப்பாங்க. ஏன் செய்யல. குடும்பம்தான் வாழ்க்

தை என்கிற விஷயத்தை ரசனையா பண்ற நல்ல வழி. நான் சொல்றது கரெக்ட்டுங்களா.''

''புஸ்தகக்கடைக்காரரே...கோடு போட்டா ரோடு போடற ஆளய்யா நீர். சின்னதா ஒரு விஷயம் சொல்லிக் குடுத்திருக்கேன். அதை எவ்ளோ வேகமா பிடிக்கிறீர். படிப்பு ஒரு ஆளை எவ்ளோ வேகமா மாத்துது, எத்தனை உயர்வா கொண்டு போய் வைக்குதுங்கறதுக்கு நீங்க ஒரு உதாரணம். ஜாதியெல்லாம் என்னய்யா. படிப்பு முக்கியம். எந்த ஜாதி படிக்குதோ அது மேல வந்துடுச்சு. எந்தக் குடும்பம் படிப்போட சம்பந்தப்பட்டிருக்கோ அது உயர்வா வந்துருச்சு. எந்தக் குடும்பம் படிக்கிறதை வாழ்க்கைல கொண்டுவருதோ அது சந்தோஷமா இருக்கும். நான் பார்த்துட்டேன்...படிக்காத ஜாதி, படிக்காத குடும்பம் அவஸ்தைப்படும். சண்டை போட்டு வெட்டி மடியும்.''

வயதானவர்கள் வாலிபத்திற்கு விரோதியல்ல. அவர்களும் வாலிபமாய் இருந்தவர்கள். தங்களுடைய வாலிபம் கனிந்து, ருசித்து, மணம் பரப்பி, நல்லபடி வாழ்ந்ததை உணர்ந்தவர்கள். அதே போல தங்களுடைய குழந்தைகளுடைய வாலிபமும் சிறக்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள். அன்னபூரணியின் அப்பா, கடைக்கு வரும் கஸ்டமரிடம் தன் மகளின் திருமணம் பற்றிப் பேச பெண் பார்த்து விட்டுப்போன இளைஞனைப்பற்றி விவரித்து, அவன் நல்லவனாகத் தெரிகிறான். இந்த சம்பந்தத்தை முடிக்க வேண்டும் என்று தன் ஆசையை வெளியிட, அந்தக் குடும்பத்தோடு எந்த சம்பந்தமுமில்லாத இன்னொரு வயோதிகள், நானாயிற்று என்ன என்று தெரிந்து கொண்டு வர என்று தன் பெண்ணுக்குத் திருமணம் போல, நல்ல வெய்யிலில் குடை பிடித்து, பஸ் ஏறி, ரயிலுக்குக் காத்திருந்து, தாம்பரத்தில் இறங்கி, அங்கே மறுபடி வெய்யிலில் நடந்து, வீடு தேடி,



நண்பனின் வீட்டை அடைந்து, அங்கு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, இந்த விபரத்தைக் கேட்டார்.

அறுபது வயதுக் கிழவருக்கு இந்த வேலை மிகப் பெரிய பளு. பிற்பகல் கண்மூடி சாய்ந்து கொண்டு, ரேடியோவில் பாட்டுக் கேட்டபடி, தூங்குகின்ற நேரத்தை, அவர் சிரமப்பட்டு வேறு வகையில் செலவழித்தார். வேறு யாருக்காகவோ வெய்யிலில் நடந்தார்.

இது வாழ்க்கையை அவர் மிகவும் நேசிக்கிறார் என்பதற்கான அர்த்தம்.

''நன்னாத் தெரியுமே... அருணாச்சலம். இங்க வருவானே...இந்த குவார்ட்டர்ஸ் செகரட்டரிப்பா' அவன் அதைத்தவிர யூனியன்ல பெரிய ஆளா இருக்கான். நல்லா பேசுவான். வேலையில சிரிக்க சிரிக்க கதை சொல்லுவான்.

சின்னப்பசங்களோட டூர்லாம் போவான். நல்லா இருக்குமே அவன்கூட பேசறது. நல்ல பையன்பா. யாரு பொண்ணு.

நீ எப்படி அவன் நல்ல பையனான்னு கவலைப் படறியோ, அதை போல அவனுக்கு வர்ற பொண்டாட்டி நல்லவளான்னு நாங்க கவலைப்படறோம். அந்த அளவுக்கு அவன் எங்களோட ஸ்நேகிதன். இந்த குவார்ட்டர்ஸ்ல யாரைப்போய் கேட்டாலும், அருணாச்சலத்தப் பத்தி நல்ல விதமாத்தான் பதில் சொல்லுவாங்க.

இப்பதாம்பா வாழ்க்கைல மொள்ள மொள்ள முன்னேறி வர்ற குடும்பம் வீட்டுக்குள்ள போனா ஒரு மாதிரியாத்தான் இருக்கும். அவங்க அப்பா அம்மாவுக்கு அதிகம் படிப்பு இல்ல. வேற சத்து பத்து ஜனங்

களுக்கும் அவ்வளவு தெளிவு போறாது இந்தப் பையன் மட்டும் ரொம்ப பிரகாசமா வெளிய வந்துட்டான்.

ரொம்ப நல்லா இங்கிலீஷ் பேசுவான்யா. நம்ம பசங்க கொஞ்சம் நஸாக்கு புஸாக்குன்னு விட்டுப் பார்த்தாங்க அவன் இவங்களுக்கு மேல கொட்டேஷன் சொல்லவே, டப்புன்னு தமிழுக்கு வந்துட்டாங்க. இப்ப அருணாச்சலத்தை யார் பார்த்தாலும் அறிஞரே நலமா அப்படின்னு செந்தமிழ்ல பேசணும். ஏன்னா இவங்க இங்கிலீஷ்ல பேசினா, அவன் கூட ரெண்டு வார்த்தை சொல்றான். நம்ம பசங்களுக்கு அர்த்தம் தெரியல.

ஆனா, பெண்கள் அப்படியில்ல அருணாச்சலத்து கிட்ட நிறைய சந்தேகம் கேக்குறாங்க. என்ன புஸ்தகம் படிக்கணும்னு கேக்குறாங்க. ஐ.ஏ.எஸ். படிக்கிற பொண்ணு ஒண்ணு, அவனுடைய கைடன்ஸ்லதான் ஐ.ஏ.எஸ் பரீட்சையே எழுதியிருக்கு.

ரொம்ப நல்ல பையன்பா. ரொம்ப கெட்டிக்காரப் பையன். அந்தப் பொண்ணு சுமாரா இருந்தாக்கூட போதும். இவன் மேக்கடிச்சு, ஒரு பெரிய தலை முறையையே உருவாக்கிடுவான்.

பையனுக்கு அம்மா பெரியம்மாவப்பத்திக் கேக்க றியா. எங்களுக்குத் தெரியாது. ஆனா, ரொம்ப சுமார் தான். ரொம்ப சுமார்தான்னா என்ன...அவங்க அப்படி வளர்ந்தவங்க. வயல்ல வேலை செய்தவங்க.தோட்டத்துல வேலை செய்தவங்க. அதிகம் படிப்பு இல்லாதவங்க- இந்த ஒரு புள்ள படிச்சுட்டு வர்றதை, ஆச்சரியமா பார்த்தவங்க. அவங்ககிட்ட நீ என்ன எதிர்பார்க்கறே.

இவன் தலைமுறைக்கு அடுத்த தலைமுறை நெருப்பு பிடிச்சா மாதிரி பளபளன்னு இருக்குமே தவிர, இவனுடைய அப்பாவும் அம்மாவும், பெரியப்பாவும் மத்தவங்களும் சுமாராத்தான் இருப்பாங்க. அதப்பத்தி



ஏன் அதிகமா அலட்டிக்கணும். வர்றபொண்ணு அவங்க ளோட குடித்தனம் பண்ணப்போறதில்லையே. அத பாக்க வேண்டாம்னு அந்த அன்னபூரணியோட அப்பாகிட்ட போய் சொல்லு.

நாங்க நின்னு இந்தக்கல்யாணத்தை முடிச்சு வைக் கறோம். அந்தப் பையனைப் பத்தி நான் கேரண்டி கொடுக்கறேன். போ, இத அன்னபூரணி அப்பாகிட்ட சொல்லு.''

தாம்பரத்தில், குவார்ட்டர்ஸில், ஒரு ரயில்வே அதிகாரியின் அப்பா, சத்தியம் செய்து தந்த அந்த செய்தி சென்னை நகரத்தின் மத்தியிலுள்ள அன்னபூரணியின் அப்பாவிற்கு சொல்லித் தரப்பட்டது.

''என்ன பேசறே நீ பதினேழு பவுன் கூட இல்லாம ஒரு ரயில்வே அதிகாரி எப்படி கல்யாணம் பண்ணிக்கு வான் கமர்ஷியல் இன்ஸ்பெக்டர்னா சும்மாவா. நல்ல சம்பளம். மரியாதையான பதவி. சேர்ந்த ஆறுவருஷத்துல அவன் வந்து மூணு ப்ரமோசன் வாங்கியிருக்கான். எக்ஸாம் எழுதி பாஸ் பண்ணியிருக்கான். அவனை நீ எப்படி சாதாரணமா எடை போடறே.

எங்க ஜாதியா இருந்தால் இந்த பதினேழு பவுனே ரொம்ப கம்மி. முப்பது கேட்டா, சரி நல்ல இடம் உடனே முடிச்சுடு அப்படின்னுதான் சொல்லுவாங்க. நீ பன்னெண்டு பவுன் தர்றேன்னு சொல்லுன்னு வாய்கூசாம சொல்றே. ஒரு குந்துமணிக்கு மேல போடமாட்டேன்னு வேற அதட்டியிருக்கே. நல்லாவா இருக்கு. இப்படியா ஒருத்தன் பொண்ணு பெத்தவன் பேசறது.''

மேற்கொண்டு பேச்சு வளர்ந்தபோது, அன்னபூரணி யின் அப்பாவைக் கடிந்து கொண்டார்கள்.

''நீ என்ன செய்றே...நேரே தாம்பரம் போற, அவன் வீட்டுக்குப் போய், கை கூப்பி பதினேழு பவுன் போட

றேன்னு சொல்றே. என்ன முன்ன பின்ன ஆனாலும், இந்த இடம் நல்ல இடமா இருக்கு. பையன் நல்லவனா இருக்கறதுனால, தயவுசெய்து ஐந்துபவுன் அதிகமானதை கேக்கவே கேக்காதே. பதினாறுல ஆரம்பிச்சு பதினேழுல வேணா முடி. ஆனா, இந்த இடத்தை விடாதே. வேணும்னா, நானும் கூட வர்றேன்.''

வழக்கமாய் வருகிற கஸ்டமர், வெய்யிலில் அலைந்தவர் அன்னபூரணியின் 'அப்பாவிடம் பேச, அன்னபூரணியின் அப்பா அந்த மனிதரோடு ஒருநாள் மத்தியானம், தாம்பரம் போய் இறங்கி, ரயில்வே குவார்ட்டர்ஸ் தேடி, அருணாசலத்தின் பெரியம்மா முன் கைகூப்பி நின்றார்.

''நாங்க பதினாறு பவுன் போடறோம். கல்யாணத்துக்கு ஒத்துக்கறீங்களம்மா.'' என்று கேட்டார்.

''இல்லிங்க. எங்களுக்கு இருபத்திநாலு பவுனுக்கு ஆள் வந்திருக்கு. நீங்க இருபத்தாறு போடறதா இருந்தா நாங்க ஒத்துக்கறோம்.'' என்று பதில் கறாராக வந்தது.

அன்னபூரணியின் அப்பாவிற்கு அந்த வீடு பிடிக்கவில்லை. மூலைக்கு மூலை துணிகள் தொங்கின. தரையைக் கழுவி வெகு நாளானதுபோல் இருந்தது. வீட்டிற்குள்ளிருந்து, மீன் வாசனை நெடியாக வந்தது. சாப்பிட்ட தட்டுக்கள் கழுவப்படாமல், குழாயடியில் போடப்பட்டிருந்தன. சோபா கிழிந்து தொங்கியது.

வீட்டின் எல்லா மூலைகளிலும் ஒட்டடை தொங்கிக் கொண்டிருந்தது. ஒட்டடை தொங்கிக் கொண்டிருக்கிற எந்த வீடும் நல்ல வீடு அல்ல என்பது அவருடைய அபிப்பிராயம். லக்ஷ்மி வாசம் செய்யும் இடத்தில் ஒட்டடைகள் தொங்காது. ஒட்டடைகள் தொங்கும் இடத்தில் லக்ஷ்மி வாசம் செய்ய மாட்டாள் என்பது அவருடைய தெளிவான எண்ணம்.



வீட்டில் இருக்கிற ஒரு பெண்மணி ஒட்டடை கூட அடிக்க முடியாத அளவிற்கு மனோநிலையில் இருப்பாளே யன்றால், அவள் மலர்ச்சியாக இல்லையென்றுதான் அர்த்தம். அவள் மனோநிலை பாதிக்கப்பட்டவள் என்பதுதான் அவர் முடிவு.

இவ்வளவு அடை அடையாய் ஒட்டடை தொங்க ஒரு வீடு இருக்கிறது. இந்த வீட்டில் தம்மகள் எப்படி குடித்தனம் செய்யமுடியும் என்று அவருக்கு அருவருப்பு வந்தது. அதுவும் தவிர, இருபத்தி நாலு போடுறேன் என்று சொல்லுகிறார்கள். இருபத்தி ஆறு போட்டால் உண்டு என்பது மிகமிக வியாபாரமான பேச்சு. வியாபாரமான இடத்தில் அன்னபூரணி வாழ்க்கைப்பட்டால், அவள் வாழ்க்கை சீரழியும் என்று அவருக்குத் தோன்றியது.

அவர் விடை பெறாமல் வெளியே வந்து விட்டார். கூட அழைத்துப் போனவரும் முகம் தொங்கிப் போய் திரும்பினார்.

''சரி. இது ஏதோ நல்லதுக்குத்தான் அப்படித்தான் நாம எடுத்துக்கணும்.'

அருணாச்சலத்தை இப்பவும் நான் தப்பு சொல்ல மாட்டேன். அவன் வீட்டுல இருக்கற இந்த பொம்பளை ரெண்டுங்கெட்டான். அவளுக்குப் பேசத்தெரியலை. நீ யாருன்னு தெரியலை. அன்னபூரணியின் அருமை தெரியலை. இது இன்னிக்கு சோபா செட்டும், குவார்ட்டர்ஸுமாய் இருக்கற பொம்மனாட்டி. இவ தலைகால் தெரியாத பதட்டமா பேசி, இவன் வாழ்க்கைய கெடுக்கப்பார்க்கறா. அருணாச்சலம் இருந்தபோது நாம வந்திருக்கலாம். அருணாச்சலம் இல்லாதபோது வந்தது நம்மதப்பு. அவன் வந்த போது, நம்ம பேச்சை ஆரம்பிச்சிருக்கணும்.

இரும்பி நீ கடைக்குப் போகணுங்கறதாலேயே, நான் உடனே பேச்சை ஆரம்பிச்சிட்டேன்.''

''தப்பு பண்ணிட்டோம் விட்டுடு. அன்னபூரணிக்கு இதையும் விட நல்ல இடம் கிடைக்கும்.''

அன்னபூரணி விஷயம் தெரிந்து, திடீரென்று சோகமானாள். அந்த இளைஞனின் முகத்தை அவளால் மறக்க முடியவில்லை. அவன் பேச்சை அவளால் நினைவிலிருந்து அகற்ற முடியவில்லை.

அவள் அவனோடு குடித்தனம் செய்வது போல இரண்டு நாட்கள் கற்பனை செய்தாள். அழித்தாள். நீ தேவையில்லை போ என்று சொல்லி, ஜாதி விட்டு ஜாதி கல்யாணம் செய்து கொண்டாள். ஒரு பிராமணப் பையனை காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டாள். திருமணம் செய்வதுபோல, மனதுக்குள் கற்பனை செய்து கொண்டாள்.

அந்தக் கற்பனையை தொடர்ந்து பலமாதங்கள் நடத்தினாள்.

'எங்க அன்னபூரணி பிராமின் இல்ல. ஆனா, அவ நூறு பிராமினுக்கு சமம். எத்தனை அழகா ஸ்ரீசுக்தம் சொல்றா தெரியுமா. வடமொழி இருக்கட்டும். எவ்வளவு தமிழ் பாட்டுக்கள் தெரியறது. தேவாரமும் திருவாசகமும் அவ சொல்ற போது, கண்ல ஜலம் வழிய சொல்றா. எனக்கே என்னமோ மாதிரி ஆயிடும். எங்கப்பா அத்தனை கொண்டாடறா. அன்னபூரணி அன்னபூரணின்னு எங்க வீடு முழுக்க அவளை தலைல வச்சுண்டிருக்கு.

என்ன பிராமின், என்ன நான்பிராமின். மனசுதான் இதுக்கெல்லாம் காரணம். அன்னபூரணியினுடைய புத்தி ரொம்ப பெரிய புத்தி. ரொம்ப நல்ல மனசு. எங்க வீட்டுக்கு அவ வந்தது எங்களுக்கு அதிர்ஷ்டம். அவள் கற்பனைக் கணவன் வாயாரப் புகழ, அவன் கழுத்தை கட்டிக் கொண்டு, அவன் புகழ்ச்சிக்காக அவனுக்குப் பரிசாய் முத்தம் கொடுத்தாள். உதடு கவ்வி இழுத்தாள், என்னை என்ன வேணா பண்ணிக்கோடா என்று தயாரானாள்.



காதல் கற்பனைகள் செய்வதுபோல சுகமான விஷயம் இந்த உலகத்தில் எதுவுமில்லை. நேரடியான காதலில் பல வேதனைகள் இருக்கின்றன. பல பிரச்சினைகள் சமாளிக்க வேண்டியிருக்கும். நல்லதும் கெட்டதும் அநேகம் பேச வேண்டி இருக்கின்றன. ஆனால், கற்பனையாய் மனதுக்குள் வேறு எவரும் அறியாமல் காதல் செய்வது சுகத்தின் உச்சகட்டம். அந்தக் காதல் மூலம் கலவியில் கற்பனை செய்து கொள்வது இன்னொரு அற்புதமான அனுபவம். அந்த அனுபவம் மனதை சந்தோஷப்படுத்தி, உடம்பையும் செழுமைப்படுத்தி விடுகிறது.

கற்பனை செய்கிற பலபேர்கள் குண்டாகத்தான் இருக்கிறார்கள். அன்னபூரணி இன்னும் பூசினது போல ஆனாள். அவள் உடம்பு தடிக்கத் துவங்கியது.

## 4

''புஸ்தகக் கடைக்காரரே... ஒன்னு தெரியுமா இருபத்திநாலு பவுனுக்கே ஒத்துகிட்டாங்களாம். நம்ம வருவோம்னு ஒருவாரம் காத்திருந்தாங்களாம். நாம வரலேன்னவுடனே, இருபத்திநாலு பவுன்காரங்களுக்கு பச்சைக்கொடி காட்டிட்டாங்களாம்.

இருபத்திநாலு பவுன்காரன் தாம்பரத்துல ரியல் எஸ்டேட் வியாபாரம் பண்றவன். அவன் தங்கையைத்

நான் அருணாசலத்துக்குப் பேசியிருக்கு. அருணாச்சலமும் சரின்னு தலையாட்டிட்டதா கேள்வி.

தாம்பரத்துல பெரிய சத்திரத்தை புக்பண்ணிருக்காங்களாம். குவார்ட்டர்ஸ்ல இருக்கற எல்லாரும் அவசியம் கல்யாணத்துக்கு வரணும்னு தனித்தனியா கூப்ட்ருக்காளாம். குவார்ட்டர்ஸுக்கும் சத்திரத்துக்கும் நடுவுல மினி பஸ்விடறேன்னு சொல்லிருக்கானாம். எல்லாம்அந்தரியல் எஸ்டேட்ஓனர் காசு. அருணாசலம் ரொம்பசந்தோஷமா இருக்கறதா சொல்றாங்க. என் காதுல விழுந்தது உனக்கு சொல்றேன்.'' நண்பர் புஸ்தகக் கடைக்காரரிடம் விவரம் சொல்ல, அன்னபூரணியின் அப்பா அதை கேட்டுக் கொண்டு, அதை அன்னபூரணிக்குச் சொன்னார்.

அன்னபூரணியின் மனம்வேதனைப்பட்டது. இரண்டு நாட்கள் கற்பனையே இல்லாமல் உள்ளார்ந்த ஒரு சோகத்தில் இருந்தாள். என்று அருணாச்சலத்திற்கு திருமணம் நடந்ததோ அன்றைக்கு பதட்டமாக இருந்தாள். முன்னும் பின்னும் அலைந்தாள். அம்மா மீது சீறினாள். புஸ்தகத்தை வீசிப் போட்டாள். கோலம் போட முடியாது என்று அடம் பிடித்தாள். டி.வி.யில் பாட்டு போட்டு விட்டு, தானும் உரக்க பைத்தியம் போல் பாடினாள்.

திருமணமாகாத பெண் படுகிற வேதனை, திருமணமாகாத பெண்ணாக இருந்தால்தான் தெரியும். அவள் கோபமும் ஆத்திரமும் அருவையும் வேதனையும் மிகமிக நுண்ணியமானவை. இவைகளைப் புரிந்து கொள்வது மிகக் கடினம். அந்த வேதனையை, ஆத்திரத்தை அந்தப் பெண் பலவகைகளில் வெளிப்படுத்தினாள். கூச்சலாய், கத்தலாய், உரக்கப் பாடுகிற பாட்டாய், எதற்கு ஒழுக்கமாக இருக்க வேண்டும் என்கிற கடுகடுப்பாய் பல்வேறு விதங்களில் காட்டினாள்.



அன்னபூரணிக்கு அப்படித்தான், அன்று முழுவதும் மனம் அலை பாய்ந்தது. வேண்டுமென்றே தாவணியை ஒரு பக்கம் ஒதுக்கிக் கொண்டு, வாசலில் போவோர் வருவோர் பார்க்கும்படி நின்றால் என்ன என்று தோன்றியது.

யாருமில்லாத போது, அப்படி நின்றாள். யாரோ வந்தவுடன், சடக்கென்று தாவணியை இழுத்து நெஞ்சை மறைத்துக் கொண்டாள். அவளால் ஒழுக்கமாக இருக்கவும் விருப்பமில்லை. ஒழுக்கம் கெட்டுப் போகவும் விருப்பமில்லை.

இவ்வித குடும்பப் பெண்களின் மனோநிலைமையைப் புரிந்து கொள்ள, அக்கம் பக்கத்தில் ஆட்களே இல்லை. இது தவறு என்று சொல்லவோ, சரி என்று சொல்லவோ அவர்களுக்கு ஸ்நேகிதங்கள் கிடைப்பதில்லை. திருமணமாகாத பெண்ணின் பெருமூச்சு கற்பாறைகளைக் கூட உடைத்து விடுகிற தன்மை கொண்டது என்று வடமொழியில் ஒரு ஸ்லோகம் சொல்கிறது.

ஆனால் கற்பாறைகளை உடைக்கின்ற அந்தப் பெருமூச்சு மனிதரின் மனங்களை மாற்றுவதற்கு இயலாமல் போகிறது.

அன்னபூரணி அடுத்த ஒரு வாரம் பேரவஸ்தைப் பட்டாள். மெல்ல மெல்ல மனம் தேறினாள். தன்னுடைய மனோசக்தியை பல்வேறு விதங்களில் செலவழித்து, தன்னை திசை திருப்பிக் கொண்டாள்.

''அன்னபூரணி, உன் ஜாதகத்தை நான் பார்த்தேன்.'' எதிர்வீட்டுமாமி அவளை தனியே அழைத்துப் பேசினாள். ''ஒரேயொரு தோஷம் அதுல இருக்கத்தான் செய்யறது. ஆனா, அது நிச்சயம் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது.

நான் எழுதித் தர்றேன். உனக்கு கல்யாணமாகும். நீ ரொம்ப சந்தோஷமா இருப்பே. நல்ல குழந்தைகள் உனக்குப் பிறக்கும். ஊர் கொண்டாடறபடியா நீ குடித்தனம் பண்ணுவே.இது சத்தியம். கவலைப்படாதே.

ஆனா, இன்னும் ஒரு வருஷத்துக்கு உன் கிரகங்கள் நல்ல நிலையில் இல்லை. உன்னைக் கவுத்து நாசம் பண்றத்துக்கு இரண்டு மூன்று கிரகங்கள் ஏற்பாடு செய்ய லாம். அதிலேருந்து தப்பிச்சுக்கணும்னா, நான் சொல்ற ஒரு விஷயத்தை மட்டும் கவனமா கேளு. நம்பிக்கையோட கேளு.'' அந்த மாமி ரகசியமாய் அன்னபூரணி காதில் சொன்னாள்.

''இங்கேருந்து பத்து நிமிஷ நடை முண்டகக்கன்னி யம்மன் கோயில். கார்த்தால குளிச்சிட்டு, ஏழரை மணி எட்டு மணிக்குள்ளே கோயிலுக்குப் போயிடு. அங்கேயே தனியா துடப்பமும், பக்கெட்டும் துணியும் வைச்சுக்கோ. கடைல ஃபினாயில் வாங்கிக்கோ. முண்டகக்கன்னியம்மன் கோயில் முழுக்க, பெருக்கு. சுத்தம் பண்ணு. ஈரத்துணி யால ஃபினாயில் துடை. அந்தஇடத்தை எவ்ளோ சுத்தமா வைச்சுக்க முடியுமோ, அத்தனை சுத்தமா வைச்சுக்கறத் துக்கு நீயும் உதவி செய்.

கோயில்ல பெருக்கறவா இருப்பா. பரவாயில்ல. அவாகிட்ட துடப்பத்தை வாங்கி, நான் பெருக்கறேம்மா, நீ ஓரமா உக்காந்துக்கோன்னு சொல்லு. இது வேண்டுதல்மா அப்படின்னு அவாகிட்ட கைகூப்பு. அவா பெருக்கறபடி பெருக்கட்டும். அவா சாயந்தரம் பெருக் கட்டும். கார்த்தால நீ பெருக்கு.

பெருக்க பெருக்க, உனக்கு எல்லா வளங்களும் வரும். எல்லா நல்லதும் நடக்கும். இந்த ஒரு வருஷம் உனக்கு கல்யாணம் ஆகாம இருக்கறது நல்லதுங்கறது என்னுடைய அபிப்ராயம். நான் பகவானை அப்படித்



தான் வேண்டிண்டிருக்கேன். அடுத்த வருஷம் உனக்கு கல்யாணம் நடந்தாப் போறும். இந்த வருஷம் முழுக்க நீ தபஸ்வி மாதிரி அதிகமா யாரோடயும் பேசாத. உரத்த குரல்ல சண்டை போடாத. எவ்வளவுக்கு எவ்வளவு அமைதியா இருக்க முடியுமோ, அவ்வளவுக்கு அவ்வளவு அமைதியா இருக்கறது நல்லது அப்படிங்கறது என் அபிப்ராயம். நீ சௌக்யமா இருக்கணும்னு நானும் பகவானை வேண்டிக்கறேன்.''

அந்த மாமி சொல்ல, அன்னபூரணி ஆடிப்போனாள்.

''இதப் போய் உங்க அப்பாகிட்டயோ அம்மா கிட்டயோ சொல்லாதே. அவா இதைத் தாங்கமாட்டா. என்னமோ ஏதோன்னு கலவரப்படுவா. அந்தக் கிழவர் நிம்மதியா தூங்கட்டும். நான் சொன்னது உன்னை நீ சரிப்படுத்திக்கறத்துக்காக. நீ தபஸ் பண்ணணுங்கறத்துக் காக. உன் வாழ்க்கை நன்னா இருக்கணுங்கறத்துக்காக. உங்க அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இதுல சம்பந்தமே யில்லை.

நான் உனக்கு உதவி செய்றேன் அன்னபூரணி. உன் குடும்பம் முன்னுக்கு வரணும். உன் ஜாதியில இன்னொ நல்ல பொண்ணு இருக்கறது ரொம்ப துர்லபம் இப்பேற் பட்ட நல்ல பொண்ணு நல்ல இடத்துல கல்யாணமாகி, ரொம்ப நல்ல விதமாக வாழ்ந்தால்தான் எல்லாருக்கும் மதிப்பு மரியாதை.

நான் ஜாதியில உயர்ந்தவளா இருக்கலாம். ஆனா, ஜாதி வித்தியாசம் பாக்கறவ இல்லை. உன்னுடைய வாழ்க்கை நல்லபடியா ஆகணும்னு நான் உனக்கு என்ன உதவி வேணாலும் செய்யத் தயாராக இருக்கேன்.

வெறுமனே பெருக்கறது மட்டுமில்லை. அப்படி பெருக்கறபோது நீ என்ன ஸ்லோகம் சொல்லணும்னு, நான் உனக்கு சொல்லித்தர்றேன்.''

அந்த மாமி, அன்னபூரணியின் காதோரம் ஒரு ஸ்லோகம் சொன்னாள். அன்னபூரணி அதை எழுதிக் கொண்டாள். மனனம் செய்தாள். ஒரு நல்ல நாள் பார்த்து, நல்ல நேரம் பார்த்து, முண்டகக் கன்னியம்மன் கோயிலுக்குப் போய் தினமும் பெருக்கத் துவங்கினாள்.

அவளுடைய மனோ கற்பனைகள், அதீதமான ஆசைகள் அதற்குப் பிறகு சற்று மட்டுப்பட்டன. அம்மன் சன்னதியில் அமைதியாக இருப்பது போலவே, மற்ற நேரங்களிலும் அன்னபூரணியால் அமைதியாக இருக்க முடிந்தது. அந்த ஸ்லோகம் சொல்லச் சொல்ல மனம் ஒருமைப்பட்டது. மிருதுவாக எல்லோரிடமும் பேசுகின்ற குணம் ஒன்று வந்தது. ஆழ்ந்து தூங்க முடிந்தது. நன்கு சாப்பிட முடிந்தது. வேகமாக நடக்க நடக்க உடம்பில் ஒரு மெலிவும் முறுக்கும் ஏற்பட்டு, அவள் முகம் அழகாக மாறிற்று.

தனக்கு திருமணம் நடக்கவில்லையே என்கிற கவலையும் மறந்து, ஒரு நாள் ஆகும், அதற்கு நாம் தயார் செய்துகொள்ள வேண்டும் என்கிற எண்ணம் ஏற்பட்டது. எல்லாவற்றையும் விட, முண்டகக்கன்னி அம்மனின் அழகில் அவள் மயங்கினாள். அந்த அம்மன் தன்னோடு பேசுகிறது, தனக்குத் துணையாக இருக்கிறது என்று நம்பினாள்.

அம்மன் கோயிலை தினமும் பெருக்குகிறவள் என்பதாலேயே, அந்த ஏரியாவில் அவள் பிராபல்யமானாள். அவளுக்கு திருமணம் நல்லபடி நடக்க வேண்டும் என்று அவளறியாமல், அவளுக்குத் தெரியாமல், பல பேர் வேண்டிக் கொண்டார்கள்.

எந்தவித லாபமுமின்றி இந்த நல்லபெண்ணுக்கு நல்ல இடத்தில் வரன் தகைய வேண்டுமே என்று வேண்டிக் கொண்டார்கள்.

30180



குடும்பம் என்கிற விஷயத்தில் ஆர்வமுள்ளவர்கள் எல்லாம், இன்னொரு குடும்பம் நல்லபடி இருக்கவேண்டும் என்று நிச்சயம் வேண்டிக் கொள்வார்கள். திருமணம் என்ற விஷயத்தில் வெற்றி பெற்றவர்கள் எல்லாம், இன்னொரு திருமணம் நல்லபடி அமைய வேண்டுமே என்று பிரார்த்தனை செய்வார்கள்.

ஒரு திருமணத்தின் வெற்றி என்பது என்ன. வீடு வாங்குதலா...கார் வாங்குதலா...காசு பணமா... இல்லை, அன்பான ஒரு உறவு அமைந்தவர்கள் எல்லோருமே. திருமணம் பற்றி சந்தோஷமாகப் பேசுகிறார்கள். என்னுடைய துணை என்னை எந்த நேரத்திலும் காப்பாற்றும் என்ற நம்பிக்கையுள்ளவர்கள் எல்லோருமே. மற்றவர்களுக்கு நல்ல துணை கிடைக்க வேண்டுமே என்று வேண்டிக் கொள்கிறார்கள்.

அந்த பலமாடிக் குடியிருப்புகளில் அன்னபூரணியின் வீட்டில் மட்டும்தான் பருவங்கள் மாறின. குளிர்காலம் போய் வெய்யில்காலம் மெல்ல தலை தூக்கியது. கோடை உக்கிரமாக இருந்தது. திணற வைத்தது. காலை ஏழு மணிக்கெல்லாம் ரவிக்கை நனையும்படி வியர்வை பொங்கியது. ஆனாலும், அவள் கோயில் பெருக்குவதையும், உட்கார்ந்து துடைப்பதையும் நிறுத்தவேயில்லை. கோயிலில் வேலை செய்து விட்டு, வீட்டிற்கு வந்து சிறிது நேரம் டி.வி பார்த்துவிட்டு, மறுபடியும் குளித்த பிறகு தான் சாப்பிடவே முடிந்தது.

மே மாதத்தில் இரண்டுமுறை பலத்த மழை பெய்தது. பூமியைக் குளிர வைத்தது. ஜூன் ஜூலை மாதங்கள் வெய்யிலும் மழையும் இருந்தன. ஜூலை மாதத்திற்குப் பிறகு மெல்ல வெய்யில் குறையத் துவங்கியது.

மேற்கே நகர்கின்ற மேகங்கள் சில தப்பிப் போய், கிழக்குப் பக்கம் வந்து வானத்தில் குடை பிடித்து, வெய்யிலின் உக்கிரத்தை தணித்தன.

செப்டம்பர் மாதம் மழை தூறலாய் அவ்வப்போது பெய்யத் துவங்கியது.

ஒரு நல்ல மழைநாளில், தினத்தந்தியில் அருணாச்சலத்தைப் பற்றி ஒரு தகவல் வந்திருந்தது. 'மனைவி எரித்துக் கொலை, கணவர் கைது' என்று தலைப்பிடப்பட்டு அவன் படம் மிகப் பெரியதாய் வந்திருந்தது. முதன் முதலில் அன்னபூரணிதான் பார்த்தாள். ஐயோ...என்று வாயைப் பொத்தி கூவினாள். அவள் கூவுவதை கவனித்து விட்ட அன்னபூரணியின் அப்பா ஓடிவந்து, அவள் படித்த பேப்பரை வாங்கி தானும் படித்தார். அம்மாவைக் கூப்பிட்டு, படத்தைக் காட்டி மறுபடியும் செய்தியைப் படித்தார்.

ரயில்வே அதிகாரியான அருணாச்சலம் தாம்பரம் குவார்ட்டர்ஸில் குடியிருந்தார். அவருக்கும் அவர் மனைவி சகுந்தலாவிற்கும் வரதட்சணை சம்பந்தமாய் அடிக்கடி பிரச்சனை எழுந்து வந்தது. சகுந்தலாவிடம் போய் இன்னமும் காசு வாங்கி வா என்று, ரயில்வே அதிகாரியான அருணாச்சலம் சண்டை போட்டார். அடித்து துன்புறுத்தினார். இதற்கு உடந்தையாய் அருணாச்சலத்தின் அம்மாவும், பெரியம்மாவும், பெரியம்மாவின் மகனும் இருந்தார்கள். இந்த நான்கு பேரும் அந்தப்பெண்ணின் கைகளைப் பின்புறமாய் கட்டி, கன்னத்திலும் முதுகிலும் தலையிலும் அடித்து துன்புறுத்தினார்கள். அந்தப்பெண் இந்த சித்ரவதை தாங்காமல், தாய் வீட்டிற்கு வந்து, கடிதம் எழுதிவிட்டு, உடம்பில் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டாள். அந்தப் பெண்ணின் அண்ணன் போலீஸில் புகார் கொடுத்ததின் பேரில், அருணாச்சலம் கைது செய்யப்பட்டார். போலீஸார் மேற்கொண்டு புலன் விசாரணை செய்து வருகிறார்கள்.



வீடு கதிகலங்கிப் போயிற்று. நல்லவேளை தப்பித்தோம் என்று எல்லாவித தெய்வங்களுக்கும் வந்தனம் செய்தது. இவனைப் போய் நல்லவன் என்று சொன்னார்களே. இவனைப் போய் கொண்டாடினார்களே, இவனைப்போல் உத்தமன் உண்டா என்று பேசினார்களே என்று வியந்தது. எல்லோரையும் ஏமாற்றி விட்டு, உள்ளுக்குள் மிருகமாய் வாழ்ந்திருக்கிறான் என்று அவனை விமர்சனம் செய்தது. நல்லவேளை நம் குழந்தை தப்பித்தாள். நாம் செய்த புண்ணியம், நாம் செய்த பாக்கியம் என்று கண்ணீர் வழிய, கை கூப்பிற்று.

இவள் முண்டகக்கன்னியம்மன் கோயிலுக்குப்போய், என்றைக்கு பெருக்கி சுத்தம் செய்தாளோ, அன்றைக்கே வந்த ஆபத்துகள் எல்லாம் முற்றிலும் நீங்கி விட்டன என்று அப்பா சொன்னார்.

அவள் வேகமாக குளித்து நெற்றிக்கு இட்டுக் கொண்டாள். தலை வாரி பூ வைத்துக் கொண்டாள். நேரே முண்டகக்கன்னியம்மன் கோயிலுக்கு நடந்து போனாள். நெய் விளக்கு ஏற்றினாள். பிரகாரம் சுற்றி சுத்தமாய் பெருக்கத் துவங்கினாள். பக்கெட் தண்ணீரில் ஈரத்துணியை முக்கி, பிரகாரம் முழுவதும் ஃபினாயில் தெளித்து துடைக்கத் துவங்கினாள்.

செய்யும் போதே கண்களில் ஜலம் வழிய விசும்பினாள்.

என்னைக் காப்பாற்றி விட்டாயா, என்னுடைய கல்யாணத்தைத்தடை செய்து என்னை மீட்டு விட்டாயா. பின் கையைக் கட்டி, கன்னத்தில் அடித்தார்களாமே... என்னை அடித்திருந்தால் நான் என்னகதி ஆகியிருப்பேன். கடவுளே...என் மீது என்ன கருணை. என் மீது என்ன அக்கறை. என் ஆத்தா... என் மீது என்ன பாசம். என் தாயே... என் மீது என்ன பிரியம். அவள் பக்கெட்டை பிடித்துக் கொண்டு குலுங்கி குலுங்கி அழுதாள்.

அவள் அழுவதைப் பார்த்தவர்கள் தெரிந்தவர்கள், அருகே போய் அவள் தலையை தடவிக் கொடுத்தார்கள்.

"நிச்சயமா கல்யாணமாகும். உனக்கு கல்யாண மாகாத, வேறு யாருக்கு தாயி கல்யாணம் ஆகும். 'நீபடற வேதனைய நான் தினம் பாத்துகிட்டுதான் இருக்கேன். ஒரு நாள் இல்ல ஒரு நாள் உனக்கு கல்யாணமாகும். உனக்கு ரொம்ப நல்ல ஆம்படையான் கிடைப்பான், நீ சந்தோஷமா குடித்தனம் பண்ணுவே. இது சத்தியம், எழுதித்தர்றேன்." யாரோ ஒரு பெண் உரத்த குரலில், சன்னதம் வந்தது போல், அவள் தலைமுடியைத் தடவி, உச்சி முகர்ந்து ஆசீர்வதித்தாள்.

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பலபேர்கள் கைகூப்பி, அந்த வார்த்தைகள் பலிக்க வேண்டும் என்று உள்ளுக்குள்ளே இருக்கும் முண்டகக்கண்ணியம்மனை வேண்டிக் கொண்டார்கள்.

ஒரு பெண் தன் திருமணம் பற்றி துயரப்படுவதை அங்குள்ள எவராலும் சகித்துக் கொள்ள முடியவில்லை.

அந்தச் செய்தி மாலைப்பத்திரிகைகளில் வந்தது. மறு நாள் வேறொரு பத்திரிகையில் வந்தது. ஒரு வாரப் பத்திரிகையில் வந்தது. எல்லாம் அதே செய்திகளை விதம் விதமாக சொல்லிற்றே தவிர, மேற்கொண்டு என்ன நடந்தது என்பதை எந்தப் பத்திரிகையும் சொல்லவில்லை.

அவள் அந்த அருணாச்சலத்தின் முகத்தைப் பார்க்க விரும்பினாள். மகாபாவி நீ நல்லா இருப்பியா என்று ஒரு வார்த்தை கேட்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். நல்லவேளை ...நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலை தப்பிச்சுட்டேன் என்று மனசுக்குள் சொல்லியபடியே, அவன் எதிரே நிற்க விரும்பினாள். அவன் தலைகுனிந்து போவதை ஆவலோடு பார்க்க விரும்பினாள்.



ஆனால், அவன் கைதாகி எந்த ஜெயிலில் அடை பட்டுக்கிடக்கிறான் என்பது யாருக்கும் தெரியவேயில்லை. தெரிந்து என்ன ஆகப்போகிறது என்று அவர்கள் தெரிந்து கொள்ளும் முயற்சிகள் எதும் செய்யவேயில்லை.

பிள்ளையார் சதுர்த்தி போய், கோகுலாஷ்டமி வந்தது. கோகுலாஷ்டமி நகர்ந்த பிறகு, நவராத்திரி உற்சவம் நடந்தது.

அந்த பலமாடிக் குடியிருப்பு காலனியில் நவராத்திரி உற்சவம் விமரிசையாய் கொண்டாடப்படும். எல்லா வீடுகளிலும் அலங்காரம் செய்யப்படும். கோயிலிலுள்ள பிள்ளையார் சன்னதிக்கு தனி வழிபாடுகள் நடக்கும். கோயிலுக்கு வாசலில் லக்ஷ்மி, சரஸ்வதி, துர்கா என்று மூன்று பொம்மைகள் வைத்து,சிறப்பு பூஜைநடைபெறும். ஹோமம் நடைபெறும். சில சமயம் சொற்பொழிவுகள் நடைபெறும். இந்த முறை பட்டிமன்றம் என்று சொன் னார்கள். பெண் விடுதலை பற்றிய பட்டிமன்றமாக இருக்க வேண்டும் என்று பல பேர் ஆசைப்பட்டார்கள். இலக்கியம் சார்ந்த பெண்களை முன்வைத்து,பெண்களின் இன்றைய நிலைபற்றி விவாதிக்க விரும்பினார்கள். ஆறு பேர் கொண்ட குழுவை அந்தக் காலனியின் இளைஞர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. அந்த ஆறு பேரில் ஒருவ ராக வழக்கறிஞர் சுமதி வந்திருந்தார்.

வழக்கறிஞர் சுமதியை அன்னபூரணி சந்தித்ததில்லை. ஆனால், தொலைக்காட்சி பேட்டிகளில், பட்டிமன்றங் களில் சுமதியைப் பார்த்திருக்கிறாள்.

சுமதியின் முகம், நடை, பார்வை அன்னபூரணிக்குப் பிடிக்கும். என்னை ஒன்றும் செய்துவிட முடியாது. நான் மிகமிக உயரமானவள் என்பதான ஒரு குரல், ஒரு பார்வை, ஒரு படபடப்பு சுமதியிடம் இருக்கும். சுமதி

பேசுவதும் நல்ல உரத்த குரலில் கன்னத்தில் அறைவது போல் கேட்கும்.

சுமதி எழுதிய கட்டுரைகளை அவன் படித்திருக்கிறான். சுமதியின் சிந்தனைகள் அவனைக் கவர்ந்திருக்கின்றன. நாமும் வக்கீலுக்குப்படித்திருந்தால் இந்தமாதிரி கட்டுரைகளெல்லாம் எழுதலாம். பட்டிமன்றங்களில் பேசலாம் என்று ஒருமுறை நினைத்துக் கொண்டிருக்கிறான்.

சுமதி காலனிக்கு வருகிறாள் என்று தெரிந்து, அவளிடம் நேரே போய் கை கூப்பினாள். 'நான் உங்களுடைய விசிறிங்க' என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

சுமதிக்கு அந்த வார்த்தை ஆச்சரியமாக இருந்தது.

எப்போதோ சில கட்டுரைகள், எப்போதோ சில பேட்டிகள், எப்போதோ சில சொற்பொழிவுகள் நடத்திக் கொண்டிருக்கிற சுமதிக்கு, விசிறி என்று ஒருவர் அறிமுகம் செய்து கொள்வது, நம்ப முடியாமல் இருந்தது.

அவள் ஆறுதலாய் அன்னபூரணியின் கையைப் பிடித்துக் கொண்டாள். ''ரொம்ப சந்தோஷம் எனக்கு. என்ன படிச்சிருக்கீங்க.''

பல பேர் விசிறி என்று அறிமுகப்படுத்திக் கொண்டு. என்ன படித்திருக்கிறாய் என்று கேட்டால், உடனே தெரியாது என்று சொல்லி விடுவார்கள்.

அன்னபூரணி ''துக்ளக்'' பத்திரிகையில் சுமதி எழுதியிருந்த எல்லா கட்டுரைகளையும் ஒன்றுவிடாமல் சொன்னாள். அவளுடைய பேட்டிகள் மூன்றை குறிப்பிட்டாள்.

சுமதிக்கு சந்தோஷமாக இருந்தது. ''ப்பா...படிச்சிருக்கீங்களே... படிக்காம விசிறின்னு சொல்றீங்களோன்னு நினைச்சேன்.''



''இல்லீங்க மேடம். உங்களை எனக்கு ரொம்பப் பிடிக்கும்.''

''அப்படியா... அன்னபூரணி, ஒரு உதவி செய்யணுமே.''

''என்ன''

அன்னபூரணியின் காதோரம் சுமதி ஒரு விஷயம் சொன்னாள். அது பெண்களின் உடல் நலம் பற்றிய பிரச்சனையாக இருந்தது.

''அடட...இதுக்கென்ன, வாங்க. எங்க வீட்டுக்கு வாங்க.'' சுமதியின் கையைப் பிடித்துக் கொண்டு, அன்னபூரணி தன் வீடு நோக்கி வந்தாள்.

''எங்கே கூட்டிட்டுப்போறீங்க அன்னபூரணி.'' மற்ற இளைஞர்கள் கேட்டார்கள். அவர்களுக்கு அருகே போய்,

''ஒன்னும் இல்லீங்க. ஒரு பதினஞ்சு நிமிஷத்துல மேடம் திரும்பி வந்துடுவாங்க. இது கொஞ்சம்...லேடீஸ் ப்ராப்ளம்.''

இளைஞர்கள் சரியென்று தலையாட்டினார்கள்.

சுமதி அன்னபூரணியின் வீட்டிற்குள் நுழைந்தாள். அவள்வீட்டு பாத்ருமை உபயோகப்படுத்திக்கொண்டாள். ஐந்து நிமிடத்தில் வெளியே வந்தாள். மறுபடியும் முகம் கழுவி, வேறு பொட்டு இட்டுக் கொண்டு, ஒரு பாடி ஸ்ப்ரேயை மேலே தெளித்துக் கொண்டு, கூட்டத்திற்குப் போக தயாரானாள்.

அவள் நன்றி சொல்லும்போது, வீட்டிலுள்ள புஸ்தகங்களைப் புரட்டிப் பார்த்தாள்.

''நிறைய புஸ்தகம் வைச்சிருக்கீங்க, படிப்பீங்களா.''

''எங்க அப்பா புஸ்தகக்கடை வைச்சிருக்காரு. நீங்க பேஸ்மெண்ட்ல பார்த்திருப்பீங்களே. ஒரு பெரிய கடை எல்லா புத்தகங்களும் அங்க கிடைக்கும்.''

''ஆமாம் ஆமாம். கேள்விப்பட்டிருக்கேன். வேறு ஏதோ பத்திரிகைல கூட வந்தது. இவர்தான் அப்பாவா.'' அப்பாவின் புகைப்படத்தைப் பார்த்து கேட்டாள்.

'நான் வந்து...உங்க வீட்டுப்போன் நம்பர் கொடு அன்னபூரணி. ஒருவேளை எனக்கு சில புத்தகங்கள் தேவையா இருந்தா, உனக்கு போன் பண்ணி சொல்றேன்.''

''நல்லா சொல்லுங்க மேடம். நானே தின்னு எடுத்துத்தர்றேன். இப்ப இல்லேன்னாகூட, வேற சில இடங்கள்ல இருக்கும். அப்பா தேடிக்கண்டுபிடிச்சிடுவாரு. அப்பாகிட்ட பேர் சொல்லிட்டீங்கன்னா போதும். கிடைக்காத புஸ்தகங்கள் எல்லாம் கிடைக்கும்'' என்று அன்னபூரணி போன் நெம்பர் கொடுத்தாள்.

சுமதியும் அன்னபூரணியும் மிக நெருக்கமானவர்கள் போல, உரசிக்கொண்டு நின்றார்கள். மிகவும் அன்போடு பார்த்துக் கொண்டார்கள்.

சுமதி வீட்டை விட்டுக் கிளம்பும்போது சோபாவுக்கு அடியில் அந்த தினத்தந்தி இருந்தது. ''அட...இவரு இங்க இருக்காரா'' என்று எடுத்துப் பார்த்தாள்.

''என்ன மேடம்.''

''இவரு அருணாச்சலம். இவர் கேஸை நான்தான் அட்டெண்ட் பண்றேன்.''

''நல்லா தண்டனை வாங்கிக்கொடுங்க மேடம். இந்த மாதிரி ஆளுங்களுக்கு ஆயுள்தண்டனை கொடுக்கணும், தூக்குல போடணும்.''

''ஐயய்யோ... அன்னபூரணி. நான் இவருக்காக வாதாடறேன்.''



''என்ன மேடம். இவ்ளோ பேசறீங்க. இவ்ளோ மாடர்னா இருக்கீங்க. பெண் விடுதலைன்னு பேசறீங்க, கடைசில, அந்தப் பெண்ணுக்குத் துரோகம் பண்ணின வனுக்கு வாதாடறீங்களே. உங்க தொழில், பேச்சு வேறயா. ரெண்டும் ஒண்ணா இருக்க வேணாமா, நீங்க பெண்களுக்காக வாதாடறவங்க. ஒருபெண்ணை கொலை பண்ணினவனுக்காக எப்படி வாதாடறீங்க.''

''ஐயய்யோ...இது தப்பு அன்னபூரணி.''

''என்ன தப்பு.''

''இந்த ஆள் கொல்லலே இல்லை.''

''எப்படி மேடம் சொல்றீங்க.''

''இவன் வாய்விட்டு அழுது, அலறி எங்கிட்ட சொன்னான். இவன் அந்த மனைவிய ரொம்ப நல்லா வைச்சிருந்தான். இந்த மனைவிய கொன்னது வேற ஒருத்தர்.''

''என்ன மேடம், தெளிவாச் சொல்லுங்க.''

''என் இவ்ளோ ஆர்வமா கேக்கறே.''

''ஒரு காரணம் இருக்கு.''

''என்ன காரணம் இருக்கு.''

''இந்த ஆளு, ஆறுமாதம் முன்னாடி, என்னை பெண் பார்த்துட்டுப் போனாரு. பிடிச்சிருக்குன்னு சொன்னாரு. ஒரு நாலு சவரன்ல தட்டிப் போச்சு. இவங்க வீட்ல அம்மாவும் பெரியம்மாவும் ரொம்ப மோசமானவங்க மேடம், காசு காசுன்னு அலையறாங்க. இவரு நல்லாதான் கேள்விப் பேசினாரு. இவரைப் பத்தி நாங்க நல்லாதான் பட்டோம். ஆனாலும், இவ்ளோ பெரிய மிருகமா இருப்பாருன்னு நாங்க நினைக்கவே இல்லை. நல்லவேளை... இவரை கல்யாணம் பண்ணிக்கல மேடம்.'

''தப்பு அன்னபூரணி. நான் மறுபடி சொல்றேன். நான் தெள்ளத் தெளிவா தெரிஞ்சுதான் இந்த ஆள் கேஸை எடுத்துகிட்டேன். இவன் கொலை பண்ணலை. இவன் மனைவியினுடைய அண்ணன் ஒருத்தன் ரியல் எஸ்டேட் ஓனர். அந்த ஆள்தான் இந்தக் கொலைய செய்திருக்கணும். தங்கச்சிய அடிச்சிக் கொன்னுட்டு, தற்கொலை மாதிரி ஒரு கடிதம் எழுதிவைச்சு, செத்துப் போன தங்கச்சி உடம்புல, கெரஸின் ஊத்திக் கொளுத்திட்டு, தங்கச்சி தற்கொலை பண்ணிகிட்டா. அந்த தற்கொலைக்கு காரணம் இவன்னு சொல்லி, இவன் மேல போட்டுட்டான்.

அடிச்சது பிரேத பரிசோதனைல வெளியாயிடுச்சு, அடிச்சது இவன்தான். தங்கச்சி, வீட்டுக்கு வரும்போதே ரத்தக் காயத்தோட வந்தா. அந்தத் தங்கச்சி நெருப்பு வைச்சுகிட்டு செத்துப்போகாம இருந்தாக்கூட, அந்த ரத்தகாயத்துல ரெண்டு மூணு நாள்ல செத்துப் போயிருப்பா அப்படின்னு புகார் கொடுத்திருக்கான். எனக்கு அந்த அண்ணன் மேல ரொம்ப சந்தேகம்.''

''என்ன காரணம் மேடம்?''

''அந்தப் பொண்ணு தப்பு அன்னபூரணி. அந்தப் பொண்ணுக்கு வேறஒரு ஆள்மேல லவ் இருந்திருக்கு. அது அவங்க அண்ணனுக்குப் பிடிக்கலை. அந்தப் பையன், அவங்க அண்ணன் ரியல் எஸ்டேட்ல வேலை செய்றவன். எங்கிட்ட வேலை செய்றவனை நீ லவ் பண்றதா. அவன் பிச்சைக்காரன். அவன்கிட்ட காசு இல்ல. அதனால, இந்த இடத்தைவிட நல்லஇடத்துல உனக்கு கல்யாணம் பண்ணி வக்கிறேன்னு சொல்லி, இவனுக்கு இருபத்தி ஆறு பவுன் நகைபோட்டு, கல்யாணம்பண்ணிக் கொடுக்கறதா முடிவு பண்ணிட்டாங்க.

தங்கச்சிக்கு இதுல இஷ்டமே இல்ல. வாயைத் திறந்த போதெல்லாம் அடிச்சி, பேசாம இருன்னு துன்புறுத்தி



இருக்கான். இவனோட ஒரு நாலு மாசம் குடித்தனம் பண்ணிட்டு, தாங்க முடியாத, இவன்கிட்ட தன்னுடைய காதலை, இந்தப் பொண்ணு சொல்லிருக்கா. அருணாச்சலம் அதை அவங்க அண்ணன்கிட்ட சொல்லிருக்கான்.

தங்கச்சிய கொஞ்சம் கண்டிச்சு வையுங்க. அவ வந்து என்னை பிடிக்கலேன்னு சொல்றா. தன்னுடைய காதலை மறக்கலேன்னு சொல்றா. காதலன் கூட போவேன்னு சொல்றா. இது நல்லா இல்லியே அப்படின்னு வருத்தப் பட்டிருக்கான்.

ஆனா, அது எல்லாத்தையும் மறைச்சுட்டு, தங்கச்சிய கூட்டிட்டு வந்து, காதலை மறக்கப் போறியா இல்லியான்னு அவ அண்ணன் மிரட்ட, அவ முடியாதுன்னு எதிர்த்துப் பேச, உருளைக்கட்டையால அடிச்சித் தாக்கி, கொன்னுட்டிருக்கான். இதான் நடந்தது.''

''இந்த அருணாச்சலம், இந்த ஆள், கொலைசெய்யவே இல்லை.''

''எப்படி சொல்றீங்க மேடம். அவர் சொன்னதை வைச்சா.''

''ஆமாம். அருணாச்சலம் சொன்னதை வைச்சுதான் சொல்றேன். அருணாச்சலம் அடிக்கிற ஆளில்லை. அருணாச்சலம் சண்டை போடற ஆளில்லை. அருணாச்சலம் ரொம்ப நல்ல ஆள். அவனுடைய பேச்சு, நடவடிக்கை, படிப்பு, அவன் படிக்கிற புஸ்தகங்கள், அவன் செய்யற தியானம் இதெல்லாமே ரொம்ப பிரமாதமான விஷயம். எமோஷனலா அடிச்சுக் கொல்ற ஆள் இல்லேன்னு தெரிஞ்சது.

அதே நேரத்துல, அவங்க அண்ணன்கிட்ட, பேசின போது, முன்னுக்குப்பின் முரணா நிறைய சொன்னான். அவங்க அண்ணன் வீட்டுக்கு வந்து அவ இறங்கினதை

நிறைய பேர் பார்த்திருக்காங்க. அவ நல்லா, திடமா ஆரோக்கியமா இறங்கியிருக்கா. அது உடம்பு காயங்களெல்லாம் இல்ல. வந்து சண்டை போட்டிருக்கா. அந்த சண்டைய பலபேர் கேட்டிருக்காங்க. என்ன சண்டை, என்ன மாதிரியான சண்டை, என்ன வார்த்தைகள்னு புரியலியே தவிர, உரத்து, உன்னைக் கொலை பண்ணிடுவேன்னு அவன் பதிலுக்குக் கத்தற அளவுக்கு சண்டை, போட்டிருக்கா. அதுலதான் கோபமாகி அவ அண்ணன் கொன்னுட்டான்.

இதைத் தவிர, இன்னொரு விஷயம் என்னன்னா, இலங்க அண்ணன் மேல மூணு விதம்விதமான கேஸுங்க இருக்கு. அதுல ரெண்டு ஆள் மாறாட்டம், காசு ஏமாத்தின கேஸ். ஒண்ணு கொலை முயற்சி கேஸ். கொலை கேஸ்ல கூட தப்பிச்சிட்டதா சொல்றாங்க. மடக்கிட்டேன்னாக்க, அருணாசலத்துக்கு விடுதலை வாங்கி கொடுத்துரலாம்.''

அன்னபூரணி மொத்தமும் கேட்டு விட்டு, உதடு சுழித்தாள்.

''எதுக்காக ஒரு வெறுப்பா பாக்கறே.'' அன்னபூரணியை சுமதி கேட்டாள்.

''எனக்கு இன்னும் நம்பிக்கை வரலை.''

''இல்ல அன்னபூரணி. ஆரம்பத்துல எனக்கும் இந்த ஆள் மேல சந்தேகம் இருந்தது. ஆனா, உக்காந்து பேசின பிறகு, அருணாச்சலம் நல்லவருன்னு தெரிஞ்சது.

ஒரு ஆம்பளை நல்லவனா இருக்கறது ரொம்ப அதிசயம். அருணாச்சலம் நல்லவன். அவன் ஜெயிலுக்குப் போகவே கூடாது. போக நான் விடமாட்டேன். எப்பாடு பட்டாவது அருணாச்சலத்தை நான் காப்பாத்துவேன்.

''சரி. மீட்டிங்போகலாமா,'' சுமதி படியிறங்கினாள் அன்னபூரணி பின் தொடர்ந்தாள்.



அவள் மனம் அருணாச்சலத்தை நினைக்கத் துவங்கியது.

நகைச்சுவையாக நகர்ந்த பட்டிமண்டபம் சுமதி எழுந்து மைக்கைப் பிடித்து பேசத்துவங்கியதும் மும்முரமாக மாறியது.

சுமதி கோபமாக பேச ஆரம்பித்தாள். ''என்ன நவராத்திரி. எதற்காக நவராத்திரி. நவராத்திரியின் அடிப்படையான தாத்பர்யம் என்ன. சுண்டல் தின்பதா. சொஜ்ஜி பஜ்ஜி தின்பதா. புடவை ரவிக்கை பரிமாறிக் கொள்வதா. வெற்றிலை பாக்கு மஞ்சளா. ஸ்டிக்கர் பொட்டு வழங்குவதா...இல்லை. பெண்களை மதிக்க வேண்டும் என்பதின் வேறு விதமான அம்சங்களோடு கூடியதுதான் இந்த பண்டிகை. பெண்கள் போற்றப்பட வேண்டியவர்கள் என்பதை சொல்லாமல் சொல்லும் விஷயம்தான் இந்தப் பண்டிகை.

ஆனால், வெற்றிலைப்பாக்கு வழங்குகின்ற நாம், புடவை ரவிக்கை எடுத்துக் கொடுக்கிற நாம், சக்தி பூஜை என்று செய்கிற நாம், உண்மையில் பெண்களை மதிக்கிறோமா, பெண்களை மதித்தல் என்றால் என்ன.

பெண்களை மதித்தல் என்பது பற்றி ஆண்கள் யாருக்காவது தெரியுமா. அப்பேற்பட்ட அறிவு ஆண்களுக்கு உண்டா. அந்த எண்ணம் ஆண்களுக்கு இடையே பலமாக இருக்கிறதா. இல்லை வெறுமே தெரிந்தது போல் நாடகமாடுகிறார்களா.''

சுமதி உலுக்கி எடுத்தாள். காலனி வாசிகள் வாய் பொத்தி கேட்டுக் கொண்டிருந்தார்கள். பேசி முடித்ததும் எழுந்து நின்று கைதட்டினார்கள்.

''பெண் விடுதலை என்பது பற்றி ஆண்களுக்குத் தெரியவில்லை. அது விடுதலை என்பதுகூட புரியவில்லை. ஆண்களுக்குத் தெரிவது இருக்கட்டும். பெண்கள்கூட இது பற்றி அறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். ஒரு பெண் தன்னுடைய எண்ணங்களை, மன ஓட்டங்களை இன்னொரு பெண்ணுடன் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. ஆண்கள் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்கிற அளவுக்கு கூட, பெண்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்வதில்லை. வெளிப்படுத்திக் கொள்ள முடியாததாலேயே பல பெண்கள் மன நோயாளிகளாக இருக்கிறார்கள். மனநோயாளிகளாக இருக்கும் பெண்களால் வளர்க்கப்படும் குழந்தைகள் எப்படி மலர்ச்சியாக இருக்க முடியும்'' என்று சுமதி கேள்வி கேட்க, கூட்டம் கை தட்டி ஆமோதித்தது.

பட்டிமண்டபம் சந்தோஷமாக முடிந்தது. வந்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அவர்கள் கௌரவிக்கப்பட்டு, தனித்தனியான கார்களில் ஏற்றப்பட்டு, அனுப்பப்பட்டார்கள்.

சுமதி அன்னபூரணியின் கையைப் பிடித்துக் கொண்டு அழைத்துப் போனாள்.

''இது என் போன் நம்பர். உன்னைப்பத்தி அந்த ஆள் பேசினது இப்பத்தான் ஞாபகம் வருது.''

''என்னைப் பத்தியா...என்ன மேடம்.''

''நான் ஒரு பெண் பார்த்துட்டு வந்து ரொம்ப பிடிச்சிருக்குன்னு சொன்னேன். ஆனா எங்க வீட்ல கூடுதலா நகை போட்டு, வரதட்சணை கேட்டு, அந்த விஷயத்தை கெடுத்துட்டாங்க. ஐயோ...இப்படிபண்றாங்களே இவங்க செய்றது சரியில்லையேன்னு நினைச்சுகிட்டேனே தவிர, அதை தடுத்து நிறுத்தலை. அந்தப்



பெண் என்ன வேதனைப்படும்னு நான் யோசனை செஞ்சேனே தவிர, போய் மன்னிப்பு கேக்கலை.

அந்தப் பெண்ணோட அப்பா, ரொம்ப நல்லவர். ரொம்ப மரியாதையானவர். அவர் இங்கவந்து கூடுதலா சவரன் தர்றேன்னு சொல்லிருக்காரு. இவங்க திருப்பியும் சவரன் எண்ணிக்கையை ஏத்திவிட்டிருக்காங்க அது எனக்குத்தெரியாத போச்சு. நான் அவங்களை அலட்சியப்படுத்தினதின் விளைவுதான் இன்னிக்கு அவஸ்தைப்படறேன்.

அந்தக் குடும்பத்துல சம்பந்தம் வைச்சிருந்தா, அந்தப் பெண்ணை திருமணம் செய்திருந்தா, எனக்கு இந்த கதி ஏற்பட்டிருக்காதுன்னு சொன்னான்.

இப்பத்தான் ஞாபகம் வருது. எந்தப் பொண்ணுன்னு சொல்லலை. எந்த இடம்னு சொல்லலை, அது நீசொன்னதிலேருந்து, உன்னைப் பெண் பார்த்துட்டு வந்துதான் இப்படி புலம்பியிருக்கான்னு நினைக்கிறேன்.

நான் போய் நீதானான்னு கேக்கறேன். இது என் டெலிபோன் நம்பர். எனக்குப் போன் பண்ணு.

அவன் வெளியே வரணும் அன்னபூரணி. வெளியே வரணும், ரொம்ப நல்லவன். ஆம்பளைங்க நல்லவன்னு நானும் நினைச்சதில்லை. எல்லா ஆம்பளையும் பொம்பளையப்பத்தி அடிமனசுல ஒரு அலட்சியமா இருக்கறவங்கதான்.

ஆனா, இந்த அருணாச்சலம் வித்தியாசமா இருந்தான். இத்தனைக்குப் பிறகும் அவன் தன் மனைவியை தவறாகவோ மோசமாகவோ பேசவேயில்லை. இவளை கல்யாணம் பண்ணின்ட பிறகு, ஆறேழு தடவை தன்னுடைய காதலனைப் பார்க்கப்போய், அந்தப் பொண்ணு அவன்கூட சந்தோஷமா இருந்திருக்கா. இது

தெரிஞ்ச பிறகும் அவன் வேகமா கண்டிக்காத, இது தப்புன்ற மாதிரியே எடுத்துச் சொல்லியிருக்கான். அவங்க அம்மாவும் பெரியம்மாவும் ஒளிஞ்சிருந்து கேட்டிருக்காங்க. கொஞ்சம் கடுமையா அவங்க பேசியிருக்காங்க.

மத்தபடிக்கி, அருணாசலத்து மேல ஒரு தப்பு கூட யாரும் சொல்லலே இல்லை. ஆனா, போலீஸ் கேஸ் அவனுக்கு எதிராதான் இருக்கு. அதனாலதான் இவனை எப்படியாவது காப்பாத்தணும்னு நான் நினைச்சு கிட்டிருக்கேன். வரட்டுமா.

என்னமோ தெரியலை..உன்னை ரொம்ப பிடிச்சிருக்கு அன்னபூரணி.'' அன்னபூரணியின் கைகளை ஒரு நிமிடம் கோர்த்துக் கொண்டு, மெல்லவிடுவித்துக் கொண்டு, சுமதி காரில் ஏறினாள். மெல்லிய தூசு பறக்க கிளம்பிப் போனாள்.

நெடுநாள் பழகிய ஸ்நேகிதியை பிரிவது போல் ஒரு கணம் அன்னபூரணியின் மனதுள் எழுந்தது.

''நான் ஒண்ணும் சுமதி சொல்றதை நம்பத் தயாரா இல்லை. ஒரு வக்கீல், அவங்க கட்சிக்காரங்களை விட்டுப் பேசுவாங்களா, அவன் கத்தை கத்தையா காசு கொடுத்திருப்பான். சுமதி வந்து வக்கீலா... வர்றேன்னு சொல்லி தலையாட்டி இருக்கும். வக்கீலா வர்றவங்க கட்சிக்காரன் உத்தமன், மகாத்மாகாந்தி அப்படின்னுதான் பேசுவாங்க. அவன் கொலை பண்ணினதா வக்கீலே சொன்னாக்க, வக்கீலுக்கு என்ன மரியாதை.'' அம்மா உரத்து கோபமாய் கத்தினாள்.

அப்பா தலையசைத்தார். ''இல்ல. சுமதியைப் பார்த்தா அப்படித் தெரியலை. கட்சிக்காரன்கிட்ட காசு வாங்கிருப்பாங்கன்றது வேற. நம்மகிட்ட சொல்லும் போது, அவனை நல்லவன்னு சொல்லவேண்டிய அவசியம் கிடையாது. ஆமாம். கொலை பண்ணிட்டாரு.



எப்படியாவது கேஸை ஜோடிச்சு, திசை திருப்பி அவனுக்கு விடுதலை வாங்கித் தரணும்னு சொல்லிருக்கலாம்.

ஆனா, அவங்க அப்படி சொல்லலை. அவன் உண்மையிலேயே நல்லவன். தப்பா மாட்டிகிட்டான், அப்படின்னு வருத்தப்பட்டு சொல்றாங்க. அவங்களுக்கு அந்த ஆள் மேல ஒரு மரியாதை இருக்கு. அது ரொம்ப முக்கியம்.

சுமதி வழக்கமா ஆம்பளைங்களை நல்லவங்கன்னு சொல்ற பொம்மனாட்டி இல்லை. கோபப்படறவங்க. ஆம்பளைங்க தப்பு பண்ணினா அதட்டிக் கேட்கணும், கண்டிச்சு வைக்கணும்னு வேகப்படறவங்க. அவங்களே ஒரு ஆம்பளைய நல்லவன்னு சொன்னாக்க, அது சாதாரண விஷயமா. அப்படி யோசனை பண்ணிப்பாரு.

சுமதியே அருணாச்சலத்தை நல்லவன்னு சொல்றாங்கன்னா, சுமதியை அருணாச்சலம் தன்னுடைய பேச்சனால, செய்கையால மனசு மாத்திருக்கணும்னா, அருணாச்சலம் நிச்சயம், நல்லவனா இருக்கணும்.

சுமதி சாதாரண லேடியில்லை. ரொம்ப கெட்டிக்காரங்க. நாம கோலத்துல பாய்ஞ்சா அவங்க தடுக்குல பாய்வாங்க. அதனால, அருணாச்சலம் நல்லவனாத்தான் இருக்கணும். நீ என்னம்மா நினைக்கறே.'' அப்பா கேட்டார்.

''தெரியலப்பா. ஆனா, அந்த மனுஷன் நல்லவருன்னு கேக்க, எனக்கு சந்தோஷமா இருக்கு. நான் ஆச்சரியப் பட்டுப் போயிட்டேன். இத்தினி இதமா, இத்தினி நல்ல படியா, இவ்ளோ விஷயங்கள் பேசற ஒரு ஆள், எப்படி கெடுதலா நடந்திருக்க முடியும்னு நினைச்சேன். ஆனா, மனுஷனுக்கு கோபம் வரும். கோபத்துல ஏதோ நடந்திருக்கும். தப்புபண்ணிருப்பான். தன்னை மறந்து ஏதேனும்

குழப்பம் பண்ணியிருப்பான் அப்படின்னுதான் நினைச்சேன்.

ஆனா, இவன் கோபமே படலை.

சுமதி அம்மா சொல்லிட்ட பிறகு, அந்த ஆள் நல்லபடியா வெளியே வரணும்னு எனக்குத் தோணுது.''

''வேணாம்டி. அவனைப் பத்தியும் பேச வேணாம். அவன் குடித்தனம் பத்தியும் பேசவேணாம். உனக்கு நல்ல ஆள்கிடைச்சு, நீ நல்லபடியா எங்கனா போய் குடித்தனம் பண்ணினாப் போறும். அதுக்கு எப்ப விடியப் போவுதோ தெரியலை.''

''ஆரம்பிச்சிட்டியா. சும்மா விடு. எனக்கு விடியற போது விடியும்.

ஏம்பா. நான் கூட நல்லபடியா படிச்சு, சுமதி மாதிரி வக்கீல் தொழில் பண்ணிருக்கலாம். எல்லாத்தையும் விட்டுட்டு, வீட்டோட உக்காந்துருக்கேன் கல்யாண மாகும்னு. இப்ப கல்யாணமும் ஆகலை. வேற எந்த உருப்படியா காரியமும் பண்ண முடியலை.''

''அப்படியில்ல அன்னபூரணி. வேணும்னா என்கூட கடைக்குவா. புஸ்தக வியாபாரம் கத்துத் தர்றேன்.

உலகத்துல இருக்கற புஸ்தகங்களைப் பார்த்தா பிரமிப்பா இருக்கும். எல்லாத்தையும் முழுக்கப் படிக்க வேணாம். இப்படியெல்லாம் விஷயங்கள் இருக்குன்னு வெறுமனே தகவல் தெரிஞ்சுகிட்டாலே போறும். அந்தத் தகவல், தெரிஞ்சுக்கறத்துக்கே சந்தோஷமா இருக்கும். அந்த சந்தோஷம் வாழ்க்கைய இழுத்துக்கிட்டுப் போயிடும்.

நாமஒன்னுமே தெரியாம, சின்ன வட்டத்திலேருந்து எல்லாம் தெரிஞ்சுகிட்டா மாதிரி, அலட்டிக்கிறோம். புஸ்தகக் கடைக்கு வந்தா நாம தெரிஞ்சுக்க வேண்டியது



எவ்வளவு இருக்கு அப்படின்னு ஒரு மலைப்பு வந்துரும். அந்த மலைப்பு அதிகமா கூச்சலைக் கொடுக்காது. நிதானத்தை கொடுத்துரும். நீ கொஞ்சம் வந்து புஸ்த கங்களையெல்லாம் பாரு.

புஸ்தகங்கறது எனக்கென்னமோ மனுஷாள் மாதிரி. மனுஷாள் முகத்தைப் பார்க்கறா மாதிரி. மனுஷாளை தெரிஞ்சுக்கறதுதான். ஜெயிக்கறத்துக்கு வழி. நீ வந்து சும்மா, கடைல பத்துலேருந்து எட்டு வரைக்கும் உக்கா ரேன். மத்தியானம் போய் சாப்பிட்டு வாயேன்.''

திடீரென்று அப்பாவிற்கு இந்த எண்ணம் தோன்றியது. அவனுக்கும் இந்தத்திட்டம் பிடித்திருந்தது.

அவன் கடைக்குப் போனான். புத்தகங்களை மறுபடியும் சீராக அடுக்கினான். தரையை ஒட்டப் பெருக்கினான். நன்கு துடைத்தான். முன்பக்க மேஜைகளுக்கு வார்னிஷ் அடிக்க வைத்தான். கடையின் தோற்றப் பொலிவை அதிகரித்தான்.

இந்தக் கடைக்குள் ஏ.ஸி. பொருத்தினால் என்ன என்று அப்பாவைக் கேட்டான்.

''ஏ.ஸி.யா...பழைய புஸ்தகக் கடைக்கா...தெரியலி யேம்மா...அவ்ளோ காசு போடணுமா என்ன...''

''அப்பா... ஏ. ஸி. இல்லாட்டி கூட பரவாயில்லை. எட்டாயிரம் கொடுத்து ஒரு கூலர் வாங்கிடுவோம்பா. பேஸ்மெண்ட். வெறும் ஃபேன் போட்டா வெக்கைக் காத்து அடிக்குது. ஒரு கூலரை போட்டு விட்டுட்டோம்னாக்க, நின்னு புஸ்தகம் பார்ப்பான். புஸ்தகம் பார்த்தாக்க, வாங்கிட்டுதானே போகணும். போறும் போறும்னு வெக்கைல நிறைய பேர் போயிடறாங் களோன்னு தோணுது.''

அவர்கள் பழைய பொருள்கள் விற்கும் கடைக்குப் போய், கூலர் தேடினார்கள். ஒரு கூலரை வாங்கி வந்து, மெக்கானிக்கிடம் கொடுத்து ரிப்பேர் செய்தார்கள். தண்ணீர் ஊற்றி, எதிர்கோடியில் ஸ்டூல் போட்டு நிற்க வைத்து இயக்கினார்கள். ஐந்து நிமிடத்தில் கடை முழுதும் தென்றல் தவழ்ந்தது.

"அட...என்ன அந்தப்பக்கம் ஜில்லுன்னு இருக்கு." என்று வந்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

"அட...கூலர் போட்டுருக்கீங்களா...ரொம்ப நல்லது ரொம்ப நல்லது" என்று பாராட்டினார்கள். உட்கார்ந்து, ஸ்டூல் போட்டு நிதானமாக புத்தகம் தேடினார்கள்.

வெறுமனே வந்து, கடைக்கு எதிரே நின்று, சட்டையை திறந்துவிட்டு காற்று வாங்குகிற ஆட்களும் இருந்தார்கள்.

அப்பா சிறிதுநேரம் அவர்கள் காற்று வாங்கியதும், போதுமப்பா, கடையை மறிக்காதே என்று மெல்லப்பேசி அனுப்பிவிடுவார்.

ஆனால் கூலர் போட்டது கடைக்கு வாடிக்கையாளர்களை அதிகரிக்கச் செய்தது.

அன்னபூரணி வெறும் சமையல் செய்கிற பெண் பிள்ளையாய் இல்லாமல் படிக்கவும் துவங்கினாள். நிறைய நாவல்கள் படித்தாள். பிற்பகலில் கட்டுரைகள் படித்தாள்.

படிக்க படிக்க அவளுக்குள் பல கேள்விகள் எழுந்தன. அவள் தனியே இருந்து யோசிக்கத்துவங்கினாள். பேசுவது மிகவும் குறைந்தது.



# 5

சிறையை விட்டு ஜாமீனில் வெளியே வந்த அருணாசலத்தை சுமதி தன் காரில் ஏற்றிக் கொண்டு வந்தாள்.

அருணாச்சலம் அதிகம் வாடிப் போயிருந்தான், களைத்துப் போயிருந்தான். கண்ணில் நிரந்தரமாய் ஒரு மிரட்சி படிந்து விட்டிருந்தது.

"அருணாச்சலம்...நான் இருக்கேன். பயப்படாதீங்க. நிச்சயமா விடுதலை வாங்கித் தருவேன்."

"சரிங்க மேடம். சரிங்க. அப்படியே விடுதலை கிடைக்காட்டியும் பரவாயில்லை. ஜெயிலும் நல்லாதாங்க இருக்கு. கொஞ்சம் மனசு மாத்திக்கணும். வேற ஒரு வாழ்க்கைக்கு பழகிக்கணும்.

ஏமாத்தி, பொய் சொல்லி, பழியை வேற ஒருத்தன் தலைல போட்டு, ஜெயிலுக்கு வந்தவங்கதாங்க அதிகம். நேரடியா கொலை பண்ணிட்டு, வர்றவங்க ரொம்ப குறைச்சல். திட்டமிட்டுக் கொலை பண்ணினவங்க ஒருத்தரோ ரெண்டு பேரோதான்.

ஜெயில் நல்ல மனுஷாள் இருக்கிற இடம்தாங்க. எனக்கு ஜெயில் ரொம்ப பிடிச்சிருக்குங்க."

"அருணாச்சலம் என்ன பேசறீங்க. நீங்க வெளிய வரணும். உங்களுக்கு நான் விடுதலை வாங்கித் தரணும், விடுதலை வாங்கின பிறகு, நீங்க மறுபடியும் உங்க வேலைல சேரணும். உங்க வேலைல சேர்ந்த பிறகு, நீங்க கல்யாணம் கட்டணும். குழந்தை பெத்துக்கணும்."

"இல்லீங்கம்மா. ரயில்வேல மறுபடியும் வேலை தருவாங்களான்னு எனக்குத் தெரியலை."

''நிச்சயம் தருவாங்க. உங்கமேல இருக்கிற கிரிமினல் கேஸ் தள்ளுபடி ஆயிட்டா நிச்சயம் வேலை தந்தே ஆகணும். கொடுக்காட்டி மறுபடி நான் இன்னொரு கேஸ் போடுவேன்.''

''இல்லீங்க. கிரிமினல் கேஸ் தள்ளுபடி ஆயிட்ட பிறகு கூட, நான் அங்க போய் நிக்கிறது நல்லா இருக்குங்களா' கொலைகாரன் கொலைகாரன்தான். கூட வேலை செய்றவங்க சொல்லுவாங்க.''

''யாரும் சொல்ல மாட்டாங்க. அருணாச்சலம். உங்களைப்பத்தி எல்லாரும் நல்லாதான் சொல்றாங்க. எல்லாரும் கொண்டாடறாங்க. ஐயோ... அருணாச் சலத்துக்கா இந்த நிலைமை அவன் நல்ல புள்ளையாச்சே அப்படின்னுதான் நான் பார்த்த அத்தனை பேரும் சொல்றாங்க ஏன்...அன்னபூரணி கூட அதான் சொல் லுச்சு.'' அன்னபூரணியை வேசாக அழுத்திச் சொன் னான்.

அருணாச்சலம் முகத்தில் ஒரு சின்ன திடுக்கிடல் படர்ந்தது.

''அன்னபூரணிங்களா...யாரு அன்னபூரணி''

''நீங்க பொண்ணு பார்த்துட்டுப் போனீங்களே... ஞாபகம் இல்லீங்களா.''

''ஆமாங்க ரொம்ப நல்ல குடும்பங்க. அவரு புத்தக வியாபாரி எதுபத்திக் கேட்டாலும் எந்த புஸ்தகம் பத்திக் கேட்டாலும் சொல்றாரு. அன்னபூரணி ரொம்ப சாதுவா. ரொம்ப மரியாதையா, ரொம்ப நிதானமா பழகிச்சு. எனக்கு கொடுப்பினை இல்லை. எங்கம்மா என்னைக் கொண்டாந்து பாழுங்கிணத்துல தள்ளிட் டாங்க. பெரியம்மா பேச்சைக்கேட்டு எல்லாம் தெரிஞ்சா மாதிரி. காசுக்கு ஆசைப்பட்டு, ஏதோ ஒரு தப்பான



குடும்பத்துல சம்பந்தம் வைச்சுட்டாங்க. அம்மா எப்படி இருக்காங்க.''

''உங்கம்மா படுக்கைல இருக்காங்க. ஒரு சின்ன ஹார்ட் அட்டாக். நல்ல வேளை பிழைச்சுட்டாங்க. பெரியம்மாதான் வீடு பார்த்துக்கறாங்க. நீ அங்க போய் சத்தமெல்லாம் போட வேணாம். சண்டை போடவேணாம். அமைதியா இரு. அம்மாகிட்ட ஆற தலா பேசு. அதைவிட முக்கியம் நீ விடுதலை ஆயிடுவேங் கற நம்பிக்கையோட இரு. ஆபீசுக்குப் போய் கிரிமினல் கேஸ்ல நான் விடுதலை வாங்கிட்டேன்னா. எனக்கு இங்கே வேலை கிடைக்குமா? அப்படின்னு கேட்டுக்க. கிடைக்காதுன்னா அதை எங்கிட்ட வந்து சொல்லு. இங்க உனக்கு வேலை செய்றது கஷ்டமா இருந்த துன்னா, வேற எங்கியாவது கரூர் திருச்சி பக்கம் வேலைக்கு டிரான்ஸ்பருக்கு யாரும் ஹெல்ப் பண்ண முடியுமாங்கறதையும் தயவு செய்து செக் பண்ணிக்க.

மனுஷான் உதவி செய்வாங்க. நீ கேக்கற விதத்தை பொறுத்து இருக்கு. வெட்கமில்லாத போய் கேளு தைரியமா இரு நான் சொல்றது புரியுதா.''

''அம்மா உங்க ஃபீஸ்''

''பரவாயில்ல, நான் பின்னால வாங்கிக்கறேன். இப்ப ஒண்ணும் அவசரப்பட வேணாம்.''

''அம்மா ...''

''என் பீஸ் இருக்கவே இருக்கு. நீங்க வெளிய வரணுங்கறதை நான் ரொம்ப முக்கியமா நினைக் கிறேன் அருணாச்சலம்'' சுமதி அவனை மாம்பலம் ஸ்டேஷனில் இறக்கி விட்டாள்.

அவன் சுமதிக்கு வணக்கம் சொன்னான்.

மெல்ல ஸ்டேஷன் நோக்கி நடக்கத்துவங்கினான்.

மாம்பலம் ஸ்டேஷனில் உள்ள அதிகாரிகள் கூட அவனை தெரிந்து கொண்டு, அவனருகே வந்து அவன் கையை இறுகப் பற்றிக் கொண்டார்கள். அவன் தோளை தடவினார்கள். யாரோ ஒருவர் அவனை ஓடி வந்து தழுவிக்கொண்டார். வாடா ராஜா, வாடா ராஜா என்று அவனை கைபற்றி அழைத்தார்.

அருணாச்சலம் நெகிழ்ந்து அழுவது தொலைவி லிருந்த சுமதிக்குத் தெரிந்தது. இவன் நல்லவன் இவன் நல்லவன் என்று மனம் ஏனோ உரக்க சத்தமிட்டது.

'**மே**டம்...மேடம்...நான் அன்னபூரணி பேசறேன். பிரபலமான கொலை வழக்குகள் அப்படின்னு ஒரு புஸ்தகம் இருக்குங்க. ஐம்பது வருஷத்துக்கு முன்னாடி உண்டான புஸ்தகம். தமிழ் நடையே ஒரு மாதிரியா இருக்கு. ஆனா ரெண்டு மூணு கொலை ரொம்ப தத்ரூபமா எழுதியிருக்காங்க. உங்களுக்கு உபயோகப் படுமா நீங்க கட்டுரை எழுதறதுக்கு ரெஃபரன்ஸுக்கு தேவைப்படுமா நான் கொண்டாந்து தரட்டுங்களா.''

''ஏய் அன்னபூரணி எப்படி இருக்கே.'' அவள் சொன்னதை வாங்கிக் கொள்ளாமல் அன்னபூரணியை விசாரிப்பதை சுமதி முக்கியமாகக் கருதினாள். அன்ன பூரணியின் நலம் விசாரித்தாள். அவளை புஸ்தகத்தி லிருந்து சில பக்கங்கள் படிக்கச் சொன்னாள்.

''நல்லாருக்கே...நான் இந்தக் கேஸை கேள்விப் பட்டிருக்கேன். ஆனா இது எந்தக் கோர்ட்டுன்னு தெரியலை. ஒண்ணு பண்றியா...நான் அந்தப்பக்கம் வர்றபோது...''

''இல்ல மேடம் நான்வேணா அங்கே வர்றேன்.''

''எதுக்கு புரசைவாக்கம் வரைக்கும் நீ வர்றே. எனக்கு ரெண்டு நாள்ல மயிலாப்பூர் வர்ற வேண்டி யிருக்கு.''



''அப்போ நான் உங்க வீட்டுக்கு வர்ற வேணாங் கறீங்களா.''

''ஐயய்யே...அப்படிச் சொல்லலை அன்னபூரணி இந்த ஒரு புஸ்தகத்துக்காக ஏன் சிரமப்படறே.''

''ஐயோ...புஸ்தகம் சாக்கு எனக்கு என்னமோ உங்களைப் பார்க்கணும் போல இருக்கு.''

''அப்படின்னா வா.''

அடுத்த அரைமணியில் அன்னபூரணி சுமதியின் வீட்டுப்படியில் ஏறினாள். கதவு தட்டினாள்.

இரண்டு பேரும் கைகுலுக்கிக் கொண்டார்கள்.

அன்னபூரணி புஸ்தகம் கொடுத்தாள். சுமதி அதைப் புரட்டி படிக்கத் துவங்கினாள்.

பத்து நிமிஷம் புத்தகத்தின் பல்வேறு பக்கங்களைப் படித்து, விழி உயர்த்தினாள். ''ஏ கிளாஸ் புக். ஐம்பது வருஷத்துக்கு முன்னாடி என்ன அழகா எழுதியிருக்காங்க. எனக்கு உபயோகப்படும். வேற கொலை வழக்கு பத்தி கட்டுரை எழுதலாம்னு நினைச்சுகிட்டிருந்தேன். இந்தக் கட்டுரைகள்எனக்கு உபயோகமா இருக்கும். நல்ல வேளை கேஸ் நம்பர்லாம் வேற கொடுத்திருக்காங்க. பிடிச்சுடலாம் எப்படியும்.

உட்கார். என்ன சாப்பிடறே.''

குடிப்பதற்கு குளிர்பானம் கொண்டு வந்து கொடுத் தாள். ''இன்னொண்ணு தெரியுமா. அருணாச்சலத்தை ஜாமீன்ல எடுத்துட்டேன். எடுக்க முடியாதோன்னு ஒரு பயம் இருந்தது. ஆனாலும், அவன் நல்ல மனுஷன்னு ஒரு பதினைஞ்சு பேர்கிட்ட, விதவிதமான ஆட்கள்கிட்ட லெட்டர் வாங்கி, ஜட்ஜுக்கு கொடுத்து, ஜாமீனுக்கு கொஞ்சம் பெரிய பணம் கட்டி, அவனை வெளிய

கொண்டாந்துட்டேன். ஜாமீன்ல வந்துட்டாலே, மத்த விஷயங்கள் எளிதா பண்ணிடலாம்.''

''அப்படியா மேடம். எனக்கும் அவரு விடுதலையானா நல்லாருக்கும்னு தான் மனசுலபட்டது. எனக்காக அருணாச்சலத்தை விசாரிக்கப் போனா, அப்பாவோட ஸ்நேகிதர் அந்த தாம்பரம் ரியல் எஸ்டேட்டைப் பத்தி தப்பாதான் சொல்றாரு. அவங்க ரவுடித்தனமான ஆளுங்க, கட்சி அரசியல்ல ஈடுபடறாங்க, எந்த பழி வாங்கறத்துக்கும் அஞ்சாதவங்க அப்படின்னுதான் சொல்றாரு. ஐயோ பாவம் அருணாச்சலம், தெரியாம மாட்டிகிட்டான்னு நேத்து கூட வந்து வருத்தப்பட்டாரு.''

''எந்த அரசியல் ஆளா இருந்தாலும் அவனை மடக்கறதுன்னு தீர்மானம் பண்ணிட்டேன். கேஸை இவர் கொலை பண்ணலேன்னு மட்டும் இல்லாம, கொலை இவங்க பண்ணிருக்கக் கூடும்னும் நான் அவங்க மேல கேஸ் திருப்பப் போறேன்.''

''என்னிக்கி கேஸ் வருது சுமதி மேடம்''

''அடுத்த வாரம் வரும்.''

''கேஸ் என்னாச்சுன்னு சொல்றீங்களா.''

''நிச்சயமா சொல்றேன். எதுக்கு கேஸ்பத்தி கேக்கறே.''

''அருணாச்சலம் வெளிய வரணும் மேடம் எப்படி நீங்க ஆசைப்படற மாதிரி, நீங்க கேஸ் ஜெயிக்கணும்னு ஆசைப்படறேன். அருணாச்சலம் வெளிய வரணும்னும் ஆசைப்படறேன்.''

''ஏய் அன்னபூரணி.''

''சொல்லுங்க மேடம்.''



''ஒருவேளை அருணாச்சலம், நிரபாரதின்னு தீர்மானமாயிட்டு வெளிய வந்தா. அவனை கல்யாணம் பண்ணிப்பியா.''

''மேடம் இது அப்பாவை கேக்க வேணாமா.''

''நீ சொல்லு. நிரபாராதின்னு அவனை தீர்மானம் பண்ணிட்டா, நீ அவனை கல்யாணம் பண்ணிக்கறியா.''

''அவரைக் கேக்க வேணாமா மேடம்.''

''நீ சொல்லுடி, நீ அவனை கல்யாணம் பண்ணிக்கறியா.''

''தெரியல மேடம்.''

''ஏன் தெரியலன்றே. அவன் ரொம்ப நல்லவன்.''

''நீங்க சொன்னா பண்ணிக்கறேன் மேடம்.''

''முட்டாள். நீ யோசனை பண்ண மாட்டியா. நான் சொன்னாதான் பண்ணிப்பியா. நல்லா யோசனை பண்ணிப்பாரு அன்னபூரணி. உன்னை வேண்டாம்னு சொல்லல. வேற ஒரு பொண்ணுகிட்ட போய், தாறு மாறா அவஸ்தையா குடித்தனம் பண்ணினவன். ஊர்ல நாலு பேர் முன்னாடி, அவமானப்பட்டு நின்னவன். மறுபடியும் உன்னை கல்யாணம் பண்ணிகிட்டா, உன்னை உள்ளங்கைல வைச்சுக்குவான். அன்னபூரணி, ஒருவேளை அவன் சரின்னு சொல்லி, உன்னை பெண் கேக்க வந்தா மாட்டேன்னு சொல்லிடாதே. உனக்கு இது நல்லதுன்னு நினைக்கிறேன் அன்னபூரணி.''

''மேடம், என்மேல ஏன் இவ்வளோ அக்கறையா இருக்கீங்க.''

''தெரியல அன்னபூரணி. சில சமயம் சில பேர் மேல நமக்கு நல்ல அபிப்ராயம் வந்துரும். அவங்க நல்லா இருக்கணும்னு தோணும். அருணாச்சலத்தின் மேல

எப்படி நல்ல அபிப்ராயம் வந்ததோ, அதே மாதிரி உம் மேலயும் நல்ல அபிப்ராயம் வந்துருச்சு. மறைமுகமா வேற ஒரு காரணமும் இருக்கலாம்.''

''என்ன காரணம் மேடம்.''

''உன்னுடைய ஜாதி காரணமா இருக்கலாம். அந்த ஜாதி தாண்டி, மென்மையா, தெளிவா, கம்பீரமா, அழகா, உன் வீடு இருக்கே...அது காரணமா இருக்கலாம். ஒரு உயர் குடிப்பிறப்பாளர் போல, உங்க அப்பாவும் அம்மாவும் மிருதுவா பேசறது காரணமா இருக்கலாம். புஸ்தகத்தை உயிரா நினைக்கறது காரணமா இருக்கலாம். உன்னை நல்லபடியா வளர்த்தது காரணமா இருக்கலாம். நீ எல்லார்கிட்டயும் மரியாதையா பழகறியே. அது காரணமா இருக்கலாம். உங்க வீடு சுத்தமா பளிச்சுன்னு இருக்கே, அது காரணமா இருக்கலாம். என்னன்னு தெரியல அன்னபூரணி. உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு.''

''சுமதி மேடம் உங்களையும் ரொம்ப பிடிச்சிருக்கு.''

சுமதி அவளை ஆட்டோவில் ஏற்றிவிட்டு, ஆட்டோ நம்பரைக் குறித்துக்கொண்டாள். வீட்டிற்குப் போனதும் போன் பண்ணச் சொன்னாள்.

சுமதியின் அன்பு, அக்கறை, அன்னபூரணிக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. அருணாச்சலத்தை மறுபடியும் மரியாதையாய் நினைக்க வைத்தது.

''சுமதி மேடமே நல்லவன்னு சொன்னாங்க, நாம எதுக்கு அவரைத் தப்பா நினைக்கணும்.'' அப்பாவிடம் அவளாகவே பேசினாள். அப்பா ஆமாம் என்றார். அம்மா பதில் சொல்லாமல் அன்னபூரணியை முறைத்துப் பார்த்தாள்.



''அன்னபூரணி, அன்னபூரணி,'' ஒரு மாதம் கழித்து, சுமதி கடைக்குள் நீளமான கை வீசிய நடையோடு வந்து நின்றாள்.

''எங்க, அன்னபூரணி இல்லியா,''

''இருக்குங்களே...வாங்க வாங்க.'' முன்பலகைதிறந்து சுமதியை கடைக்குள் அன்னபூரணியின் அப்பா வரவேற்றார்.

''கை கொடு அன்னபூரணி.''

''என்னத்துக்குங்க.'' அன்னபூரணி தரையில் உட்கார்ந்து ஒரு புத்தகத்தை பைண்டு செய்து கொண்டிருந்தவள் எழுந்து நின்றாள்.

''நான் ஜெயிச்சுட்டேன். கை கொடு.''

''புரியலீங்களே.''

''நாளைக்கு தீர்ப்பு, அருணாச்சலம் கேஸ்ல. அநேகமா தொண்ணுத்தொம்பது சதவிகிதம், அருணாச்சலம் விடுதலையாயிடுவாரு.''

''அப்படியா, எப்படிங்க.''

''ரொம்ப லக்கு. இது வேற ஒண்ணும் சொல்ல முடியாது. என் திறமைன்னு சொல்ல முடியாது. முழுக்க முழுக்க அதிர்ஷ்டம்.

அருணாச்சலம் மனைவியை, அவங்க அண்ணன் வீட்டுக்கு ஏத்திட்டு வந்தானே ஒரு ஆட்டோ டிரைவர், அவன் தானா வந்து என்னைப் பார்த்து, நீங்கதான் அருணாச்சலம் கேஸ் நடத்தறீங்களா, உங்களாண்ட பேசணுமே அப்படின்னு வந்து நின்னான்.

எனக்கு ஆச்சரியம். என்னப்பான்னு கேட்டேன். நான்தாங்க கூட்டிகிட்டு வந்தேன், அந்தம்மாவை அந்தம்மா நல்லா தாங்க வந்தாங்க. வழியெல்லாம்கத்தினு வந்தாங்க எங்கிட்ட. நான் ஒரு ஆட்டோகாரன்னு கூட யோசனை பண்ணாம, அவங்க அண்ணனைத் திட்டிகிட்டு வந்தாங்க. கன்னாபின்னான்னு ஒரு ஆத்திரமா பேசிகிட்டு வந்தாங்க.

அவங்க உடம்புல ஒரு காயமில்லை. அவங்க வலியில அழுவலை. வேற எந்த துக்கமும் அவங்களுக்கு இல்ல. அவங்களான்ட ஒரு கோபம் இருந்தது. அதுவும் அவங்க அண்ணன் மேல. ஒரு வார்த்தை கூட அவங்க அருணாச்சலம் பத்தி தப்பா சொல்லல. நான் சாட்சிங்க எங்க வேணா வந்து கூண்டுல ஏறி சொல்றேன் அப்படின்னான்.

எனக்கு ஆச்சரியமான ஆச்சரியம். பலவிதமா அவனை கிராஸ் பண்ணிப் பார்த்தேன். எல்லா விதமாவும் அவன் ஜெனியூன். உண்மையான பார்ட்டின்னு தெரிஞ்சது. அடுத்த வாய்தா வரைக்கும் இதை ரகசியமா வைச்சிருந்து ஜட்ஜ் கூப்பிட்டவுடனே போய் காதோட சொன்னேன். ஜட்ஜ் கூட்டிகிட்டு வாங்க டிரைவரை அப்படின்னாரு. இன்காமிரா, அதாவது தனியா கூட்டின்டு போய் டிரைவரை நிறைய கேள்வி கேட்டாரு. அவரை மடக்கி மடக்கி விசாரணை பண்ணினாரு.

விசாரணை பண்ணிட்டு, மறுபடியும் கொண்டாந்து, டிரைவரை அந்த அண்ணன் வக்கீலுக்கு முன்னாடி நிறுத்தி, இந்த மாதிரி ஒருத்தன் வந்து சாட்சி சொல்லிருக்கான். இந்த ஆட்டோ டிரைவர்தான் பேசறான். நீ வேணா கிராஸ் எக்ஸாம் பண்ணிக்கோன்னாரு.

அந்த வக்கீல் ஆடிட்டாரு. விதம் விதமா கிராஸ் எக்ஸாம் பண்ணினாரு. வாய்தா கேட்டாரு. வாய்தா கேட்டுட்டு மறுபடியும் கிராஸ் எக்ஸாம் பண்ணினாரு. ஆனாலும், அவர் சாட்சியை உடைக்க முடியலை.

ஜட்ஜுக்கு திருப்தியாகிப் போச்சு. போலீஸைக் கூப்பிட்டு நீ சரியா இன்வெஸ்டிகேட் பண்ணலேன்னு. ரெண்டு மூணு பாயிண்ட் காண்பிச்சு, கேள்வி கேட்டார்,

இது சம்பவம் நடந்த இடத்துல அண்ணன் இருந்திருக்கான். அவனை ஏன் கைது பண்ணலை. இது இல்லாம, ஏன் போய் எங்கியோ இருக்கற அருணாச்சலத்தை கைது பண்ணினே. அண்ணனை நீ என்ன விசாரிச்சே அப்படின்னு விதவிதமா கேட்டிருக்காரு.



அண்ணன்தான் புகார் கொடுத்திருக்காரு. அப்படின்னவுடனே, புகார் கொடுத்ததனாலேயே, ஒரு ஆள் உண்மையான ஆளாக இருக்கணும்னு போலீஸ் நினைக்கலாமா. புகார் கொடுத்தவங்க மேலயும் போலீஸ் சந்தேகப்பட வேணாமா அப்படின்னு கேட்டிருக்காரு. திரும்பட கேஸை பதிவு செய்யவில்லை அப்படின்னு இன்னிக்கி கார்த்தால ஒரு வார்த்தை சொல்லிருக்காரு. தீர்ப்பு நாளைக்கு ஒத்தி வைச்சிருக்காரு.

ரொம்ப சந்தோஷமா போயிடுச்சு அன்னபூரணி. யாரால இந்த வெற்றின்னு தெரியலை,'' சுமதி கடையில் சடக்கென்று உட்கார்ந்து கொண்டாள்.

கூலர் அந்த இடம் முழுக்க, குளுமையாக்கி இருந்தது.

அன்னபூரணியும் அவளுக்கு அருகே அமர்ந்து கொண்டாள். அன்னபூரணியின் அப்பாவும் சுமதிக்கு எதிரே உட்கார்ந்து கொண்டார்.

''அந்த ஆள் நிரபராதின்னு விடுதலையாயிட்டா, கொஞ்சம் கூட யோசிக்காம, அன்னபூரணியை அந்த ஆளுக்கு கல்யாணம் பண்ணி வையுங்க. அவன் ரொம்ப நல்லவன். ஜெயிலுக்குப் போயிட்டு வந்துட்டான், கொலை கேஸ்ல மாட்டிகிட்டான். அந்த மாதிரிலாம் எதுவும் நினைக்கவே வேணாம். அவனை மாதிரி ஆம்பளைங்க நல்லபடியா வாழணும். அவன் அன்ன பூரணி மேல ரொம்ப மரியாதையா இருக்கான். உங்க பொண்ணை ரொம்ப நிச்சயமா நல்லா வைச்சுக்குவான்.

நான், அவன் விடுதலையான பிறகு உங்களை வந்து பார்க்க சொல்றேன். அவன்கிட்ட பேசுங்க. உங்க மனைவியையும் பேசச் சொல்லுங்க. அவனுக்குத் தேவை நல்ல மனைவி மட்டுமல்ல, வயசான, பெற்றோர்கள் மாதிரி அன்பு செலுத்தற மனுஷாளும், அவனுக்குத் தேவை. உங்ககிட்ட உயிரா ஒட்டிக்குவான்.

நான் சொன்னது நல்லது அப்படின்னு உங்களுக்கு பின்னால புரியவரும்.''

சுமதி சிறிதுநேரம் பேசிவிட்டு சில புத்தகங்கள் எடுத்துக்கொண்டு, கடையை விட்டுக் கிளம்பினாள்.

அன்று மறுநாள் காலை அன்னபூரணிக்கும், அன்னபூரணியின் அப்பாவிற்கும் கொஞ்சம் பரபரப்பாக இருந்தது. இரண்டுபேரும் கடைநோக்கி நடந்தபோது, திடீரென்று ஒருவரையொருவர் திரும்பிப் பார்த்துக் கொண்டார்கள்.

''நீ என்ன நினைக்கறேன்னு புரியுது அன்னபூரணி.''

''எனக்கும் தெரியுதுப்பா. உம்மனசுலயும் கோர்ட்டுக்குப் போகணும்னு ஆசை இருக்கு இல்ல.''

''ஆமாம் அன்னபூரணி. ஆட்டோல போய் இறங்கிடுவோம்.''

அவர்கள் சட்டென்று ஒரு ஆட்டோ பிடித்தார்கள். ஒன்பதேமுக்கால் மணிக்கு கோர்ட்டுக்குப் போய் இறங்கினார்கள்.

கோர்ட் வராண்டாவில் சுமதியைத் தேடினார்கள். எந்தக் கோர்ட்டில் இருப்பாள் என்று விசாரித்து தெரிந்து கொண்டார்கள். அந்தக் கோர்ட்டிலுள்ள கடைசி பெஞ்சில் அப்பாவும் மகளும் உட்கார்ந்துகொண்டார்கள்.

பல்வேறு வழக்குகள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்தன.

சுமதி உள்ளே நுழைந்து, ஒரு நாற்காலியில் அமர்ந்து கொள்வது தெரிந்தது, சுமதிக்கு எதிரே வேறொரு வக்கீல் அமர்ந்து கொள்வதும் பார்க்க முடிந்தது.

உரக்க கேஸ் நம்பர் சொல்லி, ஒரு ஆள் அழைக்க, அருணாச்சலம் கூண்டில் ஏறினான். நீதிபதியைக் கும்பிட்டான். எதிர்கட்சி வக்கீலுக்கும் வணக்கம் சொன்னான்.

நீதிபதி இரண்டு வக்கீல்களையும் அருகே அழைத்தார். மாறி மாறிப் பேசினார்.

''சரி இப்பொழுது தீர்ப்பு படிக்கிறேன் என்று நான்கே வரிகளில், ''அருணாச்சலம் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்படவில்லை. எனவே, சந்தேகத்தின் பேரில், அருணாசலத்தை விடுதலை செய்கிறேன்'' என்று சொன்னார். தீர்ப்பின் நகலை நாளை மறுநாள் வாங்கிக் கொள்ளலாம் என்று முடித்தார்.

அருணாச்சலம் மறுபடியும் உதடு துடிக்க அவரைக் கும்பிட்டான். எதிர்கட்சி வக்கீலையும் வணங்கினான். கீழே இறங்கி சுவர்பக்கம் போய் நின்று முகம் பொத்திக் கொண்டு விக்கி விக்கி அழத்துவங்கினான்.

கோர்ட்டிலுள்ள குமாஸ்தா அவனை ஒரு அதட்டுப் போட்டு வெளியே அனுப்ப, வெளியே வராண்டாவிற்குப் போய் சுருண்டு உட்கார்ந்து கொண்டான்.

அவன் அம்மாவும் பெரியம்மாவும், பெரியம்மாவின் உறவினர்களும் அவனை அணைத்துக்கொண்டார்கள். போலீஸ்காரர்கள் அவனை அப்புறப்படுத்தினார்கள்.



அவன் வெளியே படிகளில் இறங்கி நடந்தான். மரத்தடியில் போய் உட்கார்ந்து கொண்டான்.

சுமதி அவனுக்கு அருகே போனாள்.

அத்தனை பேர் பார்ப்பதற்கு முன்பு சுமதியின் கால்களில், நெற்றி மண்பட அருணாச்சலம் விழுந்தான். சுமதி பதறினாள்.

''சும்மா இருங்க. நான் உங்களை விட வயசை சின்னவ. என் கால்ல எல்லாம் விழுந்துகிட்டு எழுந்துருங்க... அருணாச்சலம்...எழுந்திருங்க.'' அவன் முதுகு தட்டி எழுப்பினாள்.

அவன் முகமெல்லாம் மண்பட எழுந்திருந்தான். அவன் முகத்தை அம்மாவும் பெரியம்மாவும் துடைத்தார்கள்.

சுமதி அவன் சட்டையிலுள்ள மண்களைத் துடைத்தாள்.

அவன் கூப்பிய கை பிரிக்காமலேயே சுமதியைப் பார்த்து, நன்றி சொல்லத் துவங்கினான்.

சுமதி அவனை அதட்டி அடக்கினாள்.

''நான் என் வேலையை செய்தேன். உனக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தது ஏதோ ஒரு இறைசக்தி. அந்த சாட்சி வரவேண்ணா ரொம்ப சிரமமாயிருக்கும், நீங்க நன்றின்னு சொல்லணும்னா, இந்த ஆட்டோக்காரருக்கு நன்றி சொல்லணும்.''

அந்த ஆட்டோக்காரரும் தீர்ப்பு கேட்க வந்திருந்தார்.

ஆட்டோக்காரரை அருணாச்சலம் தழுவிக் கொண்டான். முகம் துடைத்துக் கொண்டான். எல்லோருக்கும் குளிர்பானம் வாங்கிக் கொடுக்க, அருணாச்சலத்தின் பெரியம்மா பிள்ளை ஏற்பாடு செய்தார்.

அங்கே சந்தோஷம் சட்டென்று பரவியது.

அன்னபூரணியும், அன்னபூரணியின் அப்பாவும் அந்தக் கூட்டத்திற்கு நடுவே போய் அருணாச்சலத்திற்கு வணக்கம் சொன்னார்கள்.

அருணாச்சலம் திகைத்தான். சுமதியைப் பார்த்தான்.

''நான்தான் சொன்னேன். அப்ப இங்கே நேரே வருவாங்கன்னு நினைக்கவேயில்ல. வாங்க. என்ன தீர்ப்புன்னு கேக்க உங்களுக்கும் ஆவலாயிடுச்சா'' என்று கேட்டாள்.

சுமதியின் வெற்றிக்கு எல்லோரும் பாராட்டிப் பேசினார்கள்.

''உங்களைப்பத்தி சொல்லிருக்கேன் அருணாச்சலம். நீங்க வந்து பொண்ணு கேப்பீங்கன்னு சொல்லிருக்கேன். அவங்க தயாரா இருக்காங்க. உங்க வீட்ல உள்ள, உங்க அம்மாவை, பெரியம்மாவை, அவங்க சொந்தக்காரங்களை எல்லாம் கூட்டிகிட்டு போய், ஒரு நல்ல நாள் பார்த்து, அவங்க வீட்டுக்குப் போய் பொண்ணு கேட்டு, கல்யாணத்தை சட்டுன்னு முடிங்க.'' சுமதி கட்டளை விடுவது போல் சொன்னாள்.

''அதென்னங்க, நல்ல நாள் பாக்கறது. நீங்க சொல்லிட்டீங்க இல்ல, நீங்க சொன்ன நேரம் நல்ல நேரம். இப்ப நிக்கிற நாள் நல்ல நாள். இப்போ அன்னபூரணி அவங்க அப்பாகிட்ட, கைகூப்பி, மன்றாடி, பொண்ணு கேக்கறோம். அவங்க பொண்ணை, அன்னபூரணியை, எங்க புள்ள அருணாச்சலத்துக்கு தயவு செய்து கல்யாணம் செய்து தரணும்.'' அருணாச்சலத்தின் அம்மா, கை கூப்பி கேட்டாள்.

அன்னபூரணியின் அப்பா, ''சரிங்க. செய்துரலாம். ஒரு நல்ல நாள் பார்த்து, நான் உங்க வீட்டுக்கு வரேன். என்ன செய்ய முடியும்னு சொல்றேன்.''

''வேணாங்க. எதுவும் செய்ய வேணாம். அப்படி ஏதாவது செய்யறதா இருந்தா, நாம ரெண்டு பேரும் சேர்ந்து, சுமதி அம்மாவுக்கு செய்யணும், இதுவரைக்கும் பத்தாயிரம் ரூபாதான் கொடுத்திருக்கேங்க. வேற ஃபீஸே கொடுக்கலை. அம்மாவுக்கு நல்ல ஃபீஸ் நிச்சயமா கொடுத்தாகணும்.

நீங்க நகை போட வேண்டாம். சீர் செய்ய வேண்டாம். சுமதி அம்மாவுக்கு நீங்க கொஞ்சமும், நாங்க கொஞ்சமும்னு பணம் கொடுத்தா நல்லாருக்கும்னு நினைக்கிறேன். என்னண்ட ஒரு இருபத்தி அஞ்சாயிரம் ரூபா இருக்கு. நீங்க ஒரு இருபத்தி அஞ்சாயிரம் ரூபா கொடுத்தீங்கன்னா அம்மாவுக்கு ஒரு ஐம்பதாயிரம் ரூபா ஃபீஸ் கொடுத்துருவேன். நீங்க கொடுக்கற இருபத்தி அஞ்சாயிரத்தை நான் மொள்ள மொள்ள சம்பாதிச்சு அடைச்சுடறேன்.'' அருணாச்சலம் அன்னபூரணியின் அப்பாவிடம் சொன்னான்.

அன்னபூரணியின் அப்பா நிச்சயம்தருகிறேன் என்று சொன்னார்.



சுமதி சிரித்துக் கொண்டே, அந்த இடத்தை விட்டு நகர்ந்து வெளியே போனாள்.

அன்னபூரணியின் அப்பாவும், அருணாச்சலத்தின் அம்மாவும், பெரியம்மாவும் பெரியம்மாவின் மகன்களும், மெல்ல நடந்து கோர்ட் வாசலுக்குப் போனார்கள்.

அன்னபூரணியும், அருணாச்சலமும் பின்னே தயங்கித் தயங்கி நடந்தார்கள்.

''ஏங்க, அன்னபூரணி, உங்களுக்கு ஏதுனா ஆட்சேபனை உண்டுங்களா. நான் ஜெயிலுக்குப் போயிட்டு, கொலை கேஸ்ல மாட்டிகிட்டு வந்தவன். உங்களுக்கு ஏதுனா அவமானங்களா.''

''ச்சே...மறந்துருங்க. நீங்க ரொம்ப நல்லவங்கன்னு, சுமதி மேடம் சொல்லிட்டாங்க. சுமதி மேடம் சொன்ன பிறகு, வேற எதுக்கு, யார் உங்களப்பத்தி நல்லது சொல்லணும். எனக்கு உங்களை கல்யாணம் பண்ணிக்கறதுல ரொம்ப சந்தோஷம். உங்களுக்கு சந்தோஷங்களா?''

''எனக்கும் சந்தோஷம் அன்னபூரணி. கரூர் பக்கம் மாத்தல் கேட்டிருக்கேன். லால்குடி அல்லது ஸ்ரீரங்கம் அல்லது பிச்சாண்டார் கோயில் ஸ்டேஷன்ல வேலை கிடைக்கும். அங்க போய் வேலைல சேர்ந்துட்டா, வாழ்க்கை வேற விதமா இருக்கும். அந்தப் பக்கம் போயிடலாங்களா, இல்ல உங்களுக்கு மெட்ராஸ்தான் பழக்கமா.''

''மெட்ராஸ்ல என்ன இருக்கு. ராமர்இருக்கற இடமே அயோத்தி. நீங்க எந்த ஊர்ல வேலை செய்தாலும், எனக்கு சம்மதம்.''

''அப்படியும் இப்படியுமா ஒரு நாப்பத்தஞ்சு நாளு உள்ளார இருந்திருப்பீங்களா?'' அன்னபூரணி கேட்டாள்.

''இல்லை பூரணி'' அவன் உரிமையோடு சுருக்கி செல்லமாய் அழைத்தான்.

''எழுபத்தி இரண்டு நாட்கள். தபஸ் மாதிரி கழிஞ்சுது.''

''தபஸா''.

''ஆமாம்.''

''ஜெயிலுக்குள்ளார நுழைஞ்ச உடனே இது எல்லார்க்கும் கிடைக்காது. எனக்குக் கிடைச்சுருக்கு. அழுது புலம்பாத இதை உபயோகப்படுத்திக்கணும்னு தோணிச்சு.''

30180
4656551

''என்ன செய்திங்க.''

'ரொம்ப ரொம்ப அமைதியா இருந்தேன். கண்ணுக்குள்ள அதாவது மனசுக்குள்ள நிறைய. அப்ப கள்ளி செடியா தோணும்.''

''கள்ளிச் செடியா?''

''ஆமாம். ரயில்வே லைன் ஓரத்துல கள்ளிச் செடியா கிடக்கும். அப்படி லைன் லைன்னா கள்ளி செடி மனசுல வரும்.''

''வந்து.''

''என்னப் போல் இருன்னு சொல்லும்.''

''கள்ளிச் செடி போலயா.''

''ஆமாம்.''

''மனுஷாள் எப்படி கள்ளிச்செடி போலஇருக்கறது.''

''வெளிய உம்முன்னு பேசாத கர்வம் காட்டி தனியே நிக்கணும். ஆனா, உள்ள நெகிழ்ந்து குளுமையா கொழ கொழன்னு கள்ளிச் செடி சோறு மாதிரி கிடக்கணும்.''

''ஏன்.''

''உள்ள கெட்டிப்பட்டா கொழ கொழன்னு மனசு போய்டும். வெளியே தனிச்சு இருந்தா, யாரும் நம்மை கெடுக்க மாட்டாங்க. அதனால வெளிய கெட்டியா, உள்ள சில்லுன்னு கள்ளி சோறா இருக்க கத்துக்கிட்டேன்.''

''அதாவது.''

''நான் உண்டு என் வேலை உண்டுன்னு இருக்கப் போறேன். யூனியன், குவார்ட்டர்ஸ், செக்கரட்டரி எதுவும் இல்லை. ஓரமா தனி மனுஷனா வெறும் புருஷனா நீ மட்டும் போதுங்கற மனிதனா வாழப் போறேன். அதே நேரம் உள்ள குளுமையா எத்தனை வெய்யில் அடித்தாலும் வறறாத பச்சையா வாழப் போறேன். கள்ளி செடி லேசுல காயாது.''

அவள் வியந்தாள். கைகோர்த்துக் கொண்டாள்.

''எனக்குப் புரியுது.''

''நெசம்மாவா.''

''நானும் கொஞ்சநாள் இப்படித்தான் கிடந்தேன்.''

''சொல்லு சொல்லு...'' அவன் ஆவலாய் கேட்டான்.

அவர்கள் பேசிக் கொண்டே நெருக்கமாய் நடந்து போனார்கள்.

முற்றும்